https://t.me/tamilpdfebooks

முத்துலட்சுமி ராகவன்



அழகான ராட்சசியே...

பாகம் - I

https://t.me/tamilpdfebooks

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

அழகான ராட்சசியே...! பாகம் - 1

உரிமை : ஆசிரியருக்கு

பொருள்	:	நாவல்
மொழி	:	தமிழ்
முதல் பதிப்பு	:	டிசம்பர் 2014
வெளியீடு	:	**லட்சுமி பாலாஜி பதிப்பகம்** 68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு, சி.ஐ.டி. நகர், தி.நகர், சென்னை - 600 035 செல் : 95669 42486
நூலின் அளவு	:	1x8 கிரவுன்
தாள்	:	11.6 kg புக் பிரிண்ட்
அச்சு எழுத்து	:	11 புள்ளி
மொத்தப்பக்கங்கள்	:	400

விலை : ₹ 200/-

லேசர் டைப் செட் : விஜி கிராஃபிக்ஸ், மதுரை.

அச்சிட்டோர் : ஸ்ரீ கணேஷ் பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை-5 ✆: 9444603765, 9941915666

https://t.me/tamilpdfebooks

ஆசிரியர் கடிதம்...

குடத்துக்குள் எரியும் விளக்கு - I

என் பிரியத்துக்குரிய வாசக... வாசகிகளே...!

திறமைக்கான அங்கீகாரம் கிடைக்காமல் மூலையில் முடங்க நேரிடுவதை விட மிகப்பெரிய துயரம் எதுவுமில்லை..

அதை நான் அனுபவித்திருக்கிறேன்.. எனது பத்து வயதில் கவிதை எழுத ஆரம்பித்த நான் எனது எழுத்துக்களைப் பற்றி வெளியே பேசியதில்லை.. மறுக்கப்பட்ட அங்கீகாரம்தான் அதற்கான காரணம்.. எனது நாற்பதாவது வயதில்தான் எனது எழுத்தை அச்சில் நான் பார்க்க முடிந்தது... குடத்துக்குள் விளக்காக எரிவதில் இருக்கும் துயரைப் பற்றி என்னை விட அறிந்தவர் யாரிருக்க முடியும்..? எனது எழுத்து.. வெளியுலகைப் பார்ப்பதற்காக முப்பது ஆண்டுகள் காத்திருக்க வேண்டி வந்தது..

இந்த மூன்று பாகம் நாவலின் மூன்று ஆசிரியர் கடிதங்களிலும் குடத்துக்குள் விளக்காக இருக்கும் மூவரைப் பற்றியும்.. அவர்களின் திறமைகளைப் பற்றியும் சொல்லப் போகிறேன்..

பாண்டிச்சேரி..!

அழகானஊர்..! கடலோரமாக அமைந்த சுற்றுலா ஸ்தலம்.. இங்கே அருமையான நவகிரக கோவில் இருக்கிறது.. நாமக்கல் ஆஞ்சநேயரைப் போல.. நவகிரகங்களின் சிலைகளும் உயர்ந்த வடிவத்தில் காட்சி அளிக்கிறார்கள்.. அது தவிர.. வாஸ்து.. அந்தந்த நட்சத்திரங்களுக்கான தேவதைகளின் சிலைகள் என்று இந்தக் கோவிலே அழகும்.. இந்திய ஆன்மீகமும் பிணைந்து காட்சியளிக்கிறது.. பிரத்யந்திரிகா கோவில், பஞ்சவடி ஆஞ்சநேயர் கோவில், பாண்டிச்சேரியின் அடையாளமான மணக்குள விநாயகர் கோவில், ஏரோவில் என்று இங்கிருக்கும் அதிசய அடையாளங்கள் பல.. அப்படிப்பட்ட ஊரில் வசிக்கும் P. சோமசுந்தரம் BSc., B.L., அவர்கள் ஒரு மிகச் சிறந்த புத்தகத்தை எழுதியிருக்கிறார்.. புத்தகத்தின் தலைப்பு..

'செல்வச் செழிப்போடு வாழ்வதற்கு குறுக்குவழி.. ஏற்றுமதி வணிகம்' என்பது.. இந்தப் புத்தகத்தில் படித்துவிட்டு வேலை கிடைக்காமல் திண்டாடும் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வாழ வழிகாட்டும் விதமாய் இந்த நூலை எழுதியிருக்கிறார்

https://t.me/tamilpdfebooks

திரு. P. சோமசுந்தரம் அவர்கள்.. இவர் ஏற்றுமதி வணிகத்தின் பொருட்டு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், ரஷ்யா, சிங்கப்பூர், வியட்நாம் முதலான நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தவர். தான் எம்.டி யாக பணியாற்றிய AFD கவர்டு மில்லின் ஏற்றுமதியை ஐந்தாண்டு காலத்தில் பத்துமடங்காக உயர்த்தி சாதனை புரிந்தவர்.. இந்த நூலில் ஏற்றுமதி தொழிலை செய்ய விரும்புவோருக்கு.. எதை.. எப்படி.. எப்போது செய்ய வேண்டும் என்பதையும்.. ஏற்றுமதிக்கு உகந்தது என தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்கள் எவையெவை என்பதனையும்.. ஏற்றுமதி தொழிலைச் செய்வதற்கு யார்... யாரை அணுக வேண்டும் என்பதையும் அதற்கான குறிப்புக்களையும் வழிகாட்டுதல்களையும் தெள்ளத் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.. ஏற்றுமதி தொழில் செய்ய விரும்புவோருக்கு இந்தப் புத்தகம் ஒரு பொக்கிசம்..

இவ்வளவு சிறந்த வர்த்தக வழிகாட்டி நூலை எழுதியவர் எந்தவித அடையாளமும் இல்லாமல் மிக அமைதியாக தன் ஒய்வு காலத்தை பாண்டிச்சேரியில் கழித்துக் கொண்டிருக்கிறார்.. இப்படி ஒரு புத்தகம் இருப்பதைப் பற்றி எத்தனை பேருக்குத் தெரியும்..?

குடத்துக்குள் விளக்காக இருக்கும் இந்த நூலின் பதிப்பாளர்..

K. **சீனிவாசன்..**
K.S. பப்ளிசர்ஸ்..
43, முதல் மாடி, சுந்தரராஜ்தெரு,
முதலியார் பேட், புதுச்சேரி - 605 004.
செல் - 98423 63530

நம் நாட்டில் கொட்டிக் கிடக்கும் விளைபொருள்களுக்கு வெளிநாட்டில் அதிகமான தேவை உள்ளது.. வார்த்தகத்தை விரும்புவோர் இதைப் படித்துப் பயனடையலாம்..

- நட்புடன் -

முத்துலட்சுமி ராகவன்

அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com
website : www.muthulakshmiraghavan.com

https://t.me/tamilpdfebooks

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

அழகான ராட்சசியே...!

பாகம் – I

1

ஓர் சிரிப்பில் எனைவென்ற..
அழகான ராட்சசி நீ....

கழுத்து டையை சரிசெய்தபடி கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்ட நரேந்திரன் ஆறடி உயரத்தில் ஆண்மையின் கம்பீரத்தோடு இருந்தான்.. அவனைப் போலவே முரட்டுத்தனமாக படிய மறுக்கும் சிகை.. அகலமான நெற்றி.. அதில் வந்து விழுகும் பிடிவாதமான முன்பக்க முடி.. அதைச் சீர் செய்தபடி அவன் பேசும் கம்பீரத்தில் விழுந்த பெண்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்.. ஆனால் ஒரே ஒருத்தியைத் தவிர வேறு எவரிடமும் அவன் தடுக்கி விழுந்ததாக சரித்திரம் இல்லை.

அகலமான அவனது நெற்றி அவனது முகத்தின் கவர்ச்சியை அதிகப்படுத்திக் காட்டியது.. கூர்மையான அவனது செதுக்கி வைத்த சிலையைப் போன்ற அவன் மூக்கு.. ரோமானிய சிற்பத்தை நினைவு படுத்தியது..

கண்டிப்பைக் காட்டும் கண்கள்.. அடர்ந்த அழகான மீசைக்கு அடியில் சிரிப்பை மறந்ததைப் போல

https://t.me/tamilpdfebooks

இருந்த அவனது இதழ்கள் அவன் முகத்தின் கண்டிப்பை அதிகப்படுத்திக் காட்டின..

கோட்டை மாட்டிக் கொண்டான்.. அடர்ந்த சாம்பல் வண்ண கோட்.. அதை ரசிக்கும் ஒருத்தியின் நினைவில் அவன் கண்களில் சினம் வந்தது..

அவளுக்கு அவன் சாம்பல் வண்ணக் கோட் சூட்டில் இருந்தால் மிகவும் பிடிக்கும்.. அதற்கு கருப்புக் கலரில் டை கட்டினால்தான் தோது என்பாள்..

அந்த டையை அவன் கழுத்தில் போட்டு அவள் முடிச்சுப் போட்டுவிடும் நெருக்கமான ஒவ்வொரு தருணங்களையும் நினைத்துப் பார்த்தவனின் கண்கள் சிவந்தன..

“ராட்சசி..” கோபத்துடன் முணுமுணுத்தான்..

“அழகான ராட்சசி..!”

அவன் உதைத்த உதையில் டீபாய் ஓடி சுவரில் மோதி கவிழ்ந்தது.. கோபம் குறையாமல் லேப் டாப்பை உயிர்ப்பித்தான்.. அன்றைய மெயில்களை செக் பண்ணியவன் எழுந்தான்.. லேப் டாப்பை.. சூட்கேஸைப் போன்ற கனத்த தோல்பையில் வைத்து எடுத்துக் கொண்டவனின் செல்போன் ஒலித்தது.. ஒரு கையில் பையைப் பிடித்தவன்.. மறுகையில் செல்போனை பிடித்து காதுக்கு கொடுத்தவண்ணம் கம்பீர நடையுடன் அறையை விட்டு வெளியேறினான்..

“ம்ம்ம்.. ஐ ஆம் ஆன் தி வே.. யெஸ்.. யெஸ்.. ப்ளீஸ் வெயிட்..”

https://t.me/tamilpdfebooks

மடமடவென்று படிகளில் இறங்கியவனின் வேகத்தில் ஹாலில் இருந்த ரம்யா மயங்கிப் போனாள்..

"ஹாய் அத்தான்.."

"ம்ம்ம்..."

"யு ஆர் வெரி ஹேண்ட்சம் டு டே.."

ரம்யாவின் கொஞ்சலுக்கு அவன் பதில் எதையும் சொல்லவில்லை.. எப்போதும் கடுமை குடிகொண்டிருக்கும் அவன் முகத்தின் கடுமைதான் அதிகமானது.. உன் காம்ப்ளிமெண்டை நான் கேட்டேனா என்ற ரீதியில் அவளைப் பார்த்து வைத்து விட்டு டைனிங் ஹாலுக்குப் போனான்...

அந்த பங்களாவின் மிகப்பெரிய அறைகளில் ஒன்றான டைனிங் ஹாலில் நீண்ட டைனிங் டேபிள் போடப் பட்டிருந்தது.. அதன் இருபக்கமும் சேர்கள் வரிசை கட்டியிருக்க.. இவன் அதன் முகப்பில் இருந்த சேரை இழுத்துப் போட்டு உட்கார்ந்தான்.. அவன் இழுத்த வேகத்தில் சேர் அலறியது..

"மாதுரி.. வனிதாகிட்ட டிபன் ரெடியாகிருச்சான்னு கேளு..."

வேலைக்காரப் பெண்ணுக்கு குரல் கொடுத்த வண்ணம் அவசரமாக வந்த அகல்யா நரேந்திரனின் முன்னால் தட்டை வைத்தாள்..

"நான் பிரேக் பாஸ்டுக்கு வருகிறதுக்குள்ள நீங்க டிபனை ரெடியா வைக்க மாட்டிங்களா..?" எரிச்சலுடன் கேட்டான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

“இல்லேப்பா.. முதலிலயே கொண்டு வந்து வைச்சிட்டா அது பிரஷா இருக்குமா..? அதான்.. நீ சாப்பிட உட்கார்ந்ததும் சூடா பூரியப் போட்டு கொண்டு வரச் சொன்னேன்..” பவ்யமாக பதில் சொன்ன அகல்யா.. ஓட்டமும்.. நடையுமாக மாதுரி கொண்டு வந்த பாத்திரங்களை வாங்கி லாவகமாக டைனிங் டேபிளில் வைத்து பரிமாற ஆரம்பித்தாள்..

செல்போனில் பேசியபடி வேகத்துடன் டிபனை உள்ளே தள்ளிய நரேந்திரனைப் பார்த்தவள் மெதுவான குரலில்..

“ஏன் நரேன்.. நம்ம ரம்யா உன்கிட்ட ஏதோ பேச வந்தாளாம்.. நீ முகத்திலடிச்சதப் போல பதில் சொல்லாம வந்திட்டயாமே..” என்று வினவினாள்..

நரேந்திரனின் கூர்மையான பார்வையில் அவள் பேச்சு பாதியிலேயே நின்று விட்டது.. மென்று விழுங்கியபடி..

“இல்லேப்பா.. பாவம் சின்னப் பொண்ணு.. ஆசையா பேச வந்திருக்கா.. அதான்..” என்று இழுத்தாள்..

“இந்த ஆசைப் பேச்செல்லாம் என்னிடம் வேண்டாம்ன்னு அவளிடம் சொல்லிருங்கம்மா.. ஐ டோன்ட் லைக் இட்.. ஆமாம்.. சென்னையில் என்ன காலேஜே இல்லையா..? இவ ஏன் ஹையர் ஸ்டிடிக்கு இங்கேதான் படிச்சுத் தீருவேன்னு வந்து உட்கார்ந்திருக்கிறா..?”

“எனக்கிருக்கது ஒரே தம்பி நரேன்...”

“ஆனா இந்த வீட்டில இருக்கிறது ரெண்டு இளம் வயசு ஆண்கள்ம்மா.. போதாக்குறைக்கு டிரைவர் ரமேஷ்

https://t.me/tamilpdfebooks

இருக்கான்.. தோட்டக்கார கந்தசாமி இருக்கான்.. வாசல்ல செக்யூரிட்டி இருக்கான்.. இத்தனை பேர் மத்தியில உங்க தம்பி மகளும் இருக்கனுமா..?"

'இருக்கக் கூடாதா..?' அகல்யாவின் மனம் வெகுண்டது..

அவளும்தான் எத்தனை நேரத்துக்கு பொறுமையின் திலகம் போல வேசம் போடுவாள்..? நரேந்திரனை மடக்கத்தான் அந்த வீட்டில் ரம்யா முகாமிட்டிருக்கிறாள் என்பதை புளி போட்டுத் தேய்க்காத குறையாக இலை மறைவு காய் மறைவாக எடுத்துக் கூறியும் புரிந்து கொள்ள மாட்டேனென்று அடம் பிடிக்கும் நரேந்திரனை என்னதான் செய்வது என்று அவள் அடிமனம் கொதித்தது..

'இவனுக்கா எதுவும் புரியாது..?'

அவனுக்கு எல்லாம் புரியும் என்பதை அறிந்தவள் அவள்.. ரம்யாவைப் புரிந்து வைத்திருப்பதனால்தான் அவன் அவளுடன் முகம் கொடுத்துப் பேச மறுக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்துதான் இருந்தது..

"நம்ம அர்ச்சனாவும் இந்த வீட்டிலதானேப்பா இருக்கிறா..?"

"ம்ப்ச்.. எரிச்சலைக் கிளப்பாதீங்கம்மா.. ரம்யாவும்.. அர்ச்சனாவும் ஒன்னா..? அவ இந்த வீட்டில பிறந்தவம்மா.. எங்களுக்கு தங்கை.. உங்க தம்பி மகள் அப்படியா..?"

"விடு நரேன்.. என் தம்பி கேட்டுக்கிட்டான்.. என்னால மறுத்துப் பேச முடியல.. எனக்காக இதைக்கூட நீ அனுமதிக்க மாட்டியா..?"

https://t.me/tamilpdfebooks

"அனுமதிக்கிறதைத்தான் அனுமதிக்க முடியும்.."

நரேந்திரன் எழுந்து விட்டான்.. எதிரே வந்த அருண்குமாரின்

"குட்மார்னிங் அண்ணா"வுக்கு தலையசைத்தான்..

"அண்ணா.." என்று குதித்தபடி வந்த அர்ச்சனாவின் கன்னத்தில் தட்டினான்..

"கம்பெனிக்கு கிளம்பலையாடா..?" அருண்குமாரிடம் கேட்டபடி கைக்கடிகாரத்தைப் பார்த்தான்..

"இதோ அண்ணா.." என்றவனை முறைத்துவிட்டு கிளம்பி விட்டான்..

முகம் சுளித்து தனியாக அமர்ந்திருந்த அகல்யாவின் எதிரே சேரை இழுத்துப் போட்டு உட்கார்ந்த அருண்குமார்.

"என்னம்மா.. இன்னைக்கு என்ன மண்டகப்படி நடந்துச்சு..?" என்று துக்கம் விசாரித்தான்..

"என் பிழைப்பைப் பார்த்தா உனக்கு கேலியாய் இருக்கா..?" அகல்யா எரிந்து விழுந்தாள்..

"ம்மா.. அதான் அண்ணனுக்குப் பிடிக்கலைல்ல.. அப்புறமும் எதுக்காக அந்த ரம்யாவை விட்டு தினமும் அண்ணன்கிட்ட நூல் விடச் சொல்கிறிங்க..? அவளும்.. அவளோட நொண நொண பேச்சும்.. எனக்கே பிபி எகிறுது.. அண்ணனுக்கு எப்படியிருக்கும்..? கொடுமை பண்ணாம விட்டிருங்கம்மா.."

அர்ச்சனா அவள் முன்னாலிருந்த பூரியை வேகமாக காலி செய்தபடி பேசினாள்...

https://t.me/tamilpdfebooks

"எப்படிடீ விட முடியும்..? விடறதுக்கா ரம்யாவை வர வைச்சிருக்கேன்..? அவளை வைச்சு நரேந்திரனை இழுத்துப் பிடிக்கனும்டி... அதுக்காகத்தான் வர வைச்சிருக்கேன்.." அகல்யா கைவிரல்களைக் கோர்த்துப் பிரித்தபடி யோசனையுடன் சொன்னாள்..

"குட் ஜோக்.." அர்ச்சனா சிரித்தபடி எழுந்தாள்..

போகிற போக்கில் தலையைத் திரும்பி அகல்யாவை பார்த்தாள்..

"ம்மா.. இது உங்களுக்கே ரொம்ப ஓவராத் தெரியலையா..? அண்ணாவை இழுத்துப் பிடிக்க யாராலேயும் முடியாது.. அதை செய்ய முடிஞ்சவங்க ஒரே ஒருத்தங்கதான்.. அவங்களும் அண்ணனின் லைஃபை விட்டு ஒதுங்கிப் போயிட்டாங்க.. நீங்க போக வைச்சிட்டிங்க.." என்றாள்..

"அர்ச்சனா.." அகல்யா ஏறக்குறைய அலறினாள்..

"கூல் மாம்.. உண்மையைச் சொன்னா ஏன் டென்சன் ஆகறிங்க..? அண்ணனை இழுத்துப் பிடிக்கிறதெல்லாம் நடக்காத காரியம்.. வேணும்னா.. இவனை இழுத்துப் பிடிக்கச் சொல்லுங்க.. இவன்தான் இழுத்த இழுப்புக்கு வளைவான்.."

அருண்குமாரை கைகாட்டினாள் ரம்யா.. ஜீஸைக் குடித்துக் கொண்டிருந்தவனுக்கு புரையேறிவிட்டது.. அவசரமாக தம்ளரை வைத்து விட்டு தங்கையை முறைத்தான் அருண்குமார்..

https://t.me/tamilpdfebooks

"நான் இழுத்த இழுப்புக்கு வளைகிறவன்தான்.. பட்.. அது இழுக்கிற ஆளை பொறுத்து இருக்கு.. ரம்யா இழுக்கிற இழுப்புக்கு வளையத்தான்.. நான் பிறந்திருக்கிறேனா..? அதுக்கு வேற ஆளைப் பாரு.."

"ஸோ.. ஸேடு.. அம்மா.. இவனும் வேலைக்கு ஆக மாட்டானாம்.. வேற ஆளைப் பார்க்கச் சொல்லிட்டான்.. நீங்க பாவம்தான் அம்மா.. இப்ப ரம்யா இழுக்கறதுக்கு நீங்க ஆளைக் காட்டியாகனுமே.. யாரைக் காட்டப் போறிங்க..?"

"நீ முதல்ல காலேஜீக்கு கிளம்புடி.."

"ஓகே.. உங்க தலைவலி எனக்கு எதுக்கு..?"

அர்ச்சனா கைகளை பிரித்து தோளைக் குலுக்கி விட்டு போய் விட்டாள்.. அருண்குமார் ஜீஸ் குடித்த ஈர வாயை டிஷ்யூ பேப்பரால் ஒற்றிக் கொண்டு எழுந்தான்.. அகல்யா அவனைப் பார்த்து சன்னமான குரலில்..

"அருண்.." என்று அழைத்தாள்..

"நான் அம்பேல்.." என்றான் அவன்..

"பெத்து வைச்சிருக்கேன் பாரு.. நான் உன்னையும்.. உன் தங்கையையும்.." அகல்யாவுக்கு எரிச்சலாகி விட்டது..

"ஏம்மா..? அதுக்கு என்ன..?"

"கொஞ்சமாவது என் கவலையை புரிஞ்சுக் கறிங்களாடா..?"

"என்னத்தை புரிஞ்சுக்கச் சொல்கிறீங்க..?"

"ரம்யா பாவம்டா.."

"அதுக்கு..?"

https://t.me/tamilpdfebooks

அருண்குமார் சந்தேகமாக அகல்யாவைப் பார்க்க.. அவள்..

"அடச்சீ.." என்றாள்..

அந்த ஒருவார்த்தையில் அருண்குமாரின் முகத்தில் தோன்றிய விகசிப்பை விழியுயர்த்தாமல் அடிப்பார்வையில் விசித்திரமாக பார்த்தபடி டைனிங் டேபிளில் இருந்த பாத்திரங்களை சமையலறைக்கு எடுத்துக் கொண்டு போன மாதுரி...

"ஏன்க்கா.. 'அடச்சீ'ன்னு சொன்னா பெரிசா பாராட்டறாங்கன்னு அர்த்தமா..?" என்று வனிதாவிடம் கேட்டு வைத்தாள்..

"அடச்சீ.." என்று முகம் சுளித்தாள் அவள்..

"என்னக்கா..?" திகைத்தாள் மாதுரி..

"என்ன அக்கான்னு கூப்பிடாதேன்னு உனக்கு எத்தனை வாட்டி சொல்லியிருக்கேன்..? நான் உனக்கு அக்காவா..? நீ என்ன பப்பாவா..?"

"அக்கா.."

"வேணாம் மாதுரி.. என்ன கொலைகாரி ஆக்கிறாதே.."

கரண்டியைக் காட்டி எச்சரித்தாள் வனிதா.. எதற்கும் இருக்கட்டுமென்று அவளிடமிருந்து இரண்டடி தள்ளி நின்று கொண்ட மாதுரி..

"என்னதான் இருந்தாலும் நீ என்னைவிட வயசில மூத்தவ.." என்றாள்..

https://t.me/tamilpdfebooks

"எத்தனை வருசத்துக்கு மூத்தவ மாதுரி..?" இனிமையை வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்ட வனிதா கேட்டாள்..

"வருசமெல்லாமில்ல அக்கா.."

"அக்கான்னு சொன்னா முகரையை பேர்த்திருவேன்.."

"சொல்லலை.. போதுமா.. ஆயிரம்தான் இருந்தாலும் நீ எனக்கு ஆறு நாளைக்கு மூத்தவ இல்லையா..? நான் ஏப்ரல் மாசம் பத்தாம் தேதி பொறந்தேன். நீ அதே மாசத்தில பதினா...றாம் தேதி பொறந்திருக்கே.. ஆக மொத்தம் ஆ..று நாளைக்கு மொதல்ல எனக்கு மூத்தவளா பொறந்திருக்கிற உன்னப் போயி எப்படிக்கா நானு பேரு சொல்லிக் கூப்பிடுவேன்..?"

"அப்படியே வாயிலேயே நாலு சாத்து சாத்திருவேன்.. உனக்கு மூத்தவளா பொறந்திருக்கேனாம்... உன் வீட்டிலயாடி நான் பொறந்திருக்கேன்..?"

"என்னக்கா இப்புடிக் கேட்டுப்புட்ட..?"

"அக்காவா..?"

பொறுத்தது போதுமென்று வனிதா பொங்கி எழுந்தவளாக கையிலிருந்த கரண்டியை மாதுரியின் மேல் வீச... அவள் விலகித் தப்பித்தாள்..

"வேணாம் வனிதா.. விட்டிரு.."

"அஃது..! இப்ப மட்டும் அம்மணிக்கு என் பேரு வாயில வருதே.. எப்புடி..? இதத்தான் அடி உதவறதைப் போல அக்கா தங்கை உதவ மாட்டாங்கன்னு பெரியவங்க

https://t.me/tamilpdfebooks

சொல்லி வைச்சிருக்காங்க.. ஆமா.. என்னவோ சொல்லிக் கிட்டு வந்தியே.. என்னா அது..?"

வனிதா சண்டையை மறந்து அக்கப் போரை பேச ஆரம்பிக்க மாதுரி அதைப்பற்றி விவரிக்க ஆரம்பித்தாள்.. அங்கே அப்படியிருக்க..

அடுக்களைக்குள் ஒரு அவசர யுத்தத்தை உருவாக்கிய 'அடச்சீ'யை உதிர்த்த அகல்யா.. அதில் மகிழ்ந்து போன தன் மகனைப் பார்த்து தலையில் அடித்துக் கொண்டாள்..

"அப்பாடி.. நான் தப்பிச்சேன்.."

"ஏண்டா.. நீயும் உன் தங்கையும் என் உயிரைக் குறைக்கறிங்க..?"

"அதை உங்க தம்பி மக செய்வா எங்களுக்கெதுக்கு அந்த வேலை..?"

"அருண்.."

"ம்ம்ம்..."

"ரம்யாவுக்கு ஒரு வழி சொல்லுடா.."

"அம்மா.." அருண்குமார் அலறி விட்டான்..

அவன் போட்ட சத்தத்தில் சமையலறையிலிருந்த வனிதா பாத்திரத்தை கை நழுவ விட்டாள்.. சுற்று முற்றும் பார்த்த அகல்யா.. உதட்டில் விரலை வைத்து மகனை அடக்க முயன்றாள்..

"ஸ்ஸ்ஸ்.. ஏண்டா இப்படிக் கத்தற..?"

"உங்க தம்பி மகளுக்கு வழி சொல்ல நான்தான் கிடைச்சேனா..?"

https://t.me/tamilpdfebooks

"அடச்சீ.."

"ஆஹா..."

மீண்டும் அருண்குமார் மகிழ்ந்து போக மாதுரிக்கு ஒரு விவரமும் புரியவில்லை.. அவள் என்னக்கா இது என்று கேட்க வாயெடுத்து.. அக்கா என்று அழைத்தால் வனிதா அவளை சட்னியாக அரைத்து விடுவாள் என்பதினால் வாயை மூடிக் கொண்டாள்..

"இதத்தான் நீ வந்து சொன்னியா..?"

மாதுரியுடன் டைனிங்டேபிளை திருட்டுத்தனமாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த வனிதா கேட்டாள்.. கேட்காமலே விடைகிடைக்கப் போகும் மகிழ்வுடன் மாதுரி ஆமாம் என்று தலையை ஆட்டினாள்..

"இந்த 'அடச்சீ'க்கு ஐயா மகிழ்ந்துதான் போவாரு புள்ள.. உனக்கு அதைப்பத்தி இப்பச் சொன்னா எதுவும் புரியாது.. விலாவாரியா சொல்றேன்.. அப்பத்தான் புரியும்.." என்றாள் வனிதா..

"எப்பக்கா சொல்லப் போற..?" ஆவலுடன் கேட்ட மாதுரி..

"என்னது..??" என்ற வனிதாவின் முறைப்பில்..

"எப்ப சொல்லப் போற வனிதா.." என்று மாற்றி சொல்லித் தப்பித்தாள்..

"உனக்கு நாக்கிலேயே சூடு போடனும்டி.. அப்பத்தான் ஒரு நினப்பில பேசுவ.." அடுப்பில் கொதித்த குழம்பை விட அதிகமா கொதித்தாள் வனிதா..

https://t.me/tamilpdfebooks

"இனிமே அக்கான்னு கூப்பிட மாட்டேன்க்கா.."

"உன்னை..."

மாதுரியை எதைக் கொண்டு அடிக்கலாம் என்று வனிதா சுற்றுமுற்றும் பார்த்தாள்.. டைனிங் டேபிளில் நடந்த உரையாடல் அவளது கவனத்தை திசை திருப்பி மாதுரியை தப்பிக்க வைத்து விட்டது..

"ஏண்டா இப்படி இருக்கிற..?"

"என்னவோ இருக்கிறேன்.. நீங்க என்பக்கம் திரும்பிராதீங்க.."

"உன்பக்கம் திரும்பி எனக்கு என்னடா ஆகப் போகுது..? உன் அண்ணனில்ல ரம்யா பக்கம் திரும்பனும்..?"

"அதோட நின்னுருங்க.. அதை விட்டுட்டு.. அருண்.. அருண்.. ரம்யா பாவம்டா.. அவளுக்கு நீ வழி சொல்லுடான்னு அலற வைச்சீங்க.. நான் மனுசனா இருக்க மாட்டேன்.."

"அடச்சீ.."

"அஃது..! இதிலேயே நில்லுங்க.."

அருண்குமார் நிம்மதியாக.. மாதுரி வனிதாவை பார்த்தாள்.. அவள் முகத்தை டைனிங் ஹாலின் பக்கமாக திருப்பிவிட்டாள் வனிதா..

"ஏண்டா.. உன்கிட்ட யோசனை கேட்டா.. நீயா ஏண்டா ஒரு முடிவுக்கு வர்ற..? இப்ப ரம்யாவைப் பாருன்னு உன்கிட்ட நான் சொன்னேனா..?"

"அவ பாவத்தைப் பார்க்கச் சொன்னீங்க.. அதுக்கு நான் ஆளில்ல.."

https://t.me/tamilpdfebooks

"ரம்யா நம்ம வார்த்தைக்கு கட்டுப்பட்டு வந்திருக்காடா.."

"'நம்ம'ன்னு சொல்லாதீங்க.. உங்க வார்த்தைக்கு கட்டுப்பட்டு வந்திருக்கான்னு சொல்லுங்க.. நானும் அர்ச்சனாவும் இந்த விளையாட்டுக்கே வர மாட்டோம்ன்னு கட் அண்ட் ரைட்டாகச் சொல்லிட்டோம்.."

"இது விளையாட்டா..?"

"வினை..! அதை நீங்கதான் செய்து வைப்பீங்க.."

அருண்குமாரின் புருவங்கள் கோபத்துடன் முடிச்சிட்டன.. அகல்யா அதற்கெல்லாம் அயருகிறவளாக இல்லை..

"ஏதோ ஒன்னு.. நானும் கூப்பிட்டேன்.. ரம்யாவும் வந்திட்டா.. அவளுக்கு யாரு துணையா இருக்கிறது..?"

"நிச்சயமா நான் துணையா இருக்க மாட்டேன்.. அந்த நினைப்பு உங்க மனசில இருந்தா ஓட்டி விட்டிருங்க.."

"அடச்சீ.."

"பிழைச்சேன்.."

அருண்குமார் முகத்தில் மகிழ்வு தவழ எழுந்து போய் விட்டான்.. மாதுரிக்கு பைத்தியம் பிடித்து விடும் போல ஆகிவிட்டது..

"அது எப்படி.. அடச்சீன்னு அம்மா சொன்னா அவரு மகன் சந்தோசப்பட்டுப் போகிறாரு..?"

இந்தக் கேள்விக்கு விடை தெரியாமல் அவளுக்கு தூக்கம் வராது போல ஆகிவிட்டது..

https://t.me/tamilpdfebooks

2

**உன் கண்பார்வையில் எனை வதைக்கும்..
அழகான ராட்சசி நீ...**

“அடி மக்கே..! இந்த ‘அடச்சீ’க்கு சின்னய்யா கிழ்ந்துதான் போவாருடி..”

பாத்திரங்களைத் துலக்கிக் கொண்டிருந்த மாதுரியிடம்.. வாணலியில் நறுக்கிய காய்களைப் போட்டு தக்கியபடி சொன்னாள் வனிதா..

“ஏனாம்..?” கவனமாக ‘அக்கா’வைத் தவிர்த்தபடி கேட்டாள் மாதுரி..

“என்னா.. அந்த ரம்யாப் பொண்ணக் கண்டாலே அருண் ஐயாவுக்கு ஆகாது..”

“யாருக்குத்தான் ஆகுது..? அதுவும் அது போட்டிருக்கற உடுப்பும்.. இப்படியா உடுப்பு உடுத்து வாங்க.. நம்ம அர்ச்சனா அம்மாவும்தான் இந்த வீட்டில இருக்காங்க.. எப்படி உடுத்தறாங்க..? பொண்ணுன்னா இவங்க பொண்ணு..”

“அது..?”

“களி மண்ணு..”

“அஃது.. இதத்தான் அருண் ஐயாவும் நினைச்சுப் பார்த்து எங்கே அவங்க அம்மா இவருதலையில

https://t.me/tamilpdfebooks

அந்த ரம்யாப் பொண்ணக் கட்டிருவாங்களோன்னு பயந்துக்கிட்டு முடியாதுங்கிறாரு.. அவங்க அம்மா அப்படியெல்லாம் நான் சொல்ல மாட்டேங்கிற அர்த்தத்தில 'அடச்சீ'ங்கிறாங்க.. இவரு உடனே 'அப்பாடி நான் பிழைச்சேன்'னு மகிழ்ந்து போறாரு.."

"பின்னே.. மகிழ்ந்து போகாம என்ன செய்வாரு..? அந்த ரம்யாவப் போலப் பொண்டாட்டியக் கட்டிக் கிறதுக்குப் பதிலா கிணத்தில குதிச்சிரலாம்.."

"இப்ப யாரு வீட்டில கிணறு இருக்குது..? அப்படியே இருந்தாலும் அதில தண்ணி இருக்கனும்.. தண்ணியிருந்தாலும் அருண் ஐயாவுக்கு நீச்சல் தெரியாம இருக்கனும்.. இத்தனை இருக்கிறப்ப நீ எதை வைச்சு இதைச் சொன்ன..? அருண் ஐயா வங்கக் கடலையே வட்டம் போட்டுட்டு வந்துருவாரு.. நீச்சலில கரை கண்டவரு.. அவரு குதிக்கிறதுக்கு கிணத்தை ஏன் கண்டுபிடிச்ச..?"

"தெரியாம சொல்லிட்டேன்.. விட்டிரு.."

"இனிமே வாயைத் திறப்ப..?"

"ஊஹீம்.."

சமயம் பார்த்து வனிதா பழி வாங்குகிறாள் என்பதை புரிந்து கொண்ட மாதுரி உதட்டின் மீது ஒற்றை விரலை வைத்து அழுத்தியபடி மௌனம் காக்க.. வெற்றிப் பார்வையுடன் மதிய சமையலைக் கவனித்தபடி பேச்சைத் தொடர்ந்தாள் வனிதா..

"நம்ம அம்மாவுக்கு கூடப் பிறந்த தம்பி மகதான் ரம்யாப் பொண்ணு.."

https://t.me/tamilpdfebooks

"ம்ம்ம்.."

"ஆனாப் பாரு மாதுரி.. இளையவர விட மூத்தவருக்கு ரம்யாவக்கட்டி வைச்சிரனும்னுதான் இந்தம்மா மூத்தக்காலில நிக்கிறாங்க.."

"ம்ம்ம்..."

"அதுக்காகத்தான் இந்த அரண்மனைக் கிளிய சென்னையில இருந்து பெங்களூருக்கு வரவழச்சிருக்காங்க.."

ரம்யாவை வனிதா 'கிளி' என்று சொல்லி விட்ட கொடுமையில் மாதுரி மௌன விரதத்தை துறந்து விட்டாள்..

"ஆனாலும் உனக்கு இது அடுக்காது வனிதா.."

"ஆஹா.. நீ பேரைச் சொல்லிக் கூப்பிடறப்ப காது குளுகுளுன்னு இருக்குது புள்ள.. எங்கே இன்னாருதரம் கூப்பிடு.."

"நீ இதிலயே இரு.. அந்த ரம்யாப் பொண்ணா கிளி..?"

"கோட்டான்னு சொல்றியா..?"

"அப்படிச் சொன்னா கோட்டான் கோவிச்சுக்காதா..?"

"அதச்சொல்லு.. இந்த அழகுரதிய நம்ம ஐயா தலயில கட்டனும்னு பெரியம்மா மல்லுக்கு நிக்கிறாங்க.."

"பெத்த புள்ளைக்கு இப்படியொரு அநியாயத்த பண்ணி வைக்க எப்புடித்தான் இவங்க மனசு துணிஞ்சுச்சோ.."

மனம் தாளாமல் அங்கலாய்த்து விட்ட மாதுரி.. அவளை நிமிர்ந்து பார்த்த வனிதாவின் பார்வையில் இருந்த ஏதோ ஒன்றில் திகைத்தாள்..

https://t.me/tamilpdfebooks

"என்ன வனிதா..?"

மாதுரியின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அடுக்களை வேலைக்குத் திரும்பி விட்ட வனிதாவின் முகம் இயல்பு நிலைக்குத் திரும்பியிருந்தது..

"என்னன்னு கேட்டேன்ல்ல..?" ஆர்வ மிகுதியுடன் வற்புறுத்தினாள் மாதுரி..

"அதுவா..? நீ சொன்னத அப்படியே பெரியம்மா காதில மட்டும் போட்டு வைச்சாப் போதுமா.. இல்ல.. ரம்யாப் பொண்ணு காதிலயும் சோர்த்துப் போட்டு வைக்கலாமான்னு யோசிச்சேன்.. வேற ஒன்னுமில்ல.."

"அடிப்பாவி.. உனக்கு ஏண்டி இந்த கொலவெறி..?"

"காலங்காத்தால நீயும் வேல செய்யாம.. என்னயும் வேல செய்யவிடாம நொய்... நொய்யுன்னு உயிர எடுத்துக்கிட்டு இருப்ப.. நான் உன் வாயப் பாத்துக்கிட்டு எதையாச்சும் கருக வைச்சுட்டு பெரியம்மாகிட்ட பாட்டு வாங்கனுமா..? அதானே உன்திட்டம்..?"

இப்படியொரு திட்டம் இருக்கிறதா என்ற யோசனையில் ஆழ்ந்தாள் மாதுரி.. இத்தனை நாள்களாக இது அவளுக்குத் தெரியாமல் போய்விட்டதே என்ற விசனம் அவளுக்கு ஏற்பட்டது.. தெரிந்திருந்தால் இந்தத் திட்டத்தை அமல் படுத்தி என்றோ வனிதாவை வேலையை விட்டு விரட்டியடித்திருக்கலாமே..

'இப்ப என்ன கெட்டு போச்சு..? வழி தெரிஞ்சிருச்சில்ல.. மகளே.. தினமும் உனக்கு இந்தக் கதைதான்..' மாதுரி மனதிற்குள் தீர்மானம் நிறைவேற்றி முடிப்பதற்குள்..

https://t.me/tamilpdfebooks

"என்ன..? தினமும் இதயே செஞ்சு இவள வீட்ட விட்டு விரட்டியடிச்சுரலாம்ன்னு மனசுக்குள்ள பிளான் போடுதா..?" என்று திரும்பிப் பார்க்காமல் கேட்டு வைத்தாள் வனிதா..

'அடிப்பாவி..! மனசுக்குள்ள ஓடறத கண்டு பிடிச்சுட்டாளே..' மாதுரி ஆற்றாற்றுப் போனாள்..

"நான் தொண்டைக் குழிக்குள்ள இருக்கிறதையே தோண்டி எடுத்துருவேன்.. உன் மனசெல்லாம் ஜீஜிபிடி.. அதனால.."

"அதனால..?"

"அடங்கு.."

ஒற்றைச் சொல்லில் பேச்சை முடித்துக் கொண்ட வனிதா மாதுரியைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் வேலையில் கவனமாகி விட்டாள்.. நின்று நின்று பார்த்த மாதுரி.. வனிதாவின் வாய் திறக்காததினால்..

'பெரிய எலிஸபெத் மகாராணி..' என்று மனதிற்குள் முணுமுணுங்கியபடி வெளியே வாய் பார்க்கலாம் என்று வேலை செய்வதைப் போல பாவனை செய்தபடி போய் விட்டாள்..

அவள் போனபோது அகல்யாவும் ரம்யாவும் டைனிங் டேபிளில் உட்கார்ந்திருந்தார்கள்..

'இன்னுமா இதுக சாப்பிட்டு முடிக்கல.. ஒருத்தருத்தரா வந்து டைனிங் டேபிளக் காவல்காத்தா நான் எத்தன தரம்தான் அதத் துடைச்சுத் துடைச்சு வைக்கிறது.. ஒரே நேரத்தில வேலய முடிக்க மாட்டாங்களா..?'

எரிச்சல்பட்டாள் மாதுரி.. அவளின் எரிச்சலை அறியாமல் பூரியை இத்தனூண்டு விள்ளலாக்கி.. அதையும்

https://t.me/tamilpdfebooks

வாயில் தள்ளாமல் கையில் எடுத்து அப்படியும் இப்படியும் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் ரம்யா..

'இந்தம்மா என்ன பூரிய அழகு பாக்குதா..?' மாதுரிக்கு ஒன்றும் விளங்கவில்லை..

ரம்யாவாவது பூரியை விள்ளலாக்கி கையில் எடுத்துப் பார்த்தாள்.. அகல்யா அநியாயத்துக்கு.. அதைச்சுற்றி விரலால் வட்டமிட்டு அழகுபார்த்தபடி அசையாமல் உட்கார்ந்திருந்தாள்..

'பெரியம்மா என்னத்துக்கு தட்டில படம் வரையறாங்க.. ஒருவேள.. வனிதா பூரிய வட்டமா போட்டிருக்காளா.. இல்ல.. சதுரமா போட்டிருக்காளான்னு அளவு பாக்கிறாங்களா..?'

மாதுரிக்கு துடைத்துக் கொண்டிருந்த கண்ணாடி அலமாரியில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது.. அப்படி முட்டி வைத்தால் கண்ணாடி அலமாரி உடைந்து விடும் என்பதினால் அவள் தனது ஆதங்கத்தை அடக்கிக் கொண்டாள்.. அவள் புதிதாக அந்த வீட்டில் வேலைக்குச் சேர்ந்தவள்.. வனிதாவைப் போலவும்.. மற்றவர்களைப் போலவும் நீண்ட நாள்களாக அங்கே வேலைக்கு இருப்பவள் அல்ல.. அதனால் அவளுக்கு அந்த வீட்டில் இருந்தவர்களின் விசித்திர நடவடிக்கைகளைப் பற்றி எதுவும் பிடிபடவில்லை..

'கண்ணக் கட்டிக் காட்டில விட்டதப் போல இருக்கு..'

அது காடில்லை.. அழகான வீடு.. அந்த வீட்டில் இருந்த மனிதர்களின் நடவடிக்கை புரிபடாத காரணத்தினால் அதை வீடு என்று ஒப்புக் கொள்ளாமல் காடாக்கி விட்டாள் மாதுரி..

https://t.me/tamilpdfebooks

“ம்ப்ச்..”

நீண்ட மௌனத்திற்குப் பின்னால் ஒற்றை ‘ம்ப்ச்’சை உதிர்த்து வைத்தாள் ரம்யா..

‘ஆத்தி.. இந்த வீட்டு மனுசங்க வாயத் திறந்தா.. எம்புட்டுப் பேச்சப் பேசுவாங்க... இந்தப்பொண்ணு என்னடான்னா.. ‘சூச்சூ’ன்னு நாய விரட்டுது..’

வாய் பார்க்க முடியாத வன் கொடுமையில் துடிதுடித்தாள் மாதுரி.. அகல்யா தம்பி மகளைப் பார்த்தாள்.. அவளாவது ஏதாவது பேச மாட்டாளா என்ற ஏக்கத்துடன் கண்ணாடி அலமாரியை பொன்னே.. பூவே என்று துடைத்து வைத்தாள் மாதுரி..

அகல்யாவும் அவளை அதிக நேரத்துக்கு ஏங்க வைக்காமல் பேசி விட்டாள்..

“மனசை விட்டுராதே ரம்யா..”

“மனசை விட்டுட்டாலும்...”

“நான் இந்த மனசை விடறதைச் சொல்லலை ரம்யா.. அந்த மனசை விடறதைச் சொன்னேன்..”

அந்த வீட்டில் இருப்பவர்களின் வாயைப் பார்ப்பதை விட வாசலில் போய் தோட்டத்தில் ஒலிக்கும் பறவைகளின் பரிபாசையைக் கவனிப்பது சாலச் சிறந்தது என்ற முடிவுக்கு வந்து விட்டாள் மாதுரி..

‘அதுக பேசறதுகூட புரிஞ்சுரும் போல.. இவங்க பேசறது சுத்தமா புரிய மாட்டேங்குது.. அது எப்படி மனசுல ‘அந்த மனசு’ ‘இந்த மனசு’ன்னு ரெண்டு வகை மனசு இருக்கும்..?’

https://t.me/tamilpdfebooks

“அதான பாத்தேன்.. இந்த நரேந்திரன் மேலே மனசை விட்டுரச் சொல்றீங்களோன்னு நினைச்சுட்டேன் அத்தை.. அவர் மேலே மனசை விட்டுட்டாலும்ன்னு நினைச்சேன்.. அதான்... சொல்லிட்டேன்..”

“நீ அவன்மேல மனசை விடவா வந்திருக்கிற..?”

“தெரிஞ்சாச் சரி.. இந்தப் பணமும்... புகழும்... கம்பெனிகளும்... செல்வாக்கும் இல்லைன்னா யார் அவரைத் திரும்பிப் பார்ப்பா..? ஆளு அழகா இருந்தாப் போதுமா..? முசுட்டுப் பூனையைப் போய் யார் காதலிப்பாங்க...”

ஒருத்தி இருந்தாள் என்ற நினைவில் ஊமையாகிப் போனாள் அகல்யா.. அவள் நரேந்திரனைத் திரும்பிப் பார்த்தாள்.. அவள் பார்த்தபோது அவளுக்கு நரேந்திரனின் பின்புலத்தைப் பற்றி எதுவும் தெரியாது.. அவனை ஏழ்மையானவன் என்று நினைத்தே பேசிப் பழகினாள்.. நரேந்திரனின் கம்பீரமான கவர்ச்சியில் மயங்கினாள்.. அவனுடைய பணத்தையும் பின்புலத்தையும் பற்றித் தெரிந்த போதுதான் அவள் பின் வாங்கினாள்..

அவனைப் போல நரேந்திரனை உயிருக்குயிராக காதலிக்க வேறு ஒருவர் இப்புவியில் கிடையாது..

அதை நரேந்திரன் அறிந்து வைத்திருப்பதினால்தான் ரம்யாவைப் புறக்கணிக்கிறானோ என்று அகல்யாவின் மனம் குமைந்தது..

நரேந்திரன் முசுட்டு முகத்துக்காரன்தான்.. அந்த முசுட்டுத்தனத்தையும் தாண்டி அவனிடம் பொங்கித் ததும்பும் கம்பீரத்தின் அழகில் ரம்யாவின் மனம் சிக்கித்

https://t.me/tamilpdfebooks

தவிக்கத்தான் செய்தது.. ஆனாலும் அதை அவள் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளவில்லை.. ஒப்புக் கொண்டு என்ன லாபம்..? அவன் மனம் அவள் பக்கம் திரும்ப மாட்டேனென்று சண்டித்தனம் பண்ணிக் கொண்டிருக்கும் நிலைமையில் அதை அவளால் ஒப்புக் கொள்ள முடியுமா..? சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்று சொல்லிக் கொண்டிருந்தால்தானே நரேந்திரன் அவளைப் புறக்கணிப்பதை அவளால் மறைக்க முடியும்..?

"உங்க முகத்துக்காகத்தான் இங்கே இருக்கேன் அத்தை.. இல்லைன்னா பெரிய மன்மதனைப் போல இந்த நரேன் சிலிர்த்துக்கிற சிலிர்ப்புக்கு எப்பவோ சென்னையைப் பார்த்துப் போயிருப்பேன்.."

"என் தங்கமே..! ஆயிரம்தான் இருந்தாலும் நீ என் தம்பிமகள்.."

"தொள்ளாயிரமா இருந்தாலும் நான் உங்க தம்பி மகதான் அத்தை.. அதனாலதான் அப்பா பேச்சுக்கு கட்டுப்பட்டு இங்கே வந்து உட்கார்ந்திருக்கேன்..?" மிதப்பாகச் சொன்னாள் ரம்யா..

'நீ அதுக்காக மட்டும்தான் இங்க வந்து உட்கார்ந்திருக்கியா..?'

அவளின் கிண்டல் பேச்சில் அகல்யாவுக்குள் எரிச்சல் மண்டியது.. அவளுக்குத் தெரியும்.. ரம்யா எதையும் கணக்குப் போட்டுச் செய்பவள் என்று.. அவளாவது.. அவளுடைய அத்தையின்மீது இரக்கப்பட்டு அங்கே வந்து உட்கார்ந்திருக்கிறதாவது..

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் அந்த வீட்டின் ஆணிவேர்.. அதிகார மையம்.. அவனைக் கைப்பிடித்தால் அந்த வீட்டின் அதிகாரத்தை அவள் கைப்பற்றிக் கொள்ளலாம்.. நரேந்திரனின் மனைவி என்பது ஒன்றும் சாமானியமான பதவி அல்ல.. அது சக்தி வாய்ந்தது.. அந்த சக்தியைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான் ரம்யா துடியாய் துடிக்கிறாள்..

"உன்னை எனக்குத் தெரியாதாடா செல்லம்..?" இரு பொருள்பட தம்பிமகளைக் கொஞ்சினாள் அகல்யா..

ரம்யா மிதப்பை விடாமல் கையில் வெகு நேரமாக வைத்திருந்த பூரி விள்ளலை தொண்டைக்குள் தள்ளினாள்..

'இன்னைக்கு சாயங்காலத்துக்குள்ள இவங்க ரெண்டு பேரும் சர்ப்பாட்டை முடிச்சிருவாங்களா..?' மாதுரிக்கு சந்தேகமாக இருந்தது..

அந்த மாதரசிகள் இருவரும் அந்த லட்சணமாகத் தான் பூரி கிழங்கை உள்ளே தள்ளிக் கொண்டிருந்தார்கள்..

'இதை மட்டும் என் கையில கொடுத்திருக்கனும்.. கண்ண மூடித் திறக்கிறதுக்குள்ள காலி பண்ணி முடிச்சிருப்பேன்..'

டைனிங் டேபிளில் பரத்தி வைக்கப் பட்டிருந்த பூரி கிழங்கு வகையறாக்களை நாவில் எச்சில் ஊறப் பார்த்து வைத்தாள் மாதுரி.. இத்தனைக்கும் அவள் சமைத்து வைத்ததை எடுத்து வைக்கிறேன் பேர்வழியென்று ஐந்தாறு பூரிகளுக்கு மேலேயே வனிதாவுக்குத் தெரியாமல் வயிற்றுக்குள் தள்ளியிருந்தாள்..

'அவ மட்டும் பூரி சுடறேங்கிற பேரில ஒன்னுக்குப் பத்தா உள்ளே தள்ளியிருக்க மாட்டாளா என்ன..?'

மாதுரியின் நினைப்பைப் போல வனிதா பூரியை எண்ணையில் போட்டு எடுக்கும் போதே அவற்றில் கொஞ்சத்தை அவள் வயிற்றுக்குள் தள்ளி விட்டாள் என்பது உண்மைதான்.. என்ன ஒன்று.. மாதுரி நினைத்ததைப் போல அவள் ஒன்றுக்குப் பத்தாக உள்ளே தள்ளவில்லை.. இரண்டுக்கு இருபதாக உள்ளே தள்ளியிருந்தாள்..

இருந்தும் அந்த வீட்டில் வேலை செய்பவர்களுக்கான முறையான பந்தி பரிமாறப்படவில்லை..

'எங்கே.. வீட்டுக்கு உடையவங்க தின்னு முடிச்சாத்தானே.. வேலை செய்கிறவங்களுக்கு ஏதாச்சும் கிடைக்கும்..? இங்கேதான் அதுக்கு வழியக் காணோமே.. இந்தம்மா என்னடான்னா பூவக் கிள்ளிப் பாக்கறதைப் போல பூரியக் கிள்ளிப் பாக்குது.. அந்தம்மா என்னடான்னா பூரியச் சுத்திக் கோலம் போடறாங்க.. இவங்க சாப்பிட்டு.. அதுக்கப்புறம் நாங்க சாப்பிட்டு.. ம்ஹீம் டிரைவரு ரமேசு கொடுத்து வைச்சவன்.. முதலாளிகளுக்கு காரை ஓட்டிட்டுப் போகனுமுன்னு முதலாளிகளுக்கு முன்னாடியே முழுங்கிட்டு ஓடிடறான்.. நாங்க அப்படியா..?'

மாதுரி அகல்யாவின் தட்டில் ஏதாவது குறைந்திருக்கிறதா என்று பார்த்தாள்.. அகல்யா கோலம் போடுவதை நிறுத்தாமல் பேச்சில் கவனமாக இருந்தாள்.. சரி.. வயிற்றுக்கு உணவு வர தாமதமாகும் போது செவியில் விழும் சங்கதிகளையாவது கேட்டுக் கொள்ளலாமே

https://t.me/tamilpdfebooks

என்று ஆவலுடன் காதைத் தீட்டியபடி அவர்களைக் கவனித்தாள் மாதுரி..

"நீ பேசினா அவன் பதில் பேசனும்னு இல்ல ரம்யா.."

"தலையைக் கூட அசைக்கிறதில்லை அத்தை.."

"அதுக்காக நீ மனசை விட்டிரக் கூடாதுன்னுதான் நான் சொன்னேன் ரம்யா.."

"ஓ.. நீங்க சொன்ன மனசை விடறது.. இந்த மனசை விடறதைத்தானா..? நானும்தான் என்ன செய்யட்டும்.. அத்தை.. ஆன மட்டுக்கும் டிரை பண்ணிப் பார்த்துட்டேன்.. எதுக்கும் அசைஞ்சு கொடுக்காத ஜடத்துக்கிட்ட நான் எப்படி பேசிப் பழகறது..?"

'ஜடமா..? அவனா..?'

இல்லையென்பதை நன்கு அறிவாள் அகல்யா.. அவன் கண்ணிமைகள் சிமிட்டிய பல தருணங்களை அவள் பார்த்திருக்கிறாள்.. அவன் புருவங்கள் உயர்ந்து இறங்கிய உல்லாசத்தினைக் கண்காணித்திருக்கிறாள்.. அவன் உதடுகள் சுழித்துச் சிரித்த ஆபூர்வ மனித்துளிகளை ஒளிந்திருந்து கண்டிருக்கிறாள்..

அத்தனையையும் ஒருத்திக்காக அவன் செய்தான்.. அந்த ஒருத்திக்காக அனைத்தையும் துறந்து அவள் பின்னால் போக முடிவு செய்தான்.. அந்த அளவுக்கு நரேந்திரனை தன் கண்பார்வையில் வசியம் பண்ணி வைத்திருந்தாள் அந்த ஒருத்தி..

அவள் செய்ததை ஏன் ரம்யாவினால் செய்ய முடியவில்லை..?

https://t.me/tamilpdfebooks

கேள்விக்கு விடைதெரியாத இரு பெண்களும்.. தங்களின் தோல்வியை மறக்க பூரிக் கிழங்கின் பக்கம் கவனத்தைத் திருப்பினார்கள்.. சடுதியில் காலியான பூரிகிழங்கில்.. அப்பாடி.. அடுத்து நாம் சாப்பிட அமர்ந்து விடலாம் என்ற நிம்மதியை அடைந்தாள் மாதுரி..

3

சிரிப்பதற்கு கூலி கேட்கும்...
அழகான ராட்சசி நீ....

என்னதான் வனிதாவுக்கு வாய்க் கொழுப்பு அதிகமிருந்தாலும்.. கைக்கொழுப்பும் அதனுடன் சேர்ந்திருப்பதை அவள் செய்து வைத்திருந்த பூரி கிழங்கை உள்ளே தள்ளியபோது உணர்ந்தாள் மாதுரி..

'இவ கைப்பக்குவத்தில் சாப்பிட்ட ஆளுக இவள வேலயவிட்டு போன்னு சொல்லிருவாங்களா..?'

அந்தத்திமிர்தான் வனிதாவை ஆட்டிப் படைக்கிறது என்று அவளுக்குத் தோன்றியது.. மாதுரியின் வேலைக்கு நிரந்தரம் என்பது இல்லை.. வனிதாவின் வேலை என்றென்றும் நிரந்தரமானது என்பதைப் போல அவள் பேசும் விதமும்.. நடந்து கொள்ளும் விதமும் அதையே உணர்த்தியதில் எதற்கும் வனிதாவிடம் எச்சரிக்கையுடனே பேசிப் பழக வேண்டும் என்று தீர்மானித்தாள் மாதுரி..

https://t.me/tamilpdfebooks

"ஏன் மாதுரி..?" என்ற வனிதாவிடம்..

'என்னக்கா..?' என்று வாயைத் திறக்க இருந்த செல்லப் பாப்பா மாதுரி சுதாரிப்பாகி..

"என்ன வனிதா..?" என்று சர்வ ஜாக்கிரதையாக கேட்டு வைத்தாள்..

"தேறிட்ட போ.. வாயில பேரு வருது.."

"ஒரு தடவ தெரியாம பேசிட்டா அதையே பிடிச்சுத் தொங்கனுமா வனிதா..?"

"நீ ஒரு தடவ பேசின ஆளா..?"

"அட... ரெண்டு தடவதான் பேசினேன்னு வைச்சுக்கயேன்.."

"ஆயிரம் தடவ பேசிட்டடி.."

"வேணும்னா ஆயிரம் தடவ உன்கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கவா..?"

"அந்தக் கழுதய வைச்சுக்கிட்டு நான் என்ன பண்ணப் போறேன்..? நீயே வைச்சுக்க.. ஆமாம்.. ரெண்டு மணி நேரமா டைனிங் ஹால்ல இருந்த கண்ணாடி அலமாரியயே துடைச்சுக்கிட்டு நின்னியே.. என்ன விசயம்..?"

விசமமாக வினவிய வனிதாவின் கேள்விக்குப் பின்னால்..

'அடிப்போடி பைத்தியக்காரி..
நான் அறிந்தவள்தான்..
உன்னைத் தெரிந்தவள்தான்..
என்ற எகத்தாளம் இருந்தது..'

https://t.me/tamilpdfebooks

அவளிடம் பொய் சொன்னால் எடுபடாது என்பதை புரிந்து கொண்ட மாதுரி.. உண்மை சொல்லி அவளிடம் ஒட்டிக் கொள்ள வேண்டும் என்ற கெட்டிக்காரத்தனமான முடிவை எடுத்தவளாக..

"தூசியை யாரு துடைச்சா..? அவங்க பேசினதக் கேக்கத்தான அங்க நானு நின்னேன்.." என்று உண்மை விளம்பியாக மாறினாள்...

"பாருடா.. நீ இதத்தான் உருப்படியா செய்வ போல.." என்ற வனிதாவின் சிரிப்பில் சிநேகிதமிருந்தது..

ஓரளவுக்கு அவள் மாதுரியை நம்பி விட்டாள் என்றானதும் மாதுரி அவள் கேட்டவற்றை வனிதாவிடம் ஒப்பித்தாள்.. அத்தோடு நில்லாமல்..

"ஏன் வனிதா.. பெரியவரு மாட்டலைன்னா என்ன..? இந்த ரம்யாப் பொண்ணு சின்னவருக்கு தூண்டில் வீசலாமே.." என்ற தனது அபிப்ராயத்தையும் வெளிப் படுத்தினாள்..

வனிதா நமட்டுச் சிரிப்புச் சிரித்தாள்.. அந்தச் சிரிப்பிற்கு என்ன அர்த்தமென்று மாதுரிக்கு விளங்க வில்லை.. அதை வனிதா தன் வாய்மொழியினால் சொல்லிவிட மாட்டாளா என்ற ஆவலுடன் அவள் வனிதாவின் வாயைப் பார்த்தாள்.. அவளும் கொஞ்சமாக செய்தியை சொல்லத்தான் செய்தாள்.. அவளுக்கு மட்டும் அந்த வீட்டினரைப் பற்றி எதுவும் பேசக்கூடாது என்ற வேண்டுதலா இருக்கிறது..?

"அடி இவளே..! இந்த வீட்டில இருந்து கம்பெனிக வரைக்கும் அத்தன சொத்தும் பெரியவரு பேரிலதான்

https://t.me/tamilpdfebooks

இருக்கு.. சின்னவரு கம்பெனியில வேலை செய்கிறவரு மட்டும்தான்.."

"யேன்..?" மாதுரி நீட்டி முழக்கினாள்..

"ஏன்னா.. அது ஏன்தான்.. ஒத்த நாளிலயே ஒலகத்து விவகாரத்தப் பூராவும் கரச்சுக் குடிக்கனும்னு நெனச்சா அது முடியாது ஆத்தா.. பொறுமையா இருக்கனும்.."

"இந்த வீட்டில பொறுமையா இருந்தாலும் கழுதையில.. விளங்கிரும்.. ஒத்த பூரிய பிச்சுப் போட்டதில ரெண்டே ரெண்டு வார்த்ததான் பேசினாங்க.."

"இவங்க பேசற ஆளில்ல மாதுரி.. செய்கிற ஆளுக.. பேசறவங்கள நீ நம்பிரலாம்.. செய்கிறவங்ககிட்ட எப்பவும் நீ சூதானமா இருந்துக்கப் பழகிக்கனும்.."

வனிதாவின் முகம் இறுகியிருந்தது.. அவள் எ... யோ சொல்ல நினைத்து மௌனமானாள்..

'என்னடா இது..' என்று ஆகிவிட்டது மாதுரிக்கு..

அந்த வீட்டில் இருப்பவர்கள்தான் அப்படியென்றால் அந்த வீட்டில் சமையல் வேலை செய்பவளும் அப்படித்தானா..?

"பேச வாயத் திறந்துட்டு உடனே கப்புன்னு மூடிக்கிட்டா என்ன அர்த்தம் வனிதா... இந்த வீட்டாளுகளுக்கு மேல நீ இருக்கயே.. சொல்ல வந்ததைச் சொல்லு வனிதா.." மாதுரி கெஞ்சினாள்..

"நாம வேல செய்ய வந்திருக்கோம் மாதுரி.. பணச் வீட்டில வேல செய்கிறவங்களுக்கு காது செ இருக்கனும்.. வாய் ஊமையா இருக்கனும்.. புரிஞ்சதா

https://t.me/tamilpdfebooks

“அட போ வனிதா.. இப்படியாப்பட்ட வேல எனக்கு வேணாம்.. இந்த மடம் இல்லன்னா சந்த மடம்..”

“எல்லா மடத்திலயும் இதே கததான்..”

“என்னதான் செய்யனும்கிற..?”

“இந்த வீட்டோட முதலாளி நரேந்திர ஐயா மட்டும் தான்.. இப்போதைக்கு இதை மட்டும் தெரிஞ்சுக்க.. மத்ததெல்லாம் உனக்கு வேணாம்.. இவர மடக்கிப் போடத்தான் தன்னோட தம்பி மகள வரவழைச்சிருக்காங்க.. பெரியம்மா.. அந்த தம்பி மகளோட பாச்சா பெரியவருகிட்ட பலிக்கல.. சின்னவரு பக்கமெல்லாம் அந்த ரம்யா திரும்பிக்கூடப் பாக்காது..”

“அதில சின்னவருக்கு பெருத்த சந்தோசம் போலயிருக்கே வனிதா.. அந்த ரம்யாப் பொண்ணு திரும்பிப் பாத்தாத்தான் அலறுவாரு போல இருக்கே..”

“ஆமாமாம்..”

அவர்கள் கூடிப் பேசிச் சிரித்தார்கள்.. சற்று நேரத்தில் அவர்கள் பிரிந்து அவரவரின் வேலையைக் கவனிக்கச் சென்றுவிட.. அந்த வீட்டில் அமைதி சூழ்ந்தது..

சற்று நேரம் ஓய்வெடுக்கலாம் என்று படுக்கையறைக்குள் சென்றிருந்த அகல்யாவுக்கு தலை வேதனையாக இருந்த.. அவள் வழியில் நெருஞ்சி முள்ளாக இருந்தவளை அப்புறப் படுத்திய பின்பும் நரேந்திரனை அவளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிய வில்லையே என்று அவளுக்கு ஆற்றாமையாக இருந்தது..

https://t.me/tamilpdfebooks

அவன் என்றுமே அவளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்ததில்லை தான்.. மாறாக அவளையும் அவனுடைய தம்பி.. தங்கையையும் அவனுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தான்..

அப்போதெல்லாம் அவன் கட்டுப்பாட்டை உடைத்து அவனைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து விட வேண்டுமென்று அவள் நினைத்ததில்லை.. அந்தக் காலம் வேறு..

நரேந்திரன் ஒருத்தியின் கட்டுப் பாட்டுக்குள் போன அன்றுதான் அகல்யா விழித்துக் கொண்டாள்.. அந்த ஒருத்தியின் கண்ணசைவில் நரேந்திரன் இருந்தான்.. அவள் விழியோடு விழிகலக்க நயனபாசையில் அந்த ஒருத்தியுடன் பேசினான்.. அந்த ஒருத்தி நினைத்தால் அகல்யாவின் வாழ்வே ஆட்டம் கண்டுவிடும் அபாயம் இருந்தது..

அந்த நரேந்திரனை அது வரையில் அகல்யா அறிந்ததில்லை.. அவனுக்குள்ளும் காதல் வரும்.. அதை ஒருத்தியின்மீது அபரிதமாக அவன் பொழிவான்.. அவளே எல்லாமுமாக மாறிவிடுவான் என்றான போதுதான் அகல்யா காய் நகர்த்த ஆரம்பித்தாள்..

அவள் சதுரங்க விளையாட்டில் சாதூர்யம் மிக்கவள்.. அவள் நகர்த்தும் காய்கள் எப்போது எத்திசையில் நகரும் என்பதை எவராலும் அவ்வளவு எளிதாக கணித்து விட முடியாது..

அதை கணித்து விடும் திறமை மிக்கவன் நரேந்திரன் ஒருவனே..

https://t.me/tamilpdfebooks

அந்த நரேந்திரனையே தனது பகடைக் காயாக்கி.. அவன் நேசித்தவளை அவனைவைத்தே வெட்டி வீழ்த்திய அசாத்திய திறமை அகல்யாவுக்கு மட்டுமே உரித்தானது..

'என்ன செய்து என்ன பண்ண..?'

அகல்யாவின் புருவங்கள் நெளிந்து வளைந்து சுளித்தன...

நரேந்திரனை ரம்யாவின் பிடியில் அகப்பட வைக்க அவளால் முடியவில்லையே..

ரம்யாவும் அவளுக்குத் தெரிந்த அத்தனை வழிகளிலும் முயன்று விட்டாள்.. அவளால் நரேந்திரனின் மனதை அசைக்க முடியவில்லை.. அந்த வகையில் ரம்யா அகல்யாவை விடத் திறமையானவள்.. அகல்யா அறியாத பல புதிய வழிகளை ரம்யா அறிந்து வைத்திருந்தாள்.. அந்த வகையில் அவள் அவளுடைய அத்தைக்கே பாடம் சொல்லிக் கொடுத்து விடுவாள்..

அப்படிப்பட்ட ரம்யாவின் மோக வலை வீச்சிலும் நரேந்திரன் அகப்படவில்லை.. ரம்யாவைக் கண்டாலே அவனுக்கு எட்டிக்காயாக இருந்தது.. அந்த ஒன்றில் நரேந்திரனின் வழியை அருண்குமாரும் பின்பற்றியதில் தான் அகல்யாவுக்கு ஆற்றாமையாக இருந்தது.. இதில் மட்டும் தமையனைப் பின்பற்றுகிறவன் மற்ற திறமைகளிலும் அதைப் போலவே அண்ணன் எவ்வழி தானும் அவ்வழி என்று இருக்கலாமல்லவா..?

ஊஹீம்.. அந்தப் புத்தியே அருண்குமாருக்கு இருக்காது.. கம்பெனிக்குப் போய் வருவான்தான்.. ஆனால்

https://t.me/tamilpdfebooks

தானாக எதையும் செய்ய மாட்டான் நரேந்திரன் எதைச் சொல்கிறானோ அதை மட்டுமே செய்வான்.. அர்ச்சனாவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. அவள் நரேந்திரனின் செல்லத்தங்கை.. மூடு பல்லக்கில் போய் வருவதைப் போல.. பூட்டிய ஏஸி காரில் கல்லூரிக்கு போய் வந்து கொண்டிருப்பவள் அவள்.. எது வேண்டுமானாலும் நரேந்திரனிடம் கேட்க மட்டுமே அவளுக்குத் தெரியும்.. மற்றபடி கம்பெனிக்குப் போய் பிஸினெஸ்ஸைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற திறமையெல்லாம் அவளிடம் துளிக்கூட கிடையாது..

ஆகமொத்தம்.. அந்த ஆடம்பர வாழ்வுக்கான அனைத்துத் தேவைகளுக்கும் நரேந்திரனையே அந்தக் குடும்பம் சார்ந்திருந்தது.. அவன் மனது வைத்தால் மட்டுமே அனைத்தும் நிலைக்கும் என்ற நிலையில்.. அவன் மனதை கவரும் மனைவியாக அகல்யாவுக்கு வேண்டப் பட்டவள் வந்தே தீர வேண்டிய கட்டாயம் அகல்யாவுக்கு ஏற்பட்டு விட்டது...

அவளுக்கு இமை மூடினால் தூக்கம் வர மறுத்தது.. எப்போதும் அப்படியிருந்ததில்லை.. படுத்தவுடன் உறங்கி விடும் அரியவரம் வாய்க்கப் பெற்றவள் அவள்.. இப்போது அந்தக் காலமெல்லாம் கனவாக போய் விட்டது.. இமை மூடினால் உறக்கம் வராமல் நரேந்திரனைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க என்ன வழி என்பதிலேயே அவளது சிந்தனைகள் போயின..

அறைக்குள்ளிருந்த அகல்யாவின் நிலை அப்படியிருந்ததென்றால்.. அறைக்கு வெளியே ஹாலின் சோபாவில் சரிந்து.. கால்கள் இரண்டையும் எதிரில் கிடந்த

https://t.me/tamilpdfebooks

மெத்தையின் மீது தூக்கிப் போட்டிருந்த ரம்யாவின் நிலை வேறு மாதிரியிருந்தது..

எதிரிலிருந்த சுவரில் மாட்டப்பட்டிருந்த டிவியின் திரையில் அவள் கண் பதித்திருந்தாலும்... மனதை நரேந்திரனின் மீது பதித்திருந்தாள்.. அவனை மடக்க என்ன செய்வது என்ற பலத்த யோசனையில் இருந்தவளின் கை தன் போக்கில் ரிமோட் கண்ட்ரோலின் பட்டனை அழுத்தியதில் திரையில் சேனல்கள் வினாடிக்கு ஒன்றாக மாறி மாறி வந்து போயின.. முற்பகலின் தொலைக்காட்சித் தொடர்களை வீட்டைத் துடைக்கும் வேலையைச் செய்வது போல பாவனை காட்டியபடி பார்த்து முடிக்கும் மாதுரிக்கு ஏற்றிக் கொண்டு வந்தது..

'ஒரு வீடான வீட்டில டிவி சீரியல்கூட பாக்க முடியலைன்னா அந்த வீட்டில ஏன் வேல பாக்கோனும்..?'

அவள் மனம் அவசரமுடிவை எடுக்க யத்தனித்தது.. அவளின் சீரியல் மோகம் அப்படிப்பட்டது.. நேற்றைய சீரியல்களில் இன்றைய நிலைமை என்னவென்று அறியத் துடித்த அவளின் மனம் ரம்யாவை கட்டையில் அனுப்பி வைக்கும் வசவை வைதது..

'காலையில எழுந்திருச்சா சீவிச் சிங்காரிச்சு.. பெரியவரு வர்ற வழியப் பாத்து வந்து உக்காந்துக்க வேண்டியது.. அவரு வந்ததும்.. ஈன்னு இளிச்சுக்கிட்டு பேசிப் பாக்க வேண்டியது.. உனக்கெல்லாம் ஒரு கணக்கான்னு அவரு பாத்துட்டுப் போனவுடனே மத்தவங்களச் சாப்பிட விடாம.. இதுவும் சாப்பிடாம.. மணிக்கணக்கா டைனிங்டேபிளில உக்காந்திருக்க

https://t.me/tamilpdfebooks

வேண்டியது.. ஒரு வழியா டைனிங் ஹாலோட சேரைத் தேய்ச்சு ஓய்ஞ்சதும் சோபாவைத் தேய்க்க வந்து விட வேண்டியது.. அதான் ஒவ்வொரு ரூமிலயும் சினிமாத் தியேட்டர் கணக்கா இம்மாம் பெரிய திரையோட டிவியை மாட்டி விட்டிருக்காகதான.. இது போயி.. ஓசியில கிடைச்சிருக்கிற ரூமில இருக்கிற டிவியைப் போட்டு பாடாப் படுத்த வேண்டியதுதான..? இந்த டிவி என்ன பாவம் பண்ணுச்சுன்னு இந்தப் பாடுபடுத்துது.. ஒரு இடத்தில நிலச்சு நிக்காத அலையற மனசு இருந்தா இப்படித்தான் இருப்பாக போல இருக்கு.. ஒத்த சேனலில இந்தம்மா நிலச்சு நிக்குதா..?'

மாதுரி மனதுக்குள் ரம்யாவைத் திட்டித் தீர்த்தாள்.. நொடிக்கொருதரம் மாறும் சேனல்கள்.. ஒரே சேனலில் நிலைத்து நிற்க வேண்டும் என்றும்.. அந்த சேனலும் மாதுரி சீரியல் பார்க்கும் அதே சேனலாக இருக்க வேண்டும் என்றும் அவள்மனம் விரும்பியது.. அவளின் விருப்பத்தை உணராமல் தன் போக்கில் ரிமோட் கண்ட்ரோலின் பட்டனைத் தட்டிக் கொண்டிருந்த ரம்யாவை நான்கு தட்டுக்கள் தட்டினால் என்ன என்று மாதுரி யோசித்தாள்.. அது முடியாது என்பதினால் ரம்யாவை அந்த இடத்தை விட்டு ஓட்ட என்ன செய்ய வேண்டுமோ.. அதைச் செய்ய ஆரம்பித்தாள்..

சோபாவுக்கும்.. டீபாவுக்கும் இடையில் கூட்டுகிறேன் பேர்வழியென்று.. ரம்யாவின் கால்களுக்கு வெகு அருகில் அவள் சென்று வேலை செய்ய ஆரம்பித்ததில் ரம்யா எரிச்சலாகி ரிமோட்டைத் தூக்கி கடாசிவிட்டு அவளுடைய அறையைப் பார்த்துச் சென்று விட்டாள்..

https://t.me/tamilpdfebooks

'இத மொதல்லயே செஞ்சிருக்கலாமில்ல...'

மாதுரி ரிமோட்டைக் கைப்பற்றி அவளுக்குப் பிடித்த சேனலைப் போட்டுவிட்டு.. தரைக்கு வலிக்குமோ என்று மிக மெதுவாக அதை தீற்றிய வண்ணம் ஓரிடத்தில் அசையாமல் நின்று அவளுக்குப் பிடித்த சேனலை பார்க்க ஆரம்பித்தாள்..

அறைக்குள் போன ரம்யாவின் செல்போன் ஒலித்தது.. எடுத்து காதுக்கு கொடுத்தாள்.. பேசினாள்..

"ம்ம்ம்.. இல்லம்மா.. ஒரு ரியாக்சனும் இல்ல.. இங்க வந்தது வேஸ்டுன்னுதான் நான் நினைக்கிறேன்.. அத்தை பேச்சைக் கேட்டு அவசரப் பட்டுட்டோம்.."

"இல்லையில்ல.. நீ அப்படி நினைக்காதே.. உன் அத்தை கேட்டுக்கிட்டதுக்காக உன்னை பெங்களூருக்கு அனுப்பி வைக்கலை.." என்றாள் மறுமுனையில் பேசிய பல்லவி..

"ம்ப்ச்.. தினமும் தோல்வின்னா எனக்கே எரிச்சலா வருதும்மா.."

"பாரு ரம்யா.. இது உனக்குக் கிடைச்சிருக்கிற மிகப்பெரிய சான்ஸ்.. உன் அப்பா காலம் பூராவும் பிரைவேட் கம்பெனியில கிளார்க்கா வேலை பார்த்து முடிருச்சு.. உன் அண்ணன் தலையெடுத்துத்தான் குடும்பத்தை ஒரு நிலைக்கு கொண்டு வந்திருக் கான்னாலும் அவனோட டிபார்ட்மெண்டல் ஸ்டேரோட வருமானம் நரேந்திரனோட ஸ்டேட்டஸ் முன்னால நிக்கக் கூட முடியாது.. நம்ம நிலைமைக்கு நரேந்திரனைப் போல

https://t.me/tamilpdfebooks

மாப்பிள்ளை அமைகிறதைப் பத்தி நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது.. தானா சான்ஸ் வந்திருக்கு.. அவங்க வீட்டுக்குள்ளே இருந்துக்கிட்டே நீ முயற்சி பண்ணலாம்.. இது போல மத்தவங்களுக்கு வாய்ப்புக் கிடைக்குமா..? உன் அத்தையோட வீடுங்கிறதினால நீ அங்கேயே தங்கிக்க முடிஞ்சிருக்கு.. இன்னைக்குப் போனா என்ன..? நாளைக்குன்னு ஒரு நாள் வராமலா போயிரும்..?"

"என்னமோ போங்கம்மா.. எனக்கு நம்பிக்கையில்லை.."

"நீயா இப்படிப் பேசறது..? நீ ஒன்னும் அகல்யாவுக்காக அந்த வீட்டுக்குள்ள போய் இருக்கலை.. உனக்காக போயிருக்க.. அதை நினைப்பில வை.. நரேந்திரனுக்கு நீ வொய்பாகிட்டா இந்த அகல்யா உன் காலடியில.. அதுக்குத்தான் நான் ரொம்ப நாளா காத்திருக்கேன் ரம்யா.. இது உனக்கே தெரியும்..."

பல்லவியின் பற்கள் நொறுங்கும் சப்தம் செல்போனின் வழியாக ரம்யாவின் செவிகளை எட்டியது.. அவளும் பல்லைக் கடித்துக் கொண்டாள்.. அவள் மனதில் அகம்பாவியான அகல்யாவின் அன்றைய முகம் நினைவுக்கு வந்தது.. கோடீஸ்வரனின் மனைவியாகி விட்ட மமதையுடன் அவள் பல்லவியைப் பார்க்கும் இகழ்ச்சிப் பார்வையை இன்றளவும் பல்லவியும் மறக்கவில்லை.. ரம்யாவும் மறக்கவில்லை..

https://t.me/tamilpdfebooks

4

*சிருங்காரத்தில் எனைக் கொல்லும்
அழகான ராட்சசி நீ....*

அகல்யா என்னவோ நினைத்துக் கொண்டிருந்தாள்.. அவளுடைய வார்த்தைக்காகத்தான் ரம்யா பெங்களூருக்கு வந்து டேரா போட்டிருக்கிறாள் என்று..

அப்படியில்லை என்பது பல்லவிக்கும்.. ரம்யாவுக்கும் மட்டுமே தெரியும்.. அதை அகல்யாவின் அன்புத்தம்பியும்.. பல்லவியின் கணவரும்.. ரம்யாவையும்.. ராம்குமாரையும் பெற்ற தகப்பனான தியாகராஜனிடம் அவர்கள் சொல்லி விட முடியாது.. என் ஒரே தமக்கைக்கு மனதால் துரோகம் நினைத்து விட்டீர்களா என்று தையத்தக்க தையா என்று குதித்துத் தள்ளிவிடுவார்.. ராம்குமாரைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. நீதி.. நேர்மை.. நியாயம் என்று.. இந்த உலகத்தவரால் மறந்து போகப்பட்ட அத்தனை போதனைகளையும சொல்லித் தள்ளி விடுவான்.. காதில் ரத்தம் வந்து விடுமோ என்று பல்லவியும் ரம்யாவும் பயந்து அலறி.. நீ சொன்ன போதனைகளின்படி நடக்கிறோம் என்று கற்பூரத்தை அணைத்து சத்தியம் பண்ணுகிறவரை விட மாட்டான்..

அதனால்தான் ரம்யாவும்.. பல்லவியும்.. பாசமலர் தியாகராஜனுக்கும்.. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு

https://t.me/tamilpdfebooks

ராம்குமாருக்கும் தெரியாமல் காய் நகர்த்தினார்கள்.. சதுரங்க வேட்டையாடும் உலகில்.. சதுரகிரி சித்தர் போலப் பேசிக் கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது என்பது அவர்களின் எண்ணம்..

தனியார் கம்பெனி ஒன்றில் கிளார்க்காக பணி புரிந்து கொண்டிருந்த தியாகராஜனின் தமக்கையான அகல்யா.. பல்லவியை அவர் மணம் புரிந்த காலத்தில் "கண்ணு" என்று பல்லவியை அன்பால் குளிப்பாட்டி அடக்கி வாசித்தாள்..

அதே அகல்யாவுக்கு மிகப்பெரும் கோடிஸ்வரரான செழியனின் மனைவியாகும் பாக்கியம் கிடைத்தது.. அதற்குப்பிறகு அவள் அகல்யாவை அழைக்கும் தொனி மாறிவிட்டது..

ஜாதகத்தில் தோசம் என்று அகல்யாவின் திருமணம் தள்ளிப் போனது.. தியாகராஜன் பல்லவியின் மீது ஆசை வைத்து விட்டார்.. அகல்யாவின் பெற்றோரும் மகனின் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்து அக்காவின் திருமணத்திற்கு முன்பே தம்பியின் திருமணத்தை நடத்தி விட்டார்கள்.. அந்த வன்மம் அகல்யாவின் மனதில் வேரூன்றி இருந்தது.. தியாகராஜனின் திருமணத்திற்கு பின்பு.. பல்லவியிடம் இன்முகமாக பழகியவள் அவளுடைய திருமணத்திற்குப் பின்பு.. வேறு விதமாக பழகினாள்..

"யாரு முதலில கல்யாணம் பண்ணிக்கிட்டாங்கிறது முக்கியமில்ல.. யாரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டிருக்காங் கிறதுதான் முக்கியம்.." என்று திரைப்படத்தில் வரும் வசனத்தைப் போல பல்லவியின் காதுபட வசனம் பேசினாள்..

https://t.me/tamilpdfebooks

"இருந்த பொண்ணுக்கு இசைஞ்ச மாப்பிள்ளை.." என்று குத்திக் காட்டினாள்..

"என் புருசன் ஒன்னும் மாதச் சம்பளத்துக்கு கைகட்டி வேலை பாக்கிறவரில்ல.. ஆயிரக்கணக்கான ஆளுகளுக்கு இவரு மாதச் சம்பளம் கொடுக்கிறவரு.." என்று இடித்துப் பேசினாள்..

அகல்யாவின் ஆணவத்தைப் பற்றித் தியாகராஜனின் காதுகளுக்குக் கொண்டு போனால் அவர் கேட்டுக் கொள்ள மாட்டார்..

"அக்கா ஒன்னும் தப்பாச் சொல்லலையே பவி.. அது லேட்டாக் கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் பெரிய இடத்தில கல்யாணமாகி போயிருக்குன்னுதான சொல்லுது.. பாவம்டி என் அக்கா.. தன் கல்யாணத்தைப் பத்தி நினைக்காம என் கல்யாணத்த முதல்ல நடத்தச் சொன்னது அதுதான்.. அது மனசு தங்கம்டி.. அதைப் பத்தி குத்தமா பேசாதே.." என்று சொல்லி விடுவார்..

அகல்யாவின் மனசு பித்தளை.. ஈயத்தையும் தாண்டி.. பேரிச்சம்பழத்துக்குக்கூடப் போட முடியாத தகர டப்பா என்று பல்லவிக்குத்தானே தெரியும்..?

தியாகராஜனின் முன்பாக பல்லவிக்கு பட்டுச் சேலையை பரிசளிப்பவள் அவர் தலை மறைந்ததும்..

"இதெல்லாம் உன் புருசன் சம்பளத்தில நீ நினைச்சுக்கூடப் பார்க்க முடியாது.. என் தம்பி பெண்டாட்டியா இருக்கிறதாலே உனக்கு இந்தப் புடவையைக் கட்டிக்க கொடுத்து வைச்சிருக்கு..

https://t.me/tamilpdfebooks

வைச்சிக்க.. இதைவிட விலை உயர்த்தியான புடவைகளைத்தான் நான் வீட்டு யூஸீக்கே கட்டுவேன்..” என்பாள்..

பல்லவியின் மனம் கொதிக்கும்.. அந்தப் பட்டுச் சேலையைத் தொட்டுப் பார்க்கக் கூட அவள் விரும்ப மாட்டாள்.. அகல்யா அதற்கும் தியாகராஜனிடம் போட்டுக் கொடுப்பாள்..

“பாருடா தியாகு.. நீ அந்தப் பக்கம் போனதும்.. இந்தப் பக்கம் உன் பெண்டாட்டி.. பணக்காரப் பெருமையைக் காட்டறியான்னு நான் வாங்கிக் கொடுத்த புடவையை தூக்கி எறியறா.. எனக்கு இது தேவைதாண்டா.. அப்பேறபட்ட கோடிஸ்வரனுக்கு பெண்டாட்டியா இருந்தும் கொஞ்சம் கூட தலைக்கனம் இல்லாம என் தம்பி பெண்டாட்டியாச்சேன்னு தணிஞ்சு பேசறேன் பாரு.. அதான்.. உன் பெண்டாட்டிக்கு இவ்வளவு ஈஸியா இருக்கு..”

அவள் பொங்கும் பொங்கலில் தியாகராஜன் பல்லவிக்கு பொங்கல் வைத்து விடுவார்..

“உனக்குச் சின்னப் புத்திடி.. எங்க அக்காமேல பொறாமை..”

பல்லவி விக்கித்து விடுவாள்.. மனைவியைக் கண்டிக்கும் தியாகராஜன் தன்னைக் குறித்து ஏன் நினைக்காமல் போனார் என்று மனதுக்குள் மருகுவாள்.. அவருக்கு மனைவி என்றுதானே அகல்யா பல்லவியை இழிவு படுத்துகிறாள்.. அதைக் குறித்து நினைக்காமல் அது உண்மைதானே என்ற ரீதியில் கட்டிய கணவனும் பேசினால் அவளால் என்னதான் செய்ய முடியும்..?

https://t.me/tamilpdfebooks

அகல்யாவின் அலட்சியப் பார்வையும்.. அகம்பாவப் பேச்சும் ஆணவமான நடவடிக்கைகளும் பவித்ராவை மிகப்பெரிய அளவில் பாதித்தன.. ஏதேனும் ஒருவகையில் அவள் நாத்தனாரை மட்டம் தட்டி வைக்கத் துடியாய் துடித்தாள்.. ராம்குமார் சொந்தமாக பிஸினெஸ் ஆரம்பித்த போது அகல்யாதான் அதற்குப் பண உதவி செய்தாள்.. பல்லவி மனதுக்குள் முடங்கிப் போனாள்..

"இவ கை கொடுத்து நாம எழுந்துட்டோம்ன்னு இவ வாழ்நாள் பூராவும் பேசப் போறா ரம்யா.." மகளிடம் புலம்பினாள்..

ரம்யாதான் அவளுக்கு ஆறுதலாக இருந்தாள்..

"விடுங்கம்மா.. இது ஒரு பிரச்னையா..? இன்னைக்கு கடன் வாங்கினா நாளைக்கே அண்ணன் வட்டியோட பணத்தைத் திருப்பிக் கொடுக்கப் போறான்.. ஊரில ஆயிரம் ஃபைனான்சியர் இருக்காங்க.. இந்தப் பண உதவியை அப்படி நினைச்சிட்டுப் போவோம்.."

"அப்படியா சொல்ற..?"

"ஆமாம்மா.. உங்களுக்குத்தான் அண்ணன் குணத்தைப் பத்தித் தெரியுமே.. மத்தவங்க பணத்தில பத்து பைசாவுக்குக் கூட ஆசைப்படாது.."

"இப்ப பத்து பைசா செல்லாதுடி மகளே.."

"இப்ப இதுதான் ரொம்ப முக்கியம் பாருங்க.. பத்து பைசா இல்லைன்னா பத்து ரூபான்னு வைத்துக்கங்க.. அது செல்லுமில்ல..?"

"இப்போதைக்குச் செல்லும்.. பின்னாடி எப்படியோ.."

https://t.me/tamilpdfebooks

"பின்னாடி கதையை பின்னாடி பார்த்துக்கலாம்.. இப்ப மத்தவங்களோட ஒத்த ரூபாய்க்கு கூட ஆசைப்படாத அண்ணனைப் பத்திப் பேசலாம்.."

"ஒத்த ரூபாயா..? நீ பத்து ரூபாய்ன்னு சொன்னியேடி.."

"முடியலம்மா.. உங்களுக்கு அகல்யா அத்தைதான் லாயக்கு.."

"ஸாரிடி ரம்யா.. தெரியாம பேசிட்டேன்.."

"சரி சரி.. விடுங்க.. அண்ணன் கட்டாயமாக அவங்க கடனை அடைச்சிரும்மா.. அதில உங்களுக்கு சந்தேகம் வேணாம்.."

ரம்யாவின் கணக்கீடு சரியாக இருந்தது.. ராம்குமார் அகல்யாவிடம் வாங்கிய கடனை வட்டியும் முதலுமாக திருப்பிக் கொடுத்து விட்டான்.. அதில் அகல்யாவின் முகம் விழுந்து விட்டது..

அதைச் சுட்டிக்காட்டி மகளின் காதைக் கடித்தாள் பல்லவி..

"உன் அத்தையோட முகத்தப் பாரு ரம்யா.. வாழ்க்கை முழுசும் இதைச் சொல்லிக் காட்டலாம்ன்னு திட்டம் போட்டிருந்திருப்பா.. அது முடியாம போனதில இவ முகம் போற போக்கைப் பாரேன்.."

அகல்யாவும் அதை மெய்ப்பித்தாள்..

"இதைத் திருப்பிக் கேட்டேனா ராம்..? என் தம்பி மகனுக்கு நான் செஞ்ச உதவியா இருக்கட்டும்ன்னுதான கொடுத்தேன்.. பாவம்.. நீயாவது என் தம்பியப் போல

https://t.me/tamilpdfebooks

அல்லாடாம.. கொஞ்சம் வசதிவாய்ப்பா வாழட்டுமேன்னு தான இந்த உதவிய செஞ்சேன்..? நான் கைதூக்கி விட்டதா இருக்கட்டுமேப்பா.. இந்தப் பணத்தை கடையை இம்ப்ரூவ் பண்ண வைச்சுக்க.. உன் மனசிலயும் உன் குடும்பத்தாளுக மனசிலயும் என்மேல நன்றியுணர்ச்சி இருந்தாப் போதும்.."

பல்லவி பயந்து பேனாள்.. எங்கே அவள் மகன் ராம்குமார் அவனுடைய அத்தையின் சாகசப் பேச்சை நம்பி.. அவளுக்கு அடிமை சாசனம் எழுதிக் கொடுத்து விடுவானோ என்று தவித்துப் போனாள்.

"கேட்டியாடி ரம்யா.."

"கேட்டுக்கிட்டுத்தான இருக்கேன்ம்மா.."

"நன்றியுணர்ச்சியோட இருக்கனுமாம்.. அப்படின்னா எப்படி இருக்கனுமாம்டி..?"

"அதாவது.. வாழ்நாள் பூராவும் இவங்ககிட்ட நாயைப் போல வாலை ஆட்டிக்கிட்டே இருக்கனும்னு சொல்றாங்கம்மா.."

"நான் சொல்லலை..? இவ இந்த இடத்திலதான் வந்து நிப்பான்னு.."

"நின்னா அண்ணன் அதுக்கு இடம் கொடுத்துருமா..? அது நமக்கு மேலே இருக்கும்.. பாருங்க வேடிக்கையை..."

ரம்யா சொன்னதைப் போல அது வேடிக்கையாகத்தான் இருந்தது.. ராம்குமார் அகல்யா சொன்னதை மறுத்து அதற்கான நீண்ட விளக்கத்தையும் கொடுத்து அவளை அலற வைத்து விட்டான்..

https://t.me/tamilpdfebooks

"எந்தக் கடனை வேண்டும்னாலும் வைத்துக்கலாம் அத்தை.. ஆனா நன்றிக் கடனை மட்டும் வைச்சுக்கவே கூடாது.."

"அடடா.. அது வேத்து மனுசங்க மத்தியிலப்பா.."

"சொந்தக்காரங்க மத்தியிலதான் சுத்தமா அது இருக்கக் கூடாது.."

"கைக்கு.. வாய் நன்றி சொல்லுமா ராம்குமார்..?"

"அது ரெண்டும் ஒரே உடம்பில இருந்தா தேவையில்லை அத்தை.. உங்க கை என் வாய்க்கு சோறு கொடுத்தா அங்கே நன்றிக்கடன் வந்திருதில்ல.. அதை மிச்சம் வைக்காம கழிச்சிரனும் அத்தை.."

'ஆஹா.. இந்தப் பையன் என்ன எந்தப் பக்கம் போனாலும் பின்னி பெடலெடுக்கிறான்.. அதில வேற மிச்சம் வைக்காம நன்றிக்கடனை தீர்க்கனும்கிறானே..' அகல்யா மண்டை காய்ந்து விட்டாள்..

"பாரு ராம்.. நீரடித்து நீர் விலகாது.." என்று எதையோ சொல்ல ஆரம்பித்தவளை..

"ஆனா.. தீயடிச்சா.. தீ விலகும் அத்தை.. என் சுயமரியாதை தீய்க்கு இணையானது.." என்று சொல்லி வாயடைக்க வைத்து விட்டான் ராம்குமார்..

"அதுக்கில்லை ராம்.." என்ற அகல்யா வசமாக ராம்குமாரின் சொற்பொழிவில் சிக்கி விட்டாள்..

ராம்குமார் திருக்குறளில் நன்றிக்கென தனி அதிகாரமே இருப்பதைச் சுட்டிக்காட்டி.. அந்த ஒவ்வொரு குறளையும் சொல்லி.. அதற்கான விளக்கவுரை..

https://t.me/tamilpdfebooks

பொழிவுரை.. தனிஉரை என்று அத்தனை உரைகளையும் ஆற்றி முடித்து விட்டான்..

தாங்க முடியாமல் அகல்யா தம்பி மகனின் கால்களில் விழாத குறையாக..

“நீ சொன்னா சரியாத்தான் இருக்கும் ராம்குமார்.. பணத்தைக் கொடு.. நான் வாங்கிக்கறேன்..” என்று அவன் கையில் இருந்த பணப்பையை பறித்துத் தப்பித்தாள்..

“இதுதான் சரி அத்தை.. இனிமே நமக்குள்ளே கொடுக்கல் வாங்கல்ன்னு எதுவும் இல்ல.. நான் சுயமரியாதையுடன் தலைநிமிர்ந்து என் சொந்தக்கால்களில் நிற்பேன்..” என்றான் ராம்குமார்..

பல்லவியின் கண்களில் மின்னிய நிம்மதியைக் கண்ட அகல்யாவிற்கு அதைக் கேட்கவே பிடிக்கவில்லை..

ராம்குமார் அவனுடைய சொந்தக் கால்களில் நிற்பதற்காகவா அவள் பணம் கொடுத்தாள்.. காலம் பூராவும் அகல்யாவின் கால்களில் நன்றியுணர்வோடு பல்லவி மண்டியிட வேண்டுமென்பதற்காகத்தானே அவள் பணம் கொடுத்தாள்..?

‘ஜாதகத்தில கோளாறுன்னு பேரு கட்டி என்னை வீட்டில உட்கார வைச்சிட்டு... என்னை விட இளையவனுக்கு கல்யாணம் பண்ணி வைச்சிட்டாங்களே..’

அவளைப் பெற்றவர்களின் மீது இருந்த கோபத்தை அவள் ஒருநாளும் வெளிப் படுத்தியதில்லை.. மனதிற்குள் வைத்தே ஆளை அடிக்கும் மர்மக்கலையை அறிந்தவள் அகல்யா..

https://t.me/tamilpdfebooks

பல்லவியைக் காணும் போதெல்லாம் அவள் மனதில் தீ எரியும்.. அவளை விட வயதில் மிக இளையவளான பல்லவி.. தாலியும் கழுத்துமாக கணவனுடன் குடும்பம் நடத்த.. அகல்யா மட்டும் திருமணம் ஆகாத முதிர் கன்னியாக அந்த வீட்டில் வலம் வர நேர்ந்ததை அவள் தனக்கு நடந்த கொடுமையாக நினைத்துப் பொங்கினாள்..

இயல்பாக பல்லவி எதைச் செய்தாலும் அது அகல்யாவை சொல்லிக் காட்டுவதைப் போலவே அவளுக்குத் தோன்றி வைக்கும்.. தியாகராஜனும் பல்லவியும் சிரித்துப் பேசினால் அகல்யாவுக்கு தலை வலியும் காய்ச்சலும் வந்து விடும்.. சினிமாவுக்குப் போக நினைத்தால் அகல்யாவின் கால் வழுக்கி அவள் தரையில் விழுந்து புரண்டு அழுவாள்.. தியாகராஜன் மனைவியை மறந்து அக்காவைக் தூக்கிக் கொண்டு மருத்துவ மனைக்கு ஓடுவார்..

“அக்கம் பக்கத்திலே இருக்கிறவங்க மனசெல்லாம் சின்ன மனசுடா தியாகு.. என்கிட்ட பல்லவியப் பத்திப் பேசி கோள் மூட்டி விடப் பாக்கிறாங்க.. அடியே அகல்யா.. நீ பெரும் போக்கா உனக்கு முன்னாடி உன் தம்பிக்கு கல்யாணம் பண்ணி வைச்சிட்ட.. ஆனா உன் தம்பி பெண்டாட்டி அதை நினைச்சுப் பாக்கிறாளான்னு கேக்கிறாங்கடா..”

ஒன்றும் தெரியாத சின்ன பேபியைப் போல முகத்தை வைத்துக் கொண்டு தம்பியிடம் அவள் ஓதும் போது பல்லவியின் மனம் எரியும்..

‘இவ ஊருக்கே கோள் மூட்டுவா.. இவகிட்டப் போய் மத்தவங்க கோள் மூட்ட வந்தாங்களாக்கும்..? அக்கம்

https://t.me/tamilpdfebooks

பக்கத்தில் நான் வேணும்னே இவ கண்ணுக்கு முன்னாலே என் புருசன் கூட கொஞ்சிக் குழாவறேன்னு அழுது புலம்பிட்டு இங்கே வந்து வேற மாதிரி போட்டுக் கொடுக்குது பாரு..'

அவள் சொல்வதை அவள் கணவன் எங்கே பார்த்தார்.. அவர் பார்வைதான் குற்ற உணர்வோடு தமக்கையின் மீது பதிந்திருந்ததே..

"உனக்கு முன்னாடி நான் கல்யாணம் பண்ணியிருக்கக் கூடாதுக்கா.."

"விடுடா.. உனக்கு வேளை வந்துச்சு.. பண்ணிக்கிட்ட.. எனக்கு இன்னும் வேளை வரல.. காத்திருக்கேன்.. இதுக்குப் போயி வருத்தப்பட்டு என்ன ஆகப் போகுது..? இதுகளுக்கு வேற வேலையே இல்லைடா.. நம்ம பல்லவியும் புதுசா கல்யாணமானவ.. அவ மனசிலயும் புருசன் கூடப் பேசிச் சிரிக்கனும்.. வெளியே போகனும்ன்னு எதிர் பார்ப்பு இருக்கும்.. அதில தப்பச் சொல்ல முடியுமா..? ஆனா தியாகு.. இதுக பேசுதுக.. உனக்கும் பல்லவிக்கும் மனச்சாட்சியே இல்லையாம்.. என்னடா வீட்டில கல்யாணம் ஆகாத அக்கா இருக்காளேன்னு நினைச்சுப் பாக்காம என் முன்னாலே நீங்க ரெண்டு பேரும் கூத்தடிக்கிறேங்களாம்.. எனக்கு என்னமா கோபம் வந்துச்சு தெரியுமா.. சண்டைக்குப் போயிட்டேன்டா.."

அகல்யா சொன்ன விதத்தில் தியாகராஜன் மனைவி என்ற ஒருத்தி அந்த வீட்டில் இருப்பதையே மறந்தார்.. பல்லவி காபி கொடுக்க வந்தாலும்.. சாப்பாடு பரிமாற வந்தாலும் அதை மறுத்தார்..

https://t.me/tamilpdfebooks

"அக்காவ வரச்சொல்லு.. அதை முன்னால வைச்சுக்கிட்டு நாம கொஞ்சிக் குழாவினா நல்லா இருக்காது.. அதை ஒதுக்கி வைச்சிட்டதா அக்கம் பக்கத்தில பேசுவாங்க.."

சாப்பாடும்.. காபியும் கொடுக்கிறதுக்குப் பெயர் கொஞ்சிக் குழாவுவதா..? பல்லவிக்கு பற்றிக் கொண்டு வரும்.. இருந்தும் அவள் குரல் உயர்த்திப் பேச முடியாது..

பகலில் அகல்யாவை காரணம் காட்டிப் பேச மறுக்கும் தியாகராஜன்.. இரவில் முதுகைக் காட்டி படுத்து உறங்கி விடுவார்.. கேட்டால் வீட்டில் திருமணம் ஆகாத அக்காவை வைத்துக் கொண்டு அவர் மட்டும் மனைவியுடன் சுகித்திருந்தால் நன்றாகவா இருக்கும் என்று கேள்வி கேட்பார்..

"கடைசி வரைக்கும்.. உன் அத்தை கழுத்தில தாலி ஏறி அவ புருசன் கூட வாழற வரைக்கும் எங்களை அவ வாழ விடலைடி.. அவ எப்படி தனிச்சு நின்னாளோ.. அதைப் போலவே என்னையும் தனிச்சு நிக்க வைச்சா ரம்யா.. கட்டின புருசனை கண் எதிரே வைத்துக்கிட்டு யாரோ போல இருக்கனும்னா அது கொடுமைடி ரம்யா.. அந்தக் கொடுமையை உன் அத்தை எனக்குப் பண்ணினா.."

தாயின் மனதுக்குள் புதைந்திருந்த அத்தனை வைராக்கியத்தையும்.. வன்மத்தையும் மனதில் கொண்டு தான்.. அவளை ஆட்டிப் படைக்கும் வல்லமை கொண்ட நரேந்திரனுக்கு மனைவியாகி அவளை ஆட்டிப் படைக்கத் திட்டமிட்டாள் ரம்யா.. மற்றபடி தியாகராஜனின் சொல்லுக்காக அவள் சென்னையை விட்டு பெங்களூருக்கு வரவில்லை..

https://t.me/tamilpdfebooks

5

**உன் கண்ணாலே என்மனதை கொய்யும்..
அழகான ராட்சசி நீ....**

"தம்பி.. உனக்கே தெரியும்டா.. சொத்து பத்து அத்தனையும் நரேந்திரன் பேரில இருக்கு.. அவன் என் பேச்சை மீற மாட்டான்தான்.. ஆனா அவனுக்கு வர்ற பெண்டாட்டி என் பேச்சை மீறிட்டா..?"

அகல்யா தியாகராஜனிடம் பதைத்த போது அவர் முதலில் தமக்கை அவருடைய ஆறுதல் வார்த்தைகளை நாடித்தான் அங்கே வந்திருக்கிறாள் என்று நினைத்து விட்டார்..

"மீறினா நான் பாத்துக்கிட்டு சும்மா இருப்பேனாக்கா..? நரேந்திரனை ஏன்னு கேட்க மாட்டேனா..? கட்டின பெண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கிட்டு தாயையும்... கூடப் பிறந்தவளையும் கவனிக்காம இருக்கிறவனெல்லாம் ஒரு மனிதனா..?"

அவர் பொங்கலோ பொங்கல் எனப் பொங்க.. பல்லவியின் இதழ்கள் சுழித்து இகழ்ச்சியாக வளைந்தன.. அவள் நாத்தனாரைப் பார்த்த பார்வையில்.. உனக்கும் காலம் வந்து விட்டது என்ற செய்தி இருந்தது...

"அதைச் சொல்லுங்க.. எல்லாருமே உங்களைப் போல இருக்க வேணாமா..? நீங்க எப்படி அக்காவோட

https://t.me/tamilpdfebooks

பேச்சே வேதவாக்குன்னு இருந்தீங்க.. அதைப் போல நரேந்திரனும்.. அம்மாவோட பேச்சே வேதவாக்குன்னு இருக்க வேணாமா..?" என்று எடுத்தும் கொடுத்தாள்..

தம்பியின் மனைவி சமயம் கிடைத்தது என்று இருபொருள்பட பொடிவைத்துப் பேசிப் போட்டுத் தாக்குகிறாளோ என்ற சம்சயம் அகல்யாவின் மனதில் வந்தது..

'இருக்காது..' என்று அந்த சம்சயத்தை அவள் விரட்டிவிட்டாள்..

அவளுக்கு தியாகராஜனின் உதவி வேண்டும்.. அந்த உதவிக்கு பல்லவியின் ஒத்துழைப்பு வேண்டும்.. அதற்கு சம்சயங்கள் உதவாது என்பதினால் அவள் எதையும் கண்டு கொள்ளாத யோகியைப் போல உருமாறி விட்டாள்..

"நல்லாச் சொன்ன பல்லவி.. உன்னைப் போல ஒருத்தி இருக்க முடியுமா..? நீ என் தம்பி பெண்டாட்டியா வந்த நாளில இருந்து என்னை எதிர்த்து ஒரு வார்த்தை 'ஏன்'னு கேட்டிருப்பியா..?"

'கேட்டுட்டு இந்த வீட்டில நான் குப்பை கொட்டியிருக்க முடியுமா..? அதுக்கு நீ விட்டிருவியா..?'

"இந்தா.. என் தம்பி இருக்கான்.. தங்கக் கம்பி..! நான் கோடுகிழிச்சா அதைத் தாண்டவே மாட்டான்.."

'தாண்ட நீ விட மாட்ட.. நான் கோட்டை அழிக்க அழிக்க அதுமேல கோடு போடுவ..'

"நீயும்தான் இருக்க.. அண்ணிங்கிற வார்த்தைக்கு மறுவார்த்தை பேசியிருப்பியா..?"

https://t.me/tamilpdfebooks

'பேசி என்ன பண்ண..? குணங்கெட்ட மனுசனுக்கு கழுத்தை நீட்டியிருக்கேனே.. மறுவார்த்தை நான் பேசினா.. மறு நிமிசமே இந்த மனுசன் என்ன பொறந்த வீட்டுக்குத் துரத்தி விட்டுத்தானே வேற வேல பார்த்திருப்பாரு..? அதானே உன் திட்டமே..'

"நரேந்திரன் உன்னைப் போல இல்லைடா தியாகு.."

'அவன் மட்டுமில்ல.. எவனுமே உன் தம்பியப் போல இருக்க மாட்டான்..'

"பெண்டாட்டி சொன்னா அப்படியே கேட்டுட்டுப் போறவனா அவன் இருக்காண்டா தம்பி.."

'அதென்ன பெரிய கொலைக் குத்தமா..? உன் புருசன் நீ சொன்னதைக் கேட்டுக்கலையா..? அதில உனக்கு எம்புட்டுப் பெருமை..!'

"அவனுக்கு வர்ற பெண்டாட்டி ராட்சசியாய் இருந்துட்டா என்பாடு திண்டாட்டமாப் போயிரும்டா தம்பி.."

'எல்லாரும் என்னைப் போலவே இருந்துருவாங்களா..? வீட்டில வாழ வந்த பொண்ண நீ படுத்தின பாட்டுக்கு உனக்கு ராட்சசிதான் மருமகளா வந்து வாய்ப்பா..'

பல்லவியின் ரத்தம் கொதித்தது.. அவளொன்றும் சுயநலம் பிடித்த பெண்ணல்ல.. அவள் வீட்டில் வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்.. அதனால்தான் அவள் தியாகராஜனை பெண் கேட்டு வரும்படி சொன்னாள்.. மற்றபடி அகல்யாவுக்கு முன்னால் கணவனுடன் இழைய வேண்டும் என்று ஒருநாளும் அவள்

https://t.me/tamilpdfebooks

நினைத்ததில்லை.. அகல்யாவின் கண் மறைவாகத்தான் அவள் தியாகராஜனிடம் பேச முனைவாள்.. ஆனால் கண்களை விலக்காமல் தம்பியையும் தம்பி பெண்டாட்டியையும் அகல்யா கண்காணித்துக் கொண்டிருந்தால்.. அவள்தான் பாவம் என்ன செய்வாள்..?

தியாகராஜனுடன் வெளியே கிளம்பும்போது அகல்யாவையும் கூட அழைத்துக் கொண்டு போவதாகத்தான் அவர்களின் திட்டம் இருக்கும்.. அதை அறியாமல் அகல்யா தகிடுதத்தங்கள் பண்ணி அவர்கள் வெளியே கிளம்புவதை நிறுத்தி விடுவாள்..

தியாகராஜனிடம் பல்லவியே... அகல்யாவின் திருமணம் முடியும் வரை பொறுத்திருக்கலாம் என்று சொல்லியிருப்பாள்தான்.. அதைச் சொல்லும் மனதும்.. நினைவும்.. நியாயமும் அவளிடம் இருந்தன.. ஆனால் அவள் அந்த முடிவைச் சொல்லாமல் தியாகராஜனை அந்த முடிவை எடுக்க அகல்யா வைத்ததினால்தான் அவள் தனது உரிமை பறிக்கப் பட்டதாக நினைக்க ஆரம்பித்தாள்..

மனிதர்களை தெய்வங்களாக ஆக்குவதும்... அசுரர்களாக ஆக்குவதும் பிறரின் செய்கைகள்தான்..

பல்லவியின் மனதையும்... குணத்தையும் புரிந்து கொள்ளாமல்.. புரிந்து கொள்ள விரும்பாமல் அடாவடியாக அவளை ஆட்டி வைத்த அகல்யாவின் மீது பல்லவியின் அடிமனதில் பகை உருவாகி விட்டதென்றால் அதற்கான முழுக்காரணமும் அகல்யா மட்டும்தான்.. பல்லவியின் மீது யாதொரு தவறும் இல்லை..

https://t.me/tamilpdfebooks

"சொல்லுக்கா.. இப்ப நான் என்ன செய்யனும்..? நேரா பெங்களூருக்கு வந்து நரேந்திரன்கிட்ட சண்டை போடவா..?"

மீசையை முறுக்கிய தியாகராஜனைப் பார்க்கப் பார்க்க பல்லவிக்குள் கொலைவெறி மிகுந்தது.. இந்த வீர.. தீரத்தையெல்லாம்.. மனிதர் இத்தனை நாள்களாக எங்கே ஒளித்து வைத்திருந்தார் என அவள் மனதிற்குள் குமைந்தாள்.. இதைப் போல எதையாவது அவள் சொல்லும் போது..

"பொறுத்துப் போகனும் பல்லவி.. பொறுத்தார் பூமி ஆள்வார்.." என்று உபதேசம் பண்ணும் மகராஜன் அந்த பூமியை அக்காவை ஆளச் சொல்லாமல் மீசை முறுக்கியதில் இந்த மனிதருக்கு வேளா வேளைக்குச் சமையல் செய்து போட்டு உடம்பை உரமேற வைப்பதற்குப் பதில் பிறந்த வீட்டிற்குப் பெட்டியைக் கட்டி விடுவது மேல் என்று அவளது மனது பொங்கியது..

'ஆக்கிப் போடறது நானு.. பொங்க வைக்கிறது அக்காவுக்கா..?'

அவளின் கொதிப்பை அறியாமல் தம்பியின் ரௌத்திரத்தில் தண்ணீர் தெளித்து அடங்க வைத்தாள் அகல்யா..

"அவன்கிட்ட சண்டை போட்டு என்னத்துக்கு ஆகப் போகுதுடா தியாகு.. அவனைப் பகைச்சுக்கக் கூடாதுடா.. காரியம் கெட்டிரும்.."

"வேற என்னதான் செய்யறது..? புத்தி சொல்லவா..?"

https://t.me/tamilpdfebooks

"அது என்கிட்ட இல்லையான்னு அவன் கேட்பான்..?"

'நியாயம்தானே..' என்றிருந்தது பல்லவிக்கு..

நரேந்திரனுடைய புத்தியினால்தான் அவன் வியாபார உலகத்தில் கொடி கட்டிப் பறக்கிறான்.. அவனுக்குப் போய் தியாகராஜன் புத்தி சொல்வதா..? அந்த அளவு புத்தியுடன் தான் தியாகராஜன் பிழைத்துக் கொண்டிருக்கிறாரா..?

'அக்கா மேல இருக்கிற பாசத்தில இந்த மனுசனுக்கு புத்தி கெட்டுப் போச்சு.. யாருக்கு யார் புத்தி சொல்றது..?'

"உக்கார வைச்சுப் பேசிப் பாக்கலாமா..?"

"என்னன்னு பேசுவ..?"

"அக்கா பயப்படுது.. பெண்டாட்டி பேச்சைக் கேட்டு அக்கா மனசை நோகடிக்காதேன்னு எடுத்துச் சொல்லுவேன்.."

'இந்த வேலைக்குத்தான் இந்த மனுசன் லாயக்கு..' என்று தோன்றியது பல்லவிக்கு...

'ஊரில ஒரு மனுசனும் பெண்டாட்டி பேச்சைக் கேட்டிரக்கூடாது.. எல்லாரும் அவங்கவங்க அம்மா.. அக்காப் பேச்சைக் கேட்டுக்கிட்டு பெண்டாட்டிகூட வாழாம துரத்தி விட்டிரனும்..'

பேசாமல் அகல்யாவுக்கு கலந்து வைத்திருந்த காபியில் விசத்தைக் கலந்து விடலாமா என்று யோசித்தாள் அவள்..

அதெல்லாம் வேண்டாம் என்று ரம்யா சைகை செய்ததினால் விட்டு வைத்தாள்..

https://t.me/tamilpdfebooks

"இதுவே ஆடிப் போய் கிடக்கு.. இதை இன்னும் கொஞ்சம் ஆட்டி வைக்கிறதை விட்டுட்டு இத்தனூண்டு விசத்தில காரியத்த முடிச்சுரலாம்ன்னு பாக்கறிங்களேம்மா.. இதோட ஆட்டத்தை அடக்கனும்.. அதுக்கென்ன வழின்னு யோசிங்க.."

அந்த வழியையும் அகல்யாவே சொல்லிக் கொடுத்ததுதான் பெருத்த விந்தை.. அவளை அடக்க என்ன வழியென்று தாயும் மகளும் யோசித்துக் கொண்டிருப்பதை அறியாமல் அழகான வழியொன்றை எடுத்து அவர்கள் முன்னால் வைத்தாள் அகல்யா..

"நீ மனசு வைச்சா என் சங்கடம் தீர வழியிருக்குடா தியாகு.."

"சொல்லுக்கா.. நான் என்ன செய்யனும்.."

"உன் மகளை என்கூட பெங்களூருக்கு அனுப்பி வைக்கனும்.."

அகல்யாவின் கோரிக்கையில்..

"பார்த்தியா இந்தப் பொம்பளைக்கு இருக்கிற நெஞ்சழுத்தத்தை.." என்று மகளின் காதோரமாக வெகுண்டாள் பல்லவி..

"புதுசாவா வந்திருக்கு..? இவங்க பிறக்கிறப்பவே நெஞ்சழுத்தத்தோடு பிறந்தவங்கதானே.. விடுங்கம்மா.. எதுக்காக என்னைக் கூப்பிடறாங்கன்னு கேக்கலாம்.." ரம்யா தாயை சமாதானப் படுத்தினாள்..

"எதுக்குக்கா..?" தியாகராஜன் வெகுளியாக வினவினார்..

https://t.me/tamilpdfebooks

அகல்யாவுக்கு தம்பியாக பிறந்துவிட்டு இவ்வளவு வெள்ளந்தியாக அவர் இருக்கக் கூடாது என்று பல்லவி நினைத்துக் கொண்டாள்..

"இல்லடா தம்பி.. நம்ம ரம்யா என் வீட்டுக்கு வந்து கொஞ்ச நாளைக்கு தங்கியிருக்கட்டும்.."

"அவ மேலே படிக்கனுமேக்கா.."

"அந்தப் படிப்பை அங்கே வந்து படிச்சா ஆகாதா..?"

"ஏன்க்கா.. சொந்த வீட்ட விட்டுட்டு அத்தை வீட்டில தங்கி என்மக படிச்சா ஊர் உலகம் என்ன சொல்லும்..?"

தியாகராஜனின் கேள்வியில்...

"உன் அப்பா ஒன்னும் நான் நினைச்ச அளவுக்கு வெள்ளந்தியான மனுசன் இல்லடி.." என்று புளகாங்கிதப் பட்டுப் போனாள் பல்லவி...

"அதையெல்லாம் பார்த்தா வேலைக்கு ஆகாதுடா தம்பி.. ஊர் உலகத்துக்கு என்ன.. நின்னா ஒரு பேச்சு.. நடந்தா ஒரு பேச்சுன்னு எதையாவது சொல்லிக்கிட்டுத் தான் இருக்கும்.. அதையெல்லாம் இந்தக் காதில வாங்கி அந்தக் காதில விட்டுரனும்.."

"பெண் பிள்ளைக விசயத்தில அப்படியெல்லாம் இருக்க முடியாதுக்கா.. ரம்யான்னு இல்ல.. உன்னையும் நாங்க இதைப் போலதான் பாத்துக்கிட்டோம்.. கல்யாண வயசில உனக்கு மகன் இருக்கான்.. அப்படியிருக்கிறப்ப உன் வீட்டில தங்கி என்மக படிச்சா நல்லாயிருக்காதுக்கா.."

"தியாகு.."

https://t.me/tamilpdfebooks

"அக்கா..."

நரேந்திரன் கண் பார்வையில படறதைப் போல ரம்யா அவன் முன்னாலே அந்த வீட்டில இருந்தா.. அவன் மனசு மாறி ரம்யாவைக் கல்யாணம் பண்ணிக்க ஒப்புக்க மாட்டானா..?"

"என்னக்கா பேசற..?" தியாகராஜனின் முகம் மாறியது..

அகல்யாவின் ஆழ்ந்த கேள்வியில் பல்லவியே ஆடிப் போனாள்..

"இது என்னடி இவ இப்படிக் கேக்கிறா..?" என்று மகளிடம் கேட்டாள்..

ரம்யாவுக்கும் அதே எண்ணம்தான்.. நரேந்திரனின் முன்னால் நடமாடினால் மட்டும் அவன் அவளைத் திரும்பிப் பார்த்து விடுவானா..? அவனைப் போல 'கர்வி' இந்த உலகத்தில் இல்லை என்பது அவளின் எண்ணம்..

"ஒருவேளை பார்த்துட்டா..?" பல்லவி யோசனையானாள்..

"அம்மா..."

"இது உனக்கு கிடைச்சிருக்கிற மிகப் பெரிய சான்ஸ் ரம்யா.. கனவிலயும் இதைப் போல மாப்பிள்ளை உனக்கு அமையாது.. என்ன மாதிரியான ராஜ வாழ்க்கை உனக்குக் காத்திருக்கு.. கடவுளே..! அத்தனை சொத்தும் அவன் பேரில இருக்கு.. நீ மட்டும் நரேந்தினுக்குப் பெண்டாட்டியா ஆகிட்டா இந்த அகல்யா உன் காலடியில.."

பல்லவியின் கண்கள் மின்னின.. ரம்யா தயங்கினாள்.

https://t.me/tamilpdfebooks

"ஆனா.. அம்மா..?"

ரம்யாவின் கேள்வியில் பொதிந்திருந்த அர்த்தத்தை பல்லவி உணர்ந்தாள்தான்... நிமிர்ந்து மகளின் விழிகளுக்குள் ஊடுறிவி பார்த்தாள்..

"ஒன்னை நினைப்பில வை ரம்யா... உன் அத்தையோட ஆணவத்துக்கும்.. அகம்பாவத்துக்கும் என்ன காரணம்ன்னு தெரியுமா..? இவ கோடிஸ்வரன் செழியனோட பெண்டாட்டிங்கிறதுதான்.. அதை மறந்திராதே.."

பல்லவி சொன்ன செய்தியின் உள்பொருளை ரம்யா புரிந்து கொண்டாள்.. அவள் முகம் தெளிந்தது.. மகளுக்கு ஆட்சேபனை இல்லையென்பதை அறிந்து கொண்ட பல்லவி நிம்மதிப் பெருமூச்சுடன் கணவனின் மறுப்பை மறுத்தாள்..

"என்னங்க நீங்க.. அண்ணிதான் இத்தனை சொல்றாங்கல்ல.. நம்ம ரம்யாவை அவங்க பார்த்துக்க மாட்டாங்களா..? அனுப்பி வைக்கலாங்க..."

"என்னடி பேசற..? அங்கே கல்யாண வயசில அக்கா மகன் இருக்கான்.."

"இருக்கட்டுமே... கூடவே உங்க அக்கா மக அர்ச்சனாவும் இருக்காதான..? ரெண்டு பேரும் ஒருத்தருக் கொருத்தர் ஒத்துமையா இருந்துக்குவாங்க.. இங்க படிக்கிறபடிப்பை ரம்யா அங்கே போய் படிக்கட்டும்.. உங்க அக்கா சொல்கிறதைப் போல நரேந்திரன் மனசு மாறி நம்ம பொண்ண கல்யாணம் பண்ணிக்கிட்டா உங்க அக்காவும் நிம்மதியா இருப்பாங்கல்ல.. நான் உங்க அக்காவோட நல்லதுக்குத்தான் சொல்றேங்க.."

https://t.me/tamilpdfebooks

பலவாறு பேசி.. தியாகராஜனின் மனதை கரைப்பாய் கரைத்து ராம்குமாரிடம் விசயத்தை மறைத்து ரம்யாவை பெங்களூருக்கு அனுப்பி வைத்து விட்டாள் பல்லவி...

பல்லவி மறுப்பாள் என்று நினைத்திருந்த அகல்யா ஆனந்தப் பட்டுப் போனாள்.. எதிர்பாராமல் கிடைத்த பல்லவியின் உதவியில் அவளுக்கு யானைபலம் வந்து விட்டது..

"உன் உதவியை மறக்க மாட்டேன் பல்லவி.." தம்பி மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டாள்..

"நீங்க மறக்க மாட்டிங்கன்னு எனக்கும் தெரியும் அண்ணி.." வன்மமாக சொன்னாள் பல்லவி..

ரம்யா அகல்யாவுடன் பெங்களூருக்கு வந்தாள்.. வந்த முதல் நாளிலேயே அவளை கல்லூரியில் சேர்த்து விட சொல்லி நரேந்திரனிடம் கெஞ்சி விட்டு சரியான மண்டகப்படியை வாங்கிக் கட்டிக் கொண்டாள்..

"அம்மா..."

அன்று நரேந்திரன் போட்ட சப்தத்தில் அந்த வீடே அதிர்ந்து குலுங்கியது.. அகல்யா பதறி ஓடிவந்து கையைப் பிசைந்தாள்..

"யார் இந்தப் பொண்ணு..?"

நரேந்திரனின் கேள்வியில் அருண்குமாருக்கு சிரிப்பு வந்து விட்டது.. வாய் விட்டு அவன் சிரிக்க.. அகல்யா அவனை முறைத்துவிட்டு.. நரேந்திரனிடம் கேள்விக் குறியைப் போல உடலை வளைத்து பவ்யமாக பதில் சொன்னாள்..

https://t.me/tamilpdfebooks

"என்ன நரேன்... இவ யாருன்னு உனக்குத் தெரியலையா...? ரம்யா பெரிய பொண்ணா வளர்ந்துட்டாள்ல... அதான் உனக்கு அடையாளம் தெரியல.. இவ உன் மாமா பொண்ணுடா.."

"அந்தக் கதையையெல்லாம் நான் கேட்டேனா..? இந்தப் பொண்ணுக்கு இங்கே என்ன வேலை..?"

நரேந்திரன் இறைந்த போது அந்த வீட்டில் வேலை செய்த அத்தனை வேலையாள்களும் அங்கேதான் இருந்தார்கள்.. அப்போது மாதுரி வேலைக்கு சேர்ந்திருக்க வில்லை.. ரம்யாவின் முகம் சிறுத்துப் போனது.. அகல்யா அவளைச் சமாதானப் படுத்தும் முயற்சியாக அவள் தோளில் கை போட்டு தட்டிக் கொடுத்தாள்.. அதை கடுமையாக பார்த்தான் நரேந்திரன்..

"ஹையர் ஸ்டடிஸீக்கு இங்கே வந்திருக்காடா..."

"ஏன்..? சென்னையில் காலேஜே இல்லையா..?"

"பெங்களூரில படிக்கனும்னு இவ ஆசைப்பட்டாளாம்.. என் தம்பி சொன்னான்.. எனக்கிருக்கது ஒரே தம்பி.."

"அதுக்கு..?"

"நான் சரின்னு ஒப்புக்கிட்டு கூப்பிட்டுக்கிட்டு வந்துட்டேன்..."

நரேந்திரன் பல்லைக் கடித்தபடி அகல்யாவை முறைத்த முறைப்பில் யாரைக் கேட்டு அழைத்து வந்தாய் என்ற கேள்வி இருந்து..

"என்னவோ செஞ்சு தொலைங்க.. ஆனா என்னை இந்தப் பொண்ணு டிஸ்டர்ப் பண்ணக்கூடாது.. இவளை

https://t.me/tamilpdfebooks

காலேஜில் சேர்த்து விட நான் வரனுமாமில்ல..? எனக்கு இதுதான் வேலையா..? சொல்லி வையுங்க.."

நரேந்திரன் இரைந்து விட்டு வெளியே போய் விட்டான்..

6

ஓரவிழிப் பார்வையிலே என்
உறக்கத்தைப் பறித்து விட்ட
அழகான ராட்சசி நீ....

'டக்.. டக்..' என்ற ஷீவின் சப்தம் அழுத்தமான காலடியோசையை உணர்த்தியது.. அந்த ஓசையில் வெளிப்பட்ட கம்பீரத்தில் அந்தக் கம்பெனியில் இருந்த அனைவரும் அனிச்சையாக எழுந்து நின்றார்கள்..

நாலாதிக்கிலும் ஒலித்த 'குட்மார்னிங்சார்'க்கு தலையசைத்தபடி யாரையும் திரும்பிப் பார்க்காமல் நேர் கொண்ட பார்வையோடு அவனுடைய அறைக்கு விரைந்து விட்டான் நரேந்திரன்.. மூச்சு விட முடியாத அளவிற்கு அவனுக்கான அலுவல்கள் காத்துக் கொண்டிருந்தன.. லேப்டாப்பைத் தட்டி அதிலிருந்த மெயில்களைப் பார்த்துக் கொண்டிருந்தவன் நிர்மலாவின்..

"எக்ஸ்யூஸ்மி சார்.." என்ற அழைப்பில் நிமிர்ந்தான்..

"யெஸ்.."

https://t.me/tamilpdfebooks

"அபிஸியல் மீட்டிங் இருக்கு சார்.."

"எல்லாரும் வந்துட்டாங்களா.."

"யெஸ் சார்.. உங்களுக்காகத்தான் வெயிட் பண்ணிக்கிட்டு இருக்காங்க..."

"இதோ வரேன்.."

லேப் டாப்பை அணைத்து விட்டு எழுந்தான் நரேந்திரன்.. கோட்.. சூட்டுக்கான விளம்பர மாடலைப் போல அதீத கம்பீரத்துடன் இருந்தவனை ஆர்வமாக பார்த்த நிர்மலாவின் பார்வையை தவிர்த்து மீட்டிங் ஹாலை நோக்கி நடந்தான்..

"குட்மார்னிங் எவரிபடிஸ்.."

நீண்டிருந்த மீட்டிங் டேபிளின் நடுநாயகமான எம்.டியின் நாற்காலியில் கம்பீரமாக அமர்ந்தவனின் ஆளுமையான தோற்றத்தை அங்கிருந்த அனைவருமே மனதுக்குள் வியந்தார்கள்..

"இந்த எம்.டி சேருக்குன்னே பிறந்து வந்ததைப் போல இருக்கார்.."

சன்னமான முணுமுணுப்புக்கு 'ஆம்' என்ற பாவனையில் தலையை அசைத்தார் அவருக்கு அருகில் அமர்ந்திருந்தவர்..

மீட்டிங் ஆரம்பமானது.. நரேந்திரனின் உரையைக் கேட்டவர்கள் அவர்களின் அபிப்ராயத்தைச் சொல்லிக் கொண்டிருந்த அந்த நேரத்தில்தான் நரேந்திரனின் செல்போனுக்கு அந்த செய்தி வந்தது..

https://t.me/tamilpdfebooks

வெளிச்சத்துடன் மின்னிய செல்போனின் திரை.

'மிஸ்டர் நரேந்திரன்.. உங்கள் மகன் எங்களது ஹாஸ்பிடலில் அனுமதிக்கப் பட்டிருக்கிறான்.. அவசரம்.. உடனே வரவும்..' என்று அறிவித்தது..

முதலில் மீட்டிங்கைக் கவனித்தபடி இயல்பாகத்தான் அந்தச் செய்தியைக் கவனித்தான் நரேந்திரன்.. அது சொல்லிய விவரத்தில் அவனுடைய புருவங்கள் முடிச்சிட்டன..

'என் மகனா..?'

அவன் முகம் மாறியது.. செல்போனின் திரையை ஊன்றிப் படித்தான்.. ஒருமுறைக்கு பலமுறை படித்தும் அது ஒரே செய்தியைத்தான் அடித்துச் சொல்லியது..

'எனக்குத் தெரியாம எங்கிருந்து வந்தான்.. 'என் மகன்..'?'

கோபத்துடன் செல்போனை எடுத்த நரேந்திரன்..

"எக்ஸ்யூஸ்மி..." என்று மீட்டிங் ஹாலில் இருந்தவர்களிடம் சொல்லியபடியே எழுந்து.. மீட்டிங் ஹாலை ஒட்டியிருந்த அறைக்குள் போனான்..

எங்கிருந்து செய்தி வந்திருந்ததோ.. அந்த போன் நம்பர்களை அழுத்தினான்.. மறுமுனையில்..

"ஹலோ.." என்ற பெண்குரல் கேட்டது..

"ஐ ஆம் நரேந்திரன்.. நரேன் குருப் ஆஃப் கம்பெனியின் எம்.டி.. இந்த நம்பரிலிருந்து கொஞ்ச நேரத்துக்கு முன்னால் எனக்கொரு மெஸேஜ் வந்தது.." புயலின் சீற்றத்தோடு பேசினான்..

https://t.me/tamilpdfebooks

"அதை நான்தான் அனுப்பினேன் சார்.." அமைதியாகப் பதில் சொன்னது அந்தப் பெண் குரல்..

"ஹூ ஆர் யு.." நரேந்திரன் சீறினான்..

"ஐ ஆம் டாக்டர் அமிர்தா.. உங்க சன்னுக்கு நான் தான் ட்ரீட்மெண்ட் கொடுத்துக்கிட்டு இருக்கேன்.."

"என் சன்னா..? உளருகிறிங்களா..?"

"உளறல் இல்லை சார்.. இது உண்மை.. எங்க ஹாஸ்பிடலில உங்களோட மூன்று வயது மகன் சுரேந்திரன் அட்மிட் ஆகியிருக்கிறான்..."

"வாட்..?"

"யெஸ் மிஸ்டர் நரேந்திரன்.. அவனுடைய அப்பாவின் பெயராக நரேந்திரன்.. நரேன் குருப் ஆஃப் கம்பெனியின் எம்.டி பெங்களூர்ன்னு கொடுத்திருக்காங்க.."

போனில் பேசிய பெண்குரலில் பொய்யில்லை.. நரேந்திரன் பல்லைக் கடித்தான்.. எங்கிருந்தோ வரும் போன்கால் உன் மகன் எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறான் என்று அவனிடம் அறிவிக்கிறது.. அவனுக்கு ஏது மகன்..?

"உங்க ஹாஸ்பிடல் எங்கேயிருக்கு..?" கோபத்துடன் கேட்டான்..

"தஞ்சாவூர்.." என்றாள் டாக்டர் அமிர்தா...

"நான் உடனே கிளம்பி அங்கே வருகிறேன்.. என் நேரத்தை வீணடித்ததிற்காக உங்கள் மேல் கேஸ் போடப் போகிறேன்.."

"தாராளமாக செய்யுங்கள் மிஸ்டர் நரேந்திரன்.. இது எங்களோட டியுட்டி.. அதைத்தான் நாங்க செய்தோம்.."

https://t.me/tamilpdfebooks

"பொய் சொல்லி ஒரு பிஸினெஸ் மேனின் பெயருக்கு களங்கம் விளைவிப்பதுதான் உங்கள் டியூட்டியா..?" நரேந்திரனின் கண்கள் சிவந்தன..

மறுமுனையில் பேசிக் கொண்டிருந்த அமிர்தா அதற்கெல்லாம் அயர்கிறவளாகத் தெரியவில்லை.. நரேந்திரனின் கோபம் அவளை பாதித்தாகவும் தெரிய வில்லை..

அவ்வளவு பெரிய செய்தியை அலட்டிக் கொள்ளாமல் சொல்லி விட்டு.. அவனுடைய கோபத்திற்கு துளிக்கூடப் பயப்படாமல் 'கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா..' என்ற ரீதியில் அவள் பேசிச் கொண்டிருந்தது நரேந்திரனை யோசிக்க வைத்தது..

'ஆனால்.. என் மகன்..! அது எப்படி..?'

அதையறியாமல் அவனால் வேறு வேலையைப் பார்க்க முடியாது போல ஆகிவிட்டது.. அவன் போனில் கத்தினான்..

"யார் வேண்டும்னாலும் யார் பெயரையும் அப்பான்னு போட்டுக்கலாமா..? உங்க ஹாஸ்பிடலில் அதுக்கு இடம் கொடுப்பீங்களா..?"

"மிஸ்டர் நரேந்திரன்... இது ஹாஸ்பிடல்.. போலிஸ் ஸ்டேசன் இல்லை.. எங்களுக்கு ட்ரீட்மெண்ட்தான் முக்கியம்.. விசாரணையெல்லாம் அடுத்துத்தான்... அத்துடன் இந்த விசாரணைக்கான தேவையே இல்லை மிஸ்டர் நரேந்திரன்.. அது உங்களுக்கே புரியவரும்.."

"எப்போது..?"

"நீங்கள் இங்கே வரும்போது.."

https://t.me/tamilpdfebooks

"நல்லாப் பேசறிங்க டாக்டர்.. இதுக்கெல்லாம் நீங்க பதில் சொல்லித்தான் ஆகனும்.. என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியாது.."

"ஏன் தெரியாது..? உங்களைப் பற்றித்தான் ஒவ்வொரு பிஸினெஸ் மேகசினிலும் வரைந்து தள்ளராங்களே.. உங்களை எங்களுக்கு நன்றாகவே தெரியும் மிஸ்டர் நரேந்திரன்.."

"அப்படியிருந்துமா யாரோ ஒருத்தங்க அவங்க குழந்தையோட அப்பாவா என் பெயரைச் சொன்னதை பதிவு பண்ணியிருக்கீங்க..? அதுவும் போதாதுன்னு எனக்கு வேற போன் பண்ணியிருக்கீங்க..."

மறுமுனையில் ஒர்நொடி மௌனம் நிலவியது..

'பயந்து விட்டாள்..' என்று நினைத்துக் கொண்டான் நரேந்திரன்..

'அதற்காக இவளை சும்மா விட்டு விடக் கூடாது.. நேராகப் போய் நாக்கை பிடுங்கிக் கொள்வதைப் போல நான்கு வார்த்தைகள் கேட்டு விட்டு இந்த நரேந்திரன் யாருன்னு காட்டிட்டி வரனும்.. மகனாமே.. யாருக்கு யார் மகன்..? உதவின்னு கேட்டா என் டிரஸ்டில இருந்து கோடி கோடியா கொடுத்துட்டுப் போறேன்.. அதை விட்டுட்டு இப்படிச் சொன்னா அதுக்கான பலனை அனுபவிச்சுத்தான் ஆகனும்.. நான் இவங்களை சும்மா விட மாட்டேன்..'

அவன் கொதித்துக் கொண்டிருந்தபோதே மறுமுனையில் அமிர்தாவின் குரல் ஒலித்தது..

"வி ஆர் டாக்டர்ஸ்... எங்களுக்கும் பப்ளிக் ரெஸ்பான்ஸிபிலிட்டிஸ் இருக்கு மிஸ்டர் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

யாரோ சொன்னதுக்காக உங்களைப் போல ஹையர் பொஸிசனில இருக்கிற பிஸினெஸ் மேக்னெட்டை நாங்க டிஸ்டர்ப் பண்ண மாட்டோம்.."

"இப்ப நீங்க செய்து கொண்டிருப்பது என்ன டாக்டர்..? இது தொந்திரவு இல்லையா..?"

"இல்லை மிஸ்டர் நரேந்திரன்.. என் பேசன்டோட கண்டிசனை அவனுடைய அப்பாவுக்கு நான் தெரிவிக்கிறேன்.. தட்ஸ் ஆல்.."

"என்னது..?..! திரும்பத்திரும்ப என் மகன்னு சொன்னீங்கன்னா எனக்கு கெட்ட கோபம் வரும் டாக்டர்.."

"உங்களுக்கு நல்ல கோபம் வந்தாலும் எனக்குக் கவலையில்லை மிஸ்டர் நரேந்திரன்.. நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன்.."

மறுமுனை துண்டிக்கப்பட்டது.. கண்சிவந்த நரேந்திரன் உடனடியாக டிராவல் ஏஜன்ஸிக்குப் போனைப் போட்டான்.. அவனுக்கான டிக்கெட்டை ஏற்பாடு செய்து விட்டு மீட்டிங் ஹாலுக்குள் வந்தான்.. அவன் வரும் வரை சளசளத்துக் கொண்டிருந்தவர்கள் பேச்சை நிறுத்தி விட்டு அவன் முகத்தைப் பார்த்தார்கள்.. அங்கே அமைதி நிலவியது..

"ஸாரி ஜென்டில் மென்.. ஐ ஹேவ் சம் அர்ஜன்ட் வொர்க்ஸ்.. ஸோ.. இந்த மீட்டிங்கை நாம் வேறொரு நாளில் கன்டினியு பண்ணலாமா..?"

அங்கிருந்தவர்களின் முகங்களில் ஆச்சரியம் நிலவியது.. நரேந்திரனா பிஸினெஸ் மீட்டிங்கைத் தள்ளிப் போடுகிறான்..?

https://t.me/tamilpdfebooks

அதுவும் அன்றைய மீட்டிங்.. நரேந்திரனின் கம்பெனி அறிமுகப் படுத்தப் போகும் முக்கியமான தயாரிப்புப் பொருளை வியாபார சந்தையில் எப்படி கொண்டு போவது என்பதைப் பற்றியது..

முதலாளிக்கே கவலையில்லாதபோது மற்றவர்களால் என்ன செய்ய முடியும்..?

“ஓகே சார்..”

அவர்கள் தங்களுக்குள் மெலிதான குரலில் பேசியபடி அந்த இடத்தை விட்டுக் கலைந்து சென்றார்கள்.. நரேந்திரன் மின்னல் வேகத்தில் வீட்டுக்குக் காரைச் செலுத்தினான்.. வீட்டைத் துடைப்பதை மறந்து விட்டு டிவியை ‘ஆ’வென்று பார்த்துக் கொண்டிருந்த மாதுரி அவளை ஒரு நிழல் கடப்பதைப் போல உணர்ந்து திரும்பிப் பார்த்தாள்.. அதற்குள் நரேந்திரன் நான்கே எட்டில் மாடிப்படிகளை கடந்து போயிருந்தான்.. மாதுரி திகிலானாள்..

‘பிரமையா இருக்கும்..’ தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்டவள் மீண்டும் டிவியில் ஆழ்ந்து போக புயல்வேகத்தில் பெட்டியுடன் வந்த நரேந்திரன் அவளைக் கடந்தான்..

சூறாவளிக் காற்று ஒன்று சுழன்று அவளைக் கடப்பதைப் போல மீண்டும் உணர்ந்த மாதுரி கையிலிருந்த வீடு துடைக்கும் வைப்பை நழுவ விட்டு..

“பே.. பே.. பேய்..” என்று அலற ஆரம்பித்து விட்டாள்..

https://t.me/tamilpdfebooks

சமையலுக்கு கறிவேப்பிலை பறித்துவர தோட்டத்துப் பக்கம் போயிருந்த வனிதா அப்போதுதான் உள்ளே வந்தாள்.. அலறிய மாதுரியின் வாயை இறுகப் பொத்தி..

"அடச்சீ.. வாயை மூடு.." என்று அதட்டினாள்..

"இதை அம்மால்ல சொல்லுவாங்க.." வனிதாவின் கையை விலக்கி விட்டுக் கேட்டாள் மாதுரி..

"இதையெல்லாம் உணக்கையா கவனிச்சு வைச்சிரு.. எதுக்குடி பே.. பேய்ன்னு கத்தி வைச்ச..?"

"இல்ல வனிதா.. நான் இங்ஙன நின்னு டிவியப் பார்த்துக்கிட்டு இருந்தேனா..?"

"அதத்தான அப்போப் பிடிச்சுச் செய்யற.. உனக்கு நம்ம ஐயாவைப் பத்தித் தெரியாது.. ஒழுங்கா வேலை செய்யலைன்னா சீட்டைக் கிழிச்சு உன் வீட்டுக்கு அனுப்பி வைச்சிருவாரு.."

"அவருதான் ஆபிசுக்குப் போயிட்டாரே..."

"நினைச்சுக்கிட்டு இரு.. இப்ப வந்துட்டுப் போனது யாருன்னு நினைக்கிற..? நம்ம ஐயாதான்.."

"ஐயாவா..? இங்கேயா..? எப்படி வனிதா.. நான் இங்கதானே நின்னுக்கிட்டு இருந்தேன்.. எனக்குத் தெரியாம எப்படி வந்துட்டுப் போனாரு..?"

"வேகமா வந்துட்டு வேகமா போனாரு.. நீ அந்த லட்சணத்தில கவனிச்சிருக்கிற.."

"வனிதா.. இப்ப என்னக் கடந்து சூறாவளிக்காத்து சுத்திக்கிட்டே போகிறதைப் போல ரெண்டு தடவை தோணிச்சே.. அது பேய் இல்லையா..?"

https://t.me/tamilpdfebooks

"உன் வாய் இருக்கே.. எனக்கு நல்லா வந்திரும் வாயில.. அது ஐயாடி.. இவளே.."

"அடியாத்தி.. சூறாவளிக் காத்தப் போலச் சுத்திச் சுத்திப் போறாரே.. என்ன அதியம்டி இது.."

மாதுரி முகவாயில் கையை வைக்க.. தலையில் அடித்தபடி நகரப் போனாள் வனிதா..

"இங்கே என்ன சத்தம்..?"

அகல்யாவின் அறைக்கதவு திறந்தது.. கடுமையான முகத்துடன் அகல்யா வெளியே வந்தாள்.. மாதுரி அலட்டிக் கொள்ளவில்லை.. வெகு இயல்பாக வீட்டைத் துடைப்பதைப் போல அவள் நகர ஆரம்பிக்க.. வனிதா மட்டும் நின்று அகல்யாவுக்குப் பதில் சொன்னாள்..

"நம்ம ஐயா வந்துட்டுப் போனாரும்மா.."

"யாரு..? நரேந்திரனா..?"

"ஆமாம்மா.."

"இப்பத்தானே கம்பெனிக்குக் கிளம்பிப் போனான்..?"

"என்னன்னு தெரியலைம்மா.. வேகமா வந்தாரு.. பெட்டியக் கையில எடுத்துக்கிட்டு காருக்குள்ள ஏறினாரு.. வெளியூருக்குப் போகிறதாகவும்.. திரும்பி வர நாளாகும்ன்னும் உங்ககிட்டச் சொல்லச் சொல்லிட்டுக் கிளம்பிட்டாரு.."

"காரை அவனா ஓட்டிட்டுப் போறான்..?"

"இல்லம்மா.. ரமேஷ்தான் ஓட்டிட்டுப் போயிருக்கு.."

https://t.me/tamilpdfebooks

சுற்றிப் போன சூறாவளிக் காற்றுக்குள் இத்தனை விவரங்கள் அடங்கியிருக்கிறதா என்று வியந்து போனாள் மாதுரி.. வனிதாவின் பொறுப்பான புத்திசாலித்தனத்தின் மீது அவளுக்குப் பொறாமை வந்தது.. அவளும்தான் அந்த வீட்டில் வேலை பார்க்கிறாள்.. அவளைக் கடந்துதான் நரேந்திரன் மாடிக்குச் சென்று திரும்பியிருக்கிறான்.. இருந்தும் இந்த விவரங்களில் எதுவும் அவளுக்குத் தெரியவில்லையே..

எதனால் வனிதா அந்த வீட்டில் நீண்ட வருடங்களாக குப்பை கொட்டுகிறாள் என்ற விவரம் அவளுக்கு அப்போது புரிந்தது..

'ஒற்றைப் பார்வையிலே இவ உலகத்தையே அளந்துட்டு வந்துருவாளே..'

அகல்யா கவலையுடன் ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்து விட்டாள்.. நீ உட்கார்ந்தால் நான் டிவி சீரியலைப் பார்க்காமல் விட்டு விடுவேனா என்று மாதுரி துடைத்த ஹாலையே துடைத்த வண்ணம் அங்கேயே சுற்றி வந்தாள்.. கையில் கறிவேப்பிலையுடன் சமையலைக் கவனிக்கச் சமையலறைக்குப் போகலாமா வேண்டாமா என்ற தயக்கத்துடன் அங்கேயே நின்றிருந்தாள் வனிதா..

"எங்கே போறான்னு சொன்னானா வனிதா..?"

"இல்லைம்மா.."

"எங்கே போயிருப்பான்..?"

அகல்யா நெற்றிப் பொட்டை ஒற்றை விரலால் அழுத்தியபடி யோசித்துக் கொண்டிருந்த போது..

https://t.me/tamilpdfebooks

"என்ன விசயம் அத்தை..?" என்று கேட்டபடி வந்தாள் ரம்யா..

வேறு உடைக்கு மாறி வெளியே செல்லத் தயாராக இருப்பவளைப் போன்ற ஒப்பனையுடன் வந்தவளைப் பார்த்த அகல்யா..

"நீ காலேஜீக்குப் போறியா..? இன்னைக்குப் போகலைன்னு சொன்னியேம்மா..?" என்று கேட்டாள்..

"இல்லை அத்தை.. வீட்டிலதான் இருக்கப் போறேன்.. இன்னைக்கு ரெஸ்ட் எடுக்கனும்னு ஏற்கனெவே பிளான் பண்ணிட்டேனே.."

"அப்படியா.. நீ டிரெஸ் சேன்ஜ் பண்ணியிருக்கிறதைப் பார்த்ததும் வெளியே கிளம்பறியோன்னு நினைச்சுட்டேன்.."

"இதுவா..? நரேன் இப்ப சாப்பிட வருவாரில்ல.. அதுக்காக டிரெஸ் சேன்ஜ் பண்ணினேன்.. எப்படியிருக்கேன் அத்தை..?"

"ம்ஹீம்.. நீ எப்படி இருந்து என்ன பண்ண..? அவன் வீட்டுக்கு வந்துட்டு இப்பத்தான் வெளியூருக்கு கிளம்பிப் போயிருக்கான்.."

"வாட்..? எந்த ஊருக்கு அத்தை..?"

"யாருக்குத் தெரியும்..? அவன் எங்கே போறான்.. எப்ப வருவான்னு யார்கிட்டயும் சொல்ல மாட்டான்.. இப்பவும் அப்படித்தான்.. நான் ரூமில் ரெஸ்ட் எடுத்துக்கிட்டு இருந்தப்ப வீட்டுக்கு வந்துட்டுப் போயிருக்கான்.. ஊருக்குப் போகிறேன்ம்மான்னு என்கிட்ட ஒருவார்த்தை சொல்லலை..?"

"ம்ப்ச்.. கஷ்டப்பட்டு மேக்அப் பண்ணிக்கிட்ட தெல்லாம் வேஸ்டா...?" அவர்களின் கவலை அப்படியிருக்க.. நரேந்திரன் விமானத்தில் தஞ்சாவூரை நோக்கிப் பறந்து கொண்டிருந்தான்..

7

சுட்டும் விழிச் சுடராலே என்னைச் சுடும்.. அழகான ராட்சசி நீ....

'காருண்யா ஹாஸ்பிடல்...'

என்ற எழுத்துக்கள் சீரியல் பல்புகளைப் போல ஒளிர்ந்து கொண்டிருந்தன.. அந்த மருத்துவமனையின் வளாகத்துக்குள் புயல் வேகத்தில் சீறிப் பாய்ந்து நின்றது நரேந்திரன் கார்.. விமான நிலையத்தை விட்டு வெளியே வரும் போதே அவனுக்காக கார் தயாராக காத்துக் கொண்டிருந்தது.. அதில் ஏறியவன் வழியில் எங்கும் நிற்காமல் காற்றை விட வேகமாக பறந்து வந்திருந்தான்..

'என் மகன்..?'

அந்த வார்த்தை அவனை இம்சித்தது.. அவனுக்குத் தெரியாமல் அவன் மகனா..? அதை எளிதில் விட்டுவிட அவன் தயாராக இல்லை.. நான்கு தளங்களைக் கொண்ட அந்த மருத்துவமனையை அண்ணாந்து பார்த்தவனுக்கு

https://t.me/tamilpdfebooks

அதை துவம்சம் செய்ய வேண்டுமென்ற வெறி கிளர்ந்து எழுந்தது..

'எவ்வளவு தைரியமிருந்தா என்னிடம் இவ்வளவு பெரிய வார்த்தையைச் சொல்லுவாங்க..? யாருக்கு யார் மகன்..?'

காரை விட்டு இறங்கியவன் இரண்டே எட்டில் நீண்டிருந்த அதன் வாசல்படிகளைத் தாண்டி ரிசப்சனை அடைந்தான்..

"யெஸ்..."

அவனுடைய கம்பீரத்தைக் கணக்கிட்டபடி அவனை நிமிர்ந்து பார்த்தாள் ரிசப்சனிஸ்ட்..

"டாக்டர் அமிர்தாவைப் பார்க்கனும்..."

"நீங்க..?"

"நரேந்திரன்னு சொல்லுங்க..."

அவள் அவனை எங்கோ பார்த்திருக்கும் அறிமுகப் பார்வையைப் பார்த்தபடி போனை கையில் எடுத்தாள்.. அவனை எங்கே பார்த்திருக்கிறோம் என்று நினைவுக் குவியலில் அவள் தேடிக் கொண்டிருப்பதை அவனால் உணர முடிந்தது.. அப்போதிருந்த பரபரப்பான மனநிலையில் அவன் அதை ரசிக்கவில்லை.. எரிச்சலுடன் கால் மாற்றி மாற்றி நின்று கொண்டிருந்தவனை அவள் வினோதமாகப் பார்த்தபடி போனில் பேசினாள்...

"டாக்டர்.. இங்கே நரேந்திரன்னு ஒருத்தர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்.. யெஸ்.. யெஸ்.. அவர் ரிசப்சனில தான் வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கார்..."

https://t.me/tamilpdfebooks

மறுமுனையில் வந்த பதிலில் அவள் விழிகள் விரிந்தன.. போனை வைத்தவள் அவனிடம்..

"வாவ்...!" என்று வாய்பொத்தி வியப்பை வெளிப் படுத்தினாள்..

நரேந்திரன் முகத்தைச் சுளித்தபடி கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.. அன்று அவன் முடித்திருக்க வேண்டிய அவசர வேலைகள் அனைத்தும் அவன் மனக்கண்ணில் படம் போல வரிசையாக ஓடின.. அதையெல்லாம் விட்டு விட்டு தஞ்சாவூரில் இருந்த பிரபலமான மருத்துவமனை ஒன்றின் வரவேற்பில் நின்று.. வரவேற்பாளினியின் வியப்பு மிகுந்த 'வாவ்..' வைக் கேட்பதில் அவனுக்குக் கொஞ்சம் கூட உடன்பாடில்லை..

"சார்.. ஆர் யு இன்டர்ஸ்ட்ரியலிஸ்ட் நரேந்திரன்..? நரேன் குருப் ஆப் கம்பெனிஸின் எம்.டி..? ஐ கான்ட் பிலிவ் திஸ்.. உங்களை எங்கேயோ பார்த்திருக்கேன்னு தோணிச்சு.. பிஸினெஸ் மேகசின்களிலயும்.. டிவி இன்டர் வியுக்களிலயும்.. உங்களைப் பார்த்திருக்கேன் சார்.."

'ஸோ வாட்..?' நரேந்திரன் முகத்தைச் சுளித்தான்..

அவனிருக்கும் நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் அந்த ரிசப்சனிஸ்ட் துள்ளிக் குதித்ததில் அவனுக்குள் எரிச்சல் மிகுந்தது..

"வேர் இஸ் டாக்டர் அமிர்தா..?" சிடுசிடுப்பாக வினவினான்..

"பர்ஸ்ட் ப்ளோரில ரூம் நம்பர் சிக்ஸில இருக்காங்க சார்.. லிப்ட் அங்கே இருக்கு.."

https://t.me/tamilpdfebooks

அவள் பரவசமாக சுட்டிக் காட்டிய திசையில் லிப்ட் இருந்தது.. வேக நடையுடன் அதை அணுகியவன்.. விரைந்து உட்புகுந்தான்.. முதல்தளத்தில் வெளிப்பட்டு ஆறாம் எண்ணுக்குரிய அறையின் முன்னால் நின்று கதவை ஒற்றை விரலால் தட்டினான்..

"கமின் மிஸ்டர் நரேந்திரன்.."

அமைதியான பெண்குரல் அவனை வரவேற்றது.. கதவைத் திறந்து உள்ளே போனவன் திகைத்தான்.. அந்த ஏஸி அறை டாக்டரின் தனிப்பட்ட அறையாக இல்லாமல் நோயாளியின் அறையாக இருந்தது..

சுவரில் இருந்த அலமாரியில் மருந்து மாத்திரைகள் அடுக்கப்பட்டிருந்தன.. கட்டிலின் ஓரமாக குளுகோஸ் பாட்டிலைத் தொங்கவிடும் இரும்பு ஸ்டாண்ட் உயர்ந்து நின்றது.. அதிலிருந்த குளுகோஸ் கட்டிலில் கண்மூடிப் படுத்திருந்த மூன்று வயது சிறுவனின் கையில் ஏறிக் கொண்டிருந்தது..

குனிந்து அவனை பரிசோதித்துக் கொண்டிருந்த டாக்டர் அமிர்தா நிமிர்ந்தாள்.. சாந்தம் தவழும் முகம்.. தீட்சண்யமான விழிகள்.. நட்பை பிரதிபலிக்கும் புன்னகை யென்று அசப்பில் நடிகை அஸ்வினியைப் போல இருந்தாள்..

"நீங்க தான் எனக்கு மெஸேஜ் பண்ணினீங்களா..?" இரைந்தான் நரேந்திரன்..

"உஸ்ஸ்.." வாயில் ஒற்றை விரலை வைத்து எச்சரித்தாள் அமிர்தா..

https://t.me/tamilpdfebooks

"குழந்தை கிரிடிகல் கண்டிசனில் இருக்கான்.. இங்கே சத்தம் போடக் கூடாது மிஸ்டர் நரேந்திரன்.. எதைக் கேட்பதாக இருந்தாலும் மெதுவாகக் கேளுங்க.. ப்ளீஸ்.."

நரேந்திரன் பொறுமையை இழுத்துப் பிடித்து நிதானித்தான்.. அமிர்தாவின் பேச்சுக்கு கட்டுப்பட வேண்டிய அவசியமில்லையென்று அவன் அவளுடன் சத்தம் போடலாம்தான்.. ஆனால் கட்டிலில் படுத்திருந்த குழந்தையின் நினைவில் அவனது குரல் அவனையுமறியாமல் தாழ்ந்தது..

"என்னோட ஒவ்வொரு செகண்ட்ஸும் விலை மதிப்பில்லாதவை டாக்டர்.. நீங்க என்னோட ஒரு முழுநாளை வீணடிச்சிருக்கீங்க.. இதை நான் சும்மா விடமாட்டேன்.."

"என்ன வேணும்னாலும் செய்துக்கங்க மிஸ்டர் நரேந்திரன்.. ஐ டோன்ட் கேர்.. எனக்கு மனித உயிர்களின் மதிப்பைப் பற்றித்தான் தெரியும்.. உங்க நேரத்தின் மதிப்பைப் பற்றித் தெரியாது.."

"எவ்வளவு தைரியமிருந்தா இவ்வளவு பெரிய வார்த்தையைச் சொல்லி என்னை இங்கே வரவழைச் சிருப்பீங்க..?"

"சொல்ல வேண்டியதை சொல்ல வேண்டியவங்க கிட்ட சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லித்தான ஆகனும் மிஸ்டர் நரேந்திரன்..?"

"அதுக்காக பொய் சொல்வீங்களா..?"

https://t.me/tamilpdfebooks

"பொய்யா.. மெய்யாங்கிறதை இந்த கேஸ் ஃபைலை படிச்சுட்டு பேசுங்க மிஸ்டர் நரேந்திரன்..."

அமிர்தா நீட்டிய ஃபைலை கோபத்துடன் வாங்கிய நரேந்திரன் அதை அசுவராஸ்யமாக பிரித்துப் பார்த்தான்.. நோயாளியின் பெயர் சுரேந்திரன்.. வயது மூன்று என்றிருந்தது.. அவனின் தகப்பனின் பெயராக நரேந்திரன்.. நரேன் குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டி. பெங்களூர் என்று மிகத் தெளிவாக எழுதப் பட்டிருந்தது..

"ரப்பிஷ்.." பல்லிடுக்கில் வார்த்தையைக் கடித்துத் துப்பினான் நரேந்திரன்..

"ரிலாக்ஸ் மிஸ்டர் நரேந்திரன்.." என்றாள் அமிர்தா..

"எப்படி ரிலாக்ஸ் பண்ணிக்கச் சொல்கிறிங்க...? என் பெயரை இந்தக் குழந்தைக்கு அப்பான்னு யார் கொடுத்தாலும் நீங்க அதை அக்செப்ட் பண்ணிக்குவீங்களா..?"

"முதலில் உங்க பெயரை யார் கொடுத்திருக்காங்கன்னு பாருங்க மிஸ்டர் நரேந்திரன்.." அமைதியாகச் சொன்னாள் அமிர்தா..

"யார் கொடுத்தது..? சொல்லுங்க.. அவங்களை உண்டு.. இல்லைன்னு பண்ணிடறேன்.." கொதித்தான் நரேந்திரன்..

"இந்தக் குழந்தையின் அம்மா கொடுத்திருக்காங்க மிஸ்டர் நரேந்திரன்.."

"யார் அதுன்னுதான் கேட்கிறேன்.."

https://t.me/tamilpdfebooks

"ஃபைலில் இருக்குமே.. பார்க்கலையா..? முதலில் அதைத்தானே நீங்க பார்த்திருக்கனும்..?"

சலனமில்லாத முகத்துடன் கைகளை முன்னால் கட்டியபடி கேட்ட அமிர்தாவின் கேள்வியில் நரேந்திரன் ஃபைலைப் பார்த்தான்.. பார்த்தவனின் விழிகளில் அதிர்வு வந்தது.. அதை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அமிர்தாவிடம்..

"இவளா..?" என்றான் அதிர்ச்சியுடன்..

"இவள்தான்.." என்றாள் அமிர்தா நிதானமாக..

நரேந்திரனால் அவன் கண்களையே நம்ப முடியவில்லை.. எவளை தன் வாழ்நாளில் மீண்டும் சந்திக்கவே முடியாதோ என்று அவன் நினைத்திருந்தானோ... அவளின் பெயர் சுரேந்திரனின் தாயின் பெயராக ஃபைலில் இருந்தது..

எவளின் மீது அவன் உயிரையே வைத்திருந்தானோ.. அவளின் பெயர் அந்த ஃபைலில் இருந்தது..

யாரிடமும் மயங்காத நரேந்திரன் எந்த ஒருத்தியின் கடைக்கண் பார்வையில் மயங்கினானோ.. அந்த ஒருத்தியின் பெயர் அந்த ஃபைலில் இருந்தது..

'ஊர்மிளா நரேந்திரன்... ஸ்கூல் டீச்சர், சரயு ஹையர் செகண்டரி ஸ்கூல்.. தஞ்சாவூர்..'

சுரேந்திரன் தாயின் பெயராக இருந்த ஊர்மிளாவின் பெயரில் விழி பதித்திருந்த நரேந்திரனின் வாய் முணுமுணுத்தது..

https://t.me/tamilpdfebooks

“ஊர்மிளா.. மை வொய்ப்...”

அமிர்தா நிதானமாக அவனை நேர்கொண்ட பார்வையாய் பார்த்தாள்..

“யெஸ்.. உங்க வொய்ப்தான்...” என்றாள் அமிர்தா..

“இது.. இது.. எப்படி டாக்டர்..?” நரேந்திரன் தடுமாறினான்..

“ஊர்மிளா உங்களை விட்டுப் பிரிந்த நாளிலிருந்து மிகச் சரியாக ஆறாம் மாதத்தில் இவன் பிறந்திருக்கிறான்.. நரேந்திரன்..”

நரேந்திரன் சுரேந்திரனின் பிறந்த தேதியைப் பார்த்தான்.. அவன் இதயம் துடித்தது.. அவன் மகன் பிறந்து வளர்வது அவனுக்கே தெரியாதா..? இது என்ன கொடுமை..!

பதட்டத்துடன் கட்டிலுக்குப் பாய்ந்தவன்.. கண்மூடிக் கிடந்த குழந்தையின் முகத்தைக் கையில் ஏந்திப் பார்த்தான்.. அவனையே பிம்பமாகப் பார்ப்பதைப் போல இருந்தது அவனுக்கு..

நரேந்திரன் குழந்தைப் பருவ போட்டோவில் எப்படி இருப்பானோ அப்படி இருந்தான் குழந்தை சுரேந்திரன்..

‘என் மகனை முதன் முதலாக இந்த நிலையிலா நான் பார்க்கனும்..?’ நரேந்திரன் நொந்து போய் விட்டான்..

“இவனுக்கு என்ன பிராப்ளம்..?” பரபரத்தான்..

“உங்களோட ஸ்டேட்டஸீக்கு ஒன்னுமேயில்லை.. ஊர்மிளாவின் நிலைமைக்கு இது கிரிடிக்கல்.. அவ்வளவு தான்..” என்றாள் அமிர்தா..

https://t.me/tamilpdfebooks

"குழந்தையை டிஸ்ஜார்ஜ் பண்ணுங்க டாக்டர்.. நான் சென்னைக்குக் குழந்தையை அழைத்துக்கிட்டுப் போறேன்.. அங்கே ட்ரீட்மெண்ட் கொடுத்துக்கறேன்.. தேவைப்பட்டா... ஃபாரினுக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போறேன்.."

"இவனுக்கு சின்னதா ஒரு சர்ஜரி பண்ணணும்.. மூச்சுக் குழாயில அடைப்பிருக்கு.. சர்ஜரி இல்லாமக் கூட இதை சரி பண்ணிரலாம்.. ஆனா அதுக்கு எக்கச்சக்கமா செலவாகும்.. ஃபாரின்ல இருந்து மெடிசினை வரவழைக்கனும்.. இதில எக்ஸ்பர்ட்டான டாக்டர்ஸ்கிட்டக் காண்பிக்கனும்.. இதையெல்லாம் ஊர்மிளாவால செய்ய முடியாது.. அதனாலதான் உங்களுக்கு மெஸேஜ் கொடுத்து வரவழைச்சேன்.. யு நோ.. நான் ஊர்மிளாவின் பிரண்ட்.. உங்க வெட்டிங் ரிசப்சனுக்கு வந்திருக்கேன்.."

"ஐ டோண்ட் நோ.."

"உங்களுக்குத் தெரிந்திருக்காதுதான்.. உங்களை விட்டுப் பிரிஞ்சதும் ஊர்மிளா நேரா அவளோட அப்பாம்மா வீட்டுக்குத்தான் போனா.. எனக்கு விவரம் தெரிஞ்சதும் அவளைப் போய் பார்த்தேன்.. தஞ்சாவூரில் அவ இப்போ வேலை பார்க்கிற ஸ்கூலோட கரெஸ்பாண்ட்டெண்ட் என் ஹஸ்பெண்டோட சித்தப்பா.. என் ரெகமென்டேசனில் அவளுக்கு வேலை கிடைச்சது.. அவ பேரண்ட்ஸை துணைக்கு கூப்பிட்டுக்கிட்டு இங்கே வீடு பார்த்து குடியேறினா.."

"ஏன் டாக்டர்..? என்னிடம் ஏன் அவள் திரும்பி வரலை..?"

https://t.me/tamilpdfebooks

"மிஸ்டர் நரேந்திரன்.. நீங்க பொறுப்பான ஹஸ்பெண்டா இருந்திருந்தா அவளைத் தேடி நீங்க அவ அப்பாம்மா ஊருக்கு போயிருக்கலாமே..?" இகழ்ச்சியாக் உதட்டை மடித்தாள் அமிர்தா..

"அவள் பொறுப்பான மனைவியில்லை.." இறுக்கமான முகத்துடன் சொன்னான் நரேந்திரன்..

"பொறுப்பைப் பற்றி நீங்கள் பேசக் கூடாது.." என்றாள் அமிர்தா..

அவளின் சாந்தம் தவழ்ந்த முகத்தில் ரௌத்திரம் வந்திருந்தது.. அவளின் கோபம் அவனைச் சுட்டெரிக்கத் துடித்தது..

"ஊர்மிளாவுக்கு இங்கேதான் டெலிவரி ஆச்சு.. அப்போதும் காம்ளிகேட்டட் சிசேரியன்தான்.. அந்த நிலைமையிலயும் உங்களிடம் விவரம் சொல்லக் கூடாதுன்னு அவ சொல்லிட்டா.. அது ஏன்னு எனக்கு அப்போது தெரியலை.. இப்போது தெரியுது.."

"இவன் என் மகன் டாக்டர்.. இவன் பிறந்ததை நீங்க எனக்கு இன் ஃபார்ம் பண்ணியிருக்கனும்.."

"பண்ணியிருப்பேன் மிஸ்டர் நரேந்திரன்.. ஊர்மிளாவும் அதைக்தான் கேட்டுக்கிட்டா.. ஆக்சுவலா குழந்தை ஆரோக்கியமா இருந்தது.. அவளுக்குத்தான் டெலிவரி காம்ளிகேட்டடா ஆகியிருந்தது.. அவ பிழைத்தது மறுபிழைப்புத்தான்.. சப்போஸ் அவளுக்கு ஏதாவது ஆகிவிட்டா.. குழந்தையை உங்களிடம் சேர்த்து விடச்

https://t.me/tamilpdfebooks

சொல்லி அவ கேட்டுக்கிட்டா மிஸ்டர் நரேந்திரன்.. தெய்வாதீனமா அவ பிழைச்சுட்டா.. உங்களுக்கு விவரம் சொல்ல வேண்டிய தேவை எங்களுக்கு ஏற்படலை.."

"இப்பத் தேவை ஏற்பட்டதும் எனக்கு விவரம் சொல்லியிருக்கீங்க அப்படித்தானே..?" கண்சிவந்தான் நரேந்திரன்..

"இல்லை..." என்ற பதில் அறைவாசலில் இருந்து வந்தது..

அமிர்தாவும்.. நரேந்திரனும் திரும்பிப் பார்த்தார்கள்.. கையில் கனத்த பையும்.. களைத்த முகமுமாக அந்த அழகான பெண் உள்ளே வந்தாள்.. மெல்லிய வண்ணத்தில் காட்டன் சேலையும்.. கழுத்தில் ஒற்றைச் செயினுமாக இருந்தவளிடம் அசாத்திய அழகு சுடர் விட்டு பிரகாசித்தது.. அவள் அமிர்தாவை நிமிர்ந்து பார்த்தாள்..

"நான்தான் பணத்தை புரட்டிட்டு வந்திடறேன்னு சொல்லிட்டுப் போனேனா இல்லையா..? அப்படியும் நம்பாம இவருக்கு ஏன் தகவல் கொடுத்த அமிர்தா..?"

"ஊர்மிளா.."

"இவரை யாருன்னு நினைச்ச அமிர்தா..? தி கிரேட் பிஸினெஸ் மேக்னெட் நரேந்திரன்..! இவருக்கு இதயம் இரும்பினால் செய்யப்பட்டிருக்கு அமிர்தா.. அங்கே பாசத்துக்கும் அன்புக்கும் இடமிருக்காது.. இப்பப் பார்த்த இல்ல.. ஒரே கேள்வியில என்னோட ஒட்டு மொத்த வாழ்க்கையையும் அடிச்சுப் போட்டுட்டாரில்ல..?"

நரேந்திரனின் பக்கமாக திரும்பிக் கூடப் பார்க்காமல் அமிர்தாவிடம் கொதித்தாள் ஊர்மிளா..

https://t.me/tamilpdfebooks

8

காதலாலே எனை கலங்கடிக்கும்...
அழகான ராட்சசி நீ....

நரேந்திரன் அவளை உறுத்துப் பார்த்தான்.. அவன் பார்வையை கண்டு கொள்ளாமல் அமிர்தாவிடம் கையிலிருந்த பையை நீட்டினாள் ஊர்மிளா.. அவளது சோர்ந்த தோற்றம் நரேந்திரனின் இதயத்தைத் தாக்கியது..

தீயாக அவனைத் தினமும் தகிக்கும் அவளது நினைவுகளை மறக்கத்தான் அவன் ஓடிக் கொண்டிருந்தான்.. அந்த ஓட்டத்திலும் இடை விடாமல் அவனைத் துரத்தி வந்த நினைவுகளுக்குச் சொந்தக்காரியானவளோ அவனைத் திரும்பியும் பார்க்காமல் உதாசீனம் செய்கிறாள்..

ஊர்மிளா இளைத்திருப்பதைக் கவனித்தவனின் இதயத்தில் துயரம் கலந்த ஆத்திரம் கனன்றது.. இதையெல்லாம் அவளாகத்தான் இழுத்துக் கொண்டாள் என்ற நினைவில் அவன் பல்லைக் கடித்தான்..

'ராட்சசி..! அழகான ராட்சசி..!'

அவன் இதயம் அவளைத் திட்டித் தீர்த்தது.. அவனுடைய மகனைப் பற்றி அவனிடம் சொல்லாமல் மறைத்திருக்கிறாள் என்றால் அவள் மனதில் எந்த அளவுக்கு வைராக்கியம் குடி கொண்டிருக்க வேண்டும்..?

https://t.me/tamilpdfebooks

"சொன்னாருல்ல.. ஒத்தை வார்த்தையில சொல்லிட்டாருல்ல.. தேவை ஏற்பட்டதும் இவரைக் கூப்பிட்டிருக்கிறதாய் சொல்லிட்டாரில்ல.. இது தேவையா அமிர்தா..? என் உயிரைக் கொடுத்தாவது என் மகனுக்கான பெஸ்ட் ட்ரீட்மெண்டை நான் கொடுப்பேன் அமிர்தா.. எனக்கு இவரோட உதவி தேவையில்லை.. போகச் சொல்லு.." ஊர்மிளாவின் வார்த்தைகளில் தீர்மானம் தெரிந்தது..

"திமிர்.." நரேந்திரன் வெடித்தான்..

"திமிர்தான் அமிர்தா.. இது சுயமரியாதையின் திமிர்.. பணத்திமிரில்லை.." பதிலுக்கு கொடுத்தாள் ஊர்மிளா..

"ஏய்.. என் மகனுக்கு ட்ரீட்மெண்ட் கொடுக்க என் உதவி தேவையில்லைன்னு சொல்ல நீ யாருடி..?"

"ஹ..!" ஊர்மிளாவின் முகத்தில் இகழ்ச்சி வந்தது..

"உங்களுக்கு ஒரு மகன் இருக்கான்ங்கிறதே இப்பத் தானே உங்களுக்குத் தெரியும்..? இதில நான் யாரா..?"

"ஸ்ஸ்ஸ்..."

ஊர்மிளாவின் கேள்வியைத் தாங்க முடியாத நரேந்திரன் கையால் தலையைத் தாங்கியபடி ஆட்சேபமாக முணுமுணுத்தான்..

ஊர்மிளா அவனுடைய ஆட்சேபத்தை லட்சியமே பண்ணவில்லை.. மடை திறந்த வெள்ளமாக அவளது கோபம் வெளியே கொட்டிக் கொண்டிருந்தது..

"இவரை நான் பிரிந்து வந்து நான்கு வருடங்களாகப் போகிறது அமிர்தா.. இத்தனை நாளாக வாழ்ந்தவளுக்கு இதற்குமேல் வாழத் தெரியாதா..?"

https://t.me/tamilpdfebooks

அமிர்தா பதில் சொல்லவில்லை.. அவளால் பதில் சொல்ல முடியவில்லை.. சுரேந்திரனின் உடல் கோளாறு சிறியதுதான்.. எளிதில் சரி செய்து விடக் கூடிய ஒன்றுதான்.. ஆனால் அதற்கான மருத்துவ உபகரணங்கள் விலை மதிப்பானவை.. அரிதானவை.. அவை சென்னையில் பெரிய ஹாஸ்பிடல்களிலும்.. வெளிநாட்டிலும் கிடைக்கக் கூடும்.. அவனுக்கான மருந்துகளும் அப்படிப் பட்டவை தான்.. அந்தச் சிகிச்சையை ஆரம்பிக்க அதிக அளவில் பணம் வேண்டும்.. ஊர்மிளா பார்த்து வந்த ஆசிரியை உத்தியோகத்தில் மீதம் பிடித்து சேர்த்து வைத்திருக்கும் சேமிப்பு பணத்தை வைத்து எதுவும் செய்ய முடியாது..

இந்தச் சூழலில்தான் ஊர்மிளாவைக் கலந்து ஆலோசிக்காமல் நரேந்திரனுக்கு செய்தி அனுப்பி விட்டாள் அமிர்தா..

சுரேந்திரனின் தகப்பன் அவன்.. கோடிஸ்வரன்.. சுரேந்திரனுக்கு வந்திருக்கும் பிரச்னையை எளிதாக 'ப்பூ' வென்று ஊதித்தள்ளி விடும் வல்லமை படைத்தவன்..

அவன் சுரேந்திரனுக்கு சிகிச்சை அளிக்க வேண்டிய பொறுப்பை எடுத்துக் கொள்வது அத்தியாவசியம் என்று நினைத்தாள் அமிர்தா..

ஆனால் ஊர்மிளா அப்படி நினைக்கவில்லை.. அவள் நரேந்திரனைப் பற்றிப் பேசக்கூட இல்லை.. பணம் தேவை என்றதும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொல்லி விட்டு சுரேந்திரனை அமிர்தாவின் பொறுப்பில் விட்டு விட்டு வீட்டுக்குப் போயிருந்தாள்.. அந்த நேரத்தில்தான்

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் வந்து அமிர்தாவிடம் சப்தம் போட ஆரம்பித்தான்.. பணத்தை ஏற்பாடு பண்ணி விட்டுத் திரும்பியவள் அறைக்கு உள்ளே பேச்சுக்குரல் கேட்கவும் அப்படியே நின்று பேசுவது யார் என்று கவனித்தாள்.. அது நரேந்திரனின் குரல் என்பதில் அவள் இதயம் படபடத்தது.. அடுத்து அவன் பேசிய வார்த்தைகள் அவளது படபடப்பை விரட்டி பழைய திடத்தை கொண்டு வந்து விட்டன..

நரேந்திரன் உதட்டைக் கடித்தான்.. எதனால் இது போல ஆகிறது என்று அவனுக்குப் புரியவில்லை.. அவன் கேட்டு வைக்கும் அத்தனை கேள்விகளும்.. அவனுக்கும் அவளுக்கும் இடையில் ஆழமான அகழிகளைப் பறிப்பதன் தாத்பர்யம்தான் என்ன..?

"நல்லவேளை அமிர்தா.. இன்னும் ஒன்னே ஒன்னு தான் பாக்கியிருக்கு.. அடுத்து இவர் அதைத்தான் கேட்பாருன்னு நான் நினைச்சேன்.. சார் கேட்கலை.. எதையும் கன்பர்ம் பண்ணிக்கிற பிஸினெஸ் மேக்னெட்டின் பிஸினெஸ் புத்தி இதை எப்படி விட்டு வைச்சதுன்னு எனக்குத் தெரியல..."

அவள் எதைச் சொல்கிறாள் என்று நரேந்திரனுக்கும் புரியவில்லை.. அமிர்தாவிற்கும் புரியவில்லை.. அலை கடலாய் கொந்தளிக்கும் ஊர்மிளாவின் மன உணர்வுகளை ஒரு பெண் என்ற முறையில் அமிர்தாவினால் புரிந்து கொள்ள முடிந்தது.. இப்படிப் பட்ட தருணத்தை எதிர் கொள்ளும் எந்தப் பெண்ணும் பொங்கி எழத்தான் செய்வாள்.. என்பதால் அவள் ஊடே பேசாமல் அமைதி காத்தாள்..

https://t.me/tamilpdfebooks

அதில் நரேந்திரனுக்கு மலையளவுக்கு மனத்தாங்கல் வந்தது..

'என்னிடம் மட்டும் வார்த்தைக்கு வார்த்தை பேசின இந்த டாக்டர் இவ பேசினா மட்டும் மறுத்துப் பேசாம வாயை கம் வைச்சு ஒட்ட வைச்சதைப் போல இறுக்கி மூடிக்கிட்டு நிக்கிறாங்களே..'

அவன் ஊர்மிளாவை முறைப்பதோடு சேர்த்து அமிர்தாவையும் முறைத்து வைத்தான்..

"பிறந்த தேதியை வைச்சு என் புள்ளைன்னு எப்படி நம்பறது..? டி.என்.ஏ டெஸ்ட் எடுத்துப் பார்க்கனும்னு இவர் கேட்கலையே.. அதுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கு அமிர்தா.."

"ஸ்டாப் இட்.. ஐ ஸே.. ஸ்டாப் இட்.."

அது மருத்துவமனை என்பதையும் மறந்து நரேந்திரன் சப்தம் போட்டான்.. அமிர்தா வாயில் விரலை வைத்து அவனிடம்..

"ஸ்ஸ்ஸ்.." என்று கூற..

"அதை அங்கே சொல்லுங்க டாக்டர்.." என்றான்..

"இது ஹாஸ்பிடல் ரூம் மிஸ்டர் நரேந்திரன்.."

"நான் மட்டும் இது ஃபைவ் ஸ்டார் ஹோட்டலோட ரூம்ன்னா சொன்னேன் டாக்டர்..? என் மகன் பிறந்து மூன்று வருசமாகுது.. இதைப் பத்தி எனக்கு இன்பர்ம் பண்ணாம ஒளிச்சு மறைச்சு வளர்த்துக்கிட்டு வந்திருக்கிறா கல்நெஞ்சக்காரி.. என்னைக் குற்றம் சொல்ல இவளுக்கு என்ன ரைட்ஸ் இருக்கு டாக்டர்..?"

https://t.me/tamilpdfebooks

"ஓகே.. ஓகே.."

அமிர்தா இருவர் பக்கமும் கை விரித்து சமாதானப் படுத்த முயன்றாள்.. பலனில்லை.. இருவருமே சண்டைக் கோழிகளைக மாறி முறைத்துக் கொண்டிருந்தார்கள்..

ஒரேயொரு வித்தியாசம் என்னவென்றால நரேந்திரன் நேரடியாக ஊர்மிளாவை முறைத்துக் கொண்டிருந்தான்.. ஊர்மிளாவோ அவன் இருந்த திசைப்பக்கம் கூடப் பார்க்காமல் சுவரை முறைத்துக் கொண்டிருந்தாள்..

"இது என்ன மாதிரியான சிச்சுவேசன் ஊர்மி.. உன் குழந்தைக்கு உடம்பு சரியில்லை.. இப்ப அவனைக் கவனிப்பியா.. இல்ல.. உன் ஹஸ்பெண்ட்கூடச் சண்டை போடுவியா..?"

ஊர்மிளா மௌனமாக இருந்தாள்.. நரேந்திரன் பேண்டின் இருபக்க பாக்கெட்டிலும் கைவிட்டபடி அவளையே முறைத்துக் கொண்டிருந்தான்.. அமிர்தாவுக்கு ஆயாசமாக இருந்தது..

"கமான் பிரண்ட்ஸ்.. சுரேன் உங்க பிள்ளை.."

"அவன் என் மகன் மட்டும்தான் அமிர்தா.. அவனைப் பாத்துக்க எனக்குத் தெரியும்.. அவரைப் போகச் சொல்லு.."

"அடித்துப் பல்லைக் கழட்டி விடுவேன் ராஸ்கல்.. யாரைப் போகச் சொல்ற..? நான் போனா என் மகனைத் தூக்கிக்கிட்டுத்தான் போவேன்.."

"ஹ..! பிள்ளை பிறந்ததைக் கூடத் தெரியாம இப்ப வந்து பார்த்தவர் என் மகன்னு உரிமை கொண்டாடறார்.."

https://t.me/tamilpdfebooks

"குழந்தை பிறந்தவுடன் ஏண்டி எனக்குத் தகவல் சொல்லலை..?"

"நான் ஏன் சொல்லனும் அமிர்தா..? இவன் என் மகன்.."

"வேண்டாம் டாக்டர்.. நீங்க இருக்கீங்கன்னு பாக்கறேன்.. இல்லைன்னா நல்லா நாலு வார்த்தை கேட்டு விடுவேன்.. என் மகனாமில்ல.. என் மகன்..! பிள்ளைக்கு அப்பன் நான் டாக்டர்.."

அடுத்து அவன் என்ன சொல்லுவான் என்பது புரிந்து போக அமிர்தா அவசரமாக ஊர்மிளாவை அடக்கினாள்..

"ஸ்ஸ்ஸ் ஊர்மி.. அவர் சுரேனுக்கு அப்பா.. அவருக்கு உரிமை இல்லைன்னு சொல்ல உனக்கு உரிமை இல்லை.."

"மகன்கிட்ட அவர் உரிமை கொண்டாடிய லட்சணத்தைத்தான் நான் பார்த்துக்கிட்டு இருந்தேனே.. என் மகனாம்.. என் மகன்.. இப்போ மட்டும் என் மகன்னு சொல்லத் தெரியுது.."

"உன்மேலயும் தப்பிருக்குல்ல ஊர்மி.. சுரேன் பிறந்த அன்னைக்கே நான் மிஸ்டர் நரேந்திரனுக்கு இன்பார்ம் பண்ணப் போனேன்.. நீதான் தடுத்துட்ட.. பிள்ளையைக் காட்டி ஒட்டப் பார்க்கிறான்னு உன்னைப் பேசிருவார்ன்னு சொன்ன..."

"அப்படியா சொன்னா..?"

ஆத்திரத்துடன் மனைவியை உறுத்துப் பார்த்த நரேந்திரனின் மனதில் எரிமலை வந்தது.. பெற்ற

https://t.me/tamilpdfebooks

பிள்ளையைப் பற்றிச் சொன்னால் அவனைக் காரணம் காட்டி புருசனுடன் ஒட்ட வந்து விட்டாள் என்று அவன் மனைவியை அவன் நினைத்து விடுவானாம்.. அதனால் அவள் மகன் பிறந்தை மறைத்தாளாம்.. ஏன்..? அந்தக் காரணத்தைக் காட்டியாவது அவனிடம் அவள் வந்து சேர்ந்திருந்தால்தான் என்ன..?

'அப்படிக்கூட என்னிடம் வந்து விடக் கூடாதுங்கிற வைராக்கியத்தோடு இவ இருந்திருக்கிறா..'

"இவ ராட்சசி டாக்டர்.." பொருமியவனின் மனம்..

'அழகான ராட்சசி..!' என்று ஜொள்ளியது..

அந்தக் களைத்த தோற்றத்திலும் வெகு அழகாக இருந்தவளை வைத்த கண் வாங்காமல் பார்த்த நரேந்திரனின் சினம் அதிகரித்தது..

"பழசெல்லாம் எதுக்கு அமிர்தா..? இந்தனை வருசமா.. எனக்கு என் பிள்ளை.. அவனுக்கு நான் அப்படின்னு வாழ்ந்து பழகியாச்சு.."

"அதுக்கு..? என்ன சொல்லப் போறாளாம் டாக்டர்..? பழசோ.. புதுசோ.. இவளுக்கு நான்தான் புருசன்.. இவ பிள்ளைக்கு நான்தான் தகப்பன்.. இது ரெண்டும் மாறிருமான்னு கேளுங்க டாக்டர்.."

ஊர்மிளா உதட்டைக் கடித்தாள்.. அவள் பல் பதிந்த அந்த இடத்தில் அவன் பார்வை பதிந்தது.. இது போன்ற சமயங்களில் அவன் என்ன செய்வான் என்ற நினைவில் அவன் தேகம் தகித்தது..

'இவளுக்கு அந்த நினைவெல்லாம் இல்லையா..?'

https://t.me/tamilpdfebooks

காவியுடை தரித்து விட்ட சந்நியாசினியைப் போல இருந்த மனைவியின் நிச்சலனமான முகத்தைப் பார்த்தவனின் மனம் வருந்தியது..

கல்லால் அடித்திருந்தால் அந்தக் காயம் ஆறியிருக்கும்.. அவன் சொல்லால் அடித்து விட்டான்.. அந்தக் காயம் எப்படி ஆறும்..?

ஆனால்.. அதைச் செய்ய வைத்ததும் அவளல்லவா..? அன்று அவன் அவளிடம் காரணம் கேட்ட நேரத்தில் சரியான காரணத்தைச் சொல்லாமல் எப்படி என்னிடம் நீ காரணம் கேட்கலாம் என்று விலகிப் போனவள் அல்லவா அவள்..!

“அமிர்தா.. நான் பணத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டேன்.. நீ உனக்குத் தெரிந்த டாக்டர்கிட்ட போனில பேசு.. நான் இன்னைக்கே சுரேனோடு சென்னைக்குக் கிளம்பறேன்..”

“இது ஆரம்பகட்ட செலவுக்கான பணம்தான் ஊர்மி.. இதுக்கு மேலே செலவளிக்க பணத்துக்கு எங்கே போவ..?”

ஊர்மிளாவின் கண்களில் தெரிந்த தவிப்பையும்.. பதட்டத்தையும் பார்த்தவனுக்கு அவளை இழுத்து கன்னம் கன்னமாய் அறைந்தால் என்ன என்ற வெறி உண்டாகியது..

ஊரையாளும் ராஜாவைப் போல அவன் இருக்கிறான்.. அவனுடைய மகனின் மருத்துவச் செலவுக்கு பணம் பற்றாது என்று அவன் மனைவி தவித்துப் போகிறாள் என்றால் அவன் யாருக்காக சம்பாதிக்கிறான்..?

தி கிரேட் மல்ட்டி மில்லினியர் நரேந்திரனின் கோடிக்கணக்கான பணமும் யாருக்காக..?

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனின் பார்வை கட்டிலில் கிடந்த மகனின் மீது திரும்பியது.. அவன் கட்டிலில் உட்கார்ந்தான்.. உறக்கத்திலிருந்த மகனின் பிஞ்சுக் கைகளை பிடித்துத் தன் கைக்குள் அடக்கிக் கொண்டான்..

'டாடியை மன்னித்து விடடா..'

அவன் மனம் உருகியது.. அவனுடைய மனைவியும் மகனும் தனித்து நிற்கும் அந்தச் சூழலைப் பார்க்க அவனுக்குச் சகிக்கவில்லை..

ஊர்மிளா வெறுப்புடன் முகத்தை திருப்பிக் கொண்டாள்..

"அமிர்தா.. அவரை முதலில் வெளியே போகச் சொல்லு..."

நரேந்திரனின் பார்வை உயர்ந்து அவள் மீது கூர்மையாக படிந்தது.. அதிலிருந்த தீவிரத்தில் அமிர்தா தயங்கினாள்..

"பொறு ஊர்மி.." என்று சொன்னாள்..

"பொறுத்தது போதும் அமிர்தா.. நான் என் பிள்ளைக்கான ட்ரீட்மெண்ட் செலவுக்கு என்ன செய்கிறதுன்னு யோசிக்கனும்.. இவர் இங்கேயிருக்கிறது என்னை டிஸ்டார்ப் பண்ணுது.."

நரேந்திரனின் கூர்மையான பார்வை ஊர்மிளாவை விட்டு அகலவில்லை.. அந்தப் பார்வையில் அமிர்தாவே பயந்து போனாள்.. ஊர்மிளாவோ அச்சமின்றி அவன் பார்வையை எதிர்கொண்டு முகம் சுளித்தாள்..

"புதுசா எந்த உறவும் எங்களுக்கு வேணாம் அமிர்தா.. போய் விடச் சொல்லு.. இதுவரைக்கும் நானும்

https://t.me/tamilpdfebooks

என் மகனும் எப்படியிருந்தோமோ.. அப்படியே இனியும் இருந்துக்குவோம்..”

மகனின் கைகளை விட்ட நரேந்திரன் எழுந்தான்.. நிதானமாக ஊர்மிளாவை நெருங்கினான்.. அமிர்தா பதறிப் போய் அவனைத் தடுப்பதற்குள் ஊர்மிளாவின் கழுத்தில் விரல் பதித்து இறுக்கி விட்டான்..

“ஒழிஞ்சு போடி.. உன்னால்தான் எனக்கு இந்த வேதனை.. பிள்ளை வாடிப் போய் படுத்திருக்கிறான்.. இந்த நிலைமையிலயும் என் நினைப்பு உனக்கு வரலைன்னா நீயென்னடி பெண்டாட்டி..? இங்கே பார்.. உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கத்தான் உனக்கு உரிமையிருக்கு.. என் மகனின் வாழ்க்கையைத் தீர்மானிக்க உனக்கு உரிமையில்லை.. அவன் என் பிள்ளைடி.. ராஜா..! அவன் தும்மினால் கூட ஃபாரினில் இருந்து டாக்டர்ஸை வரவழைச்சு வைத்தியம் பார்ப்பேன்டி.. உன் கையில விட்டு விட்டுப் போவேன்னு நினைச்சியா..?”

அவன் விரல்கள் ஊர்மிளாவின் கழுத்தில் அழுந்தியதில் அவளுக்கு மூச்சுத் திணறியது.. அமிர்தா அவன் கையை விலக்க பிரயத்தனப் பட்டாள்.. முடியவில்லை.. அதற்குள் அறைவாசலில் நிழலாடியது..

“இங்கே என்ன நடக்குது..?” என்று கேட்டபடி உள்ளே வந்தார் சோமசுந்தரம்..

அவருக்குப் பின்னால் கையில் பிளாஸ்டிக் கூடையோடு வந்தாள் பூங்குழலி..

அவர்களைக் கண்டதும் நரேந்திரனின் கைதானாக விலகியது..

https://t.me/tamilpdfebooks

9

சில்வண்டாய் என்மனம் துளைக்கும்..
அழகான ராட்சசி நீ....

வெள்ளை வேட்டி.. வெள்ளை சட்டையென்று மரியாதையான தோற்றத்துடன் இருந்தார் சோமசுந்தரம்.. கண்ணாடி போட்டிருந்தார்... காதோரமாக நரை விழுந்திருந்தது.. கண்களில் நரேந்திரனின் கண்டிப்புக்குக் குறையாத கண்டிப்பு இருந்தது.. ஊர்மிளாவின் கழுத்தில் பதிந்திருந்த நரேந்திரனின் கைவிரல்களை தீர்க்கமாக ஓர் பார்வை மட்டுமே பார்த்தார்.. அவரின் அந்த பார்வையில் நரேந்திரனின் கைவிரல்கள் தாமாக விலகிக் கொண்டன..

சோமசுந்தரத்தின் தோளைத் தொடும் உயரத்திலிருந்த பூங்குழலி ஊர்மிளாவைப் போலவே காட்டன் புடவையில் இருந்தாள்.. சோமசுந்தரத்தைப் போல கண்டிப்பு வழியும் முகமில்லாமல் அவள் முகத்தில் காருண்யம் வழிந்தது.. நெற்றியின் அகலமான பொட்டு அவளது தேஜஸை அதிகப்படுத்திக் காட்டியது... தலைமுடியை கொண்டையிட்டிருந்தாள்... அவள் கையிலிருந்த பிளாஸ்டிக் கூடையில் டிபன் கேரியரும்.. சில மூடப்பட்ட சில்வர் டப்பாக்களும் இருந்தன.. பெரிய பாட்டிலில் தண்ணீர் இருந்தது..

கூடையை அங்கேயிருந்த அலமாரியில் வைத்து விட்டு மகளுக்கு ஆதரவாக அவளருகில் போய்

https://t.me/tamilpdfebooks

நின்று கொண்டாள் பூங்குழலி.. கழுத்து இறுக்கப் பட்டிருந்ததன் விளைவாக தொடர்ச்சியாக இருமல்களை வெளிப்படுத்தியபடி வேகமாக மூச்சு வாங்கிய மகளின் கையைப் பிடித்துத் தட்டிக் கொடுத்தவளின் கண்கள் கலங்கின..

“எங்கே வந்தீங்க..?” கண்டிப்பான தொனியுடன் கேட்டார் சோமசுந்தரம்..

“என் மகனைப் பார்க்க வந்தேன்..” அதே கண்டிப்புடன் பதில் சொன்னான் நரேந்திரன்..

“வந்தவர் மகனைப் பார்க்காம என் மகளைக் கொல்ல நினைச்சா என்ன அர்த்தம்..? இதை மூணு வருசத்துக்கு முன்னாடியே செய்திருக்கலாமே.. இவளை உயிரோடு கொன்று நடைபிணமா எங்ககிட்ட அனுப்பி வைச்சுட்டு இப்பத் தேடி வந்து கொல்லப் பாக்கறிங்களா..?” சோமசுந்தரத்தின் குரல் உயராமல் அழுத்தத்துடன் வெளிவந்தது..

“என் மகனைப் பார்க்க விட்டாத்தானே..? சும்மா ‘போகச்சொல்லு போகச் சொல்லு’ன்னு சொன்னா எப்படிங்க..? அவன் எனக்கும் மகன்.. பத்து மாசம் சுமந்து பெத்ததினால உங்க மகளுக்கு மட்டும் இவன் சொந்தமாகிர மாட்டான்..” நரேந்திரன் கோபப்பட்டான்..

“உரிமைப் பிரச்னையை பேசற இடம் இது இல்லை.. உங்க வழக்கை என் பேரன் ஆரோக்கியமா இருக்கிறப்ப வந்து வைச்சுக்கங்க.. இப்ப அவன் உடம்பைக் கவனிக்கனும்.. வழக்கடிக்காம விலகிப் போங்க..”

https://t.me/tamilpdfebooks

சோமசுந்தரம் அறை வாசலை நோக்கி கை காட்டினார்.. நரேந்திரன் காப்பாற்றி வைத்திருந்த பொறுமை காற்றில் பறந்தது..

"என்னங்க..? வயசில பெரியவர்.. உங்க மகளுக்கு புத்தி சொல்லி திருத்துவீங்கன்னு பார்த்தா நீங்க அவளுக்கு மேலே இருக்கீங்க.." நரேந்திரன் சண்டைக்கு கிளம்பி விட்டான்..

"நான் புத்தி சொல்கிறதைப் போல என் மகள் இல்லை.. நாங்க எங்க மகளை அப்படி வளர்க்கலை.. பொய்யாய் நடிச்சு.. ஏமாத்திக் கல்யாணம் பண்ணிக்கிட்ட நீங்க என் மகளைப் பத்தி எதையும் பேச வேணாம்.." சோமசுந்தரம் கடுமையாக பேசினார்..

"நான் நடிச்சேன்தான்.. எதுக்கு நடிச்சேன்..? ஏமாற்றி உங்க சொத்தை எழுதி வாங்கிக்கிறதுக்காகவா நடிச்சேன்..?" இடக்காக கேட்டான் நரேந்திரன்..

சோமசுந்தரத்தின் கடுமை அதிகரித்தது.. அவர் அமிர்தாவை ஓர்முறை பார்த்தார்.. அவள் வாக்குவாதம் வேண்டாமென்று விழிகளால் கெஞ்சினாள்.. அதை கண்டு கொள்ளாமல் நரேந்திரனைப் பார்த்தவர்..

"நீங்க கோடிஸ்வரன்.. நாங்க சாதாரணப் பட்டவங்கங்கிறதைச் சொல்லிக் காட்டறிங்களா..? அதுக்குத்தான் இங்கே வந்திருக்கீங்களா..?" என்று குரோதமாக கேட்டார்..

"முதலில் உங்க மகளைக் கொல்ல வந்தேன்னு சொன்னீங்க.. இப்ப உங்களைச் சொல்லிக் காட்ட வந்தேன்னு சொல்றிங்க.. நான் எதுக்கு வந்தேன்னு எனக்கு

https://t.me/tamilpdfebooks

மெஸேஜ் கொடுத்த வரவழைச்ச இந்த டாக்டரைக் கேளுங்க தெரியும்.."

எரிச்சலுடன் சொல்லிய நரேந்திரன்.. வாய் மேல் விரலை வைத்து சொல்ல வேண்டாம் என்று தடுத்த அமிர்தாவின் சைகையைக் கவனிக்கவில்லை.. தன் போக்கில் கோபத்துடன் அவன் சொல்லிவிட... சோமசுந்தரத்தின் கடுமையான விழிகள் அமிர்தாவை முறைத்தன.. அவள் கைகளைப் பிசைந்தாள்..

"அப்ப.. டாக்டர் சொல்லித்தான் நீங்க வந்திருக்கீங்க..?"

"யெஸ்.. யெஸ்.. யெஸ்.. என்ன நெஞ்சழுத்தம் இருந்தா எனக்கு மகன் பிறந்திருக்கிறதை என்னிடம் சொல்லாம உங்க பொண்ணு மறைப்பா..? என் மகனுக்கு மூன்று வயசாகுது.. எனக்கு அது தெரியலை.. இதை நான் சும்மா விடமாட்டேன்ங்க.."

"சும்மா விடாம என்ன செய்யப் போறிங்க..? கோர்ட்டுக்குப் போவீங்களா..? போங்க.. கோர்ட்டில நாங்களும் சொல்லுவோம்.."

"என்ன.. என்ன.. என்ன சொல்லுவீங்க..?"

"எதுக்காக இத்தனை 'என்ன'வைப் போடறிங்க.. குழந்தை பிறந்ததை தெரிஞ்சுக்காம இருந்தது உங்க தப்பு.. நாங்க ஒன்னும் மறைக்கலைன்னு சொல்லுவோம்.."

சோமசுந்தரம் நிதானமாக பிசிறில்லாத குரலில் பேசியதில் நரேந்திரன் திகைத்துப் போனான்..

"வாட்...?"

https://t.me/tamilpdfebooks

"ஆமாங்க.. சுரேன் உங்க மகன்ங்கிறதை எங்கேங்க மறைச்சோம்..? ஊர்மிளாவுக்கு டெலிவரி பார்த்த டாக்டர் இங்கே இருக்காங்க.. கேளுங்க.. ஒவ்வொரு செக்-அப்பிலயும் கணவரின் பெயர் நரேந்திரன்னு சொல்லி உங்க முழு அட்ரஸையும் இந்த ஹாஸ்பிடலில் என் மகள் கொடுத்திருக்கா.. அவ பெயரை ஊர்மிளா நரேந்திரன்னு தான் சொல்லியிருக்கா.. குழந்தை பிறந்த ரிகார்டில அப்பா பெயர் நரேந்திரன்.. அம்மா பெயர் ஊர்மிளா நரேந்திரன்னு தான் இருக்கு.. சொல்லுங்க.. இதில எதை நாங்க மறைத்தோம்..? உலகத்துக்கு இவன்தான் உங்க மகன்னு என் மக உரக்கச் சொல்லிட்டா.. இதுக்கு மேலே உங்களுக்கு என்னங்க வேணும்..?" ஆணித்தரமாக பேசினார் சோமசுந்தரம்..

"கெட்டிக்காரத்தனமாய் பேசறதா நினைக்க வேண்டாம்.."

"எங்களுக்கு சுட்டுப் போட்டாலும் உங்க கெட்டிக்காரத்தனம் வராதுங்க.. அதுக்கும் எங்களுக்கும் ரொம்பத்தூரம்ங்க.. உங்களைப் போல சாதாரணப் பட்டவங்களைப் போல நடிச்சு.. ஏய்ச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டு.. அதுக்கப்புறம் மனசைக் கொன்னு அனுப்பி வைக்கிறதெல்லாம் எங்களாலே முடியாதுங்க.."

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றும் வித்தையை கற்றறிந்தவர் சோமசுந்தரம்.. உழைப்பாளி.. கம்யூனிசம் பேசுபவர்.. கட்சிக் கூட்டங்கள்.. கொள்கைகள் என்று போனதில்லையென்றாலும்.. அவரின் பேச்சுக்களில் பொதுவுடமைத் தத்துவங்கள் தெறித்து விழும்..

https://t.me/tamilpdfebooks

அவருண்டு.. அவருடைய புத்தகக் கடையுண்டு.. என்று வாழ்ந்து வந்தவர்.. கிராமத்தில் தோப்பு.. துரவு என்று இருந்ததை குத்தகைக்கு விட்டு விட்டு மகளின் படிப்புக்காக திருச்சியில் வீடு வாங்கி குடியேறியவர்..

ஊர்மிளா பெற்றவர்களுக்கு ஒரே பெண்.. மத்திய வர்க்கம்.. பொதுவுடமை கொள்கை பேசும் அப்பா.. புராணம் சொல்லும் அம்மா என்று இருவேறுபட்ட துருவங்களுக்கு மகளாக பிறந்து வளர்ந்தவள்.. அவளிடம் சோமசுந்தரத்தின் கோபமும்.. பூங்குழலியின் சாந்தமும் ஒன்று சேர்ந்து குடியிருந்தன.. ஊர்மிளாவைக் காதலித்த காலத்தில் அடிக்கடி..

“உன் ரெண்டு கண்ணில ஒன்னில கோபமும்.. இன்னொன்னில சாந்தமும் தெரியுதுடி.. எப்படிடீ.. மழையும் நீயா.. வெயிலும் நீயா தெரியற..” என்று ஆச்சரியப் படுவான் நரேந்திரன்..

தவறு என்று மனதிற்குப் பட்டால் முகத்திற்கு நேராக விரல் நீட்டி எச்சரிக்கும் குணம் ஊர்மிளாவிடம் இருந்தது.. அதுவே அவளிடம் அடைக்கலம் என்று வந்து விட்டால் அரவணைத்து அன்பு காட்டும் குணமும் அவளிடம் இருந்தது..

இவையிரண்டும் அவளைப் பெற்றவர்கள் அவளுக்குத் தந்த கொடை.. அப்படி கோபத்தை கொடையாய் தந்த வள்ளலான சோமசுந்தரம் பேச்சென்று வந்து விட்டால் பின் வாங்கி விடுவரா என்ன..? அதுவும் அவர் மகளைப் பாதித்த மருமகனை ஒரு பிடி பிடிக்காமல் விட்டு விடுவாரா என்ன..?

https://t.me/tamilpdfebooks

இதயத்தில் சூட்டுக் கோலால் தீட்டப்பட்ட ரண காயத்துடன்..

"அப்பா.." என்று அவர் மடியில் விழுந்த மகளின் துயரத்தைப் பற்றி அவருக்குத்தானே தெரியும்..

நரேந்திரன் பல்லைக்கடித்தான்... அவனால் ஊர்மிளாவிடம் கோபத்தைக் காட்ட முடியும்.. அந்த கோபத்தை சோமசுந்தரத்திடமும் பூங்குழலியிடமும் காட்ட முடியாது..

அவன் மாமனாரின் மீதும் மாமியாரின் மீதும் அதிக அளவில் மரியாதை வைத்திருந்தான்.. அவர்கள் பணத்தைக் கண்டு விலகுகிறவர்களாக பணத்தைப் பெரிதாக நினைக்காதவர்களாக இருந்ததில் அவன் மரியாதை அதிகரித்தது.. அவர்களைப் போல நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவன் அவன் என்று நினைத்தே அவர்கள் அவனுக்கு ஊர்மிளாவை திருமணம் செய்து கொடுக்க இசைந்தார்கள்.. திருமண நாளன்று.. திருமண மண்டபத்தின் பிரம்மாண்டத்தையும்.. அவன் யாரென்பதையும் நேரில் பார்த்தவர்களின் விழிகளில் தெரிந்த அதிர்ச்சியை இன்றளவும் நரேந்திரன் மறக்கவில்லை..

அதனாலேயே அவன் சோமசுந்தரத்திடம் அதிகமாக பேச்சு வைத்துக் கொள்ள மாட்டான்.. பூங்குழலியோ அவனிடம் அதிகமாக பேச்சு வைத்துக் கொள்ளாமல் மருமகன் என்ற மரியாதையோடு சேலை முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டு அவனை நிமிர்ந்து பார்க்காமல் மரியாதையின் நிமித்தம் ஒரிரு வார்த்தைகள் பேசிவிட்டு சமையலறைக்குள் மறைந்து விடுவாள்..

https://t.me/tamilpdfebooks

அப்படி அவன் விலகி நின்று பேசிப் பழகும் மாமனாரிடம் புதிதாக அவன் எப்படி சண்டை போடுவான்..?

இருந்தாலும் அவர் பேசுவதை அவனால் ஒரு அளவிற்கு மேல் கேட்க முடியாதே.. அவனுக்குள் கனன்று கொண்டிருந்த கோபத்தை அவர் புரிந்து கொள்ளாமல் விதண்டாவாதமாக பேசிய விதத்தில் அவனின் கோபாக்னி கொழுந்து விட்டு எரிந்தது..

"சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லாதீங்க.." என்று நரேந்திரன் சீறினான்..

"இது உண்மைங்க.. திருப்பித்திருப்பிச் சொல்லித்தான் ஆகனும்.. இப்போல்லாம் பொய்யைத்தாங்க எல்லோரும் நம்பறாங்க.. அதை ஒருதடவை சொன்னாப் போதும்.. உண்மையைத்தான் நிருபிக்கனும்ங்கிற கட்டாயம் வந்துருச்சே.. அதைத் திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கே.."

"எதைத் திருப்பிச் சொல்வீங்க.. என் மகன் பிறந்ததை என்னிடம் மறைச்சதை திருப்பிச் சொல்லப் போறிங்களா..? இத்தனை நாளா அவனை என் கண்ணில காட்டாம ஒளிச்சு மறைச்சு வைச்சிருந்ததை திருப்பித் திருப்பிச் சொல்லப் போறிங்களா..?"

"இது என்னங்க கொடுமையா இருக்கு.. என் மக எங்கே ஓடி ஒளிஞ்சா..? உங்க வீட்டில இருந்து கிளம்பி நேரா என்கிட்டத்தானேங்க வந்தா.. அங்கேதானே நாங்க மூணு மாசமா உக்காந்திருந்தோம்.. பெண்டாட்டிங்கிற 'உறுத்து' இருக்கிற மகராசன் அவளைத்தேடி வந்திருக்க வேண்டியதுதானே..? ஏன் வரலை..?"

https://t.me/tamilpdfebooks

சோமசுந்தரத்தின் கேள்வி கொடுவாளாய் நரேந்திரனின் இதயத்தில் பாய்ந்தது.. அவன் என்ன பேசுவதென்று யோசித்தான்.. அவனை விட்டுப் போகும்படி அவன் ஊர்மிளாவிடம் சொல்லவில்லை.. அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் அப்படியொரு கேள்வியை அவன் கேட்டதுதான் தப்பு என்று அவள்தான் அவனை விட்டு விலகிப் போனாள்.. அதை அகல்யா தினந்தோறும் நினைவுபடுத்திக் குத்திக் காட்டிப் பேசியதில் ஊர்மிளாவின் மீதான நரேந்திரனின் கோபம் பன்மடங்காக அதிகரித்தது.. அவன் அவளைத் தேடிப் போகாமல் அவள் திரும்பி வரவில்லையென்று அவள் மீது மனதுக்குள் குற்றப்பத்திரிக்கை வாசித்துக் கொண்டிருந்தான்..

“சொல்லுங்க.. ஏன் வரலை..?” சோமசுந்தரத்தின் கேள்வி அவனைத் துளைத்தது..?

“திருச்சியில இருந்தவங்க தஞ்சாவூருக்கு வந்திருக்கிங்கன்னா இது ஒளிந்து மறைவதில்லையா..?” நரேந்திரன் சுதாரித்துக் கொண்டு கேட்டான்..

“நினைச்சேன்.. நீங்க இதைத்தான் சொல்வீங்கன்னு.. எனக்கு திருச்சியில சொந்தவீடு இருக்குங்க.. பக்கத்து கிராமத்தில தோப்பும் வயலும் இருக்கு.. வீட்டை வாடகைக்கு விட்டிருக்கேன்.. தோப்பையும் நிலத்தையும் குத்தகைக்கு விட்டிருக்கிறேன்.. அந்த ரெண்டு இடத்திலயும் எங்க தஞ்சாவூர் வீட்டோட அட்ரஸ் இருக்குங்க.. நீங்க எங்களைப் பார்க்க திருச்சிக்கு தேடிப் போயிருந்தா இது உங்களுக்குத் தெரிந்திருக்கும்... நீங்க தான் பிள்ளைத் தாய்ச்சியா இருக்கிற பெண்டாட்டியோட மனசை நோகடிச்சு

https://t.me/tamilpdfebooks

அவளை வீட்டை விட்டு வெளியேற வைச்சுட்டிங்களே.. உங்களுக்கு எப்படிங்க இது தெரியப் போகுது..?"

பெண்ணைப் பெற்றவரின் கொதிப்பைக் கொட்டிக் கொண்டிருந்தார் சோமசுந்தரம்.. பூங்குழலியோ.. கண்களில் வழியும் கண்ணீரை முந்தானைச் சேலையில் துடைத்தபடி மருமகன் நிற்கும் திசைப்பக்கம் கூடத் திரும்பிப் பார்க்காமல் வேறு புறமாக திரும்பியிருந்தாள்..

நரேந்திரனுக்கு சங்கடமாக இருந்தது.. அதுநாள் வரை அவன் ஊர்மிளாவைத்தான் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி நிறுத்தி வைத்திருந்தான்..

அன்று அவனையே ஊர்மிளாவின் தந்தை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விட்டதில் அவனுக்கு பேச வாய் வரவில்லை..

'இவளால்தானே இவ்வளவும்..'

ஊர்மிளாவை முறைத்துப் பார்த்தான்.. அவள் அவனைப் பாத்தால் அல்லவா பதிலுக்கு முறைப்பாள்..? அவள்தான அவள் யாரோ.. அவன் யாரோ என்பதைப் போல வேறு திக்கில் பார்த்தபடி விறைப்பாக நின்று கொண்டிருந்தாளே..

அதுவேறு நரேந்திரனின் கோபத்தை அதிகப் படுத்தியது..

'பெரிய வால்டர் வெற்றிவேலுக்கு மகளாப் பொறந்திருக்கா.. அப்பாவை கேள்வி கேட்க வைச்சுட்டு வேற பக்கம் பார்த்துக்கிட்டு இருக்கா.. இவளை..!'

https://t.me/tamilpdfebooks

அவளை என்னதான் செய்வது என்று அவனுக்கு விளங்கவில்லை.. அதைப்பற்றி அப்படிப்பட்ட தருணத்தில் யோசிக்கவும் அவனால் முடியவில்லை..

"இப்ப என்னதான் சொல்ல வர்றிங்க..?" எரிச்சலோடு கேட்டான்.. அவன்..

"சும்மா பிள்ளைத்தாய்ச்சி.. பெண்டாட்டின்னு சொல்லிக் காட்டறிங்களே.. இவ கன்சீவ் ஆகியிருக்கிறதை ஏங்க இவ என்னிடம் சொல்லாம மறைச்சா..?" மீண்டும் கண் சிவந்தான்..

"சொல்லலை.. அவ்வளவுதான்.. சும்மா.. சும்மா.. மறைச்சான்னு சொன்னா எனக்கு கெட்ட கோபம் வந்திரும்.. சொல்லிட்டேன்.. பெண்ணைப் பெத்தவன்ங்கிறதுக்காக பொறுமையா பேசிக்கிட்டு இருக்கேன்.."

'இதுதான் பொறுமையா பேசுகிற லட்சணமா..?'

அவன் அமிர்தாவை பார்த்தான்.. அவளோ அவனை பொறுமையாய் இருக்கும்படி சைகை செய்தாள்.. பூங்குழலியைப் பார்த்தான்.. அவள் பிழியப்பிழிய அழுது கொண்டிருந்தாள்.. மனச் சங்கடத்துடன் ஊர்மிளாவை முறைத்தான்.. அவளோ உலகத்தில் உள்ள அத்தை சிந்தனைகளையும் முகத்தில் தேக்கி யோசித்துக் கொண்டிருந்தாள்..

'பணத்துக்கு என்ன செய்கிறதுன்னு யோசிப்பா.. எவளோ அருவிக்கு மத்தியில நின்னுக்கிட்டு குடிக்கிறதுக்கு தண்ணிரத் தேடினாளாம்.. அந்தக் கதையாய் இந்தக்கதை இருக்கு..'

https://t.me/tamilpdfebooks

அவர்களைப் பார்ப்பதற்கு பதில் சோமசுந்தரத்தையே பார்த்திருக்கலாம் என்று அவனுக்குத் தோன்றிப் போனது..

“இவ கன்சீவ் ஆகியிருக்கிறதை யாரிடம் முதலில் சொல்லனும்..? இவ குழந்தையோட தகப்பன்கிட்டத்தானே முதலில் சொல்லனும்..? அதை மூணு மாசமா இவ மறைச்சு வைச்சிருக்கிறா.. அதுக்கப்புறமும் என்னிடம் எதையும் சொல்லாம வீட்டைவிட்டு வெளியில் போயிட்டா.. இதையெல்லாம் ஏன்னு நீங்க கேட்க மாட்டிங்களா..?”

அவன் சோமசுந்தரத்திடம் நியாயம் கேட்டான்..

10

சோதிக்கும் என்மனதை சோதிக்கும் அழகான ராட்சசி நீ....

“**சொ**ல்கிறதுக்கு நீங்க இவ பக்கத்திலே இருந்தீங்களா..?”

புயலை உள்ளடக்கிய அமைதியுடன் கேட்டார் சோமசுந்தரம்..

“அது.. அது..” நரேந்திரன் உதட்டைக் கடித்தான்..

“சொல்லுங்க.. கல்யாணமான பின்னாலே ஆறுமாசம் சேர்ந்து இருந்திருப்பீங்களா..? மறுவீட்டு விருந்துக்குன்னு வந்து போனிங்க.. ஹனிமூன்னு கொண்டாடன்னு

https://t.me/tamilpdfebooks

வெளிநாட்டுக்கு அழைத்துக்கிட்டுப் போனிங்க.. அவ்வளவுதான்.. மோகம் முப்பது நாள்.. ஆசை அறுபது நாள்ங்கிற கணக்கா பெண்டாட்டியை மறந்துட்டு வெளிநாட்டுக்குப் பறந்துட்டிங்க.. மொத்தமா இரண்டு மாசம்.. நீங்க திரும்பி வந்ததும் சொல்லனும்னு என் மக ஆசையாய் காத்துக் கிடந்தப்ப.. வீட்டுக்குள்ளே நுழைஞ்சதும் அவளை உங்க வீட்டாளுக முன்னாலே நிக்க வைச்சு கேட்டிங்களே ஒரு கேள்வி.. அதுக்கப்புறமும் அங்கே நின்னு அத்தான்.. அத்தான்.. உங்க வாரிசு என் வயிற்றில வளர்ந்துக்கிட்டு இருக்குன்னு என்மக சொல்லிக்கிட்டு இருப்பாளா..?"

ஊர்மிளாவை துவம்சம் பண்ணிவிடும் கோபத்துடன் நரேந்திரன் இருக்க.. அவனை துவம்சம் பண்ணி விடும் கோபத்தோடு அவன் மாமனார் அவனைப் பார்த்து கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்..

"ஐயா.. என்மக கோபத்தில கிளம்பி வந்துட்டாங்கய்யா.. நீங்க பொறுப்புள்ள புருசனா இருந்திருந்தா என்ன பண்ணியிருக்கனும்..? வீட்டை விட்டுப் போன பெண்டாட்டி எங்கே போனான்னு தேடிக்கிட்டு வந்திருக்கனுமா.. வேண்டாமா..?"

"அவளை வீட்டை விட்டு நானா போகச் சொன்னேன்..? அவளாக் கிளம்பிப் போனா நான் எப்படிங்க தேடி வருவேன்..?"

"நீங்க போகச் சொல்லலைங்க.. உங்க கேள்வி போகச் சொல்லுச்சு.. உங்களைத் தேடி வரச் சொல்லி நாங்களும் சொல்லலை.. என் மகளும் சொல்ல மாட்டா..

https://t.me/tamilpdfebooks

அவ மறைச்சா.. மறைச்சான்னு நீங்கதான் குற்றம் சொல்லிக்கிட்டு இருக்கீங்க.."

"ஆக.. உங்க யார்மேலயும் குற்றமில்லை.. குற்றம் மொத்தமும் என் மேலதான்.. ஓகே.. இதை அப்புறமா பேசிக்கலாம்.. இப்ப என் மகனின் ட்ரீட்மெண்ட்தான் பர்ஸ்ட்.. மத்ததெல்லாம் நெக்ஸ்ட்தான்.."

நரேந்திரன் மகனின் அருகில் போனான்.. கைப் பொருளை இறுக்கிப் பிடித்துக் கொள்ளும் பதட்டத்துடன் ஊர்மிளா சோமசுந்தரத்தைப் பார்த்தாள்.. அவள் மகளுக்கு தைரியம் கொடுக்கும் வகையில் தலையை அசைத்து விட்டு நரேந்திரனிடம் பேசினார்..

"சுரேனை இதுவரை பார்த்துக்கிட்டது நாங்கதான்.. இனியும் பார்த்துக்க எங்களாலே முடியும்.. நீங்க கிளம்புங்க.." என்றார்..

"இல்லை.." இறுகிய முகத்துடன் தலையசைத்தான் நரேந்திரன்..

"என் மகனை நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்.. சின்னத் தலைவலிக்குக் கூட லட்சக்கணக்கில் பணம் செலவளித்து வைத்தியம் பார்த்துக்கிறவன் நான்.. என் மகனின் வைத்தியச் செலவுக்கு என்ன செய்கிறதுன்னு கையைப் பிசைஞ்சுக்கிட்டு நிக்கிறவ உங்க மகள்.. இவகிட்ட என்மகனை விட்டுவிட்டுப் போக முடியாது.. நெவர்.."

"தாயையும்.. பிள்ளையும் பிரிக்கப் பாக்கறிங்களா..?"

"இவ மட்டும் தகப்பனையும் மகனையும் பிரிச்சு வைச்சாளே.. அது சரியா..?"

https://t.me/tamilpdfebooks

"ஊஹூம்..! தகப்பன் மகன் பிறந்ததைக் கூடத் தெரிஞ்சுக்காம பிரிஞ்சு நின்னார்.. என் மக பிரிச்சு வைக்கலை.."

"என் மகன் பிறந்ததைச் சொன்னாத்தானேங்க நான் தேடிவந்திருப்பேன்..?"

நரேந்திரனின் கோபக் கேள்வியில் ஊர்மிளா அவனைப் பார்த்தாள்.. அந்த ஒரு பார்வையின் வீச்சில் தெரிந்த அதிர்வில்... குற்றச்சாட்டில்... வலியில்... நரேந்திரனின் கண்ணிமைகள் துடித்தன..

அவனால் அவள் விழிகளில் தெரிந்த அந்த அதிர்வையும்.. வலியையும் சகித்துக் கொள்ள முடியவில்லை.. அதனால்தானோ என்னவோ..

"நீங்க தேடி வந்திருந்தா அது தானா உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே.." என்ற சோமசுந்தரத்தின் பதிலடிக்கு அவன் பதில் சொல்லவில்லை..

சுரேந்திரனின் சோர்ந்த தோற்றம் அவனை பாதித்தது.. அவன் மகனின் இந்த நிலைமைக்கு அவனும் ஒரு காரணம் என்ற நினைவில் அவன் மனதில் குற்றஉணர்வு எழுந்தது..

மகனின் முடியைக் கோதிச் சீராக்கி விட்டவன் அவன் பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.. செல்போனை எடுத்து சென்னையின் பெரிய மருத்துவமனையை அழைத்துப் பேசினான்.. அமிர்தாவிடம் அந்த ஹாஸ்பிடலுக்கான பில் தொகையை தயார் செய்யச் சொன்னான்.. படுத்துக் கொண்டு போகும் வசதியுடன் இருந்த சொகுசு வேனை அனுப்பி வைக்கச் சொல்லி டிராவல்ஸீக்கு போன் பண்ணினான்..

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளாவை ஒரு வார்த்தை கூட கலந்து பேசாமல் மடமடவென்று செயல்பட்ட அவனது வேகமான செயல்பாட்டில் தன் மகனிடமிருந்து தான் பிரிந்து நிற்பதைப் போல உணர்ந்தாள் ஊர்மிளா.. அவளுடைய மகனை அவளுக்குச் சொந்தமில்லாதவனாக நரேந்திரன் ஆக்கிக் கொண்டிருக்கிறான் என்று அதிர்ந்தாள்.. பெற்று வளர்த்தவளுக்கு மனது துடித்தது..

"அப்பா.. அவன் என் மகன்.." என்று பதறினாள்..

நரேந்திரனின் விழிகள் நிதானமாக உயர்ந்து அவளைக் கூர்மையாகப் பார்த்தன.. அவளுடைய பதட்டத்தில் அவன் இமைகள் சுருங்கின.. அவன் பார்வையில் கூர்மையில் அவளுடைய பதட்டம் அதிகரித்தது.. அவளின் அந்த பதட்டத்தை உன்னிப்பாக அவன் கவனித்தான்...

மகளுக்கு ஆதரவாக பேச முயன்ற சோமசுந்தரத்தை கை நீட்டித் தடுத்தவன்.. அமிர்தாவின் பக்கம் திரும்பினான்..

"உங்க பிரண்டுகிட்டச் சொல்லுங்க டாக்டர்.. இங்கே பாதிக்கப்பட்டிருக்கிறது என் மகன்.. என் அத்தனை சொத்துக்கும் இவன்தான் வாரிசு.. என் கம்பெனியோட டிரஸ்டில இருந்து எத்தனையோ நோயாளிகளோட ட்ரீட்மெண்டுக்கு கோடிக் கணக்கில் நான் பணம் கொடுத்திருக்கேன்.. அந்த டிரஸ்டுக்கும் இவன்தான் முதலாளி.. இவன் ட்ரீட்மெண்டுக்கான பணத்துக்கு உங்க பிரண்ட் கையைப் பிசைஞ்சுக்கிட்டு நின்னா அது உங்கபிரண்ட் அவளோட மகனுக்கு செய்கிற அநியாயம்.."

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா சாட்டையடியை வாங்கினதைப் போலத் துடித்துப் போனாள்.. நரேந்திரனின் வார்த்தைகளில் இருந்த உண்மை அவளைச் சுட்டது..

"உண்மையிலேயே இவளுக்கு இவ மகன்மேல பாசமிருந்தா.. இவனுக்கு உரிமையானது கிடைக்கிறப்ப தடுத்து நிறுத்தாம விலகி நிற்கனும்.."

ஊர்மிளா பின்னடைந்தாள்.. பூங்குழலி மகளின் நிலைமையில் துயரம் கொண்டாள்.. ஊர்மிளாவின் மனம் படும் பாட்டை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது..

"என் மகன்.. என் மகன்னு சும்மா வாய் வலிக்கப் பேசினா மட்டும் போதாது.. அந்த மகன் நரேந்திரனுடைய வாரிசு.. கோடிஸ்வரன்ங்கிறதை நினைவில வைச்சுக்கனும்.. என் பணமும் அந்தஸ்தும் உங்க பிரண்டுக்குத் தேவையில்லாம இருக்கலாம்.. என் மகனுக்கும் அது தேவையில்லைன்னு சொல்ல உங்க பிரண்டுக்கு உரிமையில்லை..."

ஊர்மிளா மனதில் அறை வாங்கினாள்.. அவளது வாழ்வின் பற்றுகோலாக இருந்த மகனைப் பார்த்தாள்.. அவன்மீது அவளுக்கு உரிமையில்லையா..?

"என் மகன் கண்ணசைச்சா கோடிக்கணக்கில பணத்தைக் கொண்டு வந்து இவன் முன்னாலே குவித்து வைப்பேன்.. இவன் அள்ள அள்ளக் குறையாத பணம் இவன்கிட்டக் கொட்டிக் கிடக்கு.. இவனுக்கு வைத்தியம் பார்க்க உங்க பிரண்ட் யார்கிட்டக் கடன் கேட்கிறதுன்னு யோசிச்சுக்கிட்டு இருக்கா.. எனக்க வர்ற கோபத்துக்கு இவளை உண்டு இல்லைன்னு பண்ணியிருப்பேன்...

https://t.me/tamilpdfebooks

என் மகனோட ட்ரீட்மெண்ட் கண்ணுக்கு முன்னால நிற்கிறதினால இவ தப்பிச்சா.."

ஊர்மிளா சுவரில் சாய்ந்து கண்களை மூடினாள்.. வசதி குறைவினால் நரேந்திரனிடம் மகனைத் தோற்றுக் கொண்டிருக்கும் துயர் அவள் விழிகளில் தெரிந்தது.. சோமசுந்தரத்தால் அதைத் தாங்கிக் கொள்ள முடிய வில்லை.. ரோசத்துடன் மருமகனின் பேச்சை அவர் இடைமறித்தார்..

"நாங்க ஒன்னும் ரோட்டில நிற்கலைங்க.. எனக்குக் கிராமத்தில தோப்பு துரவுருக்கு.. திருச்சியில சொந்த வீடு இருக்கு.. அதை வித்து என் பேரனுக்கு வைத்தியம் பார்த்துட்டுப் போறேன்.."

"ஸ்டாப் திஸ்..."

திட்ட வந்ததை சோமசுந்தரத்தின் மீதிருந்த மரியாதையினால் தொண்டைக்குழிக்குள் தள்ளி விட்டு அவரை கடுமையுடன் பார்த்த நரேந்திரனின் பார்வையில் தீப்பொறி பறந்தது..

"யார் மகனுக்கு யார் சொத்தை வித்து ட்ரீட்மெண்ட் பண்றது..? உங்க சொத்து என் மகனுக்கு எதுக்கு..?"

"அவன் என் பேரன்.."

"அதுக்கு முதலில் இவன் என் மகன்.. உங்க சொத்தை நீங்களே வைத்துங்கங்க.. இனி என் மகனுக்காக நீங்க யாரும் ஒரு ஒன் ரூபி காயினைக் கூடச் செலவளிக்கக் கூடாது.. ரப்பிஷ்.. நானும் போனாப் போகுது.. பெரியவங்களாச்சேன்னு பொறுத்துப் போனா நீங்க

https://t.me/tamilpdfebooks

எல்லையை மீறுகிறிங்க.. இப்பச் சொல்றேன் கேட்டுக்கங்க.. என் மகன் கோடீஸ்வரன்.. அவனுக்கான ட்ரீட்மெண்டுக்கான பணம் அவனிடம் கொட்டிக்கிடக்கு.. நீங்க யாரும் அவனுக்காக விரலைக்கூட அசைக்க வேண்டாம்... அதுக்கான தேவையும்... அவசியமும்... அவனுக்கு இல்லை.. மைன்ட் இட்..”

நரேந்திரன் கத்திக் கொண்டிருந்த போதே மருத்துவ மனைக்கான பில் வந்து விட்டது.. வாங்கியவன் கிரெடிட் கார்டை எடுத்து நீட்டினான்.. அதே நேரத்தில் சொகுசு வேனும் வந்து விட.. அமிர்தாவைப் பார்த்தான்..

“டாக்டர்.. நீங்க என் மகனுடன் வரனும்.. சென்னையில் இவனை அட்மிட் பண்றப்ப அந்த ஹாஸ்பிடலில் கேஸ் ஹிஸ்டரியைச் சொல்ல நீங்க கூட இருக்கனும்..”

“டிஸ் ஜார்ஜ் ஃபைல் இருக்கு மிஸ்டர் நரேந்திரன்.. அது கேஸ் ஹிஸ்டரியைச் சொல்லும்..”

“பட்.. எனக்கு அது போதாது.. கூடுதல் விவரங்கள் அங்கே தேவைப்பட்டா அதை நேரில் சொல்ல நீங்க இருந்தாகனும்..”

“அங்கே போனவுடன் எனக்குப் போன் பண்ணுங்க நரேந்திரன்.. நான் போனில் விவரம் சொல்றேன்..”

“டாக்டர் ப்ளீஸ்.. உங்களுக்கான ட்ரீட்மெண்ட் ஃபீஸை நான் ஒன்றுக்குப் பத்தா கொடுத்து விடுகிறேன்.. உங்களோட டிராவலிங் எக்ஸ்பென்சிவ்வை பார்த்துக்கிறேன்..” மேலும் எதையோ சொல்லப் போனான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

அமிர்தாவின் நேர்கொண்ட பார்வை அவன் பேச்சை தடைசெய்தது..

“நோ மிஸ்டர் நரேந்திரன்.. பணத்தை வைத்து எல்லோரையும் வேலை செய்ய வைத்துவிட முடியும்ன்னு நினைக்காதீங்க.. பணத்தைத் தாண்டி நிறைய விசயங்கள் இருக்கு.. எல்லாத்தையும் விலைக்கு வாங்க முடிஞ்சா அன்பு.. காதல்.. நட்பு.. பாசம்.. தாய்மைங்கிற உன்னதமான உணர்வுகளுக்கு அர்த்தமில்லாமல் போய் விடும் நரேந்திரன்.. பணத்தை வைச்சு இவைகளில் எதையும் நீங்க வாங்கி விட முடியாது.. இந்த உலகம் பணத்துக்கு முன்னாலே மண்டி போட ஆரம்பித்து வெகு காலமாகி விட்டது நரேந்திரன்.. அந்த மமதையில் நீங்க பேசறிங்க.. இன்னும் இந்த உலகில் அழியாத சில ஆழமான பந்தங்கள் இருக்கின்றன.. அதையெல்லாம் உங்களோட பணத்தால் அசைக்கக் கூட முடியாது..”

“ஏன் டாக்டர்..?”

அமிர்தா உணர்ச்சி மயமான பேச்சிற்கு இரண்டே வார்த்தைகளில் கேள்வியை எழுப்பினான் நரேந்திரன்..

“நான் இப்ப என்ன சொல்லிட்டேன்னு இவ்வளவு நீளமா நீங்க லெக்சர் அடிக்கறிங்க..? இந்த ஹாஸ்பிடலில் நீங்க மட்டும்தான் டாக்டரா வொர்க் பண்றிங்களா..? வேற டாக்டர்ஸே இல்லையா..? நான் ஏன் உங்களிடம் மட்டும் உதவி கேட்டேன்..? நீங்க டாக்டர்ங்கிறதையும் தாண்டி என் மகன்மேல அன்பும் பரிவும் வைச்சிருக்கிறவங்க.. நீங்க கூடவந்து சென்னை ஹாஸ்பிடலில அட்மிட் பண்ணிட்டு வந்தா பெட்டரா இருக்கும்ன்னு ஃபீல்

https://t.me/tamilpdfebooks

பண்ணித்தானே உங்க உதவியைக் கேட்டேன்..? அதுக்கு என்னென்னவோ பேசறிங்க..?"

"நீங்க அப்படிச் சொல்லலையே.. என் ஃபீஸை பத்தியும் டிராவல் எக்ஸ்பென்ஸீவ்வை பத்தியும் பேசினிங்களே.."

"இட்ஸ் மை டியூட்டி.. யாரோட நேரத்தையும்.. உழைப்பையும் நட்பைக் காரணம் காட்டி இலவசமா பயன் படுத்திக்க எனக்குப் பிடிக்காது.."

"வாட் டூ யு மீன்..?"

"ஊஹீம்.. எதையும் மீன் பண்ணி நான் சொல்லலை.. பொதுவாகத்தான் செர்ல்றேன்.."

"நோ.. நீங்க என் பிரண்டைக் குத்திக் காட்டிப் பேசறிங்க.. நட்பைக் காரணம் காட்டி என் ட்ரீட்மென்டை அவ இலவசமா பயன் படுத்திக்கிறான்னு சொல்லாம சொல்கிறிங்க..."

"இல்லைன்னு சொன்னா மட்டும் நீங்க நம்பவா போறிங்க...?" நரேந்திரன் தோளைக் குலுக்கினான்.. அமிர்தா எதையோ சொல்லப் போனாள்.. ஊர்மிளா தலையை இடம் வலமாக அசைத்து அமிர்தாவை பேச விடாமல் செய்தாள்..

நரேந்திரன் கார் டிரைவரையும் வேன் டிரைவரையும் சுரேந்திரன் இருந்த அறைக்கு வரச் சொன்னான்.. சுரேந்திரனின் மருத்துவப் பரிசோதனைகளின் விவரங்கள் அடங்கிய ஃபைலையும் அவனின் டிஸ்ஜார்ஜ் ஃபைலையும் எடுத்துக் கார் டிரைவரிடம் நீட்டினான்..

https://t.me/tamilpdfebooks

"சுரேனோட திங்க்ஸ் ஏதாவது இருக்கா..? நான் கொண்டு போகனும்னு நினைக்கிறதை சீக்கிரமா பேக் பண்ணிக் கொடுக்கச் சொல்லுங்க.." என்று அமிர்தாவிடம் சொன்னான்..

கோபமாக பேசப் போன சோமசுந்தரத்தை ஊர்மிளா தடுத்து விட்டாள்.. படபடவென்று அவனுடைய உடைகள் மற்றும் பொருள்களை ஒரு பேக்கில் அடுக்கி அமிர்தாவிடம் கொடுத்தாள்..

'ஏன்..? அதை என் கையில் கொடுக்க மாட்டாளா..?'

நரேந்திரன் சினத்துடன் அமிர்தா நீட்டிய பேக்கை வாங்கி டிரைவரிடம் நீட்டினான்.. மகனைத் தூக்கித் தோளில் சாய்த்துக் கொண்டான்.. தூக்கத்திலிருந்த குழந்தை தன்னிச்சையாக அவன் தோளில் சாய்ந்து கழுத்து வளைவில் முகம் பதித்து.. அவன் கழுத்தைச் சுற்றிக் கைகளை போட்டு இறுக்கிக் கொண்டதில் அவன் நெஞ்சம் நெகிழ்ந்தது.. அந்த பிஞ்சு முகத்தின் ஸ்பரிசத்தை அவன் கழுத்து உணர்ந்ததில் அவன் அப்படியே நின்று விட்டான்..

'என் மகன்..!'

கண்கள் பனிக்க குழந்தையின் பிஞ்சுக் கையின் தளிர் விரல்களைப் பிடித்து அதில் முத்தம் பதித்தான்.. பூங்குழலி பொங்கி அழுதாள்.. சோமசுந்தரம் கோபத்துடன் மனைவியை முறைத்தார்.. ஊர்மிளா உதட்டைக் கடித்துத் தன் உணர்வுகளுக்கு அணை கட்டினாள்..

"உங்களுக்கு ஒரு நிமிசம் டைம் தர்ரேன் டாக்டர்.. நான் ரிசப்சனைத் தொடுகிறதுக்குள்ள நீங்க வந்து

https://t.me/tamilpdfebooks

என்னுடன் ஜாயின் பண்ணீட்டிங்கனா.. நான் வேற ஒரு டாக்டரை அழைத்துப் போக வேண்டிய அவசியம் இருக்காது..” வேக நடையுடன் அறையை விட்டு வெளியேறி விட்டான் நரேந்திரன்..

“போ அமிர்தா..” ஊர்மிளா பதறினாள்..

“எப்படிடீ.. அவர் உன்னையும் கூப்பிட்டிருக்கனுமில்ல.. உன்னைக் கூப்பிடாதவரின் உதவிக்கு நான் போக மாட்டேன் ஊர்மி...”

“உன்னைக் கையெடுத்துக் கும்பிடறேண்டி..”

ஊர்மிளா கரம் குவித்தாள்.. அவளுடைய தளிர் உடல் நடுங்கியது..

உயிருக்குயிராய் பழகிய தோழி யாசிப்பதைப் போலக் கரம் குவித்ததை அமிர்தாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. ஊர்மிளா தோழியிடம் கெஞ்சினாள்..

11

*என்னைக் கட்டிப் போட்டு வைத்திருக்கும்
அழகான ராட்சசி நீ....*

“**போ** அமிர்தா.. எனக்காக போ.. என் மகனைத் தூக்கிக்கிட்டுப் போறார் அமிர்தா.. நானில்லாம ஒரு செகண்ட்கூட என் மகன் இருந்ததில்ல.. ஸ்கூலுக்குப் போகிறப்பக் கூட அவனைத் தூக்கிக்கிட்டுத்தான்

https://t.me/tamilpdfebooks

போவேன்.. ஆயாகிட்ட பார்த்துக்கச் சொல்லிட்டு.. என் கண்பார்வையில் அவனை வைச்சுக்கிட்டே பாடம் நடத்துவேன்.. அந்த என் மகனை என்கிட்ட இருந்து பிரிச்சுத் தூக்கிக்கிட்டுப் போறார்டி.. நீ போ.. அவன் எந்த ஹாஸ்பிடலில் அட்மிட் ஆகியிருக்கான்.. எப்படியிருக் கான்ங்கிற விவரத்தைத் தெரிஞ்சுக்கிட்டு வந்து சொல்ல உன்னை விட்டா எனக்கு வேறு யாருமில்லைடி அமிர்தா.. போ..”

தோழியின் கெஞ்சலில் நிதானித்த அமிர்தா அறையை விட்டு வெளியேறினாள்.. அவள் வெளியூருக்குப் பயணப்படும் விவரத்தை அவளுடைய கணவனிடம் செல்போனில் சொல்லியபடி நரேந்திரனைப் பின் தொடர்ந்தாள்..

ஊர்மிளா பதட்டத்துடன் அறையின் ஜன்னலுக்கு ஓடி எட்டிப் பார்த்தாள்.. வேனின் கதவு திறந்தது.. உள்ளே இருந்த படுக்கையில் நரேந்திரன் மகனைப் படுக்க வைத்து விட்டு நிமிர்ந்து மிகச் சரியாக அவளிருந்த ஜன்னலைப் பார்த்தான்.. சட்டென விலகிக் கொண்டவளின் இதயம் துடித்தது.. வேகமாக அறையை விட்டு வெளியே ஓடினாள்.. சோமசுந்தரமும் பூங்குழலியும் அவள் பின்னாலே ஓடினார்கள்..

வேனின் உள்ளே இருபக்கமும் இரண்டு சொகுசு படுக்கைகள் இருந்தன.. உள் அமைப்பு ஏஸி வசதியுடன் இருந்தது.. சுரேந்திரன் படுத்திருந்த படுக்கைக்குப் பக்கத்திலிருந்த இன்னொரு படுக்கையில் ஏறி அமர்ந்தாள் அமிர்தா.. சுரேந்திரனிடம் அசைவு தெரிந்ததில் அவனருகே குனிந்து போர்வையால் போர்த்தி விட்டாள்..

https://t.me/tamilpdfebooks

"வேனை கிளப்புங்க..."

நரேந்திரனின் கட்டளையில் வேனில் ஏறினான் டிரைவர்.. வேன் கிளம்பியது.. வேனின் கதவை மூடப் போனான் நரேந்திரன்.. வேகமாக ஓடி வந்த ஊர்மிளாவைப் பார்த்த அமிர்தா அவன் கதவை மூட விடாமல் தடுத்தாள்.. அவன் புருவங்களை உயர்த்திய போது ஊர்மிளாவை சுட்டிக் காட்டினாள்..

"பெத்தவ மகனைப் பார்க்க ஓடி வர்றா.. வெயிட் பண்ணுங்க.."

"இதுவரை பார்த்தது போதும்.. இனி நான் பார்த்துக்கறேன்.."

நரேந்திரன் இறுக்கமான முகத்துடன் சொல்லிவிட்டு இரக்கமில்லாமல் வேனின் கதவை மூடினான்.. ஓடி வந்த ஊர்மிளாவின் பார்வையில் வேனில் படுத்திருந்த சுரேந்திரன் விழிப்பு வந்து புரண்டு படுப்பது தெரிந்தது..

'விழுந்துரப் போறான்..'

அவள் பதறும் போதே கதவு மூடியது.. மூடப்படும் கதவுகளின் இடைவெளியில் சுரேந்திரன் அவளை

"அம்மா..!" என்று அழைக்கும் குரல் கேட்டது..

"சுரேன்.." அவள் பாய்வதற்குள் வேனின் கதவு மூடப்பட்டு வேன் கிளம்பி பறந்து விட்டது..

ஸ்தம்பித்து நின்ற ஊர்மிளாவை கடினமாக பார்த்தபடி ஒரு நொடி அசையாமல் நின்றான் நரேந்திரன்... மனைவியின் அதிர்வைச் சொல்லும் முகத்தில் அவன்

https://t.me/tamilpdfebooks

விழிகள் எதையோ தேடின.. தயங்கி நின்றவன் அவளின் அதிர்வைப் பார்த்தபடி காரில் ஏறி உட்கார்ந்தான்..

ஊர்மிளா பார்த்துக் கொண்டிருந்த போதே அவனுடைய காரும் கிளம்பி புள்ளியாகி மறைந்து விட்டது..

உடலில் உள்ள அனைத்து சத்திகளும் வடிந்து விட்டதைப் போல உணர்ந்தாள் ஊர்மிளா.. அப்படியே மயங்கிச் சரிந்தவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்ட பூங்குழலி.. மகளை நெஞ்சில் சாய்த்து இறுக்கிய வண்ணம் கண்ணீர் விட்டாள்..

அமிர்தாவின் தோழி என்பதினாலும்... அந்த மருத்துவமனையில் தான் சுரேந்திரனை அவள் பெற்றெடுத்தாள் என்பதினாலும்.. அவளை அங்கிருந்தவர் களுக்குத் தெரிந்திருந்தது.. நர்ஸ்களின் உதவியோடு ஊர்மிளாவை ரிசப்சனில் இருந்த சோபா ஒன்றில் சாய்வாக உட்கார வைத்தார்கள்.. அவள் முகத்தில் தண்ணீர் தெளித்து மயக்கத்தை போக்கினார்கள்.. சோமசுந்தரம் சுரேந்திரன் அனுமதிக்கப் பட்டிருந்த அறைக்குச் சென்று அங்கிருந்த அவர்களின் பொருள்களையும்.. பூங்குழலி கொண்டு வந்த பிளாஸ்டிக் கூடையையும் எடுத்துக் கொண்டு வந்தார்.. மயக்கம் தெளிந்து மலங்க.. மலங்க விழித்துக் கொண்டிருந்த மகளை அழைத்துக் கொண்டு ஆட்டோவில் ஏறினார்..

ஆட்டோவில் அமர்ந்து சென்ற அந்த மூவரின் மனதிலும் பூகம்பம் வெடித்துக் கொண்டிருந்தது..

அவர்கள் குடியிருக்கும் வீட்டின் முன்னால் ஆட்டோ நின்றது.. தளர்ந்து போன நடையுடன் தன்னுணர்வு

https://t.me/tamilpdfebooks

இல்லாமல் பூங்குழலியின் கையணைவில் நடந்து போன மகளை பார்த்தவரின் மனம் யுத்த பூமியானது... ஆட்டோவுக்கான பணத்தைக் கொடுத்துவிட்டு வீட்டுக்குள் போனார்.. பிடுங்கிப் போட்டக் கொடியைப் போல ஹாலின் தரையில் சரிந்து கிடந்தாள் ஊர்மிளா.. அவளருகில் உட்கார்ந்து அவளைத் தேற்றப் போராடிக் கொண்டிருந்தாள் பூங்குழலி..

கணவரின் காலடியோசையில் நிமிர்ந்து கணவரின் முகத்தைப் பார்த்தவளுக்குத் துக்கம் பொங்கியது..

“இதுக்காகவா என் பெண்ணைப் பெத்தேன்..” விம்மினாள்..

சோமசுந்தரத்தின் மனதிலும் அந்தக் கேள்விதான் வாள் கொண்டு அறுத்தது.. அவர் கதவை மூடிவிட்டு கொண்டு வந்த பொருள்களை அதனதன் இடத்தில் வைத்தார்.. பிளாஸ்டிக் கூடையை டைனிங் டேபிளில் வைத்தார்.. டைனிங் ஹாலுக்குப் பக்கத்திலிருந்த பூஜையறையில் மாட்டப் பட்டிருந்த சாமி படங்களின் மீது அவர் பார்வை பதிந்தது..

‘எனக்குத்தான் உங்க மேல நம்பிக்கையில்ல.. என் பெண்டாட்டி நம்பினாளே.. தினமும் உங்க முன்னாலே விளக்கேத்தி கும்பிட்டாளே.. அதை நினைச்சுப் பார்த்தாவது எங்க மகளுக்கு நிம்மதியைக் கொடுத்திருக்கக் கூடாதா..?’ மனதுக்குள் மறுகினார்..

“ஒற்றைப் பெண்ணைப் பெத்தேன்.. உருகியுருகி வளர்த்தேன்.. அவ மனசுப் பிரகாரம் கல்யாணமும் நடந்துச்சு.. இருந்தும் என்ன பிரயோசனம்.. புருசன்கூட

https://t.me/tamilpdfebooks

வாழாம தனிமரமா திரும்பி வந்தா.. வந்தவளுக்கு உயிர் கொடுக்கன்னு அவ வயித்திலே வந்து பொறந்த மகனாலே சிரிச்சாளே.. அந்தச் சிரிப்பைக் காண உங்களுக்குப் பொறுக்கலையா..? இப்ப அந்தச் சிரிப்பையும் அவளுக்கு உரிமையில்லாம ஆக்கிட்டிங்களே..."

பூங்குழலியும் தெய்வங்களிடம்தான் முறையிட்டுக் கொண்டிருந்தாள்.. சோமசுந்தரம் மகளின் பக்கத்திலிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தார்.. கண்மூடியவரின் மனதை பாரம் அழுத்தியது..

"பெத்தவளுக்கு பிள்ளை சொந்தமில்லையாம்.. இந்த நியாயத்தை எங்கேயாச்சும் கேட்டிருக்கோமா..? பணம்.. பணம்.. பணம்.. அந்தப் பணத்தைச் சொல்லியே நம்ம வாயை அடைச்சாரே.. அவரு என்மக மனசைப் பத்தி ஒரு நிமிசம் நினைச்சுப் பாத்தாரா..?"

பூங்குழலி புலம்பிக் கொண்டிருந்தாள்.. தரையில் சரிந்திருந்த ஊர்மிளாவின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.. அது தரையில் வழிந்தோடி சோமசுந்தரத்தின் பாதத்தை நனைத்தது.. அவர் மனம் துடித்தார்.. மகளின் துயரத்தை போக்கும் வகை தெரியாமல் தவித்தார்..

நரேந்திரனைப் பிரிந்து வந்த நாள்களிலும் இப்படித்தான் அவள் துடித்தாள்.. கண்ணிரால் வீட்டைக் கழுவி விட்டாள்.. அதிலிருந்து அவள் மனம் தேற சுரேந்திரன் வழி செய்தான்.. அவன் பிறந்த அன்று ஊர்மிளாவின் முகத்தில் மலர்ச்சி திரும்பியது.. நரேந்திரனின் ஒவ்வொரு அசைவையும் பிரதிபலிக்கும் மகனின் வளர்ச்சியில் அவள் பூரித்துப் போய் விடுவாள்.. அவளையுமறியாமல்...

https://t.me/tamilpdfebooks

"அம்மா.. இவன் செய்கிறதைப் பார்த்தீங்களா.. அப்படியே இவனோட அப்பாவைப் போலவே செய்கிறான்ம்மா.." என்று சொல்லி மகிழ்ந்து போவாள்..

"பாருங்கப்பா.. இவன் அசால்ட்டா முடியைக் கோதிக்கிட்டே முறைச்சுப் பார்க்கிறத.. அப்படியே இவங்கப்பாவோட அடாவடிதான்ப்பா.." சோமசுந்தரத்திடம் சொல்லும் போதே அவள் கண்கள் மின்னும்..

அப்போதெல்லாம் சோமசுந்தரத்தின் பார்வையும் பூங்குழலியின் பார்வையும் அர்த்தத்துடன் சந்தித்து மீளும்..

மகனின் ஒவ்வொரு அசைவிலும் அவள் நரேந்திரனை உணர்வதை அவர்கள் உணர்ந்துதான் இருந்தார்கள்.. மழைநீராய் அவள் மனது நரேந்திரனின் மீதான காதலைப் பொழிந்து கொண்டுதான் இருந்தது.. அதை உணரத்தான் அவன் அருகில் இல்லை...

அவனை விட்டு விலகி வாழ்ந்த அந்த வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியிலும் ஊர்மிளாவின் மனம் நரேந்திரனைப் பற்றிய நினைவுகளை அசை போட்டுக் கொண்டேதான் இருந்தது.. சுரேந்திரன் அருகிலிருப்பதை நரேந்திரனே அவளருகில் இருப்பதைப் போன்ற உணர்வில் திளைத்து ஊர்மிளா வாழ்ந்ததை யாரால் உணர முடியும்..?

அவளின் ஒவ்வொரு அசைவையும் புரிந்து வைத்திருந்த அவளைப் பெற்றவர்களால்தான் அதை உணர முடியும்..

ஊர்மிளா சுரேந்திரனின் மீது உயிரையே வைத்திருந்தாள்.. அவன் அவளுடைய மகன் என்பதினால்

https://t.me/tamilpdfebooks

மட்டும் அவள் உருகவில்லை.. அது இயற்கையான தாய்மையின் பிரவாகம்.. எனதென்று இருப்பதெல்லாம் உனது என்று அள்ளிக் கொடுக்கும் அமுத சுரபியான தாய்மையின் வெளிப்பாடு..

சுரேந்திரன் நரேந்திரனின் மகனாகவும் இருந்தான்.. அதில்தான் அவளுடைய தாய்மையின் பிரவாகம் அதிகமான பெருமிதத்தைக் கொண்டது.. அவளுடைய மகன் அவளுடைய நரேந்திரனின் மகன்.. நரேந்திரன் ரத்தம்.. அந்த ஒன்றில் அவள் அதிகமான பிரேமையை மகனின் மீது வைத்திருந்தாள்..

அந்த மகனை.. அவளுக்குத் தந்தவன் பிரித்து அழைத்துக் கொண்டு போய் விட்டான்.. அந்த மகன் மீது ஊர்மிளாவுக்கு உரிமை இல்லையென்று சொல்லி விட்டுப் போய் விட்டான்..

மதிய உணவை யாரும் உட்கொள்ளவில்லை.. சாய்வு நாற்காலியில் சரிந்திருந்த சோமசுந்தரமும் அசையவில்லை.. மகளின் பக்கத்தில் அவள் தலையைக் கோதியபடி சுவரில் சாய்ந்து கால் நீட்டி உட்கார்ந்திருந்த பூங்குழலியும் அசையவில்லை..

அவர்கள் தன்போக்கில் புலம்பிக் கொண்டிருந்த ஊர்மிளாவை பேசவிட்டு துயரப்பட்டுக் கொண்டிருந்தார்கள்..

"நகையை விற்றுப் பணம் புரட்டிட்டேன்ம்மா.. ஹாஸ்பிடலுக்கு ஓடினா இவர் உள்ளே நிக்கிறார்.. சுரேனைக் காட்டி எப்படி என் மகன் பிறந்ததை என்கிட்ட இருந்து மறைக்கலாம்ன்னு அமிர்தாகிட்டக் கேட்டுக்

https://t.me/tamilpdfebooks

கிட்டிருக்கார்.. பணத்தேவை ஏற்பட்டதும் அவர் மகனைப் பற்றி நான் தகவல் சொன்னேனாம்.. சொல்கிறார்ம்மா..”

பூங்குழலியின் இதயத்தை யாரோ பிளப்பதைப் போல இருந்தது.. பிறந்த மகனின் அசைவினில் கணவனின் ஜாடையை உணர்ந்து சந்தோசப்பட்ட மகளுக்கு அவள் கணவனின் அந்த வாதம் எப்பேர்பட்ட பேரிடியாய் இருந்திருக்கும் என்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது..

எந்தப் பெண்ணால் இந்தக் கேள்வியைத் தாங்கிக் கொள்ள முடியும்..? இதுபோன்ற ஒரு கேள்விக்குப் பதில் சொல்லப் பிடிக்காமல்தானே நரேந்திரனை விட்டே விலகி ஓடி வந்தாள் ஊர்மிளா.. மீண்டும் அது போன்ற ஒரு கேள்வி அவளைத் தாக்கினால் எப்படி அதை எதிர் கொள்வாள்..?

‘என் மகளே..!’ மனதுக்குள் அழுதாள் பூங்குழலி..

“அமிர்தா சுரேனைப் பத்தி தகவல் கொடுத்திருக்காம்மா.. இவர் தானா என்னையும் சுரேனையும் தேடிவரலை.. அதை மறந்திட்டு என்னைக் கேள்வி கேட்கிறார்ம்மா.. நான் அவர் மகனைப் பத்தி மறைச்சேனாம்..”

ஊர்மிளாவின் குமுறலில் பூங்குழலி கண்களை மூடி தவித்தாள்..

“அவர் மகனைப் பற்றித்தானாத் தெரிஞ்சு ஓடி வந்திருந்தா கேள்வியே கேட்காம சுரேனை அவர்கூட அனுப்பி வைச்சிருப்பேன்ம்மா.. இல்லையே.. அவர் என்னைப் பத்தி யோசிக்கவே இல்லைம்மா.. அவர்

https://t.me/tamilpdfebooks

வேலையைப் பார்த்துக்கிட்டு இருந்திருக்கார்.. அமிர்தா தான் மெஸேஜ் குடுத்து அவரை வர வைச்சிருக்கா.."

"அதில தப்பில்லை ஊர்மிளா.. இந்த நிலைமையில நமக்கு சுரேனோட ட்ரீட்மெண்டுதான முக்கியம்..? அவன் உன் புருசனுக்கும் மகனில்லையா..? அவனைப் பார்க்க வேண்டிய கடமை அவருக்கும் இருக்கில்லையா..? அவர் மகனைத் தேடி வந்ததில் தப்பில்லைம்மா..."

"அதை நான் மறுக்கலைம்மா.. தேடி வந்தவர் பணத்தேவை வந்ததும்தான் நாம தகவல் சொன்னோம்ன்னு சொன்னாரு பாருங்க.. அங்கே நான் செத்துப் போயிட்டேன்ம்மா.."

பூங்குழலி கண்களில் பெருகிய கண்ணீரை மகளுக்குக் காட்டாமல் முகம் திருப்பினாள்... அது சோமசுந்தரத்தின் பார்வையில் பட்டது.. அவர் கண்கள் சிவக்க சாய்வு நாற்காலியின் கைபிடியை இறுக்கிப் பிடித்தார்..

"நம்மாலே என்ன செய்ய முடியும் ஊர்மி..? இப்ப அவர்கூட மல்லுக்கட்டி கோர்ட்டுக்கு போகிற சூழ்நிலையிலா நாம இருக்கோம்..? சுரேனுக்கு உடம்பு சரியில்லைம்மா.. அவனுக்கு தேவையான ட்ரீட்மெண்டைக் கொடுக்க அவனோட அப்பாவாலே மட்டும்தான் முடியும்ங்கிறப்ப நாம அவனை அவர்கூட அனுப்பிவைச்சுத் தானே ஆகனும்..?"

"அதனாலதோன்ம்மா நான் ஊமையாப் போனேன்.. என் பிள்ளைக்காக.." ஊர்மிளா கேவினாள்..

https://t.me/tamilpdfebooks

"என் பிள்ளைக்காக அவனையே நான் விட்டுக் கொடுத்தேன்ம்மா.. அவன் நல்லாயிருக்கனும்.. நல்லாத்தான் இருப்பான்ம்மா.. கோடிஸ்வர அப்பா..! இந்த அம்மாகிட்ட என்னம்மா இருக்கு..? என் நகை மொத்தத்தையும் வித்தாக் கூட அவன் ட்ரீட்மெண்டுக்குப் பணம் பத்தலையே.. என்கூட இருந்து என்மகன் சுகப்பட முடியுமாம்மா..? அவங்கப்பா சக்ரவர்த்தி..! அவர்கூடப் போனா அவன் ராஜாதி ராஜாம்மா.. நல்லா இருக்கட்டும்.."

ஊர்மிளா கண்மூடிப் பேச்சை மறந்து ஊமையாகி விட்டாள்.. தூக்கமும் இல்லாத.. விழிப்பும் இல்லாத ஓர்விதமான மோன நிலையில் அவர்கள் மூவரும் மூழ்கியிருக்க.. நண்பகல் கடந்தது.. அந்தி சாயும் வேளையில் காலிங்பெல் ஒலித்தது..

தரையில் கிடந்த ஊர்மிளாவையும் சுவரில் சாய்ந்திருந்த பூங்குழலியையும் அந்தக் காலிங் பெல்லின் சப்தம் பாதிக்கவில்லை.. சோமசுந்தரம் எழுந்து சென்று கதவைத் திறந்தார்..

'யார்..?'

வெளிச்சம் குறைந்த மாலை நேரத்தில் வாசலில் நின்றிருந்தவனைப் பார்த்தவரின் கண்கள் சுருங்கின..

'இவரா...!'

விளக்குப் போடாமல் இருள் சூழ்ந்திருந்த அந்த வீட்டுக்குள் பிரவேசித்தான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

12

வெறுப்பினிலே குளிக்க வைத்து
விருப்பத்திலே எனை நனைக்கும்
அழகான ராட்சசி நீ....

வீட்டுக்கு வெளியே இருந்த அந்தி மாலையின் மெலிதான வெளிச்சம் வீட்டுக்குள்ளே இல்லை...

இருள் சூழ்ந்திருந்த அந்த வீட்டில் ஜன்னலின் மெலிதான வெளிச்சக் கீற்றில் தரையில் கோட்டோவியம் போல கிடந்த ஊர்மிளாவைப் பார்த்தான் நரேந்திரன்..

அவன் வந்திருப்பதை அறியாதவளாக சுருண்டு கிடந்தவளை வெளிச்ச வெள்ளம் சூழ்ந்தது.. இருளுக்குப் பழகிய விழிகள் வெளிச்சத்தில் கூச.. அவள் கண்களை இறுக மூடிக் கொண்டாள்..

மகளின் பக்கத்தில் சுவரில் சாய்ந்து அமர்ந்திருந்த பூங்குழலி மருமகனைக் கண்டதும் அவசரமாக எழுந்து முந்தானையை இழுத்துப் போர்த்தபடி பின் வாங்கினாள்..

"வாங்க..."

மகள் துவண்டு கிடக்கும் கொடியாக தரையில் விழுந்து கிடந்த அந்த நிலைமையிலும் அதற்குக் காரணமான மருமகனை வரவேற்கும் பாங்கு பூங்குழலிக்கே உரியது என்று நினைத்துக் கொண்டான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

அவனை வரவேற்காமல் முறைத்துக் கொண்டிருந்த சோமசுந்தரம் மருமகனை விட்டுவிட்டு மனைவியை முறைத்தார்.. அவள் அதை பொருட்படுத்தாமல்..

"உட்காருங்க..." என்று வறண்ட குரலில் உபசரித்தாள்..

'நீங்க உட்காரச் சொல்லலைன்னா என்ன..? என் மாமியார் என்னை உட்காரச் சொல்லிட்டாங்களே..' சோமசுந்தரத்தைப் பார்த்தபடி அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்து கால்மேல் கால் போட்டு தோரணையாக சாய்ந்து கொண்டான் நரேந்திரன்..

அந்தத் தோரணையில் வெகுண்ட சோமசுந்தரம் மனைவியிடம்..

'பார்த்தியா..?' என்று கண்களால் அதட்டினார்..

அவள் வெகு அமைதியாக டைனிங் டேபிளில் இருந்த தண்ணீர் ஜக்கை கண்ணாடி தம்ளரில் ஊற்றி சலனமில்லாத முகத்துடன் அவனிடம் நீட்டினாள்..

நரேந்திரன் அதை வாங்கிக் கொண்டான்..

ஊர்மிளாவைச் சுற்றித்தான் இத்தனையும் நடந்து கொண்டிருந்தது... அவள் அது எதையும் உணராதவளாக கண்களை இறுக மூடி படுத்திருந்தாள்.. அதில் பூங்குழலியின் கண்கள் கலங்கின..

"என்ன விசயம்..?" ஒட்டாத குரலில் கேட்டார் சோமசுந்தரம்..

"உங்க மகளை அழைச்சுக்கிட்டுப் போக வந்தேன்.." நிதானமாக சொன்னான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

அவன் குரல் காதில் விழுந்ததும் பரபரப்புடன் எழுந்து அமர்ந்தாள் ஊர்மிளா.. அத்தனை நேரமும் கண் விழிக்காமல் கிடந்தவளிடம் தோன்றிய பரபரப்பில் சோமசுந்தரம் கண்மூடித்திறந்து தன் துயரைக் கட்டுக்குள் கொண்டு வந்தார்...

"அப்பா.. சுரேன் எங்கேன்னு கேளுங்கப்பா.. அவன் எப்படியிருக்கான்னு கேட்டுச் சொல்லுங்கப்பா...", ஊர்மிளா தந்தையிடம் தாவினாள்..

மகளின் பரிதவிப்பைக் கண்கொண்டு பார்க்க முடியாமல் பூங்குழலி சமையலறைக்குள் தன்னை மறைத்துக் கொண்டாள்..

மகளின் தலையைக் கோதிக் கொடுத்து அமைதிப் படுத்த முயன்ற சோமசுந்தரத்தைப் பொறாமையுடன் பார்த்தான் நரேந்திரன்..

'ஏன்..? இந்தக் கேள்வியை என்னைப் பார்த்து இவ கேட்க மாட்டாளா..? இவ எதிரிலதான நான் இருக்கேன்.. இவ அப்பாகிட்டத் தாவிப் போயி பதட்டப்படறாளே.. எதுக்கு..? இவ பிள்ளை அவனோட அப்பாகிட்டத்தான இருக்கான்..? ஊரான் கிட்டயா இருக்கான்..?'

"கேட்கிறேன்ம்மா.. இப்பக் கேட்கிறேன்.. நீ கொஞ்சம் பதட்டப்படாம பொறுமையா இரு.." மகளை அமைதிப் படுத்திய சோமசுந்தரம் நரேந்திரனிடம் பேச வாய் திறந்தார்..

"எல்லாம் கேட்டுச்சு.. உங்க மகள் என்ன அடுத்த ஸ்டேட்டிலயா இருக்கா..? என் கண் முன்னாலேதான இருக்கா..? இவ பேசறது என் காதில விழுகாதா..?

https://t.me/tamilpdfebooks

நீங்க வேற டிக்சனரியைப் பக்கத்தில வைச்சுக்கிட்டு டிரான்ஸ்லேசன் பண்ணிச் சொல்லனுமா..?" சுள்ளென்று பேசினான் நரேந்திரன்..

சோமசுந்தரம் அவனுக்கு மேல் இருந்தார்.. பெற்ற பிள்ளையைப் பிரிந்து மகள் படும் பாட்டைக் கண் கொண்டு காணச் சகியாதவராக துடித்துக் கொண்டிருப் பவரிடம் நரேந்திரன் எரிச்சலாக பேசியதும் அவருக்கும் சுள்ளென்று கோபம் தலையில் ஏறிவிட்டது..

"கேட்டதில்ல..? அப்புறம் பதிலைச் சொல்ல வேண்டியது தானே.. எதையும் சொல்லாம மாப்பிள்ளை போல கால்மேல் கால் போட்டு உட்கார்ந்திருந்தா என்ன அர்த்தம்..?" என்று எகிறினார்..

"என் கால்மேல என் காலை நான் போட்டுக்கறதில உங்களுக்கு என்ன அவ்வளவு கஷ்டம்..? நான் இந்த வீட்டுக்கு மாப்பிள்ளைதானே.. மகன் முறை இல்லையே.. முறை மறந்திருந்தா பக்கத்தில இருக்கிற உங்க மகளைக் கேட்டுத் தெளிவு பண்ணிக்கங்க.."

"என்னங்க.. புண்பட்டுக் கிடக்கிறவங்ககிட்ட உங்க பகுமானத்த காட்ட வந்திருக்கீங்களா..?"

"பகுமானமா..?"

அந்த வார்த்தையின் அர்த்தம் புரியாதவனாக நரேந்திரன் ஊர்மிளாவைப் பார்த்தான்.. அவள் அந்த வார்த்தைக்கான தெளிவுரை.. பொழிப்புரையை அவனுக்குச் சொல்ல முடியாத நிலையில் தொய்ந்து போய் இருந்தாள்.. காபி டிரேயுடன் அங்கே வந்த பூங்குழலி

https://t.me/tamilpdfebooks

எல்லோரின் கையிலும் காபிக் கப்பைக் கொடுத்தாள்.. ஊர்மிளா தலையசைத்து மறுக்க.. அவள் கையில் திணித்து விட்டாள்.. அவள் அதை வாங்கித் தரையில் வைத்து விட்டு சோமசுந்தரத்தின் முகத்தைப் பார்த்தாள்..

மகள் குடிக்காத காபியை தான் குடிக்க மனமில்லாமல் சோமசுந்தரமும் காபி கப்பை தரையில் வைத்துவிட்டார்.. காபியை ரசித்து குடித்துக் கொண்டிருந்த நரேந்திரன்.. வெகு சிரத்தையாக அவரைப்பார்த்து..

"என்ன..? ஏன் காபியைக் குடிக்கல..? காபி டேஸ்டாத்தான இருக்கு..?" என்று விசாரித்தான்..

"எங்க வீட்டு காபி டேஸ்டாத்தான் இருக்கும்.. எதிராளியே வந்தாலும் என் பெண்டாட்டி வகை தொகையா காபி போட்டு கையில கொடுத்திருவா.. நீங்க காபி சாப்பிடத்தான வந்திருக்கீங்க..? குடிங்க.. நீங்க குடிச்சாலே எங்க தொண்டை நனைஞ்சிரும்.." இடக்காக பதில் சொன்னார் சோமசுந்தரம்..

நரேந்திரன் அலட்டிக் கொள்ளாமல் அவரை ஓர் பார்வை பார்த்துவிட்டு..

"ஐ.. ஸீ.." என்றான்..

கையிலிருந்த காபிக்கப்பில் ஒரு சொட்டுக்கூட மீதம் வைக்காமல் குடித்து முடித்து விட்டு மாமியாரிடம் காபி கப்பை நீட்டியவன்..

"காபி செம டேஸ்ட்.." என்று சர்டிபிகேட்டை வேறு கொடுத்தான்..

https://t.me/tamilpdfebooks

பூங்குழலி 'தெய்வமே' என்று அமைதி காத்தபடி கப்பை வாங்கிக் கொள்ள.. சோமசுந்தரமோ..

"அவ உங்க செர்டிபிகேட்டை கேட்டாளா..?" என்று கேட்டார்..

"அவங்க கேட்டுச் சொன்னா அது பாராட்டில்லங்க.. கேட்காமச் சொன்னாத்தான் பாராட்டு.." என்று விளக்கம் சொன்னான் நரேந்திரன்..

"ஆக.. நீங்க காபியைக் குடிச்சுட்டு பாராட்டிட்டுப் போகத்தான் வேலை மெனக்கெட்டு எங்க வீடுதேடி வந்திருக்கீங்கன்னு சொல்லுங்க.. பூங்குழலி.. உன் காபி நல்லாயிருக்காம்டி.. இவர் எழுதி கொடுப்பார்.. வாங்கி சட்டம் போட்டு நம்ம வீட்டு ஹால் சுவரில் மாட்டி வைச்சிரு.. இந்தியாவில இருக்கிற மிகப்பெரிய கோடிஸ்வரன்களில ஒருத்தரான திருவாளர் நரேந்திரன் அவர்கள் நான் போட்டுக் கொடுத்தக் காபியைக் குடிச்சுட்டு எழுதிக் கொடுத்த பாராட்டுப் பத்திரம் இதுன்னு நம்ம வீட்டுக்கு வருகிறவங்ககிட்டக் காட்டிப் பெருமைப் பட்டுக்கலாம் பாரு.. எவ்வளவு பெரிய விசயம் இது.. சார் எவ்வளவு பெரிய ஆள்.. உன் காபிக்கு பாராட்டுப் பத்திரம் எழுதிக் கொடுக்க வீடு தேடி வந்திருக்கார் பாரேன்.. இதுக்கே இவருக்கு பாராட்டு விழா எடுக்கனும்டி.." சோமசுந்தரம் பொரிந்து தள்ளினார்..

"நக்கல்..?" ஒரே வார்த்தையில் அவரின் கலாய்ப்பை ஓரம் கட்டித்தள்ளினான் நரேந்திரன்..

"இல்லை சுவாமி.. இது விக்கல்.. பெத்தவ பிள்ளையோட நினைப்பில துடிச்சுக்கிட்டு இருக்கா..

https://t.me/tamilpdfebooks

இதுக்கு அவனுக்கு எத்தனை விக்கல் வந்துச்சோ.. நீங்க என்னடான்னா.. பிள்ளையையும் பிரிச்சுக் கொண்டு போயிட்டு... அதைப் பத்தி எதையும் சொல்லாம சட்டமா உக்காந்து காபியோட டேஸ்டை ரசிச்சுக்கிட்டு இருக்கீங்க.. உங்க மனசு கல் மனசுன்னு கூட நான் சொல்ல மாட்டேன்.. இது பாறாங்கல் மனசு.. அப்பப்பா.. இருந்திருந்து என்மக்.. உங்களைத் தான் தேடிப்பிடிச்சுக் காதலிச்சு கல்யாணம் பண்ணியிருக்கணுமா..?"

சோமசுந்தரத்தின் அங்கலாய்ப்பில் ஊர்மிளாவை உற்று நோக்கினான் நரேந்திரன்.. அவள் அவன் பார்வையை தவிர்த்தாள்..

'என்னைத் தேடிப் பிடிச்சுக் காதலிச்ச அந்த ஊர்மிளாவா இது..? அவ கண்ணில் என்னைக் கண்டதும் காதல் மின்னுமே.. அந்தக்காதல் எங்கே போச்சு..? இவ என் கண்ணைக் கூடப் பார்க்க மாட்டேன்கிறா.. ஏன்..? இவ அவ இல்ல.. இவ ராட்சசி..! என்னை அலைக்கழித்துப் பாடாய் படுத்தும் அழகான ராட்சசி..!'

அவன் நெஞ்சில் தணல் மூண்டது.. அந்தத் தணல் அவன் விழிகளில் தெரிந்த அதே நேரத்தில் பூங்குழலி தழைந்த குரலில் அவனிடம் பேசினாள்..

"ஊர்மியோட அப்பா மன வருத்தத்தில இருக்காரு.. அவர் பேசறதை நீங்க மனசில வைச்சுக்காதீங்க.. பெத்தவ இங்கே பிள்ளையை நினைச்சு புழுவாய் துடிச்சுக்கிட்டு இருக்கா.. மகனைவிட்டு ஒரு நொடிகூட இவ பிரிஞ்சிருந்ததில்ல.. வேலைக்குப் போறப்பகூட பிள்ளையைத் தூக்கிக்கிட்டுத்தான் வேலைக்குப் போவா..

https://t.me/tamilpdfebooks

அங்கே வேலை செய்கிற ஆயாக்கள்கிட்ட குழந்தையைக் கொடுத்து பார்த்துக்க சொல்லிட்டு.. தன் கண்பார்வையில அவனை வைச்சுக்கிட்டேதான் பாடம் நடத்துவா.. அப்படி வளர்த்த பிள்ளையை இன்னைக்கு அவ பிரிஞ்சி நிக்கிறா.. அவன் எப்படியிருக்கான்னு தெரியாம இவ தொண்டைக்குழியில ஒரு சொட்டுத் தண்ணி இறங்காது.. நீங்க விவரமானவர்.. உங்களுக்குத் தெரியாததில்ல.. சுரேன் எப்படியிருக்கான்.. என்ன செய்கிறான்னு நீங்க ஒரு வார்த்தை சொன்னாத் தேவலாம்..”

பூங்குழலியின் மன்றாடலுக்குப் பலன் கிடைத்தது.. சோமசுந்தரத்தின் கோபமான விதண்டாவாதப் பேச்சிற்கு இடக்கான எதிர் கோபப் பேச்சைப் பேசிக் கொண்டிருந்த நரேந்திரன் நிதானித்தான்.. எப்போதும் அவன் முகம் பார்த்துப் பேசியிராத மாமியாரின் முகம் பார்த்தவன்..

“கவலைப்பட வேண்டாம்.. சுரேன் நல்லாயிருக்கான்.. எடுக்க வேண்டிய டெஸ்டுகளை எடுத்துப் பார்த்துட்டு டாக்டர்ஸ் பயப்பட வேண்டாம்ன்னு சொல்லிட்டாங்க.. அவனோட ட்ரிட்மெண்டையும் ஆரம்பிச்சாச்சு..” என்றான்..

ஊர்மிளாவின் முகத்தில் லேசான வெளிச்சம் வந்தது.. மகளின் முகத்தை நெகிழ்வுடன் பார்த்த பூங்குழலி..

“அதற்குள்ளேயா..? எப்படி..? காலையிலேதானே கிளம்பிப் போனீங்க..?” என்று கேட்டாள்..

“இங்கேயிருந்து திருச்சிக்குப் போய் அங்கேயிருந்து பிளைட்டில போனோம்.. இப்ப பிளைட்டிலதான் ரிட்டர்ன் ஆகியிருக்கேன்.. இங்கிருந்து கிளம்பும் போதே தகவல் கொடுத்து விட்டதாலே அங்கே ரெடியாய் இருந்தாங்க..

https://t.me/tamilpdfebooks

போனவுடனே டெஸ்ட்களையெல்லாம் எடுத்துப் பார்த்துட்டு.. ட்ரீட்மெண்டை ஆரம்பிச்சுட்டாங்க.. பயப்பட ஒன்னுமில்லை.." ஊர்மிளாவின் முகத்தைப் பார்த்தபடி சொன்ன நரேந்திரன்..

'இப்பவாவது இவ காபியை எடுத்துக் குடிக்கக் கூடாதா..?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்..

அது பூங்குழலிக்கும் கேட்டு விட்டது போல.. அவள் மகளின் பக்கத்தில் அமர்ந்து ஆதுரமாக அவள் முகத்தைத் துடைத்து விட்டு காபிக்கப்பை மகள் கையில் திணித்தாள்..

"குடிம்மா.. அதான் உன் பிள்ளையோட அப்பாவே சொல்கிறாரே.. உன்பிள்ளை நல்லாயிருக்கான்.. அவனுக்கு ஒரு குறையுமில்ல.. ட்ரீட்மெண்டையும் ஆரம்பிச்சுட்டாங்களாம்.. அவன் குணமாகி உன்னைத் தேடி அம்மான்னு வர்றப்ப நீ ஓடிப் போய் தூக்கிக்கிறதுக்கு உன் உடம்பில தெம்பு வேணாமா..? குடி.." மகளை வற்புறுத்திக் காபியை குடிக்க வைத்தாள்.. சோமசுந்தரத்தைப் பார்த்து..

"உங்களுக்கு வேற தனியாய் சொல்லனுமா..?" என்று முறைத்தாள்..

மனைவியின் முறைப்பிற்கு பயந்து சோமசுந்தரம் அவசரமாக காபி கப்பை எடுத்ததைப் பார்க்க நரேந்திரனுக்குப் பிடித்திருந்தது..

'உன் பிள்ளையோட அப்பான்னு சொல்கிற மாமியார் உன் புருசன்னு சொல்லியிருந்தா கேக்கறதுக்கு குளுமையா இருந்திருக்குமே..' என்று பூங்குழலியின் மீது அவன்

https://t.me/tamilpdfebooks

கொண்ட மனத்தாங்கல்.. அவன் மாமனாரை அவள் முறைத்ததில் பறந்தே போய் விட்டது..

'ஸோ.. மாமனார் வீட்டில எலி.. வெளியில புலியா..? பாருடா..' அவன் சோமசுந்தரத்தை வேடிக்கை பார்த்தான்..

"சுரேன்.. அழுகாம இருக்கானான்னு கேளுங்கம்மா.."

ஊர்மிளா தகப்பனார் பேசினால் வேலைக்கு ஆகாது என்று கண்டு கொண்டவளாக தாயைப் பிடித்துக் கொண்டாள்..

பூங்குழலி நரேந்திரனைப் பார்த்தாள்.. அவன் பல்லைக் கடித்தான்..

'ஒன்னு அவங்கப்பாகிட்டக் கேட்கிறா.. இல்லைன்னா அவங்கம்மா கிட்டக் கேட்கிறா.. எதிரே கல்லுக்குண்டு போல உக்காந்திருக்கிற என்கிட்ட ஒரு வார்த்தை கூட கேட்க மாட்டேங்கிறா.. இவ மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கா..? என்னை உருகி உருகிக் காதலிப்பாளாம்.. கல்யாணமும் பண்ணிக்குவாளாம்.. என் குழந்தையையும் பெத்துக்கு வாளாம்.. என்னை மட்டும் 'யார் நீ'ன்னு பார்ப்பாளாம்..'

"சுரேன்.. அழுகாம.." பூங்குழலி கேட்க ஆரம்பிக்கும் போதே..

"இல்லைங்க.. அவன் அழுகிறான்.." என்று ஒற்றை வரியில் பதிலைச் சொல்லி விட்டான் நரேந்திரன்..

"அம்மா.." ஊர்மிளாவின் கண்களில் இருந்து தாரைதாரையாக கண்ணீர் கொட்டத் தொடங்கியது..

https://t.me/tamilpdfebooks

“இப்ப எதுக்காக இவ அழுகிறா..?” எரிச்சலுடன் கேட்டான் நரேந்திரன்..

“ஆமாங்க.. பெத்த பிள்ளையைக் கண்ணில பாக்க முடியாம துடிச்சுக்கிட்டு இருக்கிறவ அவன் அழுகிறான்னு காதில கேட்டதும் ஹையான்னு கையைத் தட்டி சிரிச்சு மகிழ்ந்து போவா பாருங்க.. ஏன் அழுகிறான்னு காரணம் கேட்கிறாரு..” காபியை குடித்து முடித்திருந்த சோமசுந்தரம் சண்டைக்கு வந்தார்..

“அவன் அழுகிறான்னு இவளைக் கூப்பிட்டுக்கிட்டுப் போகத்தான் நான் வந்தேன்.. கிளம்பச் சொல்லுங்க.. அதை விட்டுட்டு இவளும் அழுதுகிட்டு இருந்தா என்ன அர்த்தம்..?” எரிச்சல்பட்டான் நரேந்திரன்..

“என்ன..?” பூங்குழலி அவசரமாக கண்ணைத் துடைத்துக் கொண்டு பரபரத்தாள்..

“ஆமாங்க.. சுரேனுக்கு இங்கிருந்து கிளம்பறப்பவே தூக்கம் கலைஞ்சிருச்சு.. அப்பவே அவன் இவளை ‘அம்மா’ன்னு தேட ஆரம்பிச்சுட்டான்..”

நரேந்திரன் விவரிக்க ஆரம்பித்தான்.. ஊர்மிளாவின் காதுகளில் மூடிய வேனின் உள்ளே அவளை அழைத்த அவள் மகனின் ‘அம்மா..!’ என்ற குரல் காதுகளில் ஒலித்தது..

“என் மகன் என்னைக் கூப்பிட்டான்ம்மா..” அவள் விம்மினாள்..

“காதில விழுந்துச்சுல்ல.. நான் அங்கேதானே நின்னேன்.. என் கூட இவ வந்திருக்க வேண்டியது தானே..?” பூங்குழலியிடம் சீறினான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா விம்மலுடன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.. அவளை சினத்துடன் பார்த்தான் நரேந்திரன்.. அவர்கள் இருவரையும் மாறி மாறி பார்த்த பூங்குழலியின் மனதில் சிந்தனை வந்தது..

"இவ ஏறுவாளான்னு வெயிட் பண்றேன்.. கார் பக்கமே இவ வரலை.. வேன் பின்னாலே ஓடறா.. இவகிட்டயிருந்து இவ மகனை பிரிக்கவா நான் வந்தேன்..? என் மகனுக்கான ட்ரீட்மெண்டைக் கொடுக்க வந்தேன்.. கூட இவ வந்திருந்தா நான் வேண்டாம்ன்னு சொல்லியிருப்பேனா..?"

நரேந்திரன் பல்லைக் கடித்தபடி அவளைத் திட்டித் தீர்க்க..

"நல்லாயிருக்குங்க உங்க நியாயம்.." என்று வரிந்து கட்டிக் கொண்டு மகளுக்கு ஆதரவாக களம் இறங்கினார் சோமசுந்தரம்..

இவர் கொஞ்ச நேரம் வாயை மூடிக் கொண்டிருந்தால் தேவலை என்று பூங்குழலிக்குத் தோன்றியது..

அவள் பெண்ணைப் பெற்றவள்.. ஓர் பெண்ணாக கணவருடன் வாழ்ந்து பார்த்தவள்.. அனுபவப்பட்ட அவள் மனதிற்கு ஒன்று புரிந்தது..

https://t.me/tamilpdfebooks

13

பொய்யாகக் கூடக் காதல் சொல்ல மறுக்கும் அழகான ராட்சசி நீ....

"என் மகளை யாருன்னு நினைச்சீங்க.." என்ற சோமசுந்தரத்தின் கேள்விக்கு..

'என் பெண்டாட்டின்னு நினைச்சேன்..' என்று நினைத்துக் கொண்டான் நரேந்திரன்..

"ஒட்டுப் புல்லைப் போல உங்ககூட ஒட்டிக்கிட்டு வர என் மக என்ன ரோசம் இல்லாதவளா..?" சோமசுந்தரம் போர் முரசு கொட்ட ஆரம்பித்த போது..

"சுரேன் இங்கேயிருந்தே அம்மாவைத் தேடி அழ ஆரம்பிச்சுட்டானா..?" என்று பேச்சை மாற்றினாள் பூஞ்குழலி..

தந்தை போட்ட சண்டையினால் முகக் கடுப்புடன் முகம் திருப்பியிருந்த ஊர்மிளா தாயின் கேள்வியில் ஆவலுடன் நரேந்திரனின் முகம் பார்த்தாள்.. அவள் முகத்தில் தெரிந்த தாய்மையின் தவிப்பில்..

'ஏண்டி இப்படி துடிக்கிற..?' என்று மனம் நைந்தான் நரேந்திரன்..

'நீதான் என்னைத் தேடி வரலை.. நான் தான் வந்துட்டேனில்ல.. என்னைக் கண்டதும்.. என்னங்க..

https://t.me/tamilpdfebooks

நம்ம பிள்ளைக்கு உடம்புக்கு சரியிலைங்கன்னு சொல்லி அழுதிருந்தா அப்பவே நடந்தது எல்லாத்தையும் நான் மறந்திருப்பேனேடி.. நீ சொல்லி அழுகலையே.. நம்ம பிள்ளையோட ட்ரீட்மெண்டுக்கு என்ன செய்கிறதுன்னு என்கிட்டப் பதறலையே.. இந்த இக்கட்டான நிலைமையிலயும் என் நினைப்பு உனக்கு வரலையேடி..'

நரேந்திரன் பெருமூச்சுடன் பூங்குழலியின் கேள்விக்கான பதிலை சொல்ல ஆரம்பித்தான்..

"ஆமாம்.. அவன் இங்கேயிருந்தே அவனோட அம்மாவைத் தேடி அழ ஆரம்பிச்சுட்டான்.. அவன்கிட்ட என்ன சொல்ல முடியும்..? அவனோட அம்மா கூட வராம தஞ்சாவூரிலேயே நின்னுட்டான்னா சொல்ல முடியும்..?"

"அம்மா வேண்டாம்... என் பிள்ளையை வலுக்கட்டாயமாத் தூக்கிட்டுப் போயிட்டு என்மேல பழி போட வேண்டாம்ன்னு சொல்லுங்க.."

"வரனும்னு நினைச்சிருந்தா வந்திருக்கலாமே.. அத்தை.. வராம இங்கேயே நின்று விட்டவளை அப்படித்தானே சொல்லுவேன்.."

அதுநேரம் வரை 'அத்தை' என்ற உறவு முறையைச் சொல்லி அழைக்காதவன் பேச்சு வாக்கில் அதை அழைத்து விட்டதில் பூங்குழலியின் முகம் மென்மையானது.. சோமசுந்தரத்தின் முகம் பாறையானது..

'என் பெண்டாட்டி இவருக்கு அத்தை.. நான் மட்டும் யாரோவா..? மாமான்னு கூப்பிட மனசு வரலை.. திமிர் பணத்திமிர்...'

https://t.me/tamilpdfebooks

அவர் மனம் மருமகனைக் கரித்துக் கொட்டியது.. அதைக் கவனிக்கும் நிலைமையில் அவருடைய மருமகன் இல்லை.. அவன் அவருடைய மகளுடன் சொற்போரில் ஈடுபட்டிருந்தான்..

"என் மகன் எப்படியிருக்கான்னு மட்டும் சொல்லச் சொல்லுங்க அம்மா.. வேற கதை எனக்கு வேணாம்.."

ஊர்மிளாவின் பிடிவாதப் பேச்சில் சோமசுந்தரம் தன் மகளுக்கு மனதிற்குள் ஒரு 'சபாஷ்' போட்டுக் கொண்டான்.. அவரது பார்வை

'எப்புடி..' என்று மருமகனைக் கேட்க... அவன் பார்வையோ..

'பேசாம போயிருங்க... கொலைவெறியைக் கிளப்பாதீங்க..' என்று எச்சரித்தது..

'உனக்கு நான் வேணாமாடி..?' ஊர்மிளாவின் பக்கம் பார்வையைத் திருப்பினான் அவன்...

"எனக்கும் வேற கதை பேச இண்ட்ரெஸ்ட் இல்லை அத்தை.. அதுக்கான நேரமும் இல்லை.. என் மகனை டாக்டர் அமிர்தாவின் பொறுப்பில விட்டுட்டு வந்திருக்கேன்.. உடனடியா நான் திரும்பிப் போயாகனும்.." கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான்...

"அம்மா.." ஊர்மிளாவின் முகம் வெளுத்தது..

"சுரேன் என்னைத் தேடி அழறான்னா இவர் எப்படி அவனைச் சமாளிச்சாருன்னு கேளுங்கம்மா.."

"சமாளிக்க முடியலைதான் அத்தை.. அதுக்காக பிளைட்டை நாங்க மிஸ் பண்ணர முடியாது.. அதனால

https://t.me/tamilpdfebooks

அவங்கம்மாவைப் பார்க்கத்தான் போய்கிட்டு இருக்கோம்ன்னு டாக்டர் அமிர்தாகிட்டச் சொல்லச் சொன்னேன்.. அவங்களும் அப்படியே சொல்லி சமாளிச்சாங்க.. சென்னைக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போயிட்டோம்.. உடனடியா டெஸ்டுகள எடுத்த பரபரப்பில அவங்கம்மாவை மறந்திருந்தவன் டெஸ்டுகளை எடுத்து முடிச்சதும் தேடி அழுக ஆரம்பிச்சுட்டான்..”

“இவர் என்னம்மா செஞ்சார்..? ஸ்லீப்பிங் டேப்லெட்டைக் கொடுத்து அவனைத் தூங்க வைச்சாரா..?”

ஊர்மிளாவின் கண்ணீரில் அவளையே இமைக்காமல் பார்த்தான் நரேந்திரன்.. அவள் முகம் திருப்பிக் கொண்டாள்..

“என் மகளை ஏங்க முறைக்கறிங்க..?” சோமசுந்தரம் கொதித்தார்..

பூங்குழலி நிமிர்ந்து அவரை முறைத்தாள்.. கொதித்தவர் அடங்கி விட்டார்..

“எத்தனை நாளைக்கு அதைப் போல செய்ய முடியும் அத்தை..? மூன்று வயசுப் பையன்.. ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டு இருக்கான்.. அவனோட அம்மா அவன் பக்கத்தில இருக்க வேண்டியது அவசியமில்லையா..? இதை நான் கேட்கலை.. டாக்டர்ஸ் கேட்கிறாங்க...”

“அதானே பார்த்தேன்.. நீங்க கேட்க மாட்டிங்களேன்னு நினைச்சேன்.. நீங்களும் அதையே சொல்லிட்டிங்க..” என்று ஊடே பேசிய சோமசுந்தரம்.. ம்னைவியின் விழிகளில் தெரிந்த அதட்டுதலில் குழப்பமாகி பேச்சை நிறுத்தினார்..

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா யோசனையாக உட்கார்ந்திருந்தாள்.. நரேந்திரன் அதே தோரணையுடன் சாய்ந்து உட்கார்ந்தபடி மனைவியை கூர்மையாக பார்த்துக் கொண்டிருந்தான்.. அந்தப் பார்வையில்..

'இவன் இப்பத்தான் என் மகளை முதன் முதலா பெண் பார்க்க வந்திருக்கிறானா..?' என்று எரிச்சல் பட்டார் சோமசுந்தரம்..

அதை அவரது விழி உணர்த்த..

'அவர் பெண்டாட்டி.. அவர் பார்க்கிறார்.. அவர் எப்படிப் பார்த்தாலும் உங்களுக்கு என்ன வந்தது..?' என்று பூங்குழலி விழிகளால் உணர்த்தினாள்..

'இவ ஏன் அடக்கி வாசிக்கிறா..?' அவருக்கு ஒன்றும் புரியவில்லை..

'கல்லானாலும் கணவன்.. புல்லானாலும் புருசன்னு ஆரம்பிச்சுட்டாளா..?' தலைமுடியை பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது அவருக்கு..

ஒன்றை மட்டும் அவர் உணர்ந்தார்.. நரேந்திரன் அந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்கும் வரை அந்த வீட்டில் கவிந்திருந்த இருளும்.. சோகமும்.. துயரமும்.. அவன் வீட்டுக்குள் காலடி வைத்த பின்பு கொஞ்ச கொஞ்சமாக குறைந்து கொண்டிருந்ததை வியப்புடன் அவர் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது..

தளர்ந்து கிடந்த ஊர்மிளாவிடம் தெம்பு வந்திருந்தது.. அவளுடைய மகனுக்கு ட்ரீட்மெண்ட் ஆரம்பமாகி விட்டது.. பயப்பட ஏதுமில்லை என்ற

https://t.me/tamilpdfebooks

தகவலில் அவளுக்கு போன உயிர் திரும்பி வந்திருந்தது.. அவளை அவளுடைய மகன் தேடுகிறான் என்று நரேந்திரன் தேடி வந்து சொன்னதில் தாய்மைக்கே உரிய கர்வம் அவளிடம் உண்டாகியிருந்தது..

அவள் மகன் அவள் கையை விட்டு எங்கும் போக மாட்டான்.. அவளை மறக்க வைக்க யாராலும் முடியாது.. அவள் மகன் அவளைத் தேடுவான் என்பதில் ஊர்மிளாவுக்குள் உற்சாக சிறகு முளைத்திருந்தது..

அவள் முகத்தைத் துடைத்துக் கொண்டு தாயைப் பார்த்தாள்..

"இப்ப இவர் என்னதான் சொல்கிறார்ம்மா..?" என்று கேட்டாள்..

"இவள் என்கூட வந்தாகனும் அத்தை.. சுரேனோட ட்ரீட்மெண்டுக்கு இவ பக்கத்தில் இருக்கிறது அவசியம்.. இவளைத் தேடி குழந்தை அழுகிறது அவனோட ஹெல்த்தைப் பாதிக்கும்ன்னு டாக்டர்ஸ் சொல்கிறாங்க.. இவளைக் கூப்பிட்டுக்கிட்டு வரச் சொல்கிறாங்க.. அதுக்காகத்தான் நான் வந்திருக்கேன்.. கிளம்பச் சொல்லுங்க.." என்றான் நரேந்திரன்..

ஊர்மிளாவின் தோளை அசைத்து பூங்குழலி அவள் காதோரம் சுரேந்திரனின் பக்கத்தில் ஊர்மிளா இருக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்க.. அதிரடியாய் உள்ளே நுழைந்து.. நானும் வருவேன்.. இல்லையென்றால் ஆட்டத்தைக் கலைப்பேன் என்ற ரீதியில் பேச ஆரம்பித்தார் சோமசுந்தரம்..

https://t.me/tamilpdfebooks

"அதெல்லாம் உங்களை நம்பி என் மகளைத் தனியா அனுப்பி வைக்க முடியாதுங்க.." என்று அவர் பேசிய அட்டூழியத்தில்..

"பின்னே..? வேற யாரை நம்பி அனுப்பி வைப்பீங்க..?" என்று கேட்டு வைத்தான் நரேந்திரன்..

"கிண்டலா..?"

"ஆமாங்க.. நான் ரொம்ப சந்தோசமா இருக்கேன் பாருங்க.. அதான் பொழுது போகாம உங்ககூட கிண்டல் பண்ணி விளையாட வந்திருக்கேன்.. ஏங்க.. நீங்க வேற.. அங்கே என்மகன் உடம்பு சரியில்லாம ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டு இருக்கான்.. மூணு வயசுக் குழந்தை.. தாயைத் தேடி அழுகிறான்.. அவனை டாக்டர் அமிர்தாவின் பொறுப்பில விட்டுட்டு அவங்கம்மாவைக் கூப்பிட்டுக்கிட்டுப் போக வந்திருக்கேன்னு சொல்லிக் கிட்டு இருக்கேன்.. நீங்க என்னடான்னா என்னை நம்பி உங்க மகளை அனுப்பி வைக்க முடியாதுன்னு சொல்றீங்க.."

"பாருங்க.. என் மக தனியா உங்ககூட வரமாட்டா.."

"ஏன்..? என்கூட அவ தனியா வந்தா அவ புருசன் சந்தேகப்பட்டு அவளைக் கேள்வி கேட்பானா..?"

நரேந்திரன் வெகு அமைதியாக கேட்ட கேள்வியில் ஊர்மிளாவின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது.. பூங்குழலி.. நரேந்திரனுக்குத் தெரியாமல் சோமசுந்தரத்துக்குத் தெரியும்படி தலையில் அடித்துக் கொண்டாள்.. சோமசுந்தரம் அவன் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறிப் போனார்.

https://t.me/tamilpdfebooks

"ஒரு நிமிசம் உள்ளே வர்றீங்களா..?"

பொறுத்தது போதும் என்று பூங்குழலி கணவரை அழைத்து விட்டாள்.. அவர் மகளையும் நரேந்திரனையும் தனியாக விட்டு விட்டுப் போகிறோமே என்று அவனையும் அவளையும் மாறி மாறி பார்த்தார்..

"பயப்படாம போயிட்டு வாங்க.." என்று தைரியம் கொடுத்தான் நரேந்திரன்..

"உங்க மகளின் கையைப் பிடித்து நான் இழுத்து விட மாட்டேன்.. இவளோட புருசனுக்கு பதில் சொல்ல வேண்டிய சங்கடத்தை உங்களுக்கு உண்டாக்க மாட்டேன்.." என்ற உத்திரவாதத்தையும் சேர்த்துக் கொடுத்தான்..

ஊர்மிளா உதட்டைக் கடித்தபடி தலையைக் குனிந்து கொண்டாள்.. பூங்குழலி கணவரை முறைத்தாள்.. அவர் அவள் பின்னால் ஆட்டுக்குட்டியைப் போல தொடர்ந்து போய் விட்டார்..

தனித்து விடப்பட்ட நரேந்திரனும்.. ஊர்மிளாவும் வெகு நாள்களுக்குப் பின்பு அந்த தனிமை கிடைத்திருப்பதை நினைத்துப் பார்த்தார்கள்..

நரேந்திரன் வெளிநாட்டிற்கு கிளம்புவதற்கு முன்னால் அவர்களுக்குக் கிடைத்த தனிமை அது.. அப்போது ஊர்மிளா நரேந்திரனைப் பிரிந்திருக்கப் போகும் கவலையில் முகம் சுணங்கி இருந்தாள்.. அவனுடைய உடைகளை பெட்டியில் அடுக்கி வைத்தாள்.. அவனுக்கான அலுவலக ஃபைல்களையும் லேப் டாப்பையும் தனிப்

https://t.me/tamilpdfebooks

பெட்டியில் எடுத்து வைத்தாள்.. நல்ல சாப்பாடு சாப்பிட வேண்டும்.. வாரத்திற்கு ஒரு முறையாவது தலைக்கு குளிக்க வேண்டும்... அதிகமாக ஊர் சுற்றக் கூடாது.. இரவில் சீக்கிரமாக படுத்து உறங்கி விட வேண்டும் என்றெல்லாம் அறிவுரைகளை அள்ளி வழங்கிக் கொண்டிருந்தவளின் பின்னால் போய் நின்று இறுக்கிக் கொண்டு அவள் பின்னங் கழுத்தில் முத்தமிட்டான் நரேந்திரன்..

அவள் செல்லமாக சிணுங்கினாள்.. அவன் கைகள் அவளது இடுப்புப் பிரதேசத்தில் ஊர்ந்து முன்னேறி இறுக்கியது.. அவளின் கூந்தலை வாசம் பிடித்தவன்..

“நீயில்லாம தனியாப் படுத்தா எனக்குத் தூக்கம் வருமாடி..?” என்று கேட்டான்..

அவள் முகம் குங்குமமானது.. அவனது காதல் கரையுடைத்தது.. அவள் விலகுவதைப் போல நடித்தபடி அவனுக்கு ஒத்துழைத்தாள்.. அவனது தழுவல்களுக்கும்.. முத்தங்களுக்கும் அவளைக் கொடுத்தாள்.. சீக்கிரமாக வேலைகளை முடித்துக் கொண்டு திரும்பி விடவேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருந்தாள்.. அவளுடைய பிரிவாற்றாமை அவனது காதலை அதிகரித்து வைத்தது.. அவளது இதழோடு இதழ் பதித்தவனின் ஆவேச முத்தத்தில் அவள் நிலைகுழந்தாள்.. அவனது தலைமுடியைக் கோதி விட்டுக் கலைத்தபடி அவன் கழுத்தைச் சுற்றிக் கைகளால் வளைத்தாள்..

நரேந்திரனின் விரல்கள் அவள் மேல் படர்ந்து அவளது சேலையைப் புறக்கணிக்கத் தொடங்கின..

https://t.me/tamilpdfebooks

அவளைத் தொட்டுத் தழுவிக் கலக்கும் வேட்கை அவனுக்குள் பொங்கி எழுந்தது.. அவளைப் படுக்கையில் சரித்து அவள்மேல் படர்ந்தவனை அவள் மறுக்கவில்லை.. அவனைத் தவிர்க்க முடியாமல்.. தவிர்க்க விரும்பாமல்.. காதலுடன் அவன் கையில் சிக்கிக் கொண்டாள்..

ஊர்மிளாவின் உதடுகளில் படிந்த அவனது உதடுகள் இறங்கி ஊர்ந்த போது அவளது கண்கள் தாமாக மூடிக் கொண்டன.. அவனைத் தவிர்க்க முடியாத பலவீனத்தோடு அவனுடன் ஐக்கியப் பட்டுப் போனாள் அவள்..

பிரிந்திருக்கப் போகும் நாள்களை எண்ணி.. அவர்கள் இறுகிப் பிணைந்தார்கள்.. அவன் கேட்டதையெல்லாம் அவள் மறுக்காமல் கொடுத்தாள்.. அவளுடைய வசீகரத்தில் அவன் கரைந்து கொண்டிருந்தான்..

நரேந்திரனின் கண்களில் தெரிந்த ஆசையான அழைப்பில் ஊர்மிளா கொண்ட வெட்கத்தை இன்று நினைத்துப் பார்த்தவனுக்கு .'அவளா இவள்..?' என்ற ஆற்றாமை எழுந்தது..

அவள் காதோரம் அன்று அவன் கிசுகிசுப்பாக விடுத்த ரகசிய வேண்டுகேளுக்கு முகம் சிவந்து சிணுங்கினாலும் அவன் சொன்னதைச் செய்ய அவள் மறுக்கவில்லையே.. அவளுடைய ஒப்புக் கொடுத்தலில் அவன் உற்சாகமாகி அவளைக் கலைத்துக் களைத்ததை இன்றளவும் அவன் மறக்கவில்லையே..

அன்று கலந்த அந்தக் கலவியின் நினைவில் அவன் அடுத்து வந்த நாள்களில் தூக்கத்தைத் தொலைத்தான்..

https://t.me/tamilpdfebooks

பகல் முழுவதும் வேலை.. வேலையென்று ஓடுபவன்.. இரவில் அவளிடம் பேச விரும்பி போன் பண்ணினால் அந்த போனை அகல்யா எடுத்துப் பேசுவாள்..

“என்ன நரேன்..? எப்படிப்பா இருக்கிற..? ஊர்மிளாவா இப்பத்தானே இங்கேயிருந்தா..? எங்கே போனான்னு தெரியலையே.. செல்போனை வேற வீட்டில தூக்கிப் போட்டுட்டு போயிருக்கா.. இங்கே பகல்ன்னாலும் நீ போயிருக்கிற இடத்தில நைட்டாகியிருக்குமே நரேன்.. கொஞ்சமாவது நீ போன் பண்ணுவன்னு அவ நினைத்துப் பார்க்க வேண்டாமா..? உன்கிட்டச் சொல்ல யோசனையாய் இருக்கு நரேன்.. அவ என் சொல் பேச்சைக் கேட்கிறதில்ல.. அடிக்கடி வெளியே போயிடறா.. எங்கே போறா.. எப்ப வர்றான்னு எதுவும் தெரிய மாட்டேங்குது..”

இதே ரீதியான பேச்சுக்களைத்தான் அகல்யா திரும்பத்திரும்பப் பேசினாள்.. ஒருநாள் கூட ஊர்மிளா அவன் போனை எடுத்துப் பேசவே இல்லை.. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தவன் ஒருநாள் லேண்ட் லைனுக்குப் போன் பண்ணினான்.. அர்ச்சனாதான் எடுத்தாள்.. ஹாய் அண்ணா என்றவள்.. அவன் ஊர்மிளாவைப் பற்றிக் கேட்கவும்..

“அண்ணிதானே.. ஹாலில் யாரோ அவங்க பிரண்டு வந்திருக்காங்கன்னு அவங்க கூடப் பேசிக்கிட்டு இருக்காங்க.. இருங்க கூப்பிடறேன்..” என்று சொல்லி விட்டுப் போனாள்..

நரேந்திரன் காத்திருந்தான்.. சற்று நேரத்தில் போனை எடுத்தது ஊர்மிளா அல்ல.. அகல்யா..!

https://t.me/tamilpdfebooks

"சொல்கிறதுக்கே சங்கடமா இருக்கு நரேன்.. ஊர்மிளாகூடப் படிச்சவனாம்.. ராதாகிருஷ்ணன்னு பெயராம்.. அந்தக் கிருஷ்ணனைப் போலவே சிரிச்சுச் சிரிச்சுப் பேசறான்.. இவளும் ராதா.. ராதான்னு அவன்கூட குழையறா.. வீட்டில அர்ச்சனாவும் இருக்காங்கிற நினைப்பு வேணாமா.. உன் போன் வந்திருக்குன்னு அர்ச்சனா வந்து சொன்னா.. அவருக்கு வேற வேலை இல்லை.. அப்புறமா பேசறேன்னு சொல்லுன்னு சொல்லிட்டாப்பா..?" என்று வருத்தத்துடன் பேசினாள்..

'ஊர்மிளாவா அப்படிச் சொன்னாள்..?' நரேந்திரனால் நம்பமுடியவில்லை..

14

உன் மடிமீது இளைப்பாற அனுமதி வழங்காத அழகான ராட்சசி நீ....

அகல்யா சொன்னதை அவன் நம்பவில்லை.. அடுத்த நாள் அவன் போன் செய்த போது போன் எங்கேஜ்டாக இருந்தது.. மறுமுறை அவன் முயற்சித்த போது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக ஊர்மிளாவே அவனிடம் பேசினாள்..

"ஸாரிங்க.. ராதாகிட்ட பேசிக்கிட்டு இருந்தேன்.." என்றாள்..

"ராதான்னா..?" அவன் இழுத்தான்..

https://t.me/tamilpdfebooks

"ராதா.. என் பிரண்ட்.. நேத்து சாயந்திரம் கூட நீங்க போன் பண்ணினப்ப பேசிக்கிட்டு இருந்தேனே.. அர்ச்சனா வந்து சொன்னதும் நான் வரனும்னு நினைச்சேன்.." ஊர்மிளா விளக்கம் சொல்லியபோது அவன் முகம் கடினமானது..

"ஏன் வரலை..?" அதே கடினத்தோடு வினவினான்..

"அது வந்துங்க.." ஊர்மிளா சொல்லத் தயங்கினாள்..

அதற்குள் போன் கட்டாகி விட்டது.. திரும்பவும் போன் செய்தபோது எடுத்துப் பேசியது அகல்யா..

"யார்..? நரேனா..? நீயாப்பா இப்ப ஊர்மிளாகூடப் பேசிக்கிட்டு இருந்த..?" என்று ஆச்சரியமாகக் கேட்டாள்..

"நான்தான்ம்மா.." என்றான் நரேந்திரன்..

"அந்த ராதாகிருஷ்ணன் வந்திருக்கான்ப்பா.. அவனைக் கண்டதும் கையில இருக்கிற செல்போனை விட்டெறிஞ்சுட்டு ஓடிப் போயிட்டாப்பா உன் பெண்டாட்டி.. ராதா.. ராதான்னு ஒரே குழாவல்தான்.. வீட்டு வேலையாள்கள் முன்னாடி நம்ம குடும்ப கௌரவம் காற்றில் பறக்குதுப்பா.." அகல்யா மூக்கை உறிஞ்சினாள்..

"என்ன பெயரைச் சொன்னீங்க..? ராதாவா..?"

"ஆமாம்பா.. அவனோட முழுப்பெயர் ராதாக் கிருஷ்ணன்.. இவசெல்லமா அவனை ராதா.. ராதான்னு கூப்பிடறா.. அப்படித்தான் அவனை இவ கூப்பிடுவாளாம்.. அருண் முகத்தைச் சுளிக்கிறான் நரேன்.. அர்ச்சனாவை வீட்டில வைச்சுக்கிட்டு கண்ட கண்ட தடிப்பசங்களை வீட்டுக்குள் ஏன் அலோவ் பண்றீங்கன்னு என்கிட்ட சத்தம்

https://t.me/tamilpdfebooks

போடறான்ப்பா.. என்னால என்ன செய்ய முடியும்..? நீ ஊரில் இல்லாதப்ப உன் பெண்டாட்டியை நான் கடிஞ்சு பேச முடியுமா..? அதுவும் மத்த விசயமா இருந்தாப் பரவாயில்லை.. இந்த விசயத்தில நான் எடுத்தேன்.. கவிழ்த்தேன்னு எதையும் பேசி வைச்சிரக் கூடாதுப்பா.."

நரேந்திரன் யோசனையுடன் மௌனம் சாதித்தான்.. அகல்யாவின் குரல் கம்மியது..

"பாவம்.. பாரினில் இருக்கிற புள்ள நீ.. உடனேயும் பறந்து வந்திர முடியாது.. இப்படியாப்பட்ட விசயங்களைக் கேட்டா உன் மனசு என்ன பாடுபடும்ன்னு எனக்கும் புரியுது.. ஆனா நான் என்னப்பா செய்யட்டும்.. சொல்லாம மறைக்கக் கூடிய விசயமா இது..? சொல்லவே கஷ்டமாயிருக்கு நரேன்.. உன் பெண்டாட்டி அந்த ராதாகூட ஊரைச் சுத்தறாப்பா.."

"வாட்..?"

"ஆமாம் நரேன்.. அந்த ராதாகிருஷ்ணன் அவங்க சொந்தக்காரங்க வீட்டிலே தங்கியிருக்கானாம்.. இவளைப் பார்க்கன்னே பெங்களூர் வந்தானாம்.. யு.எஸ்.ஏவில வேலை பார்க்கிறானாம்.. நீயும் வந்தா கூப்பிட்டுக்கிட்டுப் போயிருவேன்.. வர்றியா.. நாம ஓடிப் போகலாம்ன்னு என் முன்னாடியே கேட்கிறான்.."

"அம்மா...!"

"நானும் இப்படித்தான் பதறினேன் நரேன்.. உன் பெண்டாட்டி பதட்டப்படாம அவன் பேச்சுக்கு சிரிக்கிறா.. இதெல்லாம் போதாதுன்னு அவனை நம்ம வீட்டிலேயே

https://t.me/tamilpdfebooks

தங்கச் சொல்றா.. என்வீடு இங்கே இருக்கிறப்ப நீ உன் சொந்தக்காரங்க வீட்டிலே தங்கலாமா ராதான்னு கேக்கிறாப்பா.. நல்லவேளை.. அவன் மாட்டேன்னு சொல்லிட்டான்.. இங்கே தங்கினா அவனுக்கு பிரைவஸி கிடைக்காதாம்.. அதுவும் உண்மைதானே.. உன் பெண்டாட்டிதான் பொழுது விடிஞ்சவுடனே அவனைத் தேடிப் போயிடறாளே.. இங்க எங்க முன்னாலே ஓரளவுக்குத்தானே பேச முடியும்..? பிரைவஸி கிடைக்காது தான்.."

நரேந்திரனால் அதற்கு மேல் அந்தப் பேச்சைக் கேட்க முடியவில்லை.. அவன் பல்லைக்கடித்தபடி முகம் சுளித்தான்..

"போதும்மா.. இனிமே இதைப்பத்த எதையும் நீங்க பேச வேணாம்.."

"நரேன்.."

"நான் வந்து அவளை விசாரிச்சுக்கறேன்.. அதுவரை அவளிடம் இதைப்பற்றி எந்தக் கேள்வியையும் நீங்க கேட்கக் கூடாது.."

அகல்யாவின் வாயை அவன்தான் கட்டிப் போட்டான்.. அவள் சொன்னாள் என்பதற்காக கடுகளவும் ஊர்மிளாவின்மீது அவன் சந்தேகப் படவில்லை.. ஆனால் அகல்யா சொன்னது எல்லாம் அவன் வீட்டில் நடந்ததாக இருக்கிறதே.. அவனுடைய மனைவியைப் பற்றி வேலையாள்கள் தவறாக நினைக்கும் வாய்ப்பு உருவாகி இருக்கிறதே.. அதனால்தான் அவன் அனைவரின் முன்னாலும் அவளை நிறுத்திவைத்து அந்தக் கேள்வியைக் கேட்டான்..

https://t.me/tamilpdfebooks

அதில் விதிர்த்துப் போய் அவனை அவள் பார்த்த பார்வையை இன்றுவரை அவன் மறக்கவில்லை.. ஆயுளுக்கும் அவனால் அதை மறக்க முடியாது..

'யு டூ புருட்டஸ்..?' என்ற கேள்வியைக் கேட்டபடி புருடஸை சீசர் பார்த்த பார்வையை அன்று ஊர்மிளா பார்த்தாள்..

'வராய்.. நீ வாராய்..' என்று காதல் பாட்டுப் பாடியபடி மனைவியை உல்லாசப் பயணமாக மலையுச்சிக்கு அழைத்துக் கொண்டு போன கணவன் மனைவியை மலையுச்சியில் இருந்து தள்ளி விட்டுக் கொல்ல முனையும் போது..

'நீயா இதைச் செய்வது..?' என்ற அதிர்ச்சியுடன் அந்த மனைவி பார்த்த பார்வையை ஊர்மிளா அன்று பார்த்தாள்..

அவனைப் பார்த்தபடி பின்னால் நகர்ந்தவள் ஒரே ஓட்டமாக மாடிக்கு ஓடி விட்டாள்.. அவன் கேள்விக்கு பதிலைச் சொல்லவே இல்லை.. நரேந்திரன் அசையாமல் நின்றபோது பெட்டியுடன் மாடியிலிருந்து திரும்பி வந்தவள் அவன் கண்முன்னாலேயே அவன் வீட்டை விட்டு வெளியேறி விட்டாள்..

நரேந்திரனின் கால்களில் தளை விழுந்தது.. அத்தனை பேரின் முன்னிலையிலும் அவன் கேட்ட கேள்விக்குப் பதில் கிடைக்காத போது அவளைத் தேடிப் போய் அழைத்துவர அவனுக்கு சாத்தியப் படாமல் போய் விட்டது..

https://t.me/tamilpdfebooks

விளையாட்டுப் போல மூன்று வருடங்கள் உருண்டோடின.. நான்காவது வருடத்தில்தான் அவனது மகனைப் பற்றிய செய்தியை அறிவித்து டாக்டர் அமிர்தா அவனை தஞ்சாவூருக்கு பறந்து வர வைத்திருந்தாள்..

'இல்லைன்னா..?'

நரேந்திரன் பெருமூச்சுடன் தூசி படிந்த ஓவியம் போல.. கலைந்த தலையும்.. கசங்கிய சேலையும்.. களைத்த முகமுமாக எதிரே இருந்த ஊர்மிளாவைப் பார்த்தான்.. அந்த நிலையிலும் அவள் அழகோவியமாக இருந்தாள்.. அவளிடம் சுடர் விட்டு பிரகாசித்த அந்த அதீத அழகில் அவன் மனம் மயங்கினான்..

'இவளை பார்க்க முடியாமலே போயிருக்குமா..? என் மகனைப் பற்றி என்னிடம் சொல்லாமலே வாழ்ந்து முடிச்சிருப்பாளா..?'

அவளது அந்த வைராக்கியத்தில் அவன் மனம் கொதித்தது.. அவனுக்குச் சொந்தமான அவளும்.. அவனுடைய மகனும் எட்டாக்கனியாய் விலகி நின்றதில் அவன் கோபம் கொண்டான்..

ஊர்மிளா அவனை நிமிர்ந்து பார்க்கவேயில்லை.. அந்த ஹாலில் அவள் மட்டும் தனியே இருப்பதைப் போல எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தாள்.. அவளின் அந்தப் புறக்கணிப்பில் நரேந்திரன் பல்லைக் கடித்தான்..

'திமிர்.. உடம்பெல்லாம் திமிர்.. கட்டின புருசன்தானே முன்னால் நிற்கிறேன்.. எவனோ ஒருத்தன் முன்னாலே நிற்கிறதைப் போல எங்கேயோ பார்த்துக்கிட்டு இருக்கா..

https://t.me/tamilpdfebooks

ஏன்..? என்முகத்தைப் பார்த்தா இவ குறைஞ்சு போயிருவாளா..? ராட்சசி..! அழகான ராட்சசி..!' அவன் கண்கள் சிவந்தன..

அந்த அழகான ராட்சசி.. அவனைக் காலையில் சந்திக்க நேர்ந்தது முதல் இந்த நேரம் வரை அவன் முகத்தை ஏறெடுத்தும் பார்க்கவில்லையென்ற உண்மை அவனுக்கு உறைத்தது...

அவள் அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்.. தவிர்க்க முடியாமல் பார்த்த நேரங்களில் நொடிப் பொழுதில் பார்வையை விலக்கிக் கொண்டாள்.. இமைகள் படபடக்க அவள் முகம் கடுத்த அந்தத் தருணங்களில் அவள் கன்னங்களில் நான்கு அப்பு.. அப்பினால் என்ன என்ற ஆவேசம் அவனுக்குள் கிளர்ந்தது...

ஊர்மிளா எங்கோ பார்த்தபடி இருந்தாள்.. நரேந்திரன் அவளைப் பார்த்தபடி இருந்தான்.. அவன் பார்வையை உணர்ந்த சாயல் அவள் முகத்தில் துளிக்கூட தென்படாததில் அவனது ஆத்திரம் அதிகமானது.. இருந்தும் அவளைத் தனித்து அமர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதில் அவன் மனதில் இதம் உண்டானது..

ரகசிய ஆலோசனை மேற்கொள்ளப் போயிருந்த மாமனாரும் மாமியாரும்... தாமதமாக வந்தால் தேவலையென்று அவன் நினைத்துக் கொண்டான்.. அவனுக்கு அந்த இதம் தேவையாக இருந்தது.. அந்த அழகான ராட்சசியினால் புண்பட்டிருக்கும் அவன் இதயத்திற்கு ஒத்தடம் கொடுக்க அந்த இதம் அவனுக்குத் தேவைப்பட்டது..

https://t.me/tamilpdfebooks

நீண்ட மணித்துளிகள் அந்த இதத்தை அவனுக்கு வாரி வழங்கிக் கொண்டிருந்த போது சோமசுந்தரமும்.. பூங்குழலியும் உள்ளே வழக்கடித்துக் கொண்டிருந்தார்கள்..

“அறிவோடதான் பேசறிங்களா..?” கணவரிடம் சீறிக் கொண்டிருந்தாள் பூங்குழலி..

அவள் கேள்வியில் அவருக்கு ஆச்சரியமாகி விட்டது.. அதுநாள் வரை அவரை ‘அறிவு ஜீவி’யென்று ஆராதித்துக் கொண்டிருப்பவள் பூங்குழலி.. அவர் எதைச் சொன்னாலும் வெகு பவ்யமாக..

“உங்களுக்குத் தெரியாததுன்னு ஒன்னு இந்த உலகத்தில இருக்குமா..?” என்று கேட்டு வைப்பவள்..

அப்படிப்பட்ட மனைவி இன்று அவரைப் பார்த்து அறிவுடன்தான் அவர் பேசுகிறாரா என்று கேட்கிறாள்.. இதை அவர் எங்கே போய் சொல்லுவார்..?

“இப்ப என் அறிவில என்ன குறையைக் கண்ட பூங்குழலி..?”

“நம்ம மகளை கூப்பிட்டுக்கிட்டுப் போக வந்திருக்கிறது அவளோட புருசன்.. அவரே சொன்னதைப் போல எவனோ தெருவில் போகிறவன் வந்து கூப்பிடலை.. அவர்கூட அவர் பெண்டாட்டியை தனியா அனுப்பி வைக்க மாட்டிங்களா..?”

“என்னடி பேசற..? அவர் நம்ம மகளை பண்ணின கொடுமையை நீ மறந்துட்டியா..? காலையிலே கூட ஹாஸ்பிடலில அவ கழுத்தை நெறிச்சுக் கொல்லப் பார்த்தாரேடி..”

https://t.me/tamilpdfebooks

"கொல்லத்தான் பார்த்தார்.. கொல்லலை.. புருசன் பெண்டாட்டி சண்டையும்.. சின்னக் குழந்தைகளின் சண்டையும் ஒன்னு.. ஒரு நிமிசம் அடிச்சுக்குவாங்க.. மறு நிமிசம் கூடிக்குவாங்க.. பெத்தவங்களா இருந்தாலும்.. நாம ஊடே போகக் கூடாதுங்க..."

"அது மத்த சண்டைகளுக்கு பூங்குழலி.. அவர் என்ன கேள்வியைக் கேட்டு நம்ம மகளைத் துரத்தி விட்டாருங்கிறதை நீ மறந்துட்டியா பூங்குழலி.. என் மக நடைபிணமா நம்மகிட்ட வந்து சேர்ந்தாளே.. அப்பான்னு என் காலடியில விழுந்தாளே.. அந்த நாளை நினைச்சுப் பார்த்தா என் நெஞ்சம் இன்னைக்கும் பதறுது.."

அந்த நாளின் நினைவில் பூங்குழலியும் தேம்பினாலும் முகத்தை துடைத்துக் கொண்டு உறுதியுடன் பேசினாள்..

"எது நடந்திருந்தாலும் அது அவர்களுக்குள்ள நடக்கிற போராட்டம்.. இப்ப அவளை அவ புருசன்கூட அனுப்பி வைப்போம்.."

"எப்படி பூங்குழலி.. எப்படி அவளை அனுப்பி வைக்கச் சொல்லற..? நடந்த அநியாயத்துக்கு காரணம் கேட்காம.. அதுக்கு நியாயம் கிடைக்காம நம்ம பொண்ண அவர்கூட அனுப்பி வைச்சா அவளுக்கு மரியாதையாய் இருக்குமா..?"

"தெரியலைங்க.." பூங்குழலி தேம்பினாள்..

"எனக்குத் தெரிந்ததெல்லாம் இப்ப என் மக இருக்கிற நிலைமைதான்.. இவ பிள்ளைக்கு அவர்தானே தகப்பன்..!

https://t.me/tamilpdfebooks

அவர் பிள்ளையைத் தூக்கிக்கிட்டுப் போயிட்டார்.. இவ பிடுங்கிப் போட்ட கொடியா பிள்ளையோட நினைப்பில தவியாய் தவிக்கிறா.. அங்கே பிள்ளை தாயைத் தேடி அழுதுகிட்டு இருக்கான்.. இப்ப தாயும் பிள்ளையும் ஒன்னு சேரனும்னா நாம இவளை இவ புருசன் கூட அனுப்பி வைத்துத்தான் ஆகனும்.."

"நான் மாட்டேன்னு சொல்லலையே.. தனியா அனுப்பி வைக்க மாட்டேன்.. நானும் கூடப் போறேன்னு தானே சொல்றேன்.."

"வேண்டாம்.." என்றாள் பூங்குழலி..

"குழலி.."

"சரியோ.. தப்போ.. பிரச்னை அவங்க இரண்டு பேருக்குள்ள ஏற்பட்டிருக்கு.. அதைப் பேசித் தீர்த்துக்க அவங்களுக்கு இந்த நாலு வருசமா சந்தர்ப்பம் கிடைக்கலை.. இப்ப அதுக்கான சந்தர்ப்பம் அமையலாமில்ல.. அதுக்கான தனிமையை அவங்களுக்குக் கொடுத்து நாம விலகி நிக்கலாம்.."

"செய்யலாம்டி.. உனக்கு முதலிலே நானும் இதே யோசனையைத்தான் சொல்லியிருப்பேன்.. எப்பத் தெரியுமா..? நடந்த பிரச்னை அவங்க இரண்டு பேருக்கும் மத்தியிலே மட்டும் நடந்திருந்தா.. அப்படியில்லையே குழலி.. இந்த மனுசன் அந்தக் கேள்வியை வீட்டையே கூடி நிக்க வைச்சு.. அவங்க முன்னாலே இல்ல கேட்டு வைச்சிருக்கார்..? தனியாக் கேட்டிருந்தா நம்ம மக இவரைப் பிரிஞ்சே வந்திருக்க மாட்டாளேடி.."

https://t.me/tamilpdfebooks

"இதையெல்லாம் நீங்க எனக்குச் சொல்லனுமா..? நடந்ததை நினைச்சா என் மனசு பதறுதே.. பொம்பளையா பிறந்தா சுயமரியாதையை விட்டுக் கொடுக்கனும்னு எந்தப் புராணத்திலயும் சொல்லலைங்க.. இப்பத்தான் இப்படிப் பேசறாங்க.. ஆம்பளைக அப்படி இப்படித்தான் இருப்பாங்க.. பொம்பளைகதான் பொறுத்துப் போகனும்னு இந்த மாடர்ன் காலத்திலதான் வன்கொடுமையா நியாயம் பேசறாங்க.. புராண காலத்தில அப்படியில்லைங்க.. தட்சனோட யாகத்தில கலந்துக்க தாட்சாயிணி சிவபெருமான் பேச்சை மீறிப் போகலையா..? கண்ட பெண்களிடம் சகவாசம் வைச்சுக்கிட்ட புருசனை என்னைத் தொடாதேன்னு சொல்லி திருநீலகண்டரின் பெண்டாட்டி அவரைத் தள்ளி வைக்கலையா..? அதுக்கப்புறம்தான் இதிகாசங்கள்ன்னு கொண்டு வந்தாங்க.. ராமன் சீதையை காட்டுக்கு அனுப்பினார்ன்னாங்க.. திரௌபதிக்கு ஐந்து புருசன்கள்ன்னு சொன்னாங்க.. அவளை வைச்சு சூதாட அந்த ஐந்து புருசன்களில் ஒருத்தனுக்கு உரிமையிருக்குன்னு சொல்லி.. பெண்ணை மனுசப் பிறவியா நினைக்காம உடமைப் பொருளா சொல்லி வைச்சாங்க.. அதுக்கப்புறம்தான் காலம் தலைகீழா மாறிப் போச்சு.. ஊர்மிளாவுக்கு நடந்தது அநியாயம்தான்.. அதை அவ மறக்கனும்.. அவ புருசன்கூட ஒற்றுமையாப் போகனும்னு நான் சொல்லலை.. இரண்டு பேருக்கும் பொதுவா பிள்ளை இருக்கான்.. அப்பாவும்.. அம்மாவும் பெத்த பிள்ளைக்காக வழக்கடிச்சுக்கிட்டு இருந்தா அந்த பிள்ளையின் கதி என்னாகும்..?"

https://t.me/tamilpdfebooks

சோமசுந்தரத்தின் நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்தன.. மனைவி சொல்வதைப் பற்றி அவர் யோசிக்க ஆரம்பித்தார்..

“ஊர்மியைப் பற்றி நமக்குத் தெரியும்.. யாருக்காகவும் அவ சுயமரியாதையை விட்டுக் கொடுக்க மாட்டா.. கோடிஸ்வரர்தான் அவளோட புருசன்.. பிள்ளைக்கு உடம்பு சரியில்லைன்னதும் புருசனுக்குத் தகவல் கொடுத்திருக்கலாம்.. அவர் உலகத்தில இருக்கிற அத்தனை ஸ்பெசலிஸ்டையும் வரவைச்சு வைத்தியம் பார்ப்பாருன்னு அவளுக்கு நல்லாவே தெரியும்.. இருந்தும் அவ அதைச் செய்யலை.. இருக்கிற நகையெல்லாம் வித்து எடுத்துக்கிட்டு ஆஸ்பிடலுக்கு ஓடினா.. அப்பேற்பட்டவ இப்ப மட்டும் அவளோட சுயமரியாதையை விட்டுக் கொடுத்திருவாளா..?”

“உண்மைதான் குழலி...”

“பேசட்டும்.. இந்தப் போராட்டத்துக் ஏதாவது தீர்வு கிடைச்சா நமக்கும் சந்தோசம்தானே..? சுரேன் பெத்தவங்க கூட இருக்கனும்.. அதுக்கு என்ன வழிங்கிறதை ஊர்மியும் அவ புருசனும் பேசி ஒரு முடிவுக்கு வரட்டும்.. நாம இப்ப தள்ளி நிப்போம்.. அதுதான் சுரேந்திரனுக்கு நாம செய்கிற கடமை.. நம்ம பேரனோட வாழ்க்கை நமக்கு முக்கியம்ங்க.. சுரேன் மேல ஊர்மியோட புருசனுக்கும் உரிமையிருக்கு.. இத்தனை நாளா அவர் மகனைப் பத்தித் தெரியாததினால விலகி இருந்தார்.. தெரிஞ்ச பின்னால அவர் மகனை விட்டுக் கொடுத்திருவாரா..?”

https://t.me/tamilpdfebooks

பூங்குழலி பேசினாள்.. கண் முன்னால் இருந்த நிலைமையை தெளிவாக எடுத்துரைத்தாள்.. சோமசுந்தரத்தின் மனதைக் கரைத்தாள்..

15

ஓர் சிரிப்பில் எனைவென்ற..
அழகான ராட்சசி நீ....

"சுரேன் ரெண்டு பேருக்கும் பொதுவா இருக்கான்.. ஊர்மிளா பிள்ளையை விட்டுட்டு இருக்க மாட்டா.. அவ புருசன் பிள்ளையை விட்டுக் கொடுக்க மாட்டார்.. இதுக்கு என்ன வழி...?"

சோமசுந்தரம் மனைவியை பார்த்தார்.. அமைதியாக பூஜை உண்டு.. புராணம் உண்டு.. வீடு உண்டு.. கோவில் உண்டு.. குடும்பம் உண்டு என்று இருக்கும் பூங்குழலிக்குள் இருக்கும் ஆழ்ந்த அனுபவ அறிவு அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது...

அவர் கோபத்தின் இருப்பிடம்.. மகளுக்கு நடந்த அவமரியாதை அவரை மருமகனை எதிரியாக நினைக்கச் செய்திருந்தது.. மகள் வயிற்றுப் பேரன் மருமகனுக்கும் சொந்தம் என்பதையே அவர் மறந்து போயிருந்தார்.. அதை உணர்த்தி.. ஊர்மிளாவை நரேந்திரனுடன் அனுப்பி வைப்பதே சாலச் சிறந்தது என்று அவருக்கே பாடம் சொல்லிக் கொடுத்து விட்டாள் பூங்குழலி..

https://t.me/tamilpdfebooks

"இது குடும்பங்க.. இங்கே கொள்கை பேச முடியாது.. கொடி பிடிக்க முடியாது.. உணர்வுகளால் உருவான பந்தத்திற்கு உணர்வுகளால்தான் வேலி போட முடியும்.. ஊர்மிளா அவ புருசன் கூடக் கிளம்பிப் போகட்டும்.. அது ஒன்னுதான் இப்ப நம்ம முன்னால இருக்கிற ஒரே வழி..! வேற வழியில்ல.. அங்கே நம்ம பேரனுக்கு ட்ரீட்மெண்ட் நடந்துக்கிட்டு இருக்கு.. பிள்ளை தாயைத் தேடறான்.. நம்ம மகளோ அவ மகனைப் பிரிஞ்சிருக்க முடியாம புழுவாத் துடிக்கிறா.. அவ வேதனையை கண் கொண்டு பாக்க முடிஞ்சதா..?"

"இல்லைதான் குழலி.."

"அவ போகத்தான் வேணும்.. போகட்டும்.. நீங்க கூடப் போனா பிரச்னை தீராது.. இன்னும் பெரிசாகும்.. அவங்களுக்கான இந்தப் பிரச்னைக்கு அவங்களே ஒரு வழியைத் தேடட்டும்.. நாம விலகி நிப்போம்.."

"நீ சொல்றதும் சரிதான்.."

அவர்கள் அறையை விட்டு வெளியே வந்தார்கள்.. நரேந்திரன் இருந்த திசைக்கு எதிர்திசையைப் பார்த்தபடி அவனுக்கு முதுகு காட்டி நின்றிருந்தாள் ஊர்மிளா.. இரு வேறு துருவங்களையும் இணைக்கும் பாலமாய் சுரேந்திரன் இருப்பதை உணர்ந்தவராக அந்த வேறுபட்ட மனநிலையைக் கொண்ட தம்பதியிடமிருந்து தள்ளி நிற்கும் முடிவை எடுத்தார் சோமசுந்தரம்..

"ஊர்மி.. நீ கிளம்பு..."

"எங்கேப்பா.."

https://t.me/tamilpdfebooks

"சென்னைக்குத்தான்ம்மா.. அங்கே சுரேன் உன்னைத் தேடிக்கிட்டு இருக்கானே.."

"நீங்களும் வருவீங்கதானேப்பா..?"

ஊர்மிளா அந்தக் கேள்வியில் அவள் மனதை உணர்த்தி விட்டாள்.. நரேந்திரனுடன் தனியாக கிளம்பிச் சொல்ல அவளுக்குச் சம்மதமில்லையென்பதை அந்தக் கேள்வி அறிவித்ததில் நரேந்திரனின் முகம் சுருங்கியது.. பூங்குழலி சோமசுந்தரத்திடம் மறுப்பாக தலையை அசைத்தாள்..

"இல்லைம்மா.. நாங்க வரலை.. நீ மட்டும்தான் கிளம்பிப் போகப் போற.." என்றார் சோமசுந்தரம்..

"ஏன்ப்பா..?" அதிர்ச்சியுடன் கேட்டாள் ஊர்மிளா..

எந்த நிலைமையில் அவள் நரேந்திரனை விட்டுப் பிரிந்து வந்தாள் என்பதை அவளுடைய அப்பா மறந்து விட்டாரா என்றக் குற்றச்சாட்டு அவள் விழிகளில் தெரிந்தது.. சோமசுந்தரத்தின் மனம் வலித்தது..

'மன்னித்து விடு மகளே..' மனதில் சொல்லிக் கொண்டார்..

'உன் கேள்வி புரியுதும்மா.. ஆனா.. விடைசொல்ல முடியாத நிறைய கேள்விகள் நம் கண் முன்னாலே நிக்குதேம்மா.. அதுக்கு விடை தேடனும்னா நம்ம ஆயுசே முடிஞ்சு போயிரும் ஊர்மிளா.. உனக்கும் உன் புருசனுக்கும் பொது உடைமையா உன் மகன் இருக்கான்.. அவனை நீயும்.. உன் புருசனும்.. தனித்தனியா பிரிஞ்சு நின்னு தனி

https://t.me/tamilpdfebooks

உடமையா ஆக்கிக்க முடியாது.. இதுக்கு என்ன வழி..? அதை சம்பந்தப்பட்ட நீங்க ரெண்டு பேரும்தான் பேசி முடிவு பண்ணனும்.. நான் உன்கூட வந்தா நீ பேச மாட்ட.. நான் இதைப்பத்திப் பேசினா நல்லாயிருக்காது.. நீ பேசுவது போல வராது மகளே.. போய் வா.. உனக்கு எல்லாம் புரியும்..'

"நம்ம ஊரு ஹாஸ்பிடலா இருந்தா அமிர்தா இருக்கா.. நாம எல்லோரும் சுரேன்கூட இருக்கலாம்ன்னு நினைக்கலாம்.. அது சென்னைம்மா.. அங்கே சுரேன்கூட அவனோட பேரண்ட்ஸ் மட்டும்தான் இருக்க முடியும்.. மத்தவங்க கூட்டம் போட முடியாதும்மா.."

"அதுக்காக என்னைத் தனியா போகச் சொல்வீங்களாப்பா..?"

ஊர்மிளாவின் பதட்டத்தில் நரேந்திரனுக்கு கொலைவெறிவந்தது..

'எவன்டி உனக்குத் தாலிகட்டினது..?' என்று கேட்கலாம் என்றுதான் நினைத்தான்.. கேட்க வாயையும் திறந்து விட்டான்..

ஆனால் பூங்குழலியின் கெஞ்சுதலான முகம்.. அவனை பேசவிடாமல் தடுத்து விட்டது..

"நீ தனியாப் போகலையேம்மா.. சுரேந்திரனோட அப்பா கூடத்தானே போகிற..?" என்றார் சோமசுந்தரம்..

அதற்கு மேலும் அந்த உரையாடலை நரேந்திரனால் சகித்துக் கொள்ள முடியவில்லை.. மாமியாரின் கெஞ்சுதலை பொருட்படுத்தாமல் அவன் வாய் திறந்து விட்டான்..

https://t.me/tamilpdfebooks

"அப்பாவும் பொண்ணும் வார்த்தை விளையாட்டு விளையாட நான்தான் உங்களுக்குக் கிடைச்சேனா..? என்னவோ சுரேந்திரனோட அப்பாகூடத்தான போகிறன்னு சொல்றிங்க... சுரேந்திரனோட அப்பா யாருங்க...? உங்க மகளுக்கும் அவனுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையாங்க..?"

"இதோ பாருங்க.. நான் என் மகள்கிட்ட எடுத்துச் சொல்லிக்கிட்டுத்தான் இருக்கேன்.."

"எப்படி எடுத்துச் சொல்வீங்க..? இப்படியா..? கஷ்டம்.. என் மகனுக்காக என்ன காலக் கொடுமையை யெல்லாம் காதில் கேட்க வேண்டியிருக்கு..!"

"இங்கேயும் அப்படித்தாங்க.. என் மகளுக்காகத்தான் எல்லாத்தையும் நான் பொறுத்துக்கிட்டு இருக்கேன்.."

மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையில் வாக்குவாதம் ஆரம்பிக்க.. பூங்குழலி ஆயாசத்துடன் ஊடே பேசினாள்..

"உங்க மாமா பேசறதைப் பத்தி இப்பத்தான் புதுசா தெரிஞ்சுக்கறிங்களா மாப்பிள்ளை..?"

அவள் 'மாப்பிள்ளை' என்று அழைத்ததில் நரேந்திரனின் வேகம் குறைந்தது.. அவள் ஒருத்தியாவது நரேந்திரன் ஊர்மிளாவின் கணவன் என்பதை நினைவில் வைத்திருக்கிறாளே என்ற ஆவலுடன் ஊர்மிளாவை முறைத்தபடி பேச்சை நிறுத்தினான்..

"இவருக்கென்ன மாப்பிள்ளை.. இவர் மக இவரு கண்ணுக்கு முன்னாடி இருக்கா.. உங்க ரெண்டு பேருக்கும்

https://t.me/tamilpdfebooks

அப்படியா..? உங்க மகன் அங்கே ஹாஸ்பிடலிலே அட்மிட் ஆகியிருக்கானே.."

பூங்குழலியின் பேச்சில் ஊர்மிளாவுக்கு எல்லாம் மறந்து போனது.. சுரேந்திரன் மட்டுமே அவள் கண் முன்னால் இருக்க..

"அம்மா..." என்று பதறினாள்..

"அங்கே.. சென்னையில.. அம்மா எங்கேன்னு தேடிக்கிட்டு உன்பிள்ளை அழுதுகிட்டு இருக்கான் ஊர்மி.."

"என் பிள்ளை என்னைக் காணாம பயந்திருப்பானே.."

"ஆமாம் ஊர்மி.. சீக்கிரமா கிளம்பு.."

பூங்குழலி பேசிக் கொண்டே ஊர்மிளாவின் பேக்கை நீட்டினாள்.. அவள்தான் நரேந்திரன் சொன்னதைக் கேட்ட மறு நிமிடத்திலேயே மகளின் துணிகளை பைக்குள் அடுக்கி வைத்து விட்டாளே..

"அவன் அழுதுகிட்டு இருப்பானாம்மா..?"

"தெரியலையே.. ஓடு ஊர்மி.. உன் பிள்ளையைப் பார்க்க ஓடு.. இன்னைக்கு வேற டெஸ்ட் மேல டெஸ்டா எடுத்தாங்களாமே.. நீ பக்கத்தில இல்லாம உன் பிள்ளை என்ன பாடுபட்டானோ.."

"சொல்லாதீங்கம்மா.. மனசு பதறது.."

துடித்துப் போனாள் ஊர்மிளா.. அவள் மனது முழுவதும் மகன் மட்டுமே இருக்க.. அவள் பேக்கை கையில் எடுத்துக் கொண்டு சோமசுந்தரத்தை மறந்து வாசலுக்குப் பாய்ந்தாள்..

https://t.me/tamilpdfebooks

"என் மக கிளம்பிட்டா.. நீங்களும் கிளம்புங்க மாப்பிள்ளை..."

கைகூப்பிய பூங்குழலியின் கலங்கிய விழிகளில் கண்ணீர் வழிய ஆரம்பித்ததிருந்தது.. நரேந்திரன் குற்ற உணர்வுடன் தேங்கி நின்றான்.. பூங்குழலியின் அந்தத் துயரத்துக்கு அவன்தான் முழுக்காரணம் என்ற நினைவில் சங்கடப் பட்டுப் போனான்..

"நீங்க சைக்காலஜிக்கலை தெரிஞ்சு வைச்சிருக்கீங்க அத்தை.."

"நானுன்னு இல்லை மாப்பிள்ளை.. இந்த மண்ணில பொறந்த எல்லாம்ப் பொம்பளைகளும் மனோதத்துவத்தை தெரிஞ்சுதான் வைச்சிருக்கோம்.. பெத்தவககிட்ட பிள்ளையைப் பத்திச் சொன்னா.. மத்த நினைப்பெல்லாம் அவ மனசை விட்டு ஓடிப் போயிரும்ங்கிறது எனக்குத் தெரிஞ்சு சைக்காலஜி.. அதைப் பயன்படுத்தி அவளை உங்ககூட அனுப்பி வைச்சிட்டேன்.. தயவுசெய்து என்மக மனம் நொந்து அழுதுகிட்டு எங்களைத் தேடி ஓடி வருகிறபடி ஏதும் செய்திராதீங்க.."

பூங்குழலியின் வேண்டுகோளைக் கேட்டவனுக்கு சாட்டையடியை வாங்கியதைப் போல இருந்தது..

இதற்கு அவன் என்ன பதிலைச் சொல்வான்..? அவனை நம்பி பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தவர்கள் அவர்கள்.. அவனுடன் வாழ வந்தவள் மனம் நோக அவனை விட்டு விலகி அவர்களைத் தேடி ஓடிப் போய் மடியில் விழுந்து கதறினால் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்க மாட்டார்களா..?

https://t.me/tamilpdfebooks

"பிள்ளையைத் தூக்கிக்கிட்டுப் போயிட்டிங்க மாப்பிள்ளை.. அதை நான் குத்தமா சொல்லலை.. உங்க ரத்தம்.. உங்க மகன்.. நீங்க தூக்கிக்கிட்டுப் போயிட்டிங்க.. ஆனா.. பெத்து வளர்த்தவ என் மகளாப் போயிட்டாளே.. இவளோட ரத்தத்திலயும்.. சதையிலயும் உருவான மகனில்லையா அவன்..? தொப்புள்கொடி உறவை விட மத்த உறவு பெரிசில்ல மாப்பிள்ளை.. இதை உங்ககிட்ட சொல்ல எங்களால் முடியுமா..? எங்களால எங்க மக துயரப் படறத பாக்க முடியாது.. அதனாலதான்.. பெத்தவளை பிள்ளைகிட்ட சேர்த்து விடச் சொல்லி உங்ககூட அனுப்பி வைக்கிறோம்..."

"அவ பெத்தவன்னா நான் யாருங்க..? அவனோட அப்பாங்க.."

"அதனாலதான் இந்த முடிவு.. பிள்ளை உங்க ரெண்டு பேருக்கும் சொந்தம்ங்கிறப்ப பொதுவா ஒரு முடிவுக்கு வாங்க..."

நரேந்திரன் தலையை அசைத்து விட்டு காருக்குப் போனான்.. சோமசுந்தரமும் பூங்குழலியும் மகளை வழியனுப்பி வைக்க வாசலுக்குப் போனார்கள்.. ஊர்மிளாவின் கையில் இருந்த பையை வாங்க நரேந்திரன் முனைந்த போது அவள் முகத்தைத் திருப்பியபடி பையைக் கொடுக்க மறுத்தாள்.. நரேந்திரனுக்கு அவள் கன்னத்தில அபப் வேண்டுமென்ற கோபம் வந்தது..

"இதை வைச்சு என்ன செய்யப் போறேன்..? ஏலம் விடவா போறேன்..? டிக்கியில வைக்கலாம்.. கொடுடி.."

https://t.me/tamilpdfebooks

ஏறக்குறைய அவளிடமிருந்த பையைப் பறித்து டிக்கியில் வைத்து மூடிவிட்டுத் திரும்பினான் நரேந்திரன்.. காரின் முன் பக்க கதவை அவளுக்குத் திறந்து விட்டான்.. அவள் முறைப்பாக அதை மூடிவிட்டு காரின் பின்பக்க கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்தாள்..

"இவளுக்கு நான் டிரைவரா..?"

நரேந்திரன் பூங்குழலியிடம் சப்தம் போட்டான்..

"அம்மா.. நான் இங்கேதான் உட்காருவேன்.."

ஊர்மிளா தீர்மானமாக அறிவித்து விட்டாள்.. பூங்குழலி கை குவிக்க.. வேறு வழியில்லாமல் காரில் ஏறி உட்கார்ந்த நரேந்திரன் கோபத்துடன் காரைக் கிளப்பினான்.. புயல் போல கிளம்பிய கார் புள்ளி போல மறைய.. பூங்குழலி வாய்விட்டு அழுதபடி வாசல்படியில் உட்கார்ந்து விட்டாள்.. சோமசுந்தரம் பக்கத்தில் உட்கார்ந்து மனைவியைத் தேற்றினார்..

"நேத்து வரைக்கும் நம்ம மனசில மலையளவுக்கு கவலை இருந்துச்சு பூங்குழலி.. சுரேனோட உடம்பு சரியாக என்ன செய்கிறது.. ஏது செய்கிறதுன்னு பயந்தோமா இல்லையா..? இப்ப அந்த பயம் போயிருச்சுடி.. அவனோட அப்பா அவனைப் பார்த்துக்க ஓடி வந்திட்டாரு.. அவனை பத்திரமா கூப்பிட்டுக்கிட்டுப் போயி ட்ரீட்மென்ட்ட ஆரம்பிச்சுட்டாரு.. அதுக்கப்புறமா காலையில இருந்து சாயந்திரம் வரைக்கும் இந்த வீடு வீடாவா இருந்துச்சு.. நம்ம மக பிள்ளையைப் பிரிஞ்சு பட்ட பாட்டைச் சகிக்க முடியாம.. அன்னம் தண்ணி இல்லாம மறுகிப் போய்

https://t.me/tamilpdfebooks

கிடந்தோமா இல்லையா..? இப்ப அந்தக் கவலையும் தீர்ந்து போச்சு.. நம்ம மக அவ புள்ளைகிட்ட போய்கிட்டு இருக்கா.. இனியும் அழுகலாமாடி..?"

"என் மக என்ன நினைச்சிருப்பா.. பிள்ளையைக் காரணம் காட்டி நம்ம அம்மா சண்டைக்கார புருசன்கூட அனுப்பி வைச்சிட்டாளேன்னுதானே நினைப்பா..?"

"இல்லைடி.. இப்ப நமக்கு வேற வழியில்ல.. இதை அவளும் புரிஞ்சுக்குவா.. எனக்கு வயித்தைப் பசிக்குதுடி குழலி.. காலையில இருந்து சாப்பிடவே இல்லை.."

எப்படி பிள்ளையைச் சொன்னதும் ஊர்மிளா அனைத்தையும் மறந்து விடுவாள் என்பதை பூங்குழலி கண்டு வைத்திருந்தாளோ.. அதைப் போல அவருடைய பசியைச் சொன்னால் பூங்குழலி மற்ற கவலைகளை மறந்து எழுந்து விடுவாள் என்பதை சோமசுந்தரம் கண்டு வைத்திருந்தார்..

பூங்குழலியும் பதறி எழுந்தாள்தான்.. எழுந்தவள் திரும்பவும் உட்கார்ந்து விட்டாள்..

"என்ன குழலி..?" என்றார் சோமசுந்தரம்..

"என்னங்க.. அவங்க ரெண்டு பேரும் சாப்பிடாம வெறும் வயிறோடு போறாங்களேங்க.." பதறினாள் பூங்குழலி..

"சாப்பிடச் சொல்கிற மனநிலையில நாமளும் இல்ல.. சாப்பிடற மனநிலையில அவங்களும் இல்ல.. சாப்பிடுகிற நேரத்தில வேற ஏதாவது பிரச்னை கிளம்பியிருக்கும்..

https://t.me/tamilpdfebooks

அதுக்கு அவங்க சாப்பிடாம கிளம்பிப் போனதே நல்லது.. உன் மருமகன் கெட்டிக்காரர்.. போகிற வழியில ஏதாச்சும் ஹோட்டலில காரை நிறுத்தி வயித்துக்கு எதையாவது போட்டுக்குவார்.."

"இவ கூடப் போகனுமே.."

"அது அவரோட கவலை.. அவர் பெண்டாட்டியை அவர்கூட அனுப்பி வைச்சாச்சு.. அதுக்கு மேலே நமக்கு என்ன கவலை..? அவர் ஊட்டி விட்டாவது அவளை சாப்பிட வைச்சிர மாட்டாரா என்ன..?"

"அதைச் சொல்லுங்க.."

பூங்குழலியின் முகம் தெளிந்தது.. அவள் வீட்டுக்குள் போய் சோமசுந்தரத்திற்கு தட்டைப் போட்டாள்.. அவர்வந்து அவளுக்கும் சேர்த்து தட்டைப் போட்டார்.

"நீயும் உட்காரு.. சேர்ந்தே சாப்பிடலாம்.."

அவருக்குத் தெரியும்.. மனைவியை தனியாக சாப்பிட விட்டால் அவள் ஒரு கவளத்தைக்கூட உள்ளே தள்ள மாட்டாள் என்பது..

வெகு காலத்திற்கு பிறகு.. அவர்கள் இருவரும் மனம் விட்டுப் பேசியபடி சேர்ந்து சாப்பிட்டார்கள்..

https://t.me/tamilpdfebooks

16

அலையாக என் மனதை அடித்து இழுக்கும் அழகான ராட்சசி நீ....

காரின் முன்பக்க கண்ணாடி வழியாக அவளைப் பார்க்க முடியாத அளவிற்கு இருள் சூழ்ந்திருந்தது.. இருளைக் கிழித்துக் கொண்டு சாலையில் மஞ்சள்நிற வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி அவனது கார் விரைந்து கொண்டிருந்தது.. அவனது காரின் முன்னும் பின்னும் சென்று கொண்டிருந்த வாகனங்களின் வெளிச்ச வெள்ளம் திருவிழாக் கடைகளின் கோலாகலத்தை நினைவு படுத்தியது..

காரின் பின்சீட்டிலிருந்து எந்த சப்தமும் வரவில்லை.. அவள் இருக்கிறாளா.. இல்லை.. காரை விட்டுக் குதித்து விட்டாளா என்று அவனுக்குத் தெரியவில்லை..

எந்தவித அசைவுகளும் இன்றி பதுமையைப் போல ஒரு பெண் உட்கார்ந்து வர முடியுமா என்ற சம்சயம் அவனுள் எழுந்தது..

'இவ வருவா..'

அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.. அவளுடைய மூச்சுக் காற்றைக்கூட அவன் உணர்ந்து விடக் கூடாது என்பதில் அவள் காட்டும் கவனத்தை அவன் உணர்ந்துதான் இருந்தான்..

https://t.me/tamilpdfebooks

அவளுக்கேயுரிய அந்த பிரத்யேக நறுமணத்தை முகர அவன் நாசி விழைந்தது.. நெருக்கமான நேரங்களில் அவள்மீது கமழும் அந்த நறுமணத்தில் அவன் மயங்கிப் போயிருக்கிறான்..

அவளை உணர்த்தும் அந்த நறுமணத்தை முகர அவன் நாசி விழைந்ததில் அவன் அதை உணர்ந்து விட்டான்.. இதமான நறுமணம் காரின் பின்பக்கத்திலிருந்து வந்து காரை நிரப்பியிருந்ததை அவனது நாசி கண்டு பிடித்து விட்டது..

காருக்குள்தான் அவள் இருக்கிறாள் என்பதை அந்த நறுமணம் கட்டியம் கூறி அறிவித்ததில் அவன் இதமாக உணர்ந்தான்.. வெகு தினங்களுக்குப் பின்.. அவன் அருகாமையில் அவள் வந்திருக்கிறாள் என்பதில் அவன் இதயத்தில் மத்தாப்பூ ஒளிர்ந்தது.. லேசாக திரும்பி பின்னால் பார்த்தான்.. கடந்து போன காரின் ஹெட் லைட் வெளிச்சத்தில் அவள் அழகாக இருந்தாள்..

'ராட்சசி..! அழகான ராட்சசி..!'

பல்லைக்கடித்தான்.. அவளைக் கண்டநாள் முதல் இந்த நாள்வரை இது ஒன்றைத்தான் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறான் என்பதில் இன்னும் அதிகமாக பல்லைக் கடித்தான்..

இரவின் இருளை மறைக்கும் வெளிச்சப் புள்ளிகளுடன் கூடிய நான்கு வழிச்சாலை.. நிற்காமல் ஓடிக் கொண்டிருந்த வாகனங்களின் வெளிச்சம் இரவைப் பகலாக்கிக் கொண்டிருக்க.. ஒரு திருப்பத்தில் டிராபிக்

https://t.me/tamilpdfebooks

நெரிசல்..! வரிசைகட்டி நின்ற வாகனங்களில் ஒன்றாய் இவன் காரும் நின்றதில் பின் பக்கமிருந்து சன்னமான அவள் முணுமுணுப்பு கேட்டது..

'அட..! இவளுக்கு பேசக்கூட வருமா..? இவ அப்பா இல்லைன்னா வாயே திறக்க மாட்டா.. இப்ப எப்படி வாயைத் திறந்து பேசறா..?'

என்ன பேசுகிறாள் என்பதை அவன் ஊன்றிக் கவனித்தான்..

"இப்படி டிராபிக்கில மாட்டிக்கிறதுக்கு பிளைட்டில பறந்திருக்கலாம்.. எனக்கான டிக்கெட் பணத்தை நான் கொடுத்திருப்பேன்.."

'இவ திருந்தவே மாட்டா..'

அவன் பின்பக்கமாக திரும்பி முறைத்தான்.. அவள் கவனமாக அந்த இருளிலும் அவன் பார்வையை தவிர்த்தாள்..

"ஏண்டி நீ அடங்கவே மாட்டியா..?"

அவனின் கேள்விக்கு எப்படிப் பதில் சொல்வது என்று தெரியாமல் அவள் திகைத்தாள்.. தஞ்சாவூரில் அவள் கூடவே சோமசுந்தரம் இருந்தார்... அவரையும் பூங்குழலியையும் ஊடே வைத்துப் பேச வேண்டியதை இவள் பேசித்தீர்த்தாள்..

இங்கே ஊடே வைத்துப் பேச ஒரு ஆள்கூட இல்லை.. அவள் யாரை ஊடே வைத்து அவனுக்குப் பதில் சொல்வாள்..?

https://t.me/tamilpdfebooks

அதற்காக பதில் கொடுக்காமலும் இருக்க முடியாதே.. அதனால் பொத்தாம் பொதுவாக..

"ஏன் அடங்கனும்..?" என்று கேட்டு வைத்தாள்..

"அதானே.. நீ ஏன் அடங்கப் போற.. உன் கூட வர்றவன் உன்புருசன்.. அந்த நினைப்பாவது உனக்கு இருக்கா..?"

"எனக்கு எல்லாமே மறந்து போச்சு.."

வறண்ட குரலில் பேசிய மனைவியின் குரலில் இருந்த கசப்பு அவனை அசைத்துப் பார்த்தது.. அவனது இதயத்தை நெருடிய நெருஞ்சி முற்களைப் பிடுங்கிப் போட அவனால் இயலவில்லை..

டிராபிக் சீராகி விட்டது.. அவன் காரைக் கிளப்பியபடியே பேசினான்..

"பிளைட் டிக்கெட்டுக்கு பணமில்லாம காரில் போகலை.. இப்ப சுரேன் தூங்கிக்கிட்டு இருக்கிறநேரம் தான்.. அதனால பிளைட் பிடிச்சு ஓட வேண்டிய அவசியமில்லைங்கிறதினால காரை சூஸ் பண்ணினேன்.."

அவள் அப்படியா என்று கேட்கவில்லை.. அதில் அவன் மனம் குமைந்தான்.. வயிற்றில் பசி தெரிய கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான்.. இரவு பத்து என்றது.. நான்கு வழிச் சாலையில் இருந்த பிரம்மாண்டமான ஹோட்டல் ஒன்றின் முன்னால் அவன் கார் நின்றது.. இறங்கியவன்.. பின் பக்கக் கதவைத் திறந்து..

"இறங்கு.." என்றான்..

அவள் இறங்கவில்லை.. சீட்டில் பசை போட்டு ஒட்டியதைப் போல அசையாமல் அமர்ந்திருந்தவள்..

https://t.me/tamilpdfebooks

"எனக்குப் பசிக்கலை.." என்று முகம் திருப்பிக் கொண்டாள்..

"எனக்குப் பசிக்குது.." என்றான் நரேந்திரன்..

"அதுக்கு நான் ஏன் இறங்கனும்.. அவங்கவங்க பசிக்கு அவங்கவங்கதான் சாப்பிடனும்.. மத்தவங்களுக்காக நான் சாப்பிட முடியுமா..?" என்றாள் அவள் இடக்காக..

'அப்படியே மிஸ்டர் சோமசுந்தரம் பேசறதைப் போலவே இருக்கு..' உதட்டைக் கடித்தபடி அவளை உறுத்துப் பார்த்தான்..

'யாரு இவ..! அவர் வாரிசுதானே.. அதான் அந்த நையாண்டி குறையாம அப்படியே இருக்கு..'

அவன் பார்வையை அவள் லட்சியமே பண்ணவில்லை.. நீ பாட்டுக்கு பார்த்துக் கொண்டிரு.. எனக்கென்ன போச்சு என்று வேறுபக்கமாக திரும்பி உட்கார்ந்து கொண்டாள்..

"இப்ப நீ இறங்கலைன்னு வை.. இப்படியே காரைத் திருப்பி தஞ்சாவூரில இருக்கிற உன் அப்பாம்மாகிட்டக் கொண்டு போய் விட்டிருவேன்.. எப்படி வசதி..?" அவன் கேட்டான்..

"எதுக்கு அதை செய்யனும்..?" என்றாள் அவள்..

"அது அப்படித்தான்.. இப்ப நான் வாங்கிக் கொடுக்கிறதைச் சாப்பிடாம.. என் முகம் பார்த்துப் பேசாம யாரோ போல பிஹேவ் பண்றவ.. சென்னை ஹாஸ்பிடலுக்கு போன பின்னாலேயும் இதையேதானே ஃபாலோ பண்ணுவ..? அது எனக்குச் சரிப்பட்டு வராது.."

https://t.me/tamilpdfebooks

"ஐ டோண்ட் கேர்.."

"நீ வேணும்னா அப்படி இருக்கலாம்.. பட்.. நான் இதை கேர்ஃபுல்லா வாட்ச் பண்ணித்தான் ஆகனும்.. என் மகனுக்கு அங்கே ட்ரீட்மெண்ட் கொடுத்துக்கிட்டு இருக்காங்க.. அவன் அம்மாவைத் தேடி அழுகிறான்.. நானும் உன்னைக் கொண்டு போய் அங்கே நிறுத்தப் போறேன்.."

"ஸோ வாட்..?"

"நிறைய இருக்குடி.. நீ என் பெண்டாட்டி.. சுரேனுக்கு அம்மா.. டாக்டர்ஸ் முன்னாடி நீ இப்படி பிஹேவ் பண்ணினா.. இதையே கன்டினியு பண்ணினா என் இமேஜ் ஸ்பாயிலாகும்.. எதுக்கு அந்த ரிஸ்க்கை நான் எடுக்கனும்..? நீ உன் வீட்டைப் பார்த்துப் போய் சேரு.. நான் என் பிள்ளையைப் பார்க்க சென்னைக்குப் போய் சேர்ந்துக்கறேன்.."

"அவன் என் பிள்ளை.."

"இல்லைன்னு இங்கே யாரும் சொல்லலை.. அவன் எனக்கும் பிள்ளை.. இனி என் கஸ்டடியில.. என் கண் பார்வையிலதான் அவன் இருப்பான்.."

"நான் என் பிள்ளையைத் தரமாட்டேன்.."

"நீ தரனும்கிற அவசியமில்லை.. ஆல்ரெடி அவனை நான் தூக்கிக்கிட்டுப் போயாச்சு.. கோர்ட்டுக்குப் போனா ஈஸியா ஜெயிச்சுட்டு போய்கிட்டே இருப்பேன்.. என் மகனோட ட்ரீட்மெண்டுக்கு நீ கையைப் பிசைஞ்சுக்கிட்டு நின்னியே.. அது ஒன்னே போதும்.. நான் ஈஸியா வின் பண்ண.."

https://t.me/tamilpdfebooks

"மிரட்டறிங்களா..?"

"உனக்கு நிலைமையைப் புரிய வைக்கிறேன்.. நீ உன்பிள்ளை கூட இருக்கனும்னா.. எனக்குப் பெண்டாட்டியா மத்தவங்க கண் முன்னாலே நீ நின்னுதான் ஆகனும்.. நோ அதர் வே.. இதை ஒப்புக்கிட்டு ஃபாலோ பண்றதா இருந்தா காரை விட்டு இறங்கி என்கூட சாப்பிட வா.. இல்லைன்னா சொல்லு.. காரை தஞ்சாவூருக்கே திருப்பறேன்.."

ஊர்மிளா சட்டென்று காரை விட்டு இறங்கினாள்.. கலங்கிச் சிவந்திருந்த அவள் முகத்தை பார்த்தும் பாராதவனைப் போல..

"வா.." என்ற ஒற்றைச் சொல்லுடன் அவன் முன்னால் நடந்தான்..

அவள் எதுவும் பேசாமல் அவன் பின்னால் நடந்தாள்.. ஹோட்டலில் மெனுகார்டை ஆராய்ந்தவன் விழியுயர்த்தி..

"உனக்கென்ன வேண்டும்..?" என்று அவளிடம் கேட்டபோது பதில் சொல்லாமல் முறைத்தாள்..

அவன் தோளைக் குலுக்கி விட்டு அவளுக்கும் சேர்த்து ஆர்டர் பண்ணிய போது குறுக்கிட்டு..

"எனக்கு ரெண்டு இட்லி போதும்.." என்றாள்..

"இதை அப்பவே சொல்கிறதுக்கென்ன..?" என்று அவன் கேட்டான்..

இப்போது அவள் தோளைக் குலுக்கினாள்.. பேரர் அவர்கள் இருவரையும் விசித்திரமாகப் பார்த்துவிட்டு நகர்ந்தான்..

https://t.me/tamilpdfebooks

"இதைத்தான் சொன்னேன்.." என்றான் நரேந்திரன்..

எதையென்று அவள் கேட்கவில்லை.. மகனின் நினைவோடு கலக்கமாக இருந்தாள்..

"அந்த பேரர் நம்மை பத்தி என்ன நினைச்சுக்குவான்..?"

"எதையோ நினைச்சுக்கட்டும்..?"

"ஊஹீம்.. இப்படிப் பேசறதை நிறுத்திரு.. இதைக் கன்டினியு பண்ணாதே.. இது என்னோட ஸ்ட்ரிக்ட்டான ஆர்டர்.."

போடா என்று சொல்ல முடியாமல் சுரேந்திரன் நரேந்திரனின் பொறுப்பிற்கு மாறி விட்டதில் உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமாகி விட்டாள் ஊர்மிளா..

இட்லி வந்தது.. அவள் சாப்பிட்டு முடித்ததும் நரேந்திரன் காபியை வரவழைத்தான்.. மறுத்துப் பேசப் போன ஊர்மிளா அவன் முறைப்பில் வாயை மூடிக்கொண்டு காபியை தொண்டையில் சரித்தாள்..

ஹோட்டலை விட்டு வெளியே வந்தவளின் கண்களில் தெரிந்த தூக்கத்தைப் பார்த்தவனுக்கு பாவமாக இருந்தது..

'இவ தூங்கி எத்தனை நாளாச்சோ..' பரிதாபப் பட்டான்..

அந்த தூங்காத விழிகளுக்கும்.. அவளுடைய தூங்காத இரவுகளுக்கும் தான்தான் காரணம் என்ற குற்ற

https://t.me/tamilpdfebooks

உணர்வு அவன் மனதில் எழுந்தது.. காரின் பின்கதவை அவளுக்காக திறந்து விட்டான்..

“எனக்குத் தெரியும்..” என்று முறைத்தவளிடம்..

“என்ன தெரியும்..?”' என்று புருவங்களை உயர்த்தினான்..

“கார் கதவைத் திறந்துக்க எனக்குத் தெரியும்..” கனத்த இமைகளை கசக்கியபடி தூக்கக் கலக்கம் தந்த எரிச்சலுடன் அவள் பதில் சொன்னாள்..

“இது எனக்குத் தெரியாம போச்சே..”

அவன் காரில் ஏறிக் காரைக் கிளப்பினான்.. வளைந்து திரும்பிய கார்.. நான்கு வழிச் சாலையின் போக்குவரத்தில் கலந்து பாய்ந்து முன்னேறியது.. ஒரு பக்கம் சென்னையை நோக்கிச் செல்லும் வாகனங்களும்.. இன்னொருபக்கம் சென்னையிலிருந்து வந்து கொண்டிருந்த வாகனங்களுமாக.. நான்கு வழிச் சாலை பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருந்தது.. இடையினில் பிரித்த சுவர் தடுப்பிலிருந்த அரளிப்பூச் செடிகளும்.. அவற்றின் ஊடே அமைந்திருந்த விளக்குகளும்.. பார்ப்பதற்கு ரம்யமான ஓர் உணர்வைக் கிளப்பின..

நரேந்திரன் லேசாக திரும்பிப் பார்த்தான்.. கடந்து போன வாகனங்களின் ஒளியில் அவள் கண்மூடாமல் சோர்ந்து சாய்ந்திருப்பது தெரிந்தது..

‘தூங்கறாளா.. சும்மா வெட்டியா முழிச்சுக்கிட்டு வர்றா..’

மனதுக்குள் கடிந்து கொண்டான்.. அவளிடம் சொல்லலாம்.. ஆனால் அவள் கேட்க மாட்டாள்..

https://t.me/tamilpdfebooks

'பிடிவாதம்..! அதுதான் இவளோட பரம்பரைச் சொத்தாய் இவ பிறக்கும் போதே ஒட்டிக்கிட்டு கூடவே பிறந்து வைச்சிருக்கே.. ராட்சசி..! அழகான ராட்சசி..!'

அந்த மெலிதான வெளிச்சத்திலும் தேவதையைப் போல தெரிந்தவளை மீண்டும் அவன் திரும்பிப் பார்த்தான்.. அவன் பார்ப்பதை அவள் பார்த்து விட்டாள்..

"என்ன..?" கடினமான கண்டனைக் குரலில் கேட்டாள்..

அவனுக்கு எரிச்சலாக இருந்தது.. அவள்.. அவன் தொட்டுத் தாலி கட்டிய மனைவி.. அவனுடன் ஈருடல் ஓருயிராக கலந்து.. இசைந்து கூடிக் குழாவி குடும்பம் நடத்தியவள்.. அவனுடைய குழந்தையையும் பெற்றெடுத்திருப்பவள்..

இருந்தும் அவனுடைய சிறு பார்வைக்கு என்னவோ.. முகம் தெரியாத அன்னியன் ஒருவன் அவளை சைட் அடித்து விட்டதைப் போல 'என்ன..?' என்று கன்டனக் குரல் எழுப்புகிறாள்..

"நேரம்டி.." என்றான் அவன்..

"அதை கையில கட்டியிருக்கிற வாட்ச்சில பார்த்துக்கங்க.. என் முகத்தைப் பார்த்தா வாட்ச் மாதிரியா இருக்கு..?" நொடித்தாள் அவள்..

"ஆமாண்டி.." நரேந்திரன் அவளை விட நொடித்தான்..

"என்ன..? கிண்டல் பண்றிங்களா..?"

"உன்னைக் கிண்டல் பண்ணிட்டாலும்..! ம்ஹீம்.."

https://t.me/tamilpdfebooks

"பின்னே..? இப்ப நீங்க பேசினது கிண்டல் இல்லாம வேற என்னவாம்..?"

"ஒரு மண்ணும் இல்ல.. வாட்ச்சிலயும் முள் இருக்கு.. முகத்திலயும் முள் இருக்கு.. அதனால எனக்கு ரெண்டுக்கும் வித்தியாசம் தெரியலை.."

அவனுடைய பொருத்தமான உவமையில் அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. இதுபோன்ற பேச்சுக்களால்தான் அவன் அவளைக் கவர்ந்து அவனைக் கவனிக்க வைத்தான்.. வீழ்த்தினான்.. அவன் பேச்சைக் கேட்பதற்காக அவள் காத்துக் கிடந்த காலங்களை நினைத்துப் பார்த்தவளின் நெஞ்சம் கனத்தது..

அவனை அவளுக்குப் பிடித்திருந்தது.. மிக.. மிக.. மிக.. அதிகமாக பிடித்திருந்தது.. அவனுடைய ஆறடி உயர ஆண்மையான கம்பீரத் தோற்றத்திலும்.. வசீகரப் பேச்சிலும் அவள் அவனிடம் மயங்கிப் போனாள்.. அவனுடைய ஒரு சிறு பார்வைக்காக ஏங்கிக் கிடந்தாள்..

'அது ஒரு நிலாக்காலம்..'

துன்பப் பெருமூச்சு அவளுள் எழுந்தது.. எல்லா மனித ஜீவன்களின் வாழ்விலும் இது போன்ற நிலாக் காலங்கள் வந்து போவதுண்டு.. நிலாக்கால நினைவுகளில் இளைப்பாறாத ஜீவன் இந்த மண்ணில் எங்குண்டு..?

அவளும் அந்த நிலாக்காலத்தைச் சந்தித்தவள்தான்.. அதில் நீந்தித் திளைத்தவள்தான்.. மூழ்கி முத்தெடுத்தவள் தான்.. அந்த நிலாக்கால நினைவுகள் வளர்பிறை போல

https://t.me/tamilpdfebooks

வளர்ந்து அவளை வாழ வைக்காமல்.. தேய்பிறை போல தேய்ந்து அவளை ஏன் காரிருளில் தள்ளி விட்டன..?

ஊர்மிளாவின் இமையோரம் கண்ணீர் வழிந்தது.. அவள் கன்னத்தை நனைத்தது.. அவள் இதயத்தில் பாறாங்கல் இருந்தது.. இன்று நேற்றல்ல.. அவள் அந்த பாறாங்கல்லை.. மூன்று வருடங்களுக்கும் மேலாக அவள் இதயத்தில் சுமந்து கொண்டிருக்கிறாள்.. எவன் ஒருவனிடம் அவள் தனது மனதையும்.. உடலையும்.. ஆன்மாவையும் முழுமனதாக ஒப்படைத்தாளோ.. அவன் கேட்ட ஒரு கேள்வியில் அவள் இதயத்தில் ஏறி அமர்ந்த பாறாங்கல்! அது சொல்லடியில் வந்த பாறாங்கல்...!

கல்லால் அடித்த அடி ஆறி விடும்.. சொல்லால் அடித்த அடி..?

அது ஆறுமா..? காயம் மாறுமா..?

17

உன் அன்பைத் தேடும் வறியவனாய்
எனை ஆக்கிவிட்ட....
அழகான ராட்சசி நீ....

அவளின் தூக்கமற்ற தவிப்பை நரேந்திரன் பார்த்துக் கொண்டுதான் இருந்தான்.. இவள் கொஞ்ச நேரம் தூங்கினால் தேவலை என்று அவனுக்குத் தோன்றியது..

https://t.me/tamilpdfebooks

"காரை நீயா ஓட்டற..?" என்று கேட்டான்..

"இல்லைதான்.. ஓட்டச் சொன்னா ஓட்டறேன்.." என்றாள் ஊர்மிளா..

அவளுக்கு கார் ஓட்டத் தெரியும்.. கற்றுக் கொடுத்தது அவன்தான்.. அதைக் கற்றுக் கொள்வதற்குள் அவள் அவனுடைய காரில் பல இடங்களில் சேதாரங்களை உண்டு பண்ணி விட்டாள்.. அதை அவளிடம் காட்டி..

"விழுப்புண்கள்டி.." என்றான் அவன்..

அந்த நினைவு ஒரு சேர அந்த இருவரின் மனதிலும் எழுந்து இருவரையும் மௌனமாக்கியது.. நரேந்திரன் முன்னால் தெரிந்த சாலையைப் பார்த்தான்.. ஊர்மிளா கண்ணாடி மறைத்த ஜன்னலின் வழியாகத் தெரிந்த ஆகாயத்தின் நிலவைப் பார்த்தாள்..

கார் ஓட்ட மட்டுமல்ல.. நரேந்திரன் அவளுக்கு கற்றுக் கொடுத்தது நிறைய.. அவளுடைய மத்தியதர வாழ்க்கையிலிருந்து அவனுடைய கோடிஸ்வர வாழ்க்கைக்கு அவளை இழுத்து வந்து இணைய வைத்தான்.. சின்னச் சின்ன விவரங்களையும் பொறுமையாக சொல்லிக் கொடுத்தான்.. புரிந்து கொள்ளாமல் அவள் திருதிருத்தால் கோபப்படாமல் சிரித்தான்..

அதனால்தான்.. அவனின் அந்த அதீத காதல் தந்த தன்னம்பிக்கையினால்தான்.. அவள் அகல்யாவை சட்டை செய்யாமல் அவனுக்காக காத்திருந்தாள்..

அவன் அவளுடைய கணவன்.. காதலன்.. துணைவன்.. தோழன்.. அவள் வாழ்வின் ஆணிவேராக.. அவளுக்கு அனைத்துமாக அவளுள் நிலைத்து நிற்பவன்..

https://t.me/tamilpdfebooks

அவன் அவளை அறிவான் என்ற கர்வத்துடன் காத்திருந்தவளை ஒரு கேள்வியால் அவன் உருக் குலைத்து விட்டான்.. அவனை விட்டு விலகி ஓட வைத்து விட்டான்..

எவனுக்காக அவள் பெற்ற தந்தையை எதிர்த்து நின்று கேள்வி கேட்டாளோ.. அவன் அவளைப் பார்த்து அந்தக் கேள்வியைக் கேட்டு விட்டான்..

எவனுடைய நிழலில் வாழ்வதற்காக அவளைப் பெற்ற தாயிடம் புராணக்கதைகளை மேற்கோள் காட்டி மன்றாடினாளோ.. அவன் அவளுக்கு நிழலாக இருக்காமல் தீயாக நாவால் சுட்டு அவன் நிழலை விட்டு மிரண்டு ஓட வைத்து விட்டான்..

'இப்ப மட்டும் ஏன் வந்தான்..?'

கொதிப்புடன் அவள் தனக்குள் கேட்டுக் கொண்டாள்..

'இவனை விட்டு நான் ஓடி வந்த போது என்பின்னாலே என்னைத் தேடி இவன் வரல.. இவன் குழந்தையை நான் வயிற்றில் சுமந்து.. வாந்தி.. மயக்கம்.. என்று அல்லாடியபோது.. எனை தோள் சாய்த்து தாங்கிக் கொள்ள இவன் வரல.. இவன் குழந்தையை பிரசவிக்க நான் வலியால் துடித்தபோது நான் கைபிடித்து இறுக்கிக் கொள்ள இவன் கையைக் கொடுக்க இவன் வரல.. இவன் மகனைக் கையில் ஏந்தி.. அவன் முகத்தில் இவன் ஜாடையைப் பார்த்தபோது அதைச் சொல்லி மகிழ இவன் வரல.. இவன் குழந்தை தவழ்ந்து வந்து என் மடியினில்

https://t.me/tamilpdfebooks

விழுந்தபோது.. நான் கொண்ட தாய்மையின் பெருமிதத்தை ஒரு தந்தையாக நின்று பார்க்க இவன் வரல.. இவன் மகன் என் முகம் பார்த்து 'அம்மா..'ன்னு கூப்பிட்ட போது.. இவர் தாண்டா உன் அப்பா.. என்று நான் அடையாளம் காட்ட முகம் காட்ட இவன் வரல.. இப்ப மட்டும் ஏன் வந்தான்..?'

அக்கினி வார்த்தாற்போல அவள் மனதில் நினைவுகள் கடந்து போன காலத்தின் சுவடுகளை அவளுக்குள் வார்த்துப் பார்த்தன.. அதில் தெரிந்த தோல்வியில். நிராசையில்.. ஊர்மிளா துவண்டு சரிந்தாள்..

'எனக்காக வரலை.. இவன் மகனுக்காக ஓடி வந்திருக்கிறான்..' கசப்புடன் நினைத்துக் கொண்டாள்..

அவளிடம் தென்பட்ட சின்னச்சின்ன அசைவுகளில் திரும்பிப் பார்த்தான் நரேந்திரன்... அவள் முகம் சுளித்தாள்..

"என்ன வேணும்..?" என்றான் அவன் அக்கறையாக..

"எதுவும் வேணும்ன்னு நான் கேட்டேனா..?" அவள் சூடாகப் பதில் சொன்னாள்..

'சொன்னால்தானா..?'

நிம்மதியற்ற அவள் முகத்தை உறுத்துப் பார்த்தவன் திரும்பி சாலையில் கவனமாகியபடி..

"ராட்சசி.." என்று வாய் விட்டுத் திட்டினான்..

"என்ன..?" காதில் விழுகாத அந்த வார்த்தையில் ஊர்மிளா குரல் எழுப்பினாள்..

https://t.me/tamilpdfebooks

"உன்னை தேவதைன்னு சொன்னேன்.." என்றான் அவன் இடக்காக..

அவன் என்ன சொல்லியிருப்பான் என்பதை அறிந்தவளாக அவள் மௌனமாக ஜன்னலைப் பார்த்தாள்..

அதற்கு மேல் அவள் பேச மாட்டாள் என்பதை உணர்ந்தவனுக்குள் ஆத்திரம் பெருகியது.. அவள் அவனுக்கு அநீதி இழைத்துக் கொண்டிருப்பதாக அவன் நினைத்தான்.. மிகப் பெரும் அநீதி.. அவள் மேல் அவன் கொண்டிருக்கும் அதீதக் காதலுக்குப் பதிலாக அவள் செய்யும் அநீதி...

கோபத்துடன் காரின் வேகத்தைக் கூட்டினான் நரேந்திரன்.. யாரோ ஒரு சம்பந்தமில்லாத அன்னியனுடன் பயணிப்பதைப் போல ஊர்மிளா சப்தங்கள் அற்ற மௌனத்துக்குள் உறைந்திருந்தாள்.. வாய் திறவாத அவளின் அந்த மௌனம் அவனை வாள் கொண்டு அறுத்தது..

"அவ உங்களுக்காக எதையும் செய்தா மிஸ்டர் நரேந்திரன்.. பட்.. அவளுக்காக நீங்க என்ன செய்தீங்க..?"

சென்னையில் சுரேந்திரனின் மருத்துவப் பரிசோதனையின் போது உடனிருந்த டாக்டர் அமிர்தா அவனிடம் கேட்டாள்..

"என்ன செய்யலை டாக்டர்..?"

"அவளுக்கான புரொடக்சனை நீங்க செய்யலை.."

"புரியலை டாக்டர்.. அவளை என் வீட்டில்.. என் குடும்பத்தார் பாதுகாப்பில் விட்டு விட்டுப் போயிருந்தேன்..

https://t.me/tamilpdfebooks

இதற்கு மேல் அவளுக்கு நான் என்ன புரொடக்சனைக் கொடுத்திருக்கனும்னு நினைக்கறிங்க..?"

"உங்க வீடு..! உங்க குடும்பம்..!" லேசாக சிரித்தாள் அமிர்தா..

அமிர்தாவின் அந்தப் புன்னகை அர்த்தமற்றதல்ல என்பதை அவன் அறிவான்.. அர்த்தமற்ற வீண் விரயப் பேச்சுக்களை உதிர்ப்பவள் அவளல்ல..

ஒருவகையில் நரேந்திரனுக்கு மிகப் பெரிய உதவியை செய்திருக்கிறாள் அமிர்தா.. அவள் ஊர்மிளாவின் உயிர்தோழி.. இருந்தும் ஊர்மிளாவுக்குத் தெரியாமல் நரேந்திரனுக்கு அவனுடைய மகனைப் பற்றிய தகவலைக் கொடுத்து அவன் வாழ்வில் பூப்பூக்கச் செய்தவள் அமிர்தா..

அந்த வகையில் அவள்மீது நரேந்திரனுக்குள் நன்றியுணர்வு இருந்தது.. அவள் சொல்லும் வார்த்தைகளில் அர்த்தம் பொதிந்திருக்குமென்பதை அவன் உணர்ந்திருந்தான்..

அவளின் நிதானமும்.. தெளிவான பேச்சும்.. சுரேந்திரனின் சிகிச்சைக்காக.. அவள் குடும்பத்திடம் போனில் அனுமதி பெற்று சென்னைக்கு கூட வந்து கொடுத்த ஒத்துழைப்பும் அவள்மீது அவனுக்கு மரியாதையை தோற்று வித்திருந்தது..

ஏன் சிரித்தாள் என்ற கேள்வியை அமிர்தாவிடம் நரேந்திரனால் கேட்டு விட முடியாது.. அவளின் சிரிப்புக்குப் பின்னால் இருக்கும் எள்ளல் எதைக்

https://t.me/tamilpdfebooks

குறித்ததாக இருக்கும் என்ற சிந்தனை அவனுக்குள் உருவானது..

"ஒரு பாட்டு.. சினிமாப் பாட்டு.. நீங்க கேட்டிருக்கீங்களோ என்னவோ.."

"எப்போதாவது கேட்பதுண்டு டாக்டர்.. நீங்க சொல்லுங்க.. அது எனக்கு பெமிலியரான பாட்டா.. இல்லையான்னு நான் சொல்றேன்.."

"கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா.. கண்களுக்குச் சொந்தமில்லைங்கிற பாட்டு.."

அவன் கேட்டிருந்தான்.. நித்யஸ்ரீ மகாதேவன் பாடிய பாட்டு.. சங்கீதமும்.. இனிமையும் விரவியிருக்கும் நடனப் பாடல்..

"கேட்டிருக்கேன் டாக்டர்.."

"தட்ஸ் குட்.."

அமிர்தா மீண்டும் புன்னகைத்தான்.. அந்தப் பாடலுக்கும்.. அவளின் புன்னகைக்கும் உள்ள சம்பந்தம் எதுவாக இருக்கக்கூடும் என்ற ஆராய்ச்சியில் அவன் உள்ளம் இறங்கியது..

"கடல்வாழ் உயிரினங்களைப் பற்றின ஃபிலிம் பார்த்ததுண்டா..?"

"டிஸ்கவரி சேனலில் பார்த்திருக்கிறேன் டாக்டர்.."

"கடலின் மேலே வெறும் அலை மட்டும்தான் நம் கண்ணுக்குத் தெரியுது.. உள்ளே ஆழத்திலே போகப்போக என்னென்ன இருக்குது பார்த்தீங்களா..?

https://t.me/tamilpdfebooks

அதை மேம் போக்காய் பார்க்கும் போது கண்டு பிடித்து விட முடியுமா..?"

அதை எதற்காக அவனிடம் சொல்கிறாள் என்று அப்போதும் அவன் அமிர்தாவிடம் கேட்கவில்லை.. காரணமில்லாமல் அவள் எதையும் சொல்ல மாட்டாள் என்பதை அவன் அறிந்து வைத்திருந்தானே..

அவள் வாய்திறந்தால் ஊர்மிளாவின் மனதிலிருப்பது என்னவென்று தெரிந்து கொள்ள ஏதேனும் சிறு குறிப்பு கிடைக்கக் கூடும் என்பதினால் அவள் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளையும் அவன் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தான்.. தொடர்ந்து பேச முடியாமல் சுரேந்திரனின் அழுகை அதிகமானது.. டாக்டர்கள் ஊர்மிளாவை அழைத்துக் கொண்டு வரச் சொல்லி வலியுறுத்தினார்கள்.. அமிர்தா அதைச் செய்யவில்லை..

"நீங்க என்ன சொல்கிறிங்க டாக்டர்..?" நரேந்திரன் கேட்டான்..

அவனை கூர்மையாக பார்த்த அமிர்தாவின் பார்வையில் ஏதோ இருந்தது.. அவன் புருவங்கள் சுருங்கின..

"டாக்டர்..?" என்றான்..

"நான் எதையும் சொல்லக் கூடாது மிஸ்டர் நரேந்திரன்.. அவ உங்க வொய்ப்.. இங்கே அவளைத் தேடி அழுதுகிட்டு இருக்கிறது உங்க மகன்.. முடிவை நீங்கதான் எடுக்கனும்.."

https://t.me/tamilpdfebooks

"என்னத்தை முடிவெடுத்து.. ச்சே..! அவ கூட வருவான்னுதான் நான் நினைச்சேன் டாக்டர்.. அவளுக்காக வெயிட் பண்ணினேன்.. வாசல்வரை ஓடி வந்தவ.. நானும் கூட வரேன்னு ஒருவார்த்தை சொல்ல மாட்டேனுட்டா.."

"ஓ..."

உதட்டைக் குவித்த அமிர்தாவின் பார்வையில் அப்போதும் ஏதோ இருந்தது.. அது எதுவாக இருக்கக்கூடும் என்று அவன் குழம்பினான்..

"அவளுக்கான எல்லா முடிவையும் நீங்களே எடுக்கறிங்க மிஸ்டர் நரேந்திரன்.. அதுதான் உங்கள் பக்கம் இருக்கிற மைனஸ் பாயிண்ட்.. அவளுக்கான முடிவுகளை அவளே எடுக்க ஆரம்பித்து மூன்று வருசங்களுக்கும் மேலாகுது மிஸ்டர் நரேந்திரன்.. அதை நீங்க மறந்துட்டிங்க..."

"சுயமா முடிவெடுத்தா.. அவ மகனைப் பத்திக்கூட மறந்துருவாளா..? எதிலே கோபப்படறது.. எதில பிடிவாதம் பிடிக்கிறதுன்னு ஒரு அளவுகோல் வேணாமா டாக்டர்..?"

"அந்த அளவு கோலை அவள் பக்கம் மட்டும் ஏன் திருப்பி விடறிங்க மிஸ்டர் நரேந்திரன்..? உங்க குடும்பத்துப் பக்கமும் திருப்பி விட்டிருக்கலாமே.. ஐ மீன்.. அவளிடம் இத்தனை குறைகளைப் பார்க்கிற உங்க கண்ணுக்கு உங்க குடும்பத்தார் மீது ஒரு குறை கூட கண்ணுக்குத் தெரியலையா..?"

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் முகம் மாறினான்.. இல்லையென்ற பாவனையில் தலையை இடம் வலமாக அசைத்தான்.. அமிர்தா தோளைக் குலுக்கிவிட்டு பேசாமல் இருந்தாள்.. ஒருநொடி மௌனத்திற்குப் பின்னால் மகனின் முகத்தைக் கவலையுடன் பார்த்த நரேந்திரன்..

"பெத்த பிள்ளையை நினைத்தாவது அவ என்கூட வந்திருக்கலாமில்லையா டாக்டர்..?" என்று மனத்தாங்கலுடன் கேட்டான்..

அமிர்தா லேசான சிரிப்புடன் தலையசைத்தாள்..

"இல்லை.. அப்படியில்லை.. அவ பெத்த பிள்ளைக்காக உயிரையே கொடுப்பா.. தன் சுயமரியாதையை விட்டுக் கொடுக்க மாட்டாளா...? இவனோட ஹெல்த் கண்டிசனுக்காக உங்களிடமே இவனை விட்டுக் கொடுத்தவ ஈகோவை விட்டுக் கொடுக்க மாட்டாளா..?"

"அப்படின்னா ஏன் அவ என்கூட வரலை டாக்டர்..?"

"நீங்க கூப்பிட்டிருக்க மாட்டிங்க..."

அமிர்தா பக்கதிலிருந்து பார்த்தவளைப் போலச் சொன்னதில் அவனுக்கு 'சுரீர்' என்று இருந்தது..

தஞ்சை மருத்துவமனையில் இருந்து முதலில் சொகுசு வேன் கிளம்பிவிட்டது.. அமிர்தா சுரேந்திரனுடன் அதில் இருந்தாள்.. அவளுக்கு ஊர்மிளாவுக்காக நரேந்திரன் தயங்கி நின்றதைப் பற்றி எதுவும் தெரியாது.. அப்படியிருக்க அவன் ஊர்மிளாவை 'வா' என்று கூப்பிடவில்லை என்பதை எப்படி அவள் சரியாகச் சொல்கிறாள்..?

https://t.me/tamilpdfebooks

“நான் கூப்பிட்டாத்தான் அவ வரனுமா டாக்டர்..?”

அமிர்தா அவனை நிமிர்ந்து அதே மர்மப் பார்வை பார்த்து புன்னகை பூத்தாள்.. நரேந்திரனுக்கு என்னடா இது என்றிருந்தது.. எதைக் கேட்டாலும் ஒர் மர்மப் பார்வை.. லேசான சிரிப்பு என்றிருந்தால் அவனும்தான் என்ன செய்வான்..?

“சிலநேரங்களில் அப்படித்தான் மிஸ்டர் நரேந்திரன்.. உங்க வொய்ஃபிடம் உங்களுக்கு எதிர் பார்ப்புகள் இருப்பதில் தவறில்லை.. அதே சமயம்.. அதே எதிர்பார்ப்புகள் அவளுக்கும் உங்கள் மீது இருக்கும்.. அதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்..”

“வாயைத் திறந்துச் சொன்னால்தானே புரிஞ்சுக்க முடியும்.. டாக்டர்..? ராட்சசி..! வாயைத் திறக்காமலே என்னை டார்ச்சர் பண்ணிக்கிட்டு இருக்காளே...”

அவன் பேச்சில் அவனைப் பார்த்த அமிர்தாவின் விழிகளில் வியப்பின் மின்னல் கோடிட்டு மறைந்தது.. அவள் வாய் விட்டுச் சிரித்தாள்.. அந்தச் சிரிப்பில் தெரிந்த சிநேகிதத்தில் அவன் மனம் நெகிழ்ந்தான்..

“நீங்க தஞ்சாவூருக்குக் கிளம்பிப் போங்க நரேந்திரன்.. அவளைக் கூப்பிடுங்க.. அவ கிளம்பி வந்திருவா..”

“அவளைப் பற்றி உங்களுக்குத் தெரியாது டாக்டர்..”

அவன் அலுத்துக் கொண்டபோது பழைய புதிர் பார்வையை பார்த்த அமிர்தா மென்சிரிப்புடன்..

https://t.me/tamilpdfebooks

"உங்களுக்கு மட்டும் தெரியுமா மிஸ்டர் நரேந்திரன்..?" என்று கேட்டாள்..

"ஏன் தெரியாது..? அவ யாருன்னு லிஸ்ட் போட்டு சொல்கிறேன் கேளுங்க.. பிடிவாதக்காரி.. அழுத்தக்காரி.. வீம்புக்காரி.. ஈகோ பிடிச்சவ.. ராட்சசி.. அப்புறம்.."

"போதும் நரேந்திரன்.. இதுவே அதிகம்.."

"இன்னும் இருக்குங்க.."

"அதை நீங்களே வைச்சுக்கங்க... இத்தனை சொன்னீங்களே... இது எல்லாத்துக்கும் மேலா ஒன்னே ஒன்னு இருக்கு... அதைச் சொல்லலையே மிஸ்டர் நரேந்திரன்.."

"அது என்னங்க.. எனக்குக் கூடத் தெரியாத ஒன்னே ஒன்னு.."

"அவ சுரேந்திரனைப் பெத்த அம்மா.."

அமிர்தா அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.. நரேந்திரன் அவளையே பார்த்தான்..

"மகனுக்காக அவ எதையும் செய்வா நரேந்திரன்.. நீங்க கூப்பிட்டா உங்ககூட கட்டாயம் கிளம்பிவருவா.. ஊர்மிளாவுக்கு இந்த வாழ்க்கையில் இருக்கிற ஒரே பற்றுக்கோடு அவளோட மகன் மட்டும்தான் மிஸ்டர் நரேந்திரன்.. இவன் முகத்தைப் பார்த்துத்தான் அவ மன ரணத்தை மறந்து வாழ்ந்துக்கிட்டிருக்கா.."

"ஆனா டாக்டர்.. மன ரணம் அவளுக்கு ஏன்வரனும்..? எனக்குத்தான் அது வரனும்.. என் மகனுக்கு

https://t.me/tamilpdfebooks

மூன்று வயசாகுது.. இவன் பிறந்தது கூட எனக்குத் தெரியாதுன்னா என் மன ரணம் எப்படியிருக்கும் டாக்டர்..?"

அவனின் கேள்வியில் அவனையே ஊன்றிப் பார்த்த அமிர்தா தீர்க்கமாக தலையை அசைத்து அவன் கூற்றை மறுத்தாள்...

"நிச்சயமாய் அவ மன ரணத்தை விட அதிகமான ரண காயம் உங்க மனசுக்கு உண்டாகி இருக்காது நரேந்திரன்.."

ஊர்மிளாவின் மௌனத்தை தாங்கிக் கொண்டு காரை ஓட்டிக் கொண்டிருந்த நரேந்திரனுக்கு அமிர்தா சொல்வதில் உண்மை இருக்கிறதோ என்று தோன்றியது..

கண்ணில் வழியும் கண்ணீரோடு சோகச் சித்திரமாய் காரின் கண்ணாடி ஜன்னல்களின் வழியாக இருளுக்குள் விழிபதித்திருந்தவளின் முகம் திருப்பி உன் மனதில் என்னடி ரணமிருக்கு என்று கேட்கத் தோன்றியது அவனுக்கு..

18

உன் மனதுக்குள்ளே எண்ணம் மறைத்த
அழகான ராட்சசி நீ....

அந்த பின்னிரவுப் பொழுதிலும் அந்த பிரம்மாண்டமான பல அடுக்கு மாடிகளைக் கொண்ட மருத்துவ மனையின் விளக்குகள் பகல் போல எரிந்து கொண்டிருந்தன..

https://t.me/tamilpdfebooks

மருத்துவ மனையின் வாசலிலும் உள்ளேயும் நடமாட்டம் இருந்தது.. சீருடை அணிந்த நர்ஸ்களும்.. பணியாள்களும்.. வெள்ளைக் கோட்டும் கழுத்தில் ஸ்டெதஸ் கோப்புமாக இருந்த டாக்டர்களும் இங்கும் அங்குமாக நடந்து கொண்டிருந்ததில் அது பின்னிரவுப் பொழுது போலவே தோன்றவில்லை..

ஊர்மிளாவிடம் மகனைக் காணப் போகும் பரபரப்பு தெரிந்தது.. ஒருநாள் பிரிவை ஒரு யுகம் போல அவள் உணர்ந்தாள்..

‘என் செல்வம்..’ பெற்ற வயிறு துடிதுடித்தது..

அவளின் மனநிலையை அறிந்தவனைப் போல எதுவும் பேசாமல் அவளை அழைத்துக் கொண்டு லிப்டில் புகுந்தான் நரேந்திரன்.. அவர்கள் இறங்க வேண்டிய தளம் வந்ததும் வெளிப்பட்டவனைப் ஓட்டமும் நடையுமாக பின் தொடர்ந்தாள் ஊர்மிளா..

சுரேந்திரன் இருந்த அறையின் கதவை நரேந்திரன் திறந்துதான் தாமதம்.. அவனை முந்திக் கொண்டு அவள் உள்ளே பாய்ந்தாள்..

கட்டிலில் கண்மூடிப் படுத்திருந்த சுரேந்திரனை அவள் தொட்ட மறு நொடியில் கண்விழித்தான் குழந்தை..

“அம்மா..” என்ற அவன் அழைப்பில்..

“சுரேன்..” என்று கட்டிக் கொண்டாள் ஊர்மிளா..

அந்த அறையிலிருந்த இன்னொரு கட்டிலில் படுத்திருந்த அமிர்தா எழுந்து அமர்ந்திருந்தாள்.. தாயும்

https://t.me/tamilpdfebooks

மகனும் ஒன்று சேர்ந்ததை நெகிழ்வுடன் பார்த்தவளின் பார்வை நரேந்திரனின் பார்வையை சந்தித்தது..

அவன் அசையாமல் நின்றான்... அவனிடம் சொல்லாத அனைத்தையும் சுரேன் ஊர்மிளாவிடம் ஒப்பிப்பதை திகைப்புடன் பார்த்தான்..

"கை வலிச்சதும்மா.. இங்கே ஊசி போட்டாங்க.. பெரிசா ஒரு டிரெயின் போல இருந்ததும்மா.. அதுக்குள்ளே கண்ணை மூடிக்கிட்டு டிராவல் பண்ணிட்டு வரச் சொன்னாங்கம்மா.."

'இவன் என்ன சொல்கிறான்..?' பதைப்புடன் தோழியைப் பார்த்த ஊர்மிளாவுக்கு தைரியம் கொடுக்கும் வகையில் புன்னகை செய்தாள் அமிர்தா..

"பயப்படாதே.. ஸ்கேன் பண்ணினதைத்தான் உன் மகன் அப்படிச் சொல்றான்.."

"டாக்டர்ஸ் என்ன சொல்கிறாங்க அமிர்தா.."

"நான் நினைத்ததைத்தான் சொல்கிறாங்க... சர்ஜரி தேவையில்லைன்னு ஃபீல் பண்றாங்க.. உன் ஹஸ்பெண்ட் ஃபாரினில இருந்து ஸ்பெசலிஸ்டை வர வைக்க சொல்லியிருக்கார்.. அவர் இந்த வீக் எண்டில இந்தியாவுக்கு வந்திருவார்.. அவர் வந்ததும் அவரோட ஒபினியனையும் கேட்டுக்கிட்டு ட்ரீட்மெண்டை கண்டினியு பண்ணுவாங்க.."

"சுரேனோட அப்பான்னு மட்டும் சொல்லு அமிர்தா.."

"ஆமாம் டாக்டர்.. சுரேனோட அப்பா இவளுக்கு யாரோதானே.. அதனால இவ ஹஸ்பெண்டுன்னு

https://t.me/tamilpdfebooks

சொல்லிராதீங்க.. எனக்குன்னு வந்து வாய்ச்சிருக்கா பாருங்க.. என்னவோ சொன்னீங்க.. அது.. இதுன்னு.. கேட்டிங்கள்ல.. இதுதான் இவ.. ராட்சசி..!"

நரேந்திரன் அலைச்சலும் கோபமும் சேர்ந்து அவளைத் திட்டித் தீர்த்தான்.. அமிர்தா தோழியை மௌனப் பார்வை பார்த்து விட்டு..

"நீங்க போய் ரெஸ்ட் எடுங்க நரேந்திரன்.. நேற்றுக் காலையில இருந்து ஒரே டிராவல் மயம்தான்... ஒரு செகண்ட்கூட ஓய்வில்லை..." என்றாள்..

"அதை உங்க பிரண்டுகிட்டச் சொல்லுங்க.."

"நிச்சயமாச் சொல்றேன்.. நீங்க போங்க.."

நரேந்திரன் கடுங்கோபத்துடன் ஊர்மிளாவை முறைத்தான்.. அடித்து விடுவானோ என்று நினைத்தாள் அமிர்தா.. ஊர்மிளாவுக்கு அந்த பயமெல்லாம் இல்லை.. அவள் பாட்டுக்கு என்னவோ செய்து கொள் என்று மகனுடன் பேசிக் கொண்டிருந்தாள்..

"விடுடி.."

ஊர்மிளாவை விலக்கி விட்டவன் சுரேந்திரனின் நெற்றியில் விழுந்த முடியைக் கோதி விட்டு மகன் நெற்றியில் முத்தம் கொடுத்தான்..

"அப்பா நீ சொன்னபடி உன் அம்மாவை அழைச்சுக் கிட்டு வந்துட்டேன்.. இப்ப சந்தோசம் தானே..?"

"ம்ம்ம்.."

"பேசுடா.."

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் பாசத்துடன் கெஞ்சினான்.. அவனது கரகரப்பான குரலில் ஊர்மிளா உதட்டைக் கடித்துக் கொண்டு வேறு பக்கமாக திரும்பிக் கொண்டாள்.. அமிர்தாவுக்கு அந்தத் தந்தை மகனின் உரையாடலைக் கவனிக்கும் ஆர்வம் ஏற்பட்டது..

"அம்மாகிட்டப் போகனும்.."

"இதுதான் உன் பேச்சா..?"

பொறாமையுடன் மகனை மனைவியிடம் கொடுத்தான்.. ஊர்மிளாவின் கழுத்தைக் கட்டிக் கொண்ட மகனையும்.. அவன் பிஞ்சுக் கையின் விரல்களைப் பிடித்து அவற்றில் முத்தம் பதித்துக் கொண்டிருந்த மனைவியையும் பார்த்தவன் அமிர்தாவிடம் திரும்பி..

"எல்லாம் இவ சொல்லிக் கொடுக்கிறதுங்க.. அப்பாகிட்ட மகன் பேசத் தயங்கறதைப் போல வளர்த்து வைச்சிருக்கிறா.." என்று கோபப்பட்டான்..

சுரேந்திரனைத் தட்டிக் கொடுத்தபடி அமிர்தாவைப் பார்த்த ஊர்மிளா..

"நான் சொல்லிக் கொடுக்காமல்தான் இவரைப் பார்த்ததுமே அப்பான்னு என் மகன் சொன்னானா அமிர்தா..?" என்று நிதானமாக கேட்டாள்..

'அது இவளுக்கு எப்படித் தெரியும்..?'

நரேந்திரன் புருவங்களைச் சுருக்க.. அமிர்தா சிரித்தாள்..

நரேந்திரனைப் பார்த்தவுடன் சுரேந்திரன் "அப்பா.." என்றுதான் அழைத்தான்..

https://t.me/tamilpdfebooks

அதில நரேந்திரனோ ஆச்சரியப்பட்டுப் போனான்.. தஞ்சை மருத்துவ மனையில் அவன் மகனைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு வெளியேறிய போது சுரேந்திரன் தூங்கிக் கொண்டிருந்தான்... வேனில அவனைப் படுக்க வைத்துக் கதவை மூடிய அந்த நொடியில் விழித்துக் கொண்டவன் ‘அம்மா’ என்றுதான் அழைத்தான்.. விமான நிலையத்தில் அழுது கொண்டிருந்த குழந்தையைச் சமாதானப் படுத்தி அம்மாவிடம் தான் போகிறோம் என்று அமிர்தா சொல்லியபடி வேனை விட்டு இறங்கிய போது நரேந்திரனை குழந்தை பார்த்தான்..

‘யார்ன்னு தெரியாம அதிகமா அழுது வைக்கப் போகிறான்.:’

நரேந்திரன் இப்படித்தான் நினைத்தான்.. ஆனால் குழந்தை அவனைக் கண்டதும் கை நீட்டி..

“அப்பா..” என்று அமிர்தாவிடம் சொன்னான்..

நரேந்திரன் மெய்சிலிர்த்துப் போனான்.. அவன் தூக்கியதும் சுரேன் திமிறவில்லை.. அவன் முகத்தை.. முகத்தைப் பார்த்தபடி அவன் தோளில் கை போட்ட படி பேசாமல்தான் வந்தான்..

அதை ஊர்மிளா சுட்டிக் காட்டியதில்..

“ரொம்பப் பெருமைதான்..” என்றான் நரேந்திரன்..

“பெருமைக்காக இதைச் செய்யலை அமிர்தா.. கடமைக்காக செய்தேன்.. அம்மான்னு என் முகத்தை என் மகன் அடையாளம் கண்டுக்கிட்டு கூப்பிட்ட அன்னைக்கே

https://t.me/tamilpdfebooks

இவர் போட்டோவைக் காட்டி.. இவர்தான் உன் அப்பா.. அப்பான்னு கூப்பிடுன்னு என் மகனுக்கு அடையாளம் காட்டிக் கூப்பிடவும் பழக்கி விட்டேன்.. என் மகனுக்கு நான் சொல்லிக் கொடுக்கிறதெல்லாம் இப்படித்தான் இருக்கும் அமிர்தா.. மத்தவங்களைப் போல நெகடிவ்வா எதையும் சொல்லிக் கொடுக்கிற பழக்கம் எனக்குக் கிடையாது.."

"மத்தவங்கன்னா..? யாரைடி சொல்ற..?"

நரேந்திரனுக்கு ஊர்மிளா பதில் சொல்லவில்லை.. அவள் மகனுடன் சங்கமித்திருந்தாள்.. அது நேரம் வரை அவளிடம் இருந்த தவிப்பும்.. துடிப்பும்.. துயரமும் காணாமல் போய்.. அமைதி அவள் முகத்தில் நிலவியதில் ஆச்சரியம் கொண்டான் நரேந்திரன்...

அமிர்தா சொன்னது எத்தனை உண்மையான வார்த்தை..!

ஊர்மிளாவின் துயரைத் துடைக்கும் மந்திர கோலாக சுரேந்திரன் இருக்கிறான் என்பதை கண்கூடாக கண்ட நரேந்திரன்..

'எனக்கு யாரிருக்கா..?' என்ற கேள்வியை தனக்குள் எழுப்பிக் கொண்டான்..

"ஓகே டாக்டர்.. குட் நைட்.. நான் காலையில் வர்றேன்.." என்றவன் நின்று.. ஊர்மிளாவைப் பார்த்தான்..

அவள் அவனைக் கவனிக்காமல் மகனைப் படுக்க வைத்து போர்த்தி விட்டுக் கொண்டிருந்தாள்..

https://t.me/tamilpdfebooks

"இவளையும் தூங்கச் சொல்லுங்க டாக்டர்.. ஆளைப் பாத்தா தூங்கி பல நாள்களானதைப் போலத் தெரியறா.." என்றான் அவன்..

ஊர்மிளா தோழியை ஆட்சேபப் பார்வை பார்த்தாள்..

"ராட்சசிக்கு இந்த வார்த்தையைக் கூட கேட்டுக்க முடியலை.. தூங்கச் சொல்லுங்க டாக்டர்.. நான் சொன்னா இந்த வீம்புக்காரி கேட்க மாட்டா... நீங்க சொன்னா கேட்டாலும் கேட்கலாம்..."

நரேந்திரன் கிளம்பிப் போய் விட்டான்.. அவனுடைய அழுத்தமான காலடியோசை தேய்ந்து மறையும் வரை மௌனமாக இருந்த அமிர்தா..

"இவர் ஒன்றும் அத்தனை கொடுமைக்காரர் இல்ல ஊர்மி.." என்றாள்..

"மே..பி.."

மகனின் பக்கத்தில் அணைவாக தலையணையை வைத்து ஊர்மிளா தரையில் பெட்சீட்டை விரித்துப் படுத்தபடி முணுமுணுத்தாள்.. அமிர்தா யோசனையுடன் பேச்சைத் தொடர்ந்தாள்..

"இவரோட கடமைகளில இருந்து தப்பிச்சு ஒடுகிறவரைப் போல தெரியலைடி.. ஹி இஸ் ஸோ குட்.."

"ரொம்பவும் நல்லவராவும் இருக்கக் கூடாது அமிர்தா..."

"ம்ம்ம்.."

"கொஞ்சமாவது பொல்லாத்தனமும் சேர்ந்திருக்கனும்.. அப்பத்தான் யார் என்ன சொன்னாலும் அதில் எந்த அளவுக்கு உண்மையிருக்குன்னு கண்டு பிடிக்க முடியும்.."

https://t.me/tamilpdfebooks

"நீ சொல்கிறதும் சரிதான்.."

அமிர்தா அவள் படுத்திருந்த கட்டிலில் படுத்தாள்.. அறையில் மெலிதாக விளக்கு எரிந்து கொண்டிருந்தது.. தோழிகள் இருவரின் மனங்களும் சமனப் பட்டிருந்தன.. சுரேந்திரன் பத்திரமாக.. பாதுகாப்பாக இருக்கிறான்.. அவனுக்கான மருத்துவ சிகிச்சை ஆரம்பமாகி விட்டது என்பதில் அவர்கள் இருவருமே நிம்மதியாக உணர்ந்தார்கள்..

"எது எப்படின்னாலும் உன் ஹஸ்பெண்டாலதான சுரேனோட ட்ரீட்மெண்டுக்கு வழி கிடைச்சிருக்கு.. அதை நீ நினைச்சுப் பார்க்கனும்டி.." என்றாள் அமிர்தா..

"அதை நினைச்சுப் பார்த்ததினாலதான்.. அவர் கூடக் காரில் கிளம்பி வந்தேன்.. இல்லேன்னா.. அவர் இருக்கும் இடத்தில் கூட நான் நின்னிருக்க மாட்டேன்.." என்றாள் ஊர்மிளா..

அமிர்தா பெருமூச்சு விட்டாள்.. கணவனுக்கும்.. மனைவிக்குமான அந்தரங்கச் சண்டையில் அந்தரங்கத் தோழியாக இருந்தாலும் மூக்கை நுழைக்கக் கூடாது என்பதில் அவள் மௌனமானாள்..

"இவர் தூங்கப் போகிறாரே.. எங்கே போய் தூங்கப் போகிறாராம்டி..?" என்று கேட்டாள்..

"இதை அவர்கிட்டயே கேட்டிருக்க வேண்டியது தானே..?"

"சொல்லுடி.."

https://t.me/tamilpdfebooks

"ஒருவேளை ஹாஸ்பிடல் வெராண்டாவில படுத்துத் தூங்குவாரோ..?"

"அமிர்தா.."

"அவர் செய்தாலும் செய்வார்டி.. பெண்டாட்டி பிள்ளைன்னா மனுசன் இந்த உருகு உருகுகிறாரே.."

"ப்ம்ச்.. போதும்டி.."

ஊர்மிளா சலிப்புடன் முதுகு காட்டி படுத்துக் கொண்டாள்..

"ஓகே.. சொல்றேன் கேட்டுக்க.." என்றாள் அமிர்தா..

"சொல்லு.."

"ஹாஸ்பிடலுக்குப் பக்கத்தில் இருக்கிற ஸ்டார் ஹோட்டலில அவர் ரூம் போட்டிருக்கார்.. அங்கேதான் தூங்கப் போயிருக்கார்.."

"ஓ..."

ஊர்மிளா மௌனமாகி விட்டாள்.. அமிர்தா புரண்டு படுத்து தோழியின் முகம் பார்த்தாள்.. அவள் எதையோ சொல்ல விழைவதை உணர்ந்த ஊர்மிளா..

"என்னடி..?" என்றாள்..

"இனி சுரேனுக்கு என்னோட ட்ரீட்மெண்ட் தேவையில்லை ஊர்மி.. இங்கேயிருக்கிற டாக்டர்ஸ்கிட்ட இவனோட மெடிகல் ஹிஸ்டரியைச் சொல்லிட்டேன்.. அவங்க ரிப்போர்ட்ஸைப் படிச்சுட்டு ட்ரீட்மெண்டை ஆரம்பிச்சுட்டாங்க.. இனி அவங்கதான் எனக்கு இவனைப் பத்திச் சொல்லனும்.."

https://t.me/tamilpdfebooks

"தேங்க்ஸ் அமிர்தா..." ஊர்மிளாவின் குரல் தழதழத்தது..

"அடி வாங்கப் போறடி..." தோழியை கடிந்து கொண்டாள் அமிர்தா..

"உனக்குப் பட்டிருக்கிற நன்றிக்கடனை எந்த ஜென்மத்திலயும் தீர்க்க முடியாதுடி அமிர்தா.."

"நன்றிக்கடன்னு பிரிச்சுப் பேசாதேடி.. உனக்கு ஒன்னுன்னா என்னாலே பார்த்துக்கிட்டிருக்க முடியுமா..? நான் சொல்ல வந்ததே வேறு.."

"சொல்லு அமிர்தா.."

"என் வீட்டுக்குக் கூடப் போகாம அப்படியே கிளம்பி வந்துட்டேன் ஊர்மி.. மாமியார் சுஜியைப் பார்த்துக்கு வாங்கன்னாலும் சுரேன் உன்னைத் தேடறதைப் போல. அவளும் என்னைத் தேடுவா.."

ஊர்மிளாவுக்கு தோழி சொல்ல வருவது புரிந்தது..

"காலையில நீ ஊருக்குக் கிளம்பிருடி.." என்றாள்..

"தேங்க்ஸ்டி ஊர்மி.." என்றாள் அமிர்தா..

"இப்ப நீதான் அடிவாங்கப் போற.."

மறுநாள் காலையில் நரேந்திரன் அறைக்கு வந்த போது அமிர்தா ஊருக்குப் போக கிளம்பித் தயாராக இருந்தாள்..

"என் டியுட்டி ஓவர் மிஸ்டர் நரேந்திரன்.. சுரேனைப் பார்த்துக்க அவ அம்மா வந்து சேர்ந்துட்டா.. நான் என்

https://t.me/tamilpdfebooks

வீட்டுக்குப் போயாகனும்.. ப்ளீஸ்.. என்னை தஞ்சைக்கு அனுப்பி வைச்சிருங்க..” என்றவளை நரேந்திரன் மறுத்துப் பேசவில்லை..

அவளை திருச்சிக்கு விமானத்தில் அனுப்பி வைத்தான்.. அங்கே அமிர்தாவின் கார் அவளுக்காக காத்திருக்கும் என்று அவள் சொன்னாள்.. கிளம்பும் முன்னால் அவனைப் பார்த்துக் கையசைத்து விடை பெற்றவளுக்கு கையாட்டி விடை கொடுத்த போது..

‘இவள் மட்டும் இல்லையென்றால்.. என் மகனுடன் நான் சேர்ந்திருப்பேனா..?’ என்ற கேள்வி அவன் மனதில் எழுந்தது...

அமிர்தாவைத் தாங்கிக் கொண்ட விமானம் திருச்சியை நோக்கிப் பறந்தது...

19

கண்ணிலே கதை பேசி
வாயிலே அதை மறைக்கும்
அழகான ராட்சசி நீ....

விடிவதற்கு முன்னால் எழுந்து விட்டாள் ஊர்மிளா.. கட்டிலில் சுரேந்திரன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான்.. நர்ஸிடம் அவனைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு.. குளியலறைக்குள் புகுந்தாள்..

https://t.me/tamilpdfebooks

குளித்து உடைமாற்றி வெளியே வந்தவளை எதிர் கொண்டான் நரேந்திரன்..

"இன்னைக்கு ஸ்பெசலிஸ்ட் வந்திருவார்.." என்றான்..

வேறு திக்கில் பார்த்தபடி "ம்ம்ம்.." என்று முணுமுணுத்தாள் ஊர்மிளா... அறையிலிருந்த நர்ஸ் அவர்களை விசித்திரமாகப் பார்த்தபடி சுரேந்திரனை நிமிர்ந்து உட்கார வைத்து பி.பிக்கான டெஸ்டை எடுத்துக் கொண்டிருந்தாள்..

"அறிவிருக்கா உனக்கு..?" நரேந்திரன் அடிக்குரலில் சீறினான்..

"இல்லைன்னா பரவாயில்லை.. நான் அட்ஜஸ்ட் பண்ணிக்கிறேன்.. உங்ககிட்ட அறிவைக் கடன் கேட்டா அப்ப ஏன்னு கேளுங்க.."

ஊர்மிளா அலட்சியத்துடன் சொல்லி விட்டு சுரேந்திரனை வெந்நீரில் குளிக்க வைத்து அழைத்து வந்தாள்.. சலவை உடுப்பை மாற்றிவிட்டவள்..

"மூன்று நாள் அழுக்குத் துணி சேர்ந்திருக்கு.. எங்கே வாஷ் பண்ணனும்னே தெரியலை.." என்று தனக்குள் சொல்லிக் கொள்வதைப் போல சொன்னாள்..

"அதுக்கு ஏதாவது வழி பண்றேன்.." என்றான் நரேந்திரன்..

ஊர்மிளா பதில் சொல்லாமல் ஹாஸ்பிடலில் கொடுக்கப் பட்டிருந்த சுரேந்திரனுக்கான காலை உணவை அவனுக்கு ஊட்ட ஆரம்பித்தாள்..

https://t.me/tamilpdfebooks

'இதுக்கு மட்டும் பதில் சொல்ல மாட்டாளே..'

கடுப்புடன் அவளை ஊன்றிப் பார்த்தான் நரேந்திரன்.. சாம்பல் வண்ணக் காட்டன் சேலையை மடிப்புக் கலையாமல் அவள் கட்டியிருந்த நேர்த்தியில் அவன் மனம் தடுக்கி விழுந்தது.. அவளது நீண்ட பின்னல் அசைந்தாடியதில் அவன் மனம் அசைந்தது.. அவள் ஊட்டுவதற்கு வாகாக வாயைக் குருவிக் குஞ்சைப் போல திறந்த சுரேந்திரனையும்.. அவனை மடியில் உட்கார வைத்துக் கதை சொல்லியபடி ஊட்டி விட்ட அவன் மனைவியையும் பார்த்த நரேந்திரன் அந்தக் காட்சியில் தன்னை இழந்தான்..

'இவள் என் மனைவி..! இவன் என் மகன்..!'

அவன் மனம் பெருமிதத்தில் துள்ளியது.. சுரேந்திரனின் வாயைத் துடைத்து விட்டு சீராக்கிய ஊர்மிளா அவனை படுக்க வைத்தபோது நர்ஸ் வந்து விட்டாள்.. காலையில் சுரேந்திரன் சாப்பிட வேண்டிய மாத்திரைகளை அவள் கொடுக்க ஊர்மிளா அதை வாங்கி சுரேந்திரனுக்கு விளையாட்டு காட்டியபடி விழுங்க வைத்து விட்டாள்..

"சீப் டாக்டர் வர்றார்.." நர்ஸ் எச்சரித்தாள்..

உதவி டாக்டர்கள் புடைசூழ உள்ளே வந்த சீப் டாக்டர் நரேந்திரனிடம் கை குலுக்கினார்.. சுரேந்திரனிடம் சிரித்தார்.. ஊர்மிளாவிடம் தலையசைத்து அவளது வணக்கத்தை ஏற்றுக் கொண்டார்.. சுரேந்திரனை பரிசோதித்து முடித்தவர் அவனுடைய மெடிகல் ரிப்போர்ட்ஸை ஆராய்ந்தாள்..

https://t.me/tamilpdfebooks

"நான் நினைத்ததுதான் மிஸ்டர் நரேந்திரன்.. சர்ஜரி தேவையில்லை.. கண்டினியுஸா டேப்லெட்ஸ்ஸீம் இன்ஜெக்சனும் எடுத்துக்கிட்டாப் போதும்.. ரொடின் மெடிகல் செக் அப்புக்கு வந்துடனும்.. எதுக்கும் இன்னைக்கு வர்ற ஸ்பெசலிஸ்டோட ஒபினியன் என்னங்கிறதை கேட்டுட்டு ஒரு முடிவுக்கு வரலாம்.." என்றார்..

"ஓகே டாக்டர்.." நரேந்திரன் அவருடன் பேசியபடி அறையை விட்டு வெளியே நடந்தான்..

ஊர்மிளாக்கு நிம்மதியாக இருந்தது.. சர்ஜரி இல்லை யென்பதில் அவள் ஆறுதலாக உணர்ந்தாள்.. தொடர்ந்த பரிசோதனைகளின் அலுப்பினாலும்.. மாத்திரைகளின் உபயத்தினாலும் சுரேந்திரன் தூங்கி விட்டான்.. அவன் பக்கத்தில் உட்கார்ந்து சன்னமாக தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தாள் ஊர்மிளா.. நரேந்திரன் உள்ளே வந்தான்..

"தூங்கறவனை ஏன் டிஸ்டர்ப் பண்ற..?" என்று கேட்டான்..

மகனைத் தட்டிக் கொடுப்பதை நிறுத்தி விட்டாள் ஊர்மிளா.. அறையிலிருந்த நர்ஸிடம்..

"குழந்தையைப் பார்த்துக்கங்க சிஸ்டர்.. நாங்க சாப்பிட்டுட்டு வர்றோம்" என்றான் நரேந்திரன்..

அவள் தலையசைத்ததும் ஊர்மிளாவை பார்த்தான்.. அவள் மௌனமாக எழுந்து நின்றாள்.. நர்ஸின் பார்வை அவர்களை அளப்பதை நரேந்திரன் உணர்ந்தான்..

https://t.me/tamilpdfebooks

பல்லைக் கடித்தபடி வெளியே நடந்தான்.. இடைவெளி விட்டுப் பின்னால் நடந்தாள் ஊர்மிளா.. சற்றுத் தொலைவு போனதும் அவளைத் திரும்பிப் பார்த்து முறைத்தான் நரேந்திரன்..

"கூட வந்து தொலை.. பாக்கிறவங்க உன்னை என் பெண்டாட்டின்னு சொல்ல மாட்டாங்க.. தள்ளிக்கிட்டு வந்திருக்கேன்னு சொல்லிருவாங்க..." என்று வெடுவெடுத்தான்..

அந்த வார்த்தைகளில் முகம் சுளித்தாள் ஊர்மிளா..

"இப்படிப் பேச வேணாம்.. எனக்குப் பிடிக்கலை.." வெடுக்கென்று சொன்னாள்..

"எனக்கும்தான் நீ நடந்துக்கிறது பிடிக்கலை.." எரிச்சல்பட்டான் நரேந்திரன்..

"என்ன பிடிக்கலை..?"

"உனக்கும் எனக்கும் நடுவில் இருக்கிற பிரச்னையை ஊருக்கே மைக் வைச்சு நீ சொல்லனுமா..?"

"ஆஹா.. அதுக்குத்தானே நான் கிளம்பி வந்திருக்கேன்...?"

"பிள்ளையைப் பார்க்கத்தானே வந்திருக்க..?"

அவன் கேள்வியில் அவள் மனம் கூம்பியது.. அவளுக்கு அந்தக் கேள்வியின் தோனியைப் பிடிக்கவில்லை.. அவளென்ன அவன் பிள்ளையைப் பார்த்துக் கொள்ள வந்திருக்கும் வேலையாளா..?

"என் பிள்ளையைப் பார்த்துக்க வந்திருக்கேன்.."

https://t.me/tamilpdfebooks

"உன் பிள்ளை வேற.. என் பிள்ளை வேறயாடி..? இப்படிப் பேசியே கடுப்படி.. ஒரு முடிவோடதான் வந்திருக்கயா..?"

அவர்கள் வழக்கடித்தபடி லிப்டுக்குள் நுழைந்தார்கள்.. லிப்டில் கூட்டம் இருந்ததில் அவரவர் வாய்க்குள் அவரவருக்குத் தோன்றியதைத் திட்டியபடி ஒருவரையொருவர் முறைத்துக் கொண்டு நின்றிருந்தார்கள்.. கூட வந்தவர்கள் அவர்களை விசித்திரமாகப் பார்த்தபடி லிப்டை விட்டு வெளியேறினார்கள்.. கூடவே அவர்களும் வெளியே வந்தார்கள்..

"அங்கே நர்ஸ் பார்க்கிற அதே பார்வையை இங்கே எல்லோரும் பார்த்து வைக்கிறாங்க.." அவன் தலையில் அடித்துக் கொண்டான்..

அவர்களைக் கடந்து போனவர் நின்று பார்த்ததில்..

"என்ன..?" என்று அவரை அதட்டினான்..

"ஒன்னுமில்லை.." அவர் அவசரமாக நகர்ந்தார்..

"வந்திருக்கிறது ஹாஸ்பிடலுக்கு.. இதில மத்தவங்களை வேடிக்கை பார்க்க நின்னுடறாங்க.." கோபத்துடன் அவன் பொரிந்தான்..

ஊர்மிளாவுக்கு இம்சையாக இருந்தது.. அவனது கோபத்தில் வேறு யாரும் நின்று அவனை வேடிக்கை பார்த்து வாங்கிக் கட்டிக் கொள்ளப் போகிறார்களோ என்று பயந்தாள்.. நல்ல வேளையாக அப்படி எதுவும் நடக்கவில்லை.. அவர்களைக் கடந்து போய்

https://t.me/tamilpdfebooks

வந்து கொண்டிருந்தவர்கள் பரபரப்புடன் விரைந்து கொண்டிருந்தார்கள்..

கேண்டினுக்குள் நுழைந்ததும் அவன் அவள் முகத்தைப் பார்த்தான் உடனே அவள்..

"இரண்டு இட்லி போதும்.." என்றாள்..

"இதை விட்டா வேற சொல்ல மாட்டியா..?" அதற்கும் எரிந்து விழுந்தான்..

"எனக்கு இதுதான் வேணும்.." அவள் பிடிவாதமாக சொன்னாள்..

கோபத்துடன் எதையோ பேசப்போன நரேந்திரன் நிதானித்தான்.. அவனுக்கு அவளின் மனநிலையை புரிந்து கொள்ள முடிந்தது.. உடல்நிலை சரியில்லாத மகனுக்கு சிகிச்சை எடுக்க வந்த இடத்தில் அவள் மனம் சாப்பாட்டை நினைத்துப் பார்க்காது என்பதில் அவள் சொன்ன இட்லியை அவனுக்கும் சேர்த்து ஆர்டர் கொடுத்து விட்டு அவளைப் பார்த்தான்.. அவள் நிலம் பார்த்துக் கொண்டிருந்தாள்..

'இதுதான் இவகிட்ட..' அவனுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

"நான் முதலிலேயே சொல்லியிருக்கேன்.."

"என்னன்னு..?"

"நான் சுரேனின் அப்பா.. நீ அம்மா.."

"நடிக்கவா வந்திருக்கோம்..?"

அவளுடைய இடக்கான கேள்வியில் இமைக்காமல் அவளையே பார்த்தான் நரேந்திரன்.. அவள் நிமிர்ந்து பார்த்தால்தானே அவன் பார்வையை உணர்வதற்கு..?

https://t.me/tamilpdfebooks

தரையிலே புதையல் இருப்பதைப் போல அவள் வெகு தீவிரமாக தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்..

“நீ பண்ணி வைக்கிற அழும்பில அப்படித்தாண்டி நினைக்கப் போறாங்க..” என்றான் அவன்..

“என்னத்தை அழும்பைக் கண்டு பிடிச்சுட்டிங்க..?”

“இப்ப பூமியிலே புதையலைத் தேடற பாரு.. இதுதாண்டி அழும்பு.. கொஞ்சமாவது முகத்தைப் பார்த்துப் பேசித் தொலைடி.. நீயாப் பேச மாட்ட.. நான்தான் பேசறேனில்ல.. ஆமாம்.. இல்லைங்கிற அந்த ஒற்றை வார்த்தையையாவது முகத்தைப் பார்த்துப் பேசித் தொலைச்சா என்ன..?”

நரேந்திரனின் கோபத்தில் ஊர்மிளா உதட்டைக் கடித்தாள்.. அவர்களுக்கான இட்லி வந்தது..

“கொட்டிக்க..” என்று கோபம் குறையாமல் ஒரு பிளேட்டை அவள் முன்னால் நகர்த்தி வைத்தான்..

“எனக்கு எடுத்துக்கத் தெரியும்..” அவள் வீம்புடன் தட்டை இழுத்துக் கொண்டாள்..

“இது.. இது.. இதைத்தான்..” நரேந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே..

“நீங்க எதிர்பார்த்தீங்களா..?” என்று கேட்டு வைத்து அவனது கோபத்தை கொந்தளிக்க வைத்தாள் ஊர்மிளா..

“ஊஹீம்.. இது கொஞ்சம் கூட நல்லாவே இல்லை..” என்றான் அவன்..

“எது..? இட்லியா..?” அவள் அலட்டிக் கொள்ளவில்லை..

https://t.me/tamilpdfebooks

"இதோ பார்.. சொஸைட்டியில் நான் வி.வி.ஐ.பி இந்த ஹாஸ்பிடலின் சீப் டாக்டர் எனக்கு வேண்டியவர்.."

"உங்க பெருமை எனக்கு எதுக்கு..?"

"உன்கிட்டப் போய் மனுசன் பேசுவானாடி..?"

"பேசவே வேணாம்ன்னுதான் நான் சொல்றேன்.."

"இம்சையே..! நீயும் நானும் எதிரும் புதிருமா முறைச்சுக்கிட்டு நின்னா பாக்கிறவங்களுக்கு வித்தியாசமாத் தெரியும்.. அவங்க நம்மை கவனிக்க ஆரம்பிப்பாங்க.."

"கவனிச்சா கவனிச்சுட்டுப் போகட்டுமே.. நாம என்ன லவ்வர்ஸா..?"

அவள் வேண்டுமென்றே அவனுக்கு வெறியேற்றி விட்டாள்.. அவனுக்கும் அவளின் வீம்பு புரிந்தது.. ஏதாவது ஒருவகையில் அவனிடம் உறண்டை இழுத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு அவள் காத்திருப்பதை அவன் உணர்ந்தான்..

"இன்னைக்கு இல்லைன்னு நீ சொல்ற.. ஆனா ஒருகாலத்தில நாம ரெண்டு பேரும் லவ்வர்ஸ்தாண்டி.."

அவன் ஆழமான குரலில் சொன்னான்.. அலட்சிய முகபாவத்தோடு சாப்பிட்டுக் கொண்டிருந்த ஊர்மிளாவின் கை அப்படியே நின்றது.. அவளுக்குள் அவனது குரல் இறங்கியது.. அவளின் இமையோரங்கள் துடிப்பதை நரேந்திரன் பார்த்தான்..

அவனுக்கும் அவளுக்குமான ஆழ்ந்த காதலை அந்த இமையோரத்துடிப்புகள் அவனுக்கு உணர்த்தின.. காதல்

https://t.me/tamilpdfebooks

என்பது காலத்தைக் கடத்தும் வெற்று விளையாட்டல்ல.. அது ஆன்மாக்களின் உறவு.. அவனுக்காக அவளும்.. அவளுக்காக அவனும் படைக்கப் பட்டிருப்பதைப் போல அவர்கள் இருவரையும் உணரவைக்கும் அற்புத சக்தி படைத்தது காதல்..

காபி வந்தது.. ஊர்மிளாவின் விரல்கள் நடுங்கின.. அவள் பக்கமாக காபியை நகர்த்தி வைத்தான் நரேந்திரன்.. அவள் மனம் கடந்த காலத்தில் இருக்கிறது என்பதை அவளது கைவிரல்களின் நடுக்கம் சொல்லியது..

"நீ என்னைக் காதலிச்சவ ஊர்மிளா.. என்ன ஒன்னு.. இப்ப அந்தக் காதல் உன்னிடம் காணாமல் போயிருச்சு.." நரேந்திரன் நிதானமாகச் சொன்னான்..

மின்வெட்டும் நேரத்திற்குள் ஊர்மிளாவின் பார்வை உயர்ந்து அவன் பார்வையைச் சந்தித்து விட்டுத் தாழ்ந்தது.. அது போன்ற அழகான தருணங்கள் வெகு அரிதாகத்தான் வாய்க்கும் என்பதால் நரேந்திரன் கிடைத்த சொற்ப வினாடியை இறுக்கிப் பற்றிக் கொண்டு அவள் விழிகளுக்குள் ஊடுறிவி பார்த்தான்.. அவள் இதயத்தையே அது ஊடுறிவியதில் அவள் காபியை மேலே சிந்திக் கொண்டு பார்வையை தழைத்தாள்..

"பார்த்து.." என்றான் நரேந்திரன்..

உன்னைப் பார்த்ததினால்தான் காபியை சிதற விட்டேன் என்று சொல்லாமல் அவள் எழுந்தாள்.. கை கழுவப் போனாள்.. அவர்கள் திரும்பியபோது கேண்டின் வாசலில் நரேந்திரனின் கார் டிரைவர் யாரோ ஒரு பெண்ணுடன் காத்திருந்தான்..

https://t.me/tamilpdfebooks

"ஐயா.. இதுதான் எங்க சொந்தக்காரப் பொண்ணுங்க.." என்றான்..

"வணக்கங்கய்யா.." அந்தப் பெண் கை குவித்தாள்..

"ஊர்மிளா.." நரேந்திரன் திரும்பினான்..

என்னங்க என்று ஊர்மிளா கேட்டிருக்க வேண்டும்.. மற்ற மனைவிகள் கணவனின் அழைப்பிற்கு அப்படித்தான் கேட்பார்கள்.. இவள்தான் மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்பட்டு நிற்கிறாளே..

அவள் ஒரு மௌனப் பார்வையை பார்த்து வைக்க.. வந்திருந்த பெண் நரேந்திரனின் கார் டிரைவரை மௌன பார்வை பார்த்து வைத்தாள்..

நரேந்திரனுக்குள் கோபம் எழுந்தது.. இவள் என்ன சொன்னாலும் திருந்த மாட்டாளா என்று பல்லைக் கடித்தான்.. கண்களை மூடி ஒரு மூச்சை ஆழ்ந்து சுவாசித்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.. ஊர்மிளாவை முறைத்தான்.. அவளோ உன் முறைப்பிற்கு நான் ஒன்றும் பயந்தவள் அல்ல என்பதைப் போல விறைப்பாக நின்றிருந்தாள்..

"இந்தப் பெண் நம்ம கார் டிரைவரோட உறவுக்காரப் பெண்.."

'ம்ம்ம்..' என்ற முணுமுணுப்பைக்கூட ஊர்மிளா முணுமுணுக்கவில்லை.. அதற்கு நான் என்ன செய்யட்டும் என்று ஒட்டாத பார்வை பார்த்தபடி நின்றிருந்தாள..

'ஓங்கி ஒரு அப்பு அப்பினா என்ன..?'

https://t.me/tamilpdfebooks

தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள அரும்பாடு பட்டான் நரேந்திரன்.. அவன் என்ன அவனுடன் கூடிக் குடும்பம் நடத்தவா சொல்கிறான்..? அந்த நினைவே இல்லாதவளைப் போலதான் அவள் அவனை விட்டுப் பிரிந்து சென்று விட்டாளே..

அவர்களுடைய மகன் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறான்.. அவன் அருகில் அவர்கள் இருவருமே இருக்க வேண்டும்.. தவிர்க்க முடியாத அந்தச் சூழ்நிலையை மற்றவர்களுக்கு தண்டோரா போட்டு அறிவிக்காமல் இயல்பாக பேசிப் பழகலாமல்லவா..?

அதைக் கூடவா அவளால் செய்ய முடியாது..?

'ஏன் முடியாது...? எல்லாம் முடியும்... ஏன் செய்யனும்ங்கிற திமிர்..'

நரேந்திரன் முகம் இறுக.. ஊர்மிளாவின் கண்டு கொள்ளாமையைக் கவனிக்காமல் பேசிக் கொண்டே போனான்..

"சென்னையில்தான் இருக்கிறதாம்.. டிரெஸ் அழுக்கா இருக்குதில்ல.. அதையெல்லாம் கலெக்ட் பண்ணி இதுகிட்ட கொடுத்து விடு.. வாஷ் பண்ணி அயர்ன் பண்ணி கொண்டு வந்து கொடுக்கும்.."

அவளுக்காகத்தான் அவன் மெனக்கெட்டிருக்கிறான் என்பதில் ஊர்மிளாவின் முகம் சிவந்து போனது..

"ம்ம்ம்..." என்று மிதமான குரலில் முணுமுணுத்தாள்..

"டெய்லி வந்து வாங்கிட்டுப் போயிரனும்.." நரேந்திரன் அந்தப் பெண்ணிடம் சொன்னான்..

https://t.me/tamilpdfebooks

அவளை தலையசைத்தாள்..

"நல்லவேலை செஞ்சிருக்க.." நரேந்திரன் டிரைவரை பாராட்டி விட்டு.. ஊர்மிளாவை பார்த்தான்..

இப்போது 'ஏன்' என்று கேட்காமலிருக்க அவளால் முடியவில்லை.. அதில் நரேந்திரனுக்குள் மெலிதான மன அமைதி ஏற்பட்டது..

"எனக்கு வெளியே வேலை இருக்கு.. போயிட்டு ஒன் அவர்ல வந்திடறேன்.. நீ இந்தப் பெண்ணைக் கூப்பிட்டுக்கிட்டு போய் சுரேனோட ரூமைக் காண்பி.."

நரேந்திரன் சொன்னதில் ஊர்மிளா தயங்கி நின்றாள்..

20

என் நெஞ்சைப் புரிந்திருந்தும்..
பிரிந்து செல்லும் எண்ணம் கொண்ட
அழகான ராட்சசி நீ....

அவள் தயங்கி நின்றதில் நரேந்திரன் தேங்கி நின்றான்.. அவன் கண்களில் வினா எழுந்தது..

"நீங்க இல்லாம எப்படி..?" ஊர்மிளா தடுமாறினாள்..

நரேந்திரனின் கண்களில் மின்னல் வந்தது.. அவனை பிரிந்து சென்று அவனை மீண்டும் சந்தித்த தினத்திலிருந்து அன்றுவரை அவள் அவனைத் தேடிய எந்தச் சொல்லையும் சொன்னதில்லை.. அன்று அவள்

https://t.me/tamilpdfebooks

வாய்மொழி அதைச் சொல்லி விட்டதில் அவன் மனதில் தென்றல் அடித்தது..

அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் இயல்பாக அவளுக்குப் பதில் சொன்னான்.. வெளிக்காட்டிக் கொண்டால்தான் வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் தொற்றிக் கொள்ளுமே..

"ஜஸ்ட் ஒன் அவர்.. வந்துருவேன்.. சென்னைக் குள்ளேதான் போகிறேன்.. இம்பார்டண்ட் மீட்டிங்.."

"இல்லை.. இன்னைக்கு ஸ்பெசலிஸ்ட் ஃபாரின்ல இருந்து வர்றதா சொன்னீங்களே.."

"மறக்குமா ஊர்மிளா.. மைண்ட்ல அது மட்டும்தானே செட் ஆகியிருக்கு..? டாக்டர் ராபட்சன் இன்னைக்கு காலையிலேயே சென்னையில் ரீச் ஆகிட்டார்.. அவர் சுரேனை செக் பண்ண வர்றதுக்குள்ள நான் வந்துருவேன்.."

நரேந்திரனின் பரிவான வார்த்தைகளில் ஆறுதல் பெற்றவளாக ஊர்மிளா தலையசைத்தாள்.. அதை விடை கொடுக்கும் பாவனையாக எடுத்துக் கொண்ட நரேந்திரன் விடை பெறும் பாவனையில் தலையசைத்து விட்டு காரை எடுக்கச் சொன்னான்..

இயல்பான அந்த கணவன் மனைவி உரையாடலில் வந்திருந்த பெண்ணின் சந்தேகம் பறந்தோடியிருக்க வேண்டும்.. அவள் மரியாதையான தூரத்தில் விலகி நின்றாள்.. பழைய மௌனப் பார்வை அவளிடமும் இல்லை.. கார் டிரைவரிடமும் இல்லை..

https://t.me/tamilpdfebooks

இந்த டிரைவர் புதியவன்.. சென்னையின் டிராவல் ஏஜன்ஸி ஒன்று நரேந்திரனுக்காக அனுப்பியிருந்த காரை ஓட்டிக் கொண்ருந்தவன்.. அவனுக்கு நரேந்திரனின் குடும்ப வரலாற்றைப் பற்றி எதுவும் தெரியாது.. அவன் மிகப் பெரிய வி.ஐ.பி என்பது மட்டுமே அவனுக்குத் தெரியும்..

அவனிடம் அழுக்குத் துணிகளை வாங்கிக் கொண்டு போய் சலவை செய்து கொண்டு வந்து கொடுக்கும் வேலையாள்கள் கிடைப்பார்களா என்று நரேந்திரன் விசாரித்தான்.. டிரைவருக்குச் சொந்தக்காரப் பெண் ஒருத்தி வீட்டு வேலை செய்பவள்.. அவளிடம் இதைப் பற்றி டிரைவர் சொன்ன போது அதிக சம்பளம் கிடைக்கும் என்பதினால் அவள் உடனடியாக அதை ஒப்புக் கொண்டு டிரைவருடன் கிளம்பி வந்து விட்டாள்..

வந்த இடத்தில் நரேந்திரனிடம் ஊர்மிளா பட்டுக் கொள்ளாமல் இருந்ததைப் பார்த்தவளுக்கு..

'இந்த ஆளு.. இந்த ஐயாவோட பொண்டாட்டின்னு தான சொல்லுச்சு.. இந்தம்மா யாரோ மாதிரி முறைக்குதே..' என்ற சந்தேகத்தோடு டிரைவரைப் பார்த்தாள்.. அவனும்

'இன்னான்னு தெரியலைம்மே.. புருசன் பொஞ்சாதின்னுதான் சொன்னாக..' என்ற பதில் பார்வையை பார்த்து வைத்தான்..

அந்தக் குழப்பங்கள் தீர்வதைப் போல.. ஊர்மிளா நரேந்திரனிடம் கவலைப் பட்டுப் பேச.. அவனும் சீக்கிரம் வந்து விடுவதாக வாக்குறுதி கொடுக்கவும்..

https://t.me/tamilpdfebooks

'அடச்சே.. ஒரு நிமிசத்தில நாம என்னென்னமோ நினைச்சுப் புட்டோமே..' என்ற சங்கடத்துடன் டிரைவரை அவள் பார்க்க..

'ஆமாம்மே..' என்று அவனும் பதிலுக்கு பார்த்து விட்டு நரேந்திரனுடன் போய் விட்டான்..

"உன் பேர் என்னம்மா..?"

கனிவுடன் விசாரித்த ஊர்மிளாவின் தன்மையை அந்தப் பெண்ணுக்குப் பிடித்துப் போயிருக்க வேண்டும்..

"தேன்மொழிம்மா.." என்று முகமலர்ச்சியோடு பதில் சொன்னாள்..

"தேன்மொழி.. உன் வீடு எங்கேயிருக்கு..?"

என்னவோ நெடுநாள்களாக பழகியவளைப் போல ஊர்மிளா கேட்க.. பிறந்தது முதல் அறிந்ததைப் போல

"நம்ம வீடு முக்ப்பேரத் தாண்டி இருக்கும்மா.." என்று பதில் சொன்னாள் தேன்மொழி..

அவர்கள் உரையாடியபடி சுரேந்திரனின் அறைக்குத் திரும்பினார்கள்..

"எழுந்துக்கிட்டானா..?"

நர்ஸிடம் வினவியபடி கட்டிலில் படுத்திருந்த சுரேந்திரனிடம் அவசரமாகப் போனாள் ஊர்மிளா.. அவன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான்.. அவன் முடியை கோதிவிட்டு நிம்மதியுடன் நிமிர்ந்தாள்..

"எழுந்துக்கிட்டா பார்த்துக்கத்தான் நாங்க இருக்கோம்.." நர்ஸ் புன்முறுவல் செய்தாள்..

https://t.me/tamilpdfebooks

பதிலுக்கு சிரித்து விட்டு.. இரண்டு நாள்களாக சேர்த்து வைத்திருந்த அழுக்குத் துணிகள் அடங்கிய பையை தேன்மொழியிடம் நீட்டினாள் ஊர்மிளா..

“இதான் நம்ம புள்ளையாம்மா..?” கட்டிலில் படுத்திருந்த சுரேந்திரனை ஆர்வத்துடன் பார்த்தபடி கேட்டாள் தேன்மொழி..

“என் புள்ளை..” என்றாள் ஊர்மிளா..

அதில் நர்ஸ் வாய் விட்டுச் சிரித்தாள்.. தேன்மொழிக்கு வெட்கமாகி விட்டது.. எதையாவது சொல்ல வேண்டும் என்பதற்காக..

“அப்படியே நம்ம ஐயா ஜாடை..” என்று சொல்லி வைத்தாள்..

“அவங்க புருசன் ஜாடை...” நர்ஸின் சிரிப்பு அதிகமானது..

ஊர்மிளாவுக்கும் சிரிப்பு வந்தது.. லேசான சிரிப்புடன் மகனைப் பார்த்தாள்.. நரேந்திரனின் பிம்பமாக படுத்திருந்தவனை பிரியத்துடன் முடி கோதினாள்.. அவள் முகத்தில் தெரிந்த மந்த ஹாசத்தை நர்ஸ் ரசித்தாள்..

“பேசறப்பதான் நீ யாரோ.. நான் யாரோங்கிறதைப் போல இவங்க பேசுவாங்க.. மத்தபடி புருசன்மேல பிரியம் ஜாஸ்தி..” தேன்மொழியிடம் சொன்னாள் நர்ஸ்..

“பாத்தாத் தெரியுதே..” என்று சொல்லிக் கொண்டே அழுக்குத்துணிகள் கொண்ட பையை எடுத்துக் கொண்ட தேன்மொழி..

https://t.me/tamilpdfebooks

"வரட்டுமாம்மா..?" என்று கேட்டபடி வாசல் பக்கமாக போனவள்..

"ஐயா.. வந்திருக்காங்க.." என்று பின்வாங்கினாள்..

ஊர்மிளா சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.. அறை வாசலில் நரேந்திரன் நின்றிருந்தான்..

'இவன் எப்ப வந்தான்..?'

அவள் விழிகளின் கேள்வியை படித்த வண்ணம் நிதானமாக உள்ளே வந்தான் நரேந்திரன்.. அவன் பார்வை ஊர்மிளாவின் முகத்தில் படிந்திருந்த மந்தஹாசத்தில் லயித்தது.. அவள் முகம் சிவந்தது.. அறைக்குள் நடந்த பேச்சு வார்த்தைகளை அவன் கேட்டிருப்பானோ என்று அவள் மனம் குறுகுறுத்தது.. அவன் பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்று அவளுக்குள் லஜ்ஜையைத் தோற்றுவிக்க.. உதட்டைக் கடித்தபடி சுரேந்திரனைக் கவனிப்பதைப் போல குனிந்து கொண்டாள்..

அவளது லஜ்ஜையை அவன் ஊன்றிக் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வில் அவள் இதயம் தடதடத்தது.. தேன்மொழி பிரியாவிடை வாங்கிக் கொண்டு கிளம்பிப் போனாள்.. நர்ஸ் சீப் டாக்டரை பார்த்து விட்டு வருவதாக சொல்லி விட்டுப் போனாள்.. தூங்கிக் கொண்டிருந்த சுரேந்திரனின் அருகே அவளும் நரேந்திரனும் தனித்து விடப் பட்டார்கள்..

"அர்ஜண்ட் மீட்டிங்னுதான் கிளம்பிப் போனேன்.. ஆனா நீ தயங்கி நின்னது என் மனசில் நின்னுச்சு.. மீட்டிங்கை கேன்சல் பண்ணிட்டுத் திரும்பி வந்துட்டேன்.."

https://t.me/tamilpdfebooks

அவள் முகத்தையே அள்ளிப் பருகுவதைப் போல பார்த்தபடி சொன்னான் நரேந்திரன்..

"ஸாரி.." அவள் சங்கடத்துடன் முணுமுணுத்தாள்..

"எதுக்கு இந்த ஸாரி..? நம்ம சுரேனை விட முக்கியம்ன்னு இந்த உலகத்தில் எதுவும் இருக்கா..?" நரேந்திரன் கேட்டான்..

இல்லையென்ற பாவனையில் தலையசைத்த ஊர்மிளாவின் விழிகளில் நீர் அரும்பி விட்டது.. சுரேந்திரனின் பொறுப்பை ஏற்க நரேந்திரன் வந்து விட்டதில் அவள் மனதில் மலையளவுக்கு ஏறியிருந்த மனபாரம் இறங்கி லேசாகி விட்டதைப் போல அவள் உணர்ந்தாள்..

அவள் மகனுக்கு குணமாகி கொண்டிருக்கிறது.. அதுவும் அறுவை சிகிச்சை இல்லாமல் அவன் சரியாகிக் கொண்டிருக்கிறான்.. இதைவிட அவளுக்கு வேறென்ன வேண்டும்..?

அவள் முகத்தில் தவழ்ந்த நிம்மதியை வெகு பிரியத்துடன் பார்த்தான் நரேந்திரன்.. அமைதியான நதியைப் போல இருந்தாள் அவள்.. கழுத்தில் தாலிச் செயின்.. கைகளில் ஒற்றை வளையல்கள்.. காதில் சின்ன தோடு.. இதைத் தவிர்த்த அலங்காரம் எதுவும் அவளிடம் இல்லை.. ஆனால் அவள் பேரழகுடன் மிளிர்ந்தாள்.. அவளின் ஒவ்வொரு அசைவுகளிலும் தெரித்து விழுந்த மென்மையில் தன் வசம் இழந்தான் அவன்..

https://t.me/tamilpdfebooks

அவன் பார்வை அவள் முகத்தை மொய்த்து.. மெதுவாக இறங்கி அவள் மேனியில் படர்ந்தது..

ஊர்மிளா தலை நிமிரவில்லை.. அவளை மொய்க்கும் அவன் பார்வையை அவள் உணர்ந்திருந்தாள்.. ஏனோ தெரியவில்லை.. அதை ஆட்சேபித்து முகம் சுளிக்க அவளால் முடியவில்லை..

அவன் மீதான அவளது வெறுப்பு குறைந்து விட்டதா என்று அவள் திகைத்துக் கொண்டிருந்த போது.. என்று அவனை அவள் வெறுத்தாள் என்று அவள் மனம் அவளை கேள்வி கேட்டு ஸ்தம்பிக்கவைத்தது..

ஊர்மிளா தவிப்புடன் தன் கடந்த கால பாதையை திரும்பிப் பார்த்தாள்.. அவளை துரத்தியடித்த அவனது கேள்வியை நினைத்துப் பார்த்தாள்.. அந்தக் கேள்வியில் அவனை விட்டுப் பிரியும் முடிவை அவள் எடுத்தாளே.. அதற்கு அடிப்படை என்ன..?

இந்தக் கேள்வியை நீ கேட்கலாமா..? இதைக் கேட்க உனக்கு எப்படி மனம் வந்தது..?

இது... இதுதான் அவளை துரத்தியடித்தது... அவனுக்கும் அவளுக்குமான அந்தரங்க வாழ்வை ஆட்டிப் பார்த்தது.. மற்றபடி அவன்மீது வெறுப்போ.. துவேசமோ அவளுக்கு இல்லையே...

அவனை விட்டுப் பிரிந்து வரும் முடிவை அவன் தான் எடுக்க வைத்தான்.. அதற்குப் பின்னாலும் அவனை மறக்க முடியாமல் அவள் தவித்திருக்கிறாளே... அனல்மேல் புழுவாக துடித்திருக்கிறாளே...

https://t.me/tamilpdfebooks

"மத்தவங்களுக்குத் தெரியறது... எனக்குத் தெரியலை.." என்றான் நரேந்திரன்.. அவன் விழிகள் கூர்மையாக அவள் மேல் படிந்தன...

எதற்காக அவன் இதைச் சொல்கிறான் என்று புரியாமல் அவனைக் குழப்பத்துடன் பார்த்தாள் ஊர்மிளா.. அவன் முகத்தில் தெரிந்த ஏதோ ஒன்றில் அவள் குழப்பம் அதிகமானது.. அந்தப் பார்வை அவளை கடந்த காலத்துக்கு இழுத்துக் சென்றதில் அவள் திகிலானாள்..

"எனக்கும்கூட கஷ்டமா இருந்துச்சு.. கோபம் கோபமா வந்தது.. நான் யாரோ.. நீ யாரோங்கிறதைப் போல நீ பேசினதில என்னடா கொஞ்சமாவது தாலி கட்டின புருசன்கிற ஒட்டுதல் இவளுக்கு இருக்கான்னு பல தடவை ஆத்திரப்பட்டிருக்கேன்.. அதெல்லாம் சும்மாங்கிறது இன்னைக்குத்தான் எனக்குத் தெரிஞ்சது.."

"எதை வைச்சு இப்பேற்பட்ட அவசர முடிவுக்கு நீங்க வந்தீங்க..?" வழக்கமான இடக்கோடு கேட்டு விட்டாள்.. ஊர்மிளா.. அவளால் அப்படிக் கேட்காமல் இருக்க முடியவில்லை.. அவனைவிட்டுப் பிரிந்து வர அவன் வைத்து விட்டதை அவளால் மறக்கமுடியவில்லை..

"என் மகன் என்ஜாடையில் பிறந்திருக்கான்கிறதில உன் முகத்தில பொங்கி வழியுதே.. இந்தப் பிரியம்.. இதைப் பாத்துத்தான் அப்படியொரு முடிவுக்கு வந்தேன்.." நிதானமாக சொன்னான் நரேந்திரன்.. அவன் விழிகள் அவளைத் துளைப்பதைப் போல பார்த்தன..

"இது நேச்சுரல்.. பிள்ளைகள் எப்பவுமே.. அம்மா ஜாடையிலோ.. இல்லைன்னா அப்பா ஜாடையிலோதான்

https://t.me/tamilpdfebooks

இருப்பாங்க... இது சயின்ஸ்... ஜெனிடிக்... ஜீன் சம்பந்தப்பட்ட விசயம்.. இதுக்குப் போய் யாராவது உருகுவாங்களா..?" அலட்சியம் போல காட்டிக் கொண்டாள் ஊர்மிளா.. அவனிடமிருந்து ஒளிந்து கொள்ள வேண்டுமென்று அவள் உணர்வுகள் அலை பாய்ந்தன..

அதை நம்பாத புன்முறுவல் நரேந்திரனின் இதழ்களில் பூத்தது.. அவன் இல்லையென்ற பாவனையில் தலையசைத்தான்...

"என்மேல் உனக்கு வெறுப்பிருந்தா என்ஜாடை நம்ம பிள்ளைக்கு வந்திருக்கிறதில உனக்கு வெறுப்பு வந்திருக்கனும்.. யாராவது இந்த ஜாடையைச் சொன்னா அதில உனக்குக் கோபம் வந்திருக்கனும்.. உன்கிட்ட இந்த ரெண்டுமே வரல.. மாறா உன் முகத்தில அதைக் குறித்த பெருமை வருது.. பிரியம் வருது.. இதுக்கு என்ன அர்த்தம்..?" நரேந்திரன் புருவங்களை உயர்த்தினான்..

"தெரியாது.." குரல் நடுநடுங்க முகம் திருப்பிக் கொண்டாள் ஊர்மிளா..

அவள் உணர்வுகள் அகப்பட்டுக் கொண்டதில் தடுமாறின.. அவள் மனதை அவன் கண்டு பிடித்து விட்டதில் அவன்மேல் வெறுப்பைப் பொழிவது எப்படியென்று அவள் திகைத்துப் போனாள்..

"தெரியாது..?" அழுத்தமாக வினவினான் நரேந்திரன்..

"தெரியாது.." பிடிவாதமாக பதிலளித்தாள் ஊர்மிளா..

"நான் சொல்லவா..?"

https://t.me/tamilpdfebooks

அழுத்தமான காலடியுடன் அவளை நெருங்கினான் நரேந்திரன்.. கலவரத்துடன் பின்னடைந்தாள் ஊர்மிளா.. அவனது அருகாமை அத்தனை நாள்களாக அவள் கட்டிக் காத்து வரும் திடத்தை விரட்டி விடுமோ என்ற பயம் அவள் நெஞ்சில் எழுந்தது..

அந்த பயத்தை உணர்ந்தவனைப் போன்ற சிரிப்பு அவன் உதடுகளில் உற்பத்தி ஆனது.. அவன் விழிகள் நேர்கொண்ட பார்வையோடு அவள் விழிகளைச் சந்தித்தன.. அவள் நடுக்கத்துடன் பார்வையை விலக்கிக் கொண்டதில் அவன் சிரிப்பு அதிகமானது..

"நம்ம பிள்ளை முகத்தில நீ என்னைப் பாக்கறடி.."

அவன் குரல் கிசுகிசுப்பாக ஒலித்ததில் அவள் திகைத்துப் போனாள்.. பொத்தி வைத்திருந்த அவளின் உணர்வுகள் வெளிப்படுத்தப் பட்டதில் அவள் திணறிப் போனாள்..

சுரேந்திரனின் பார்வையும்.. பேச்சும்.. சிரிப்பும்.. அவனது ஒவ்வொரு அசைவுகளும் நரேந்திரனை நினைவு படுத்துவதை.. அவற்றை ஊர்மிளா ரசித்துப் பிரியம் கொள்வதை நரேந்திரன் எப்படி கண்டு பிடித்தான்..?

"இதை எனக்கு நீ சொல்லனுமாடி..? எனக்கு உன்னைத் தெரியாதா..? உன் மனசைத் தெரியாதா..?"

நரேந்திரனின் மென்மையான பேச்சில் நிமிர்ந்து அவன் விழிகளை நேருக்கு நேராக பார்த்த ஊர்மிளாவிடம்

https://t.me/tamilpdfebooks

பழைய திடம் மீண்டிருந்தது.. அவள் இல்லையென்ற பாவனையில் இடம் வலமாக தலையை அசைத்தாள்..

"ஊர்மிளா..?" நரேந்திரனின் புருவங்கள் முடிச்சிட்டன..

"இல்லை.. உங்களுக்கு என்னைத் தெரியாது.. என் மனசைத் தெரியாது.."

"ஊர்மிளா..?"

"ஆமாம்.. தெரிஞ்சிருந்தா.. அன்னைக்கு அத்தனை பேர் முன்னாடியும் என்னை நிற்க வைச்சு அந்தக் கேள்வியை நீங்க கேட்டிருக்க மாட்டிங்க.."

"ஊர்மிளா.."

"எனக்கு உங்க மேல பிரியம் இருக்கா.. இல்லையாங்கிறதெல்லாம் அப்புறம்.. முதலில் என்மேல் உங்களுக்குப் பிரியம் இருந்ததா..?"

"ஏய்ய்.. இதென்னடி கேள்வி..? பிரியம் இல்லாமலா உன் நினைப்போட வாழ்ந்துக்கிட்டு இருக்கேன்..?"

நரேந்திரனின் கோபத்தில் லேசான மின்னல்கீற்று ஊர்மிளாவின் விழிகளில் வந்து போனது..

https://t.me/tamilpdfebooks

21

பிரியம் என்பதில்.. பிரியமில்லாத..
அழகான ராட்சசி நீ....

ஊர்மிளாவின் இதழ்களில் தோன்றியது இகழ்ச்சிப் புன்னகையா இல்லை.. துயரப் புன்னகையா என்று நரேந்திரனால் அனுமானிக்க முடியவில்லை..

"இதுவா பிரியம்..? அண்ணலும் நோக்கினாள்.. அவளும் நோக்கினாள்ன்னு கம்பருக்கு காதல் ரசம் படைக்கச் சொல்லிக் கொடுத்த காவியக் காதலிதான் சீதை.. அவளைக் காதலித்த ராமன்கூட கடைசிவரைக்கும் அவ நினைப்போடதான் வாழ்ந்தார்.. அதனால் சீதை கண்டதென்ன..?"

"ஊர்மிளா.."

நரேந்திரன் அசைவற்று நின்றான்.. அவன் மனதை ஊர்மிளாவின் கேள்வி தாக்கியது.. அதைவிட அதில் பொதிந்திருந்த துயரம் அதிகமாக தாக்கியது.. ஊர்மிளாவின் விழிகளில் தெரிந்த ஒட்டாத தன்மையும் அவள் வார்த்தைகளில் தொற்றி நின்ற கசப்பும் அவன் மனதில் அறைந்தன..

"சீதைக்கு ராமன்தான் எல்லாமும்.. அவன் காட்டுக்குப் போனப்ப கூடவே போனவ அவ.. பட்டுக்கு ஆசைப்பட்டாளா.,? பஞ்சணையை நினைத்துப்

https://t.me/tamilpdfebooks

பார்த்தாளா..? கல்லிலேயும்.. முள்ளிலேயும் பஞ்சுப் பாதங்கள் புண்ணாக ராமனை ஃபாலோ பண்ணி நடந்தாளே.. அதுக்கு அவளுக்கு கிடைத்த பரிசு என்ன..?"

நரேந்திரன் பெருமூச்சு விட்டான்.. இந்தக் கேள்விக்கான பதிலை யுகங்கள் பல கடந்தாலும் சொல்ல முடியாது என்று அவனுக்குத் தோன்றியது.. ஆத்மார்த்தமாக கணவனைக் காதலிக்கும் அனைத்துப் பெண்களும் இந்தக் கேள்வியை கேட்டுக் கொண்டுதான் இருப்பார்கள்..

"ஒரு கவிதை படிச்சேன்.. ஆயிரக் கணக்கில் பெண்டாட்டிகளைக் கட்டின தசரதன் ஒருத்தியைக் கூட சந்தேகப்படலை.. ராமன் ஒரேயொரு பெண்டாட்டியைக் கட்டி ஏகபத்தினி விரதனாய் தன்னை சொல்லிக் கொண்டான்.. அந்த ஒருத்திகூட உருப்படியாய் வாழாம காட்டுக்கு அனுப்பி விட்டான்னு.."

"நான் உன்னை வீட்டை விட்டு அனுப்பலை.."

"உங்க கேள்வி அனுப்பி வைச்சுச்சு.."

"என் கேள்வியைக் கண்டு எதுக்காக நீ விலகி ஓடனும்..? எதிர்த்து நின்று பதில் சொல்லியிருக்கலாமே.."

"ஓ..."

ஊர்மிளாவின் விழிகளில் சுடர் தெரிந்தது.. அது சுட்டெரிக்கும் சுடர்.. சூரியனின் சுடர்.. அந்த சுடரின் ஜ்வாலை நரேந்திரனைப் பொசுக்கியது.. அவன் நாக்கைக் கடித்துக் கொண்டான்..

'எனக்குப் புத்தியில்ல..' மனம் வருந்தினான்..

https://t.me/tamilpdfebooks

'யாகாவாராயினும் நா காக்க' என்று பொய்யா மொழிப் புலவர் படித்துப் படித்துச் சொல்லி விட்டார்.. அது அவன் புத்தியில் இன்னும் உறைக்கவில்லையே.. ஒருமுறை 'நா' காக்காமல் போனதற்கு அவன் பட்டுக் கொண்டிருக்கும் பாடு போதாதா..?

அன்று அவன் 'நா' காக்காமல் போனதற்கே அந்த ரோசக்காரி அவன் வீட்டை விட்டு வெளியேறி விட்டாள்.. அவனை பிரிந்து சென்று விட்டாள்.. அவனுடைய மகனை அவன் கண்ணுக்குக் காட்டாமல் பெற்று வளர்த்துக் கொண்டிருக்கிறாள்.. அந்த மகனின் மருத்துவச் செலவுக்காக அவளிடமிருந்த அனைத்துச் சொத்துக்களையும் விற்க முனைந்தாளே தவிர.. கோடிஸ்வரனான அவனிடம் உதவி கேட்டு அவள் வரவில்லை..

அப்படிப்பட்டவளிடம் திரும்பவும் அவன் வாய் விடுவானா..?

'இப்பத்தான் என் முகம் பார்த்து ஒன்னு ரெண்டு வார்த்தைகளைப் பேச ஆரம்பிச்சிருக்கா.. இப்ப அதுக்கு வேட்டு வந்திருச்சா..' அவன் தலையைப் பிடித்துக் கொண்டான்...

'என்ன வரம் வாங்கி வந்திருக்கடா நரேந்திரா..'

அவனது பெருமூச்சை அவள் கண்டு கொள்ளவில்லை.. சற்று முன்பு அவள் முகத்தில் தெரிந்த மந்தகாசம் எங்கே விலகி ஓடியது என்று அவன் யோசித்தான்.. கல் போன்ற கடினம் அவள் முகத்தில் மீண்டிருந்தது..

https://t.me/tamilpdfebooks

அவள் மென்மையான தேவதை.. அவளிடம் இந்தக் கடினத்தை கொண்டு வந்தது யார்..?

"உங்க கேள்வியைக் கண்டு நான் விலகி ஓடலை.. அதைக் கேட்ட உங்களைக் கண்டுதான் விலகி ஓடி வந்தேன்.."

"இப்ப இதைப் பத்திப் பேச வேணாம் ஊர்மிளா.."

"வேற எப்பப் பேசறது..?"

"இன்னொரு நாள் பேசலாம்.."

"அந்த இன்னொரு நாளில் நீங்க இப்பக் கேட்ட கேள்வியை நினைவுபடுத்தி.. அதுக்கு நான் ஏன் பதில் சொல்லலைன்னு கேட்டு வைப்பீங்களே.. அந்தக் கேள்வியைத் தாங்கிக்க என்னால் முடியுமா..?"

"ஏண்டி சித்திரவதை பண்ற..?"

நரேந்திரன் நெற்றியில் உள்ளங்கையில் அறைந்து கொண்டான்.. அவன் துன்பத்தில் கலைந்த முடிக்கற்றை அவன் நெற்றியில் படிந்து பரவியது.. அந்த நிலையிலும்.. அவனின் அந்தத் தோற்றம் அவளை ஈர்த்தது... அவன் மீதான அந்த ஈர்ப்பு அவளைக் கொல்லாமல் கொன்று தின்றதில் அவள் துயரத்துடன் முகம் திருப்பிக் கொண்டாள்..

"நீங்க கேள்வி கேட்கன்னு பிறந்திருக்கீங்க.. ஆனா நான் உங்க கேள்விகளுக்குப் பதில் சொல்ல பிறக்கலை.. அப்படி பதில் சொல்லி.. பதில் சொல்லித்தான் உங்க கூட வாழனும்னா அந்த வாழ்க்கையே எனக்கு வேணாம்.."

https://t.me/tamilpdfebooks

"ஏய்ய்..."

நரேந்திரனின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது.. அவன் ஒற்றை விரலை அவளை நோக்கி நீட்டி கர்ஜித்தான்.. அவன் முகத்தில் ரௌத்ரம் பொங்கி வழிந்தது..

"வாயை மூடுடி.. வாயை மூடுன்னு சொல்றேன்.. இனி ஒருதரம் இதைப் போல பேசின.. நான்.. நானா இருக்க மாட்டேன்..."

நரேந்திரனின் உடல் நடுங்கியதில் ஊர்மிளா உதட்டைக் கடித்தபடி மௌனமானாள்.. சுரேந்திரனிடம் அசைவு தென்பட்டதில் அவள் வாக்குவாதத்தை மறந்து கட்டிலுக்கு தாவினாள்.. மகனின் பக்கத்தில் உட்கார்ந்தாள்.. கண் விழித்த சுரேந்திரன் தாயின் முகத்தைக் கண்டதும்..

"அம்மா.." என்றான்..

"சுரேன்.." ஊர்மிளா மகனை தட்டிக் கொடுத்தாள்..

தாயின் கையை இறுக்கிப் பிடித்த சுரேந்திரன் திரும்பவும் தூங்க ஆரம்பித்தான்.. அப்போதுதான் உள்ளே வந்த நர்ஸ் அந்தக் காட்சியில் சிரித்தாள்.. அவளுடைய ஸ்டூலில் உட்கார்ந்தபடி..

"அவனுக்கு பயம்..." என்று ஊர்மிளாவிடம் சொன்னாள்..

"ஏன்..? எதுக்கு பயப்படறான்..?" ஊர்மிளா தவித்துப் போனாள்..

பொத்தி.. பொத்தி வளர்த்த அவள் மகனுக்கு பயமா..? எதற்காக..?

https://t.me/tamilpdfebooks

"நீங்க அவன் கூட இல்லையில்ல.."

"இல்லை சிஸ்டர்.. நான் அவனை விட்டுப் பிரிஞ்சதில்லை.."

"இங்கே ட்ரீட்மெண்டுக்கு அவன் வந்தப்ப கூட நீங்க வரலையே..."

"அது.. அது.. வந்து..."

ஊர்மிளாவின் கண்கள் கலங்கிச் சிவந்தன.. அவள் இமை கொட்டி கண்ணீரை அடக்கிக் கொண்டாள்.. அதைக் கவனிக்காத நர்ஸ் மேஜையில் இருந்த ஃபைலில் எதையோ எழுதியபடி தன் போக்கில் ஊர்மிளாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்..

"உங்களுக்கு ஏதாவது அவசர வேலை இருந்திருக்கும்.. உங்களை விட்டு உங்க மகன் ஒருநாள்கூட பிரிஞ்சு இருந்திருக்க மாட்டான்.. அன்னைக்கு நீங்க கூட இல்லாததில அவன் மனசில பயம் வந்திருக்கும்.. அம்மா கூட இல்லைங்கறதை அவன் அடிமனசு அதிர்ச்சியா ஃபீல் பண்ணியிருக்கும்.. அதான் தூங்கி எழுந்ததும் நீங்க பக்கத்தில இருக்கீங்களான்னு கன்பர்ம் பண்ணிக்கிறான்.. அவன் தூங்கிக்கிட்டு இருக்கிறப்ப நீங்க கிளம்பிப் போயிடக் கூடாதுங்கிறதுக்காக உங்க கையை கெட்டியா பிடிச்சுக்கிட்டு தூங்கறான்.. இது ஒருவிதமான இன்செக்யூரிட்டி ஃபீலிங்.. தயவு செய்து உங்க மகனை தனியா விடாதீங்க..."

"விட மாட்டேன் சிஸ்டர்.."

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா பதட்டத்துடன் தன் மகனின் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.. அவளையுமறியாமல் அவள் மகனுக்கு அவள் அநியாயம் செய்து விட்டதைப் போன்ற குற்ற உணர்வு அவளுக்குள் ஏற்பட்டது.. அவள் விழிகள் உயர்ந்து நரேந்திரனை குற்றம் சாட்டின..

'இதுக்கும் நான்தான் பிணையா..? என்னைக் குற்றவாளிக் கூண்டிலே ஏத்த காரணம் தேடிக்கிட்டே இருக்காளே...'

நரேந்திரனின் கண்கள் இடுங்கின.. அவளை அவன் கூர்மையாக பார்த்தான்.. அவள் முகச் சுளிப்புடன் திரும்பிக் கொண்டாள்...

நர்ஸ் எழுத்து வேலையை முடித்து விட்டவளாய் ஸ்டூலை விட்டு எழுந்தாள்.. சுரேந்திரனைப் பரிசோதிக்க அவன் பக்கத்தில் போனாள்..

"பி.பி.. டெம்பரேச்சரை செக் பண்ணிடலாமா..?"

ஊர்மிளாவிடம் முறுவலித்தபடி சுரேந்திரனின் தூக்கம் கலையாமல் அவனை பரிசோதிக்கத் துவங்கினாள்.. தூய்மையான பளிச்சிடும் வெண்மை உடையில் வெள்ளைப் புறாவைப் போல இருந்த அந்த நர்ஸிடம் ஊர்மிளாவுக்கு நன்றி கலந்த பிரியம் உண்டானது..

'இந்த செவிலியர்கள் சேவைக்கென்றே பிறந்தவர்களா..?'

அவள் அந்த நர்ஸையே பார்த்தாள்.. முன்னம் ஒரு காலத்தில் போர்க்களத்தில் அடிபட்டுக்கிடந்த் நோயாளிகளுக்கு முகம் சுளிக்காமல் பணிவிடை செய்து

https://t.me/tamilpdfebooks

மருத்துவம் பார்த்த அந்த முதல் செவிலியரை அவள் நினைத்துப் பார்த்தாள்..

'பிளாரென்ஸ் நைட்டிங்கேல்..'

போர்க்களத்தில் காயம் பட்ட வீரர்களின் வலி போக்கி சிகிச்சை செய்த வெண்ணிற ஆடை தேவதையின் ஆறுதல் வார்த்தையில் அடிபட்டவர்கள் வலி மறந்தார்களே.. நள்ளிரவில் கையில் விளக்கை ஏந்தி இங்குமங்கும் நடமாடிய அவளை மனித உருவில் வந்த தெய்வம் என்று சொன்னார்களே...

அந்தப் பெண்ணின் அடையாளம் தானே இந்த தூய வெண்மை உடை..? அவள் வழித் தோன்றல்கள் தானே இந்த செவிலியர்கள்..!

இருக்கலாம்.. செவிலியர்களிலும் சிடுசிடுப்பு கொண்டவர்கள் இருக்கலாம்.. கடமை மறந்தவர்கள் இருக்கலாம்.. அவர்களெல்லாம் செவிலியர் தொண்டிற்கான திருஷ்டிப் பொட்டுக்கள்..

உண்மையான செவிலியர் என்பவாகள் தொண்டின் மறு உருவங்கள்.. ஒரு தேர்ந்த செவிலியின் முழு ஒத்துழைப்பும் இல்லாமல் எந்த ஒரு மருத்துவராலும் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள இயலாது.. அது கடினம்.. அவர்கள் தொழிலில் சிறந்த மருத்துவர்களாக இருக்கலாம்.. அவர்களின் நீட்டிய கைகளில் தேவைப்பட்ட உபகரணங்களை உடனுக்குடனே எடுத்துக் கொடுக்க.. திறமை வாய்ந்த செவிலியர் கட்டாயமாக அவர்களுக்குத் தேவை..

https://t.me/tamilpdfebooks

சுரேந்திரனை பரிசோதித்து முடித்த நர்ஸ் விபரங்களை ஃபைலில் எழுதி வைத்து விட்டு நிமிர்ந்தாள்.. நரேந்திரனை பார்த்தாள்..

"குட்டி அவனோட அம்மாவைத் தேடறதைப் போல.. அவனோட அப்பாவைத் தேடறதில்லை போல.." என்றாள்..

நரேந்திரன் கடுங்கோபத்துடன் ஊர்மிளாவை முறைத்தான்.. அவனது கனல் வீசும் பார்வையினை எதிர் கொள்ள முடியாமல் அவள் அவசரமாக தலையைக் குனிந்து கொண்டாள்..

அறைவாசலில் நர்ஸை வேறொரு நர்ஸ் அழைக்கவும்.. இவள் அவளிடம் என்னவென்று கேட்டபடி சென்று விட்டாள்..

"போதுமாடி.." நரேந்திரன் ஊர்மிளாவிடம் சீறினான்..

"இப்ப கேட்டா பாரு ஒரு கேள்வி.. இந்தக் கேள்விக்கு உன்னிடம் பதில் இருக்கா..? சும்மா.. நான் கேள்வி கேட்டேன்.. நான் கேள்வி கேட்டேன்னு சொல்லிச் சொல்லியே என் உயிரைக் குறைக்கறியே.. இப்ப அவ என்னை கேள்வி கேக்கறாளே.. இதுக்கு நான் என்ன பதிலைச் சொல்ல..?"

அவனது பயங்கரமாக சிவந்திருந்த கண்களைப் பார்க்க ஊர்மிளாவுக்கு அச்சமாக இருந்தது.. அவள் சுரேந்திரனைப் பார்ப்பதைப் போல பார்வையைத் திருப்பிக் கொண்டு தப்பித்தாள்..

"சொல்லவா...? அவகிட்டச் சொல்லவா...? எனக்கொரு மகன் இருக்கான்னே இரண்டு நாள்களுக்கு

https://t.me/tamilpdfebooks

முன்னாடி வரை எனக்குத் தெரியாதுங்கிறதைச் சொல்லவா..? என் மகன் பிறந்ததை எனக்குச் சொல்லாம நீ மறைச்சு வளர்த்து வந்ததைச் சொல்லவா..?"

"நான் மறைக்கலை.. இதைப்பத்தி ஏற்கனெவே நாம பேசியாச்சு.. உங்களுக்கொரு மகன் இருக்காங்கிறதை ஏன் நீங்க தெரிஞ்சக்கலை..? போனவ போனவளா இருக்கட்டும்ன்னு என்னைப் பத்தின அக்கறையில்லாம நீங்க இருந்துட்டு பழியை என்மேல தூக்கிப் போடப் பார்க்கறிங்களா..? இதில இவர் என் நினைப்பாவே வாழ்ந்துக்கிட்டு இருக்காராம்.. வெளியே சொல்லிராதீங்க.. சிரிக்கப் போறாங்க.. விலகிப் போனவ என்ன ஆனாங்கிற கவலை உங்களுக்கு இருந்திருந்தா என்னைத் தேடி வந்திருப்பீங்க.. உங்க மகனைப் பத்தியும் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்.. வெறும் நினைவுகளால் மட்டும் யாதொரு பிரயோசனமும் இல்லை மிஸ்டர் நரேந்திரன்.."

அவனுடைய பெயரை அவள் உச்சரித்ததில் அவன் கண்கள் இடுங்கின.. அவளையே முறைத்துப் பார்த்தான்.. அறைவாசலுக்குப் போன நர்ஸ் பேச்சை முடித்துக் கொண்டு திரும்பி வந்துவிட்டாள்..

சுநேந்திரன் விழித்து எழுந்து அமர்ந்தான்.. ஊர்மிளா அவனை பாத்ரூமுக்கு அழைத்துக் சென்றாள்.. அவனுக்கு முகம் கழுவி விட்டு தலை வாரி.. லேசாக பவுடர் பூசி அவள் உட்கார வைத்த போது சுரேந்திரனுக்கான மதிய உணவு வந்து விட்டது.. ஊர்மிளா உணவை ஸ்பூனால் எடுத்து மகனுக்கு ஊட்ட ஆரம்பித்தாள்..

https://t.me/tamilpdfebooks

பசியுடன் இருந்த சுரேந்திரன் மறுக்காமல் தாய் ஊட்டிய உணவை சாப்பிட்டான்.. அவனுக்கு கொடுக்க வேண்டிய மருந்து மாத்திரைகளை கொடுத்து முடித்த ஊர்மிளாவின் முகத்தில் நிலவிய திருப்தியைப் பார்த்த போது பசியாறியது அவள்தானோ என்ற சந்தேகம் நரேந்திரனின் மனதில் ஏற்பட்டது..

'இவளுக்குப் பசிக்கவே பசிக்காதா..?'

அவள் முகத்தைப் பார்த்தால் அவனுக்கு அப்படித்தான் தோன்றியது.. என்னவோ அறுசுவை விருந்தை அவளே சாப்பிட்டு முடித்ததைப் போல வெகு திருப்தியாக சுரேந்திரனின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.. அவனுடைய கைவிரல்களுடன் விரல் கோர்த்து கதை பேசி அவள் சிரித்துக் கொண்டிருந்ததைக் கவனித்த நர்ஸ் வியப்புடன்...

"இவங்க மகனுக்கு போரடிக்க விடாம பார்த்துக்கிறாங்க.. ஹாஸ்பிடல்ங்கிற எண்ணமே அவனுக்கு ஏற்பட்டு விடாதபடி எதையாவது பேசி.. சிரித்து.. விளையாட்டுக் காட்டி.. அவன் மனதை டைவர்ட் பண்ணிடறாங்க.. அவனை பேசண்டா இவங்க ட்ரீட் பண்ணலை.. அதுவே அவனுக்கான மிகச் சிறந்த ட்ரீட்மெண்ட்.." என்று நரேந்திரனிடம் சொன்னாள்..

அதை ஒப்புக் கொள்கிறவனைப் போல அவன் தலையை அசைத்தான்.. அவளைப் போன்ற அந்த அதீத கவனிப்பை அவனால் ஒரு போதும் அவன் மகனுக்குக் கொடுத்து விட முடியாது என்பது அவனுக்குப் புரிந்தது..

https://t.me/tamilpdfebooks

அவனால் அவன் மகனுக்கு கோடிக்கணக்கில் பணம் செலவளிக்க முடியும்.. உலக நாடுகளுக்கெல்லாம் உல்லாசப் பயணம் அழைத்துக் கொண்டு போக முடியும்.. நரேன் குருப் ஆஃப் கம்பெனிஸீன் எம்.டியாக மகனை ஆக்க முடியும்.. ஆனால் ஊர்மிளா காட்டும் தாய்பாசத்தை தரமுடியாது.. அவன் தரும் அந்த அத்தனையும் ஊர்மிளாவின் தாய்பாசத்திற்கு நிகராகாது...

மகன் பசியாறுவதில் அவள் பசியாறுகிறாளே.. அதைப்போல நரேந்திரனால் இருந்து விட முடியுமா..?

மகனையும்.. அவனுடைய தாயையும் யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்... அறைக்கு வெளியே பலர் வரும் சப்தம் கேட்டது..

“ஹலோவ் மிஸ்டர் நரேந்துரன்..” என்ற வெளிநாட்டு ஆங்கில உச்சரிப்பில் திரும்பிப் பார்த்தான்..

“ஹி இஸ் டாக்டர் ராபிட்சன்.. உங்க மகனை செக் பண்ண வந்திருக்கும் ஸ்பெசலிஸ்ட்..” சீப் டாக்டர் அவனுக்கு ராபிட்சனை அறிமுகப் படுத்தி வைத்தார்..

ஊர்மிளா பதட்டத்துடன் சுரேந்திரனின் பக்கத்திலிருந்து எழுந்தாள்.. அவளை கலவரத்துடன் பார்த்த சுரேந்திரன் அவள் இடுப்பைக் கட்டிக் கொண்டான்..

https://t.me/tamilpdfebooks

22

*தாபத்தை மனதில் புதைத்து..
கோபத்தில் எனை விரட்டும்..
அழகான ராட்சசி நீ....*

சீப் டாக்டர் சொன்னதையே டாக்டர் ராபிட்சன் உறுதிபடுத்தினார்.. அறுவை சிகிச்சை தேவையில்லை என்று சொன்னார்.. அதைச் சொல்வதற்காக அவரை லட்சக்கணக்கில் பணம் செலவளித்து நரேந்திரன் வரவழைத்திருந்தான் என்பதில் ஊர்மிளாவின் மனதில் நன்றியுணர்வு வந்தது... அதை மனதில் வைத்துக் கொண்டிருக்காமல் டாக்டர்களின் குழு போனதும்..

"தேங்க்ஸ்.." என்று நரேந்திரனிடம் சொன்னாள்..

அவன் அவளை முறைத்தான்.. நர்ஸ் டாக்டர்களைத் தொடர்ந்து போயிருந்ததால் அறையில் சுரேனும் அவர்களும் மட்டுமே இருந்தார்கள்...

"எதுக்குடி தேங்க்ஸ்..?"

"இவ்வளவு செலவு செய்து டாக்டர் ராபிட்சனை வரவழைச்சதுக்காகத்தான்.. ரொம்ப தேங்க்ஸ்..."

நரேந்திரன் அவளையே பார்த்தான்.. எதையே சொல்லப் போகிறான் என்பதை அவனது முகக்குறிப்பு உணர்த்தியதில் ஊர்மிளாவின் இதயம் படபடத்தது.. அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்..

https://t.me/tamilpdfebooks

"தனியா தேங்க்ஸ் சொன்னா எப்படிக் கேட்டுக்கிறது..?"

"வேற யார் வந்து ஜோடி சேர்ந்து சொல்லனும்..? என் அப்பாவும்.. அம்மாவுமா..?" எரிச்சலுடன் கேட்டாள் ஊர்மிளா..

"ஊஹீம்.." அவன் தலையசைத்தான்..

"வேற என்ன..?" அவள் பொறுமையிழந்தாள்..

ஒரு மனுசிக்கு வாய்திறந்து நன்றி என்ற வார்த்தையைக் கூடச் சொல்ல சுதந்திரம் இல்லையா..? என்ன உலகமடா இது..!

"உன் புருசனும் உன் கூட சேர்ந்து வந்து சொல்லியிருக்கனும்.." நிதானமாக சொன்னான் நரேந்திரன்..

ஊர்மிளாவின் முகம் சிவந்துவிட்டது.. கணவனிடம் மனைவி நன்றி சொன்னதை தவறு என்று சுட்டிக் காட்டுகிறானாம்..

'இந்த லட்சணத்திலா..?'

அவள் முகத்தை திருப்பிக் கொண்டாள்.. நரேந்திரன் விடவில்லை..

"வரச்சொல்லலாமே.." என்றான்..

"யாரை..?"

"உன் புருசனை.."

"என்ன..? வம்பிழுக்கறிங்களா..?"

https://t.me/tamilpdfebooks

"சேச்சே..! அடுத்தவன் பெண்டாட்டிகிட்ட வம்பு பண்ணினா.. அவ புருசன் வந்து கையைக் காலை உடைச்சிருவான்னு எனக்குத் தெரியாதா என்ன..?"

"இப்ப உங்களுக்கு என்னதான் வேணும்..?"

"உனக்கு நான் யாருன்னு தெரியனும்.."

"அதை உங்க மகன்கிட்டப் போயி கேளுங்க.."

ஊர்மிளாவின் கோபத்தில் சுரேந்திரன் நரேந்திரனை ஏறிட்டுப் பார்த்தான்.. அவனின் பால் வடியும் முகத்தில் நரேந்திரனின் மனதில் பாசம் பீறிட்டது.. மகனிடம் குனிந்து அவன் நெற்றியில் முத்தமிட்டான்..

"அப்பா.." என்றான் மகன்..

"நான் உன் அப்பாதாண்டா.. இதை உன் அம்மா மனசில உறைக்ககிறதைப் போலத் தினமும் பத்து தடவையாவது சொல்லிவைய்யி.. அப்படியாவது அவள் மனப்பாடம் பண்ணிக்கிறளான்னு பார்ப்போம்.." என்றான் நரேந்திரன்.. சுரேந்திரன் புரியாமல் விழித்தான்..

மகனின் பார்வையில் ஊர்மிளாவின் மனம் கனிந்தது.. அவனுக்கு அறுவை சிகிச்சை தேவையில்லை என்று ஆகிவிட்டது அவள் மனம் நிம்மதி அடைந்திருந்தது.. மகன் பக்கத்தில் உட்கார்ந்து அவனைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள்.. வெகு நாள்களுக்குப் பின் கிடைத்திருந்த மன அமைதியுடன் மகனை நெஞ்சோடு அணைத்து அவன் உச்சந்தலையில் முகத்தை புதைத்தாள்.. அந்த நிம்மதியை அவளுக்கு அளித்த நரேந்திரனிடம் அவள் கொண்டிருந்த

https://t.me/tamilpdfebooks

கசப்புணர்வு கொஞ்சமாக விலகியது.. அவள் மனம் லேசாக இருந்தது.. விழியுயர்த்தி நரேந்திரனைப் பார்த்தாள்.. அந்தப் பார்வையில் அவன் சிலிர்த்துப போனான்..

அந்தப் பார்வை.. அவளை முதன் முதலில் சந்தித்த போது அவனைக் கவர்ந்து ஈர்த்த பார்வை.. அது போன்ற பார்வைகளால் தான் அவள் அவனைச் சிறைப் பிடித்தாள்.. அவளைப் பிரிந்து வாழ்ந்த காலத்தில் அவன் இழந்து விட்ட அந்தப் பார்வைக் கணைகளை நினைத்துத்தான் அவன் அதிகமாக மனம் வருந்தினான்..

அதுபோன்ற ஓர் பார்வையை அவள் பரிசாக தந்தபோது அவன் பழைய நாள்களுக்கு மீண்டு விட்டதைப் போல உணர்ந்தான்...

இப்படியொரு பார்வையை அவள் தருவதாக இருந்தால் அதற்காக எதை வேண்டுமானாலும் செய்யலாமே என்று நினைத்துக் கொண்டது அவன் மனம்..

"உன் அப்பாகிட்டச் சொல்லுடா.." என்றாள் ஊர்மிளா..

மகனை ஊடிருத்தி அவள் பேசிய உரிமையான பேச்சில் அவன் கள்ளுண்ட வண்டானான்..

'என்னத்தைச் சொல்லச் சொல்றா...' அவன் கண்கள் மின்னின..

"நான் உன் அம்மா.. அவர் உன் அப்பாங்கிறதை மனப்பாடம் பண்ணி என் மனசில் உருவேத்திக்கனும்கிற அவசியம் இல்லைடா கண்ணா.. அது என் ரத்தத்தில் கலந்திருக்கு.. நினைவு படுத்திக்கிற உறவில்லைடா அது..

https://t.me/tamilpdfebooks

வாழ்க்கையே அதுதான்.. இதை உன் அப்பா மறந்திட்டார்.. நான் மறக்கலைன்னு சொல்லு.. மனப்பாடம் பண்ணிக்க வேண்டியது அவர்தான்.. நானில்லைன்னு சொல்லு.."

"அப்படியா..?"

நர்ஸ் இல்லாத அந்தத் தனிமையில்.. மகனை மடியில் வைத்து உரையாடிக் கொண்டிருக்கும் மனைவியுடன் கிடைத்த அந்தக் குடும்பச்சூழலை கைநழுவ விட மனமில்லாத நரேந்திரன் அங்கிருந்த சேரை இழுத்துப் போட்டு அமர்ந்தான்.. ஊர்மிளாவின் மடியில் இருந்த மகனின் மூக்கைப் பிடித்து ஆட்டினான்.. சுரேந்திரனை அணைத்திருந்த ஊர்மிளாவின் கை மீது அவன் கை உராய்ந்ததில் அவள் கை ஒடுங்கி விலகியதில் அவன் மனம் கோபம் கொண்டது..

'என் கை பட்டா என்ன..? என் பிள்ளைக்கே அம்மாவாகி இருக்கா.. இதில கை பட்டா குத்தமாம்.. இவளை என்ன செய்தால் தேவலாம்..'

அவனது முறைப்பில் ஊர்மிளா உதட்டைக் கடித்தாள்..

"உங்கம்மா டீச்சரில்ல.. பேச்செல்லாம் நல்லாத்தான் பேசுவா.. மனப்பாடம் பண்ண வேண்டியது நானா..? குட் ஜோக்.. என் மகனா அவகூட நீ இருந்தேடா.. என் கூட யார் இருந்தது..?"

நரேந்திரனின் அறச்சினத்தில் அவளையுமறியாமல் கண்கலங்க அவனை ஏறிட்டுப் பார்த்தாள் ஊர்மிளா.. அசையாமல் அவளையே உறுத்துப் பார்த்துக்

https://t.me/tamilpdfebooks

கொண்டிருந்தவனின் விழிகளில் தெரிந்த ஊமைக் காயத்தில் அவள் மனம் வலித்தது..

"அவர் குடும்பம் இருந்துச்சே சுரேன்.." ஊர்மிளா மெல்லிய குரலில் சொன்னாள்..

"ஓ.. அதனாலதான் இவ விலகி ஓடி வந்தாளா..? என் குடும்பம் அவங்க.. இவ குடும்பம் இவளோட அம்மாவும்.. அப்பாவும்ன்னா.. உன்னோட குடும்பம் எதுடா சுரேன்..?"

அவன் கேள்வியில் தாக்கப்பட்ட ஊர்மிளா பதில் சொல்ல முடியாமல் மகனைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டாள்.. அதில் தெரிந்த தவிப்பில் அவனது சினம் அதிகமானது..

"பேசுறா பாரு பேச்சு.. குடும்பம்ன்னா என்னடா..? புருசன் பெண்டாட்டி.. பிள்ளைன்னு இருக்கிறதுக்குப் பெயர்தான் குடும்பம்.. என்னைச் சேர்ந்தவங்களும்.. அவளைச் சேர்ந்தவங்களும் சொந்தக்காரங்க.. இதை மறந்திட்டு என்னவெல்லாம் பேசறா பாரு.. நம்ம குடும்பம்.. நீ.. நான்.. உன் அம்மாதான்.. இதையும் அவளை மனப்பாடம் பண்ணிக்கச் சொல்லு.." கண்டிப்புடன் பேசினான் அவன்..

"போகாத ஊருக்கு வழிதேட வேணாம்ன்னு சொல்லு சுரேன்.." என்றாள் ஊர்மிளா..

அவள் முகம் கலங்கிச் சிவந்திருந்தாலும் அதில் ஒரு தீர்மானம் தெரிந்தது.. நரேந்திரனின் கண்கள் இடுங்கின.. அவன் பார்வை கூர்மையாக அவள் இதயத்தைத் துளைத்தது..

https://t.me/tamilpdfebooks

“இந்த நரேந்திரனால போக முடியாத ஊருன்னு எதுவுமில்லைடா சுரேன்.. இதுவரை உன் அம்மா இதைப் புரிஞ்சுக்கலை.. இனிமே புரிஞ்சுக்குவா.. அதுக்கான நேரம் வந்திருச்சு..” அழுத்தமாக சொன்னான் நரேந்திரன்..

ஊர்மிளாவின் உதடுகளில் கேலி கலந்த விரக்தி புன்னகை நெளிந்தது.. அதன் பொருள் புரியாமல் அவன் புருவங்களை நெரித்தான்.

“உங்கப்பாவால போக முடியாத ஊருன்னு எதுவுமில்லைன்னா.. அவர் ஏண்டா சுரேன் திருச்சிக்கு உன் அம்மாவைத் தேடிக்கிட்டுப் போகலை..? உன்னை வயித்தில சுமந்துக்கிட்டு நான் ஊரு விட்டு ஊருக்கு வேலை பார்க்கப் போனேனே.. அந்த தஞ்சாவூருக்கு என் விலாசத்தைத் தேடி ஏண்டா அவரு போகலை.. உன்னைப் பெத்தெடுத்து இந்த மூணு வருசமா வளர்த்துக்கிட்டு இருக்கேனே.. நீ பிறந்ததைத் தெரிஞ்சுக்க.. உன் அம்மாவைத் தேடி ஏண்டா உன் அப்பா போகலை..? அதெல்லாம் உன் அப்பாவாலே போக முடியாத ஊர்கள் தானே சுரேன்..?”

ஊர்மிளாவின் கேள்விகள் நரேந்திரனின் மனதில் ஊசிகளாய் இறங்கின.. அவன் பதில் பேச வாய்திறந்த போது அவசரமாக நர்ஸ் வந்து விட்டாள்..

“லன்ச்சுக்குப் போயிருந்தேன் சார்..” தாமதத்திற்கான விளக்கத்தைச் சொன்னாள்..

நரேந்திரன் தலையை அசைத்தான்.. காலையில் சாப்பிட்ட வயிறு பசித்தது.. பசியை உணர்ந்தவன் இரண்டு இட்லிகளை மட்டும் சாப்பிட்ட ஊர்மிளாவுக்கு பசிக்காதா

https://t.me/tamilpdfebooks

என்று அவள் முகம் பார்த்தான்.. அவளோ.. அவள் மடியில் தூங்கிப் போயிருந்த சுரேந்திரனைத் தாய்மையின் கனிவுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்..

'இவள் பசியா வரம் வாங்கி வந்திருக்கிறாளா..?'

அவள் கேட்ட கேள்விகளின் துயரம் அவன் நெஞ்சில் முள்ளாய் குத்தியது.. அவனைப் பிரிந்து சென்றவள் அவன் பின் தொடர்ந்து வருவான் என்று எதிர்பார்த்திருக்கிறாள் என்பதில் அவன் மனம் வலித்தது... கடந்து போன வருடங்களைத் திரும்பக் கொண்டு வந்துவிட முடியுமா என்று அவன் மனம் துடித்தான்.. அவளைத்தேடி அவன் வரவில்லை என்ற குற்றச்சாட்டை அவள் சொல்கிறாள் என்றால் அவளைத் தேடி அவன் வருவான் என்று எதிர்பார்த்து ஏமாந்திருக்கிறாள் என்றுதானே அர்த்தமாகிறது..?

அப்படியென்றால் ஊர்மிளாவின் மனம் நரேந்திரனைத் தேடியிருக்கிறது.. அந்தத் தேடுதல் அவனிடம் இல்லையென்று உடைந்து போயிருக்கிறது..

மனித மனங்களின் இடையே தோன்றும் இடைவெளி எப்பேற்பட்ட இரும்புத் திரையாக மாறி விடுகிறது என்று மலைத்துப் போனான் நரேந்திரன்..

"குட்டி தூங்கிட்டான் போல..."

நர்ஸின் வார்த்தைகளில் அவளைப் பார்த்து புன் முறுவலித்தாள் ஊர்மிளா... சோகையான அவளது புன்முறுவலை மௌனச் சாட்சியாக கவனித்துக் கொண்டிருந்தான் நரேந்திரன்...

https://t.me/tamilpdfebooks

"கட்டில்ல படுக்க வைச்சிருங்க.. அவனும் கொஞ்ச நேரத்துக்கு ரெஸ்ட் எடுக்கனுமில்ல.. டெஸ்ட்.. டெஸ்ட்.. டெஸ்டுன்னு குழந்தை அழண்டு போயிருக்கான்.." என்றாள் நர்ஸ்..

ஊர்மிளா மகனைப் படுக்க வைத்து போர்த்தி விட்டாள்.. அவன் பக்கத்தில் அணைவாக தலையணை களை வைத்தாள்..

"எனக்கு வேலையே இல்லாம பண்றாங்க இவங்க.." நர்ஸ் சிரித்தாள்..

பதிலுக்கு சிரித்த நரேந்திரன் ஊர்மிளாவைப் பார்த்து தலையசைத்து அழைத்தான்.. எங்கே என்று விழிகளால் கேட்டாள் ஊர்மிளா..

"சுரேன் தூங்கிக்கிட்டு இருக்கிறப்பவே லன்ச்சை முடிச்சிட்டு வந்திரலாம்.. ஆப்டர் லன்ச்.. நான் மீட்டிங்கை அட்டெண்ட் பண்ணனும்... காலையில் கேன்சல் பண்ணின மீட்டிங்கை ஆப்டர் லன்ச் போஸ்ட்போன் பண்ணியிருக்கேன்.." என்றான் நரேந்திரன்..

"இன்னுமா நீங்க ரெண்டு பேரும் சாப்பிடலை..? போயிட்டு வாங்க.." என்றாள் நர்ஸ்..

"பத்திரமா பார்த்துக்கங்க.." ஊர்மிளா தயங்கி நின்றாள்..

"அதுதான் என்னோட டியுட்டியே.. நீங்க கவலைப் படாம போயிட்டு வாங்க.." என்றாள் நர்ஸ்...

ஆறுதலுடன் வெளியே போன மனைவியைப் பார்த்த நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

"தேங்க்ஸ்.." என்று நர்ஸிடம் சொன்னான்..

"எதுக்கு..?" அவள் வியப்பைக் காட்டினாள்..

"என் வொய்போட மனசில ஆறுதலை உண்டாக்கினதுக்கு.." என்றான் நரேந்திரன்..

"ஓ..." தலையை ஆட்டி ரசித்துச் சிரித்தாள் நர்ஸ்..

"நீங்க இல்லாதப்ப அவங்க உங்களைப் பத்தியே பேசறாங்க.. அவங்க இல்லாதப்ப நீங்க அவங்களுக்காக தேங்க்ஸ் சொல்றீங்க.. வாட் எ பெண்டாஸ்டிக் கபுள் யு ஆர்..!"

நர்ஸின் பாராட்டைக் கேட்டபடி வெளியே வந்த நரேந்திரனுக்கு 'நாங்கள் என்ன மாதிரியான தம்பதிகள் என்று இவளுக்குத் தெரியுமா..?' என்ற நினைவு வந்தது..

மௌனமாக லிப்டில் இருந்த கூட்டத்தில் எதிரும்.. புதிருமாக விலகி அவர்கள் கலந்து நின்றார்கள்.. நரேந்திரன் ஊர்மிளாவையே பார்க்க.. அவள் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள்..

லிப்டிலிருந்து வெளிப்பட்டவர்கள் கேண்டினுக்குப் போன போது மதிய உணவு தீர்ந்து போயிருந்தது...

"இவ்வளவு லேட்டாவா வருவீங்க..?" என்று கேட்டான் கேண்டினின் பணியாள்..

"நோ.. பிராப்ளம்.." ஊர்மிளா திரும்பினாள்..

"உனக்கு எதுதான் பிராப்ளமா இருந்திருக்கு..?" எரிந்து விழுந்தான் நரேந்திரன்..

"எனக்கு ரெண்டு வாழைப்பழம் இருந்தாப் போதும்.."

https://t.me/tamilpdfebooks

"காலையில ரெண்டு இட்லி.. மதியம் ரெண்டு வாழைப்பழம்.. இந்த ரெண்டை விட்டு நீ தாண்டவே மாட்டியா..?"

நரேந்திரன் கேட்டுக் கொண்டிருந்த போது அவர்களைக் கடந்து போன யுவதி ஒருத்தி..

"ரெண்டா..? இப்போல்லாம் ஒன்னோட நிறுத்திக் கிறாங்களே.." என்று கேட்டு விட்டுப் போனாள்..

"அவங்க சொன்னதைக் கேட்டிங்கள்ல.." உதவிக் கரம் கிடைத்து விட்ட மகிழ்வோடு சொன்னாள் ஊர்மிளா..

"என்னத்தைச் சொன்னாங்க..? நீ என்னான்னு அதைக் கேட்ட..?"

ஒருமாதிரியான குரலில் வினவினான் நரேந்திரன்..

"ரெண்டே அதிகம்ன்னு சொன்னாங்களே.. ஸோ.."

"ஸோ...?"

"எனக்கு ஒரேயொரு வாழைப்பழம் இருந்தாப் போதும்.."

"புத்திசாலிதான்.. அவங்க சொன்னது இட்லியையும்.. வாழைப்பழத்தையுமில்ல.."

"பின்னே..?"

"குழந்தைகளைச் சொல்லிட்டுப் போறாங்கடி என் புத்திசாலிப் பெண்டாட்டியே.. உன்னை ரெண்டை விட்டுத் தாண்ட மாட்டியான்னு நான் கேட்டதை மூணாவது குழந்தைக்கு அச்சாரம் போடறதா அவங்க நினைச்சுட்டாங்க..."

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் சொல்லச் சொல்ல.. ஊர்மிளாவின் முகம் குங்குமமானது.. அவள் முகம் சிவக்க வேறுபக்கம் பார்த்தாள்.. நரேந்திரனின் மனப் புழுக்கம் மறைந்து விட்டது.. லேசாக விசிலடித்தான்..

"இதைக் கேக்கிறவங்க இப்படி விசிலடிக்கிறது ஒரு பெரிய பிஸினெஸ்மேன்னு சொன்னா நம்ப மாட்டாங்க.." என்றாள் ஊர்மிளா..

"நம்பலைன்னா போறாங்க.. ஏண்டி.. ஒன்னு பிறந்ததையே என்கிட்டச் சொல்லலை.. ரெண்டாவதுக்கு வழி கிடைக்குமான்னு கூடத் தெரியலை.. இதில மூணாவதுக்கு நான் உன்னை ஃபோர்ஸ் பண்றேன்கிற பழி வந்து என்மேல விழுகுது பார்த்தியா.. என்னைப் பாத்தா அந்த லேடிக்கு எப்படித் தோணுச்சோ.."

"போதும்.."

விட்டால் முகத்தை விரல்களால் மறைத்து விடுபவளைப் போல ஊர்மிளா கொண்ட லஜ்ஜையில் உரக்கச் சிரித்தான் நரேந்திரன்.. வெகு நாள்களுக்குப் பின்னால் அவள் பார்க்க நேர்ந்த அந்தச் சிரிப்பை இமைக்காமல் பார்த்து மனதுக்குள் வாங்கிக் நிறைத்துக் கொண்டாள் ஊர்மிளா..

"வா..."

ஒற்றைச் சொல்லை உதிர்த்தபடி நடந்தவனிடம் ஏனோ மறுத்துப் பேச அவளுக்குத் தேன்றவில்லை.. நரேந்திரனின் கார் வந்து நின்றதும் பின்பக்க சீட்டில் அவளுடன் அவன் ஏறியபோதும் அவளுக்கு ஆட்சேபிக்கத்

https://t.me/tamilpdfebooks

தேன்றவில்லை.. நரேந்திரனின் கார் வழுக்கிக் கொண்டு கிளம்பி சாலையின் போக்குவரத்தில் கலந்த போது எங்கே போகிறோம் என்ற கேள்வி அவள் நெஞ்சில் எழவில்லை..

பிரம்மாண்டமான அந்த ஸ்டார் ஹோட்டலின் வாசலில் கார் நின்றது... இவன் இங்கேதானே தங்கியிருக்கிறான் என்ற நினைவுடன் காரை விட்டு இறங்கினாள் ஊர்மிளா.. நரேந்திரனின் கண் பார்வையில் அவனைப் பின்தொடர்ந்தாள்.. அங்கேயும் லிப்டில் ஏறி வெளிப்பட்டவர்கள்.. நரேந்திரன் தங்கியிருந்த அறையை அடைந்தார்கள்.. கதவைத் திறந்து அவளை உள்ளே அழைத்தான் நரேந்திரன்..

ஒருதனி வீட்டைப் போல இருந்த அந்த அறையின் அழகைப் பார்த்தபடி உள்ளே பிரவேசித்தாள் ஊர்மிளா..

“ஜஸ்ட் எ மினிட்..”

அவளை அங்கிருந்த சோபாவில் உட்காரச் சொல்லி விட்டு.. போனில் உணவு வகைகளை ஆர்டர் செய்து அறைக்கு கொண்டு வரச் சொன்ன நரேந்திரன் ஊர்மிளாவிடம் சொல்லிவிட்டு குளியலறைக்குள் புகுந்தான்.. இயல்பான உடைக்கு மாறி.. நீர்த்திவலைகள் படிந்த முகத்தை துவாலையால் துடைத்தபடி அவன் வந்தபோது உணவு வகைகள் வந்திருந்தன... ஒரு டீப்பாயை இழுத்து சோபாவின் முன்னால் போட்டு அதில் உணவு வகைகளை வைக்கச் சொன்னான்.. பேரர் வெளியேறிய பின்னால் கதவை அடைத்து விட்டு ஊர்மிளாவின் பக்கத்தில் உட்கார்ந்தான்..

https://t.me/tamilpdfebooks

23

உனைத் தேடி எனை வரவைத்த..
அழகான ராட்சசி நீ....

அவளுக்கான உணவு வகைகளைப் பரிமாறி அவளிடம் கொடுத்து விட்டு.. சுவரில் பொருத்தப் பட்டிருந்த மிகப் பெரிய டி.வியை உயிர்ப்பித்தான் நரேந்திரன்.. சின்னத் திரை பெரிய திரையாகி விட்டது என்ற நினைவுடன்..

"நீங்க சாப்பிடலையா..?" என்று வினவினாள் ஊர்மிளா..

அந்தக் கேள்வியில் நரேந்திரனின் முகத்தில் மாறுதல் வந்தது.. அவளையே இமைக்காமல் ஓர் நொடி பார்த்தான்.. புரியாத ஊர்மிளா..

"என்ன..?" என்றாள்..

"இப்படி என்னைக் கேட்க ஆளில்லாம இருந்தது.."

இயல்பாகச் சொல்லியபடி அவனுக்கான உணவை எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தான் அவன்.. ஊர்மிளாவின் மனம் வலித்தது..

அவளுக்கு அது தெரியும்.. அவனுடைய வீடு அவனுடைய நிற்காமல் ஓடும் ஓட்டத்தைப் பற்றி மட்டுமே யோசித்தது.. அவனும் மனிதன்தான்.. அவனுக்கும் பசி..

https://t.me/tamilpdfebooks

தூக்கம்.. தாகம்.. இவையெல்லாம் உண்டாகும் என்பதை யோசிக்கவேயில்லை.. அவனுக்கே அது தெரியும் என்று நினைத்தவர்களைப் போல அவற்றைப் பற்றிப் பேசவே மாட்டார்கள்.. அவர்களுடைய தேவையைப் பற்றி மட்டும் தான் பேசுவார்கள்..

“நீ என் லைஃபில் வந்தே.. என்னைக் கவனிச்சுக்கிட்ட.. என் பசி.. தூக்கம்.. தாகம்.. தேவை.. அத்தனையையும் என் முகத்தைப் பார்த்துக் கெஸ் பண்ண உன்னால முடிஞ்சது..”

நரேந்திரனின் பெருமூச்சில் நான்கு ஆண்டு காலமாக அவன் அனுபவித்து வரும் பிரிவுத்துயரின் வலி தெரிந்தது.. இழப்பின் பாரம் தெரிந்தது.. ஊர்மிளா மௌனமாக இருந்தாள்.. அவள் மனது நரேந்திரனுடன் அவள் வாழ்ந்த நாள்களை அசை போட்டது..

“இப்போக் கேட்பாங்களே...”

அவன் முகம் பார்க்காமல் அவள் கேட்டாள்.. நரேந்திரன் அவள் முகத்தை ஊன்றிப் பார்த்தான்.. உணர்வுகள் துடைக்கப் பட்ட முகமாக நிச்சலனமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தவளின் மீது அவனுக்கு எரிச்சல் வந்தது..

‘இவள் என்ன துறவியா..?’

ஊர்மிளா அவனுடைய நினைவைப் பற்றிக் கவலைப் படாதவளைப் போல தன் போக்கில் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.. அவளது தட்டிலிருந்த உணவு வகைகள் காலியானதைக் கவனித்த நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

"இன்னும் கொஞ்சம் போட்டுக்க.." என்று பரிமாறினான்..

"போதும்.." தடுத்த ஊர்மிளா..

"அதை உங்க தட்டில போட்டுக்கங்க... உங்களுக்குத்தான் அலைச்சல் அதிகம்.." என்றாள்..

நரேந்திரனின் பார்வை கூர்மையாக அவளைத் துளைப்பதைப் போலப் பார்த்தது.. உதட்டைக் கடித்துக் கொண்டவள் எழுந்து வாஷ் பேசினுக்குப் போனாள்.. திரும்பி வந்தவள் பார்த்த போது நரேந்திரனின் தட்டில் உணவு வகைகள் காலியாகிருந்தன.. இயல்பாகக் குனிந்தவள் அவன் தட்டில் பரிமாற ஆரம்பித்தாள்.. நரேந்திரனின் முகம் ஒளிர்ந்தது.. அதைக் கவனிக்காததைப் போல அவள் பாவனை செய்தாள்.. வரவழைக்கப்பட்ட உணவு வகைகள் அத்தனையையும் அவள் பரிமாறப் பறிமாற மீதம் வைக்காமல் அவன் சாப்பிட்டு முடித்து விட்டான்.. அவள் மனம் விம்மியது.. கவனிப்பாரற்று இருக்கும் கணவனின் நிராதரானவான நிலையை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது..

"நீ போன பின்னாலே... சாப்பிடலையாங்கிற கேள்விய அந்த வீட்டிலே கேட்கிறாங்கதான்.. ஆனா.. இப்ப நீ முகம் பார்த்து பரிமாறினயே.. இதைப் போல பரிமாறினதில்ல.. அது கடமைக்காகக்கூட கேட்கப்படுகிற கேள்வியில்லை.. என் கவனத்துக்காக கேட்கப்படுகிற கேள்வி... பார்... உனக்கு நாங்க இருக்கிறோம்... உன்னை விட்டுட்டுப் போனவளை நினைச்சு நீ மருகாதேங்கிறதுக்காக கேட்கப்படுகிற கேள்வி..."

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனின் வார்த்தைகளில் இகழ்ச்சியாக உதட்டைச் சுழித்தாள் ஊர்மிளா.. அவளது உதட்டுச் சுழிப்பில் படிந்த அவன் பார்வையில் அவள் முகம் சிவந்தது.. தலை குனிந்தது..

அந்த நிலையில் அவளைப் பார்க்க நரேந்திரனுக்குப் பிடித்திருந்தது..

"கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு.." என்றான்..

"நீங்க வேணும்னா ரெஸ்ட் எடுங்க.. நான் வெயிட் பண்றேன்.." என்றாள் ஊர்மிளா..

"ஏன்..?"

"படுத்தா உறக்கம் வர வேணாமா..? அங்கே சுரேன் விழிச்சுட்டானோங்கிற கவலையாயிருக்கு.. அவன் பக்கத்தில இருந்தா நிம்மதியாத் தூக்கம் வரும்.. இப்போ எப்படி என்னால தூங்க முடியும்..?"

லேசாக தலையசைத்தான் நரேந்திரன்.. மகனின் மீதான மனைவியின் அக்கறையிலும்.. கவனிப்பிலும் அவன் மனம் நெகிழ்ந்தது.. அவள்.. அவனுடைய மகனுக்குத் தாய் என்ற பெருமையில் அவன் நெஞ்சம் நிறைந்தது..

"இதை முதலிலேயே சொல்லியிருக்க வேண்டியது தானே.. ஏன் என்னை மட்டும் ரெஸ்ட் எடுக்கச் சொன்ன..?" கனிவுடன் கேட்டான்..

ஊர்மிளா பதில் சொல்லவில்லை..

"நீ சுரேனுக்கு அம்மான்னா.. நான் அப்பா.. எனக்கு மட்டும் தூக்கம் வந்திருமா..?"

https://t.me/tamilpdfebooks

"இல்லை.. நீங்க எண்ணத் தூங்கச் சொன்னதாலே சொன்னேன்.." ஊர்மிளா முணுமுணுத்தாள்..

அவன் பேச்சுக்கு முகம் திருப்பிக் கொள்ளாமல்.. மறுத்துப் பேசாமல் இணக்கமான முறையில் அவள் பதில் அளிப்பதில் அவனுக்கு சந்தோசமாக இருந்தது..

"ஹாஸ்பிடல் அட்மாஸ்பியரிலேயே இருக்கிற.. அதனால கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கட்டுமேன்னு சொன்னேன்.." என்றான்..

"ஹாஸ்பிடல் அட்மாஸ்பியரில் நான் மட்டுமா இருக்கேன்..? சுரேனும் சேர்ந்துதான இருக்கான்..? இன்னும் சொல்லப் போனா.. என்னைவிட அதிகமா அந்த அட்மாஸ்பியர் அவனைப் பாதிக்குது.. மூணுவயசுக் குழந்தை.. அவனுக்குத் தெரிஞ்சதெல்லாம் வீடும்.. என்னோட ஸ்கூலும்தான்.. வேற இடம் தெரியாது.. அப்படியிருந்த என் புள்ள இப்ப மருந்து.. மாத்திரைன்னு.. ஹாஸ்பிடலில் இருக்கான்.."

ஊர்மிளாவின் வார்த்தைகளில் தெரிந்த துயரத்தில் நரேந்திரன் சிந்தனை வசப்பட்டான்... அவனது மௌனத்தை சோர்வாக நினைத்து விட்ட ஊர்மிளா..

"என்னை வேணும்னா காரில அனுப்பி வைச்சிருங்களேன்.. நீங்க ரெஸ்ட் எடுத்துட்டு ஈவினிங் வாங்க.." என்று யோசனை சொன்னாள்..

நரேந்திரன் ஊர்மிளாவை பார்த்த பார்வையில் அதிருப்தி தெரிந்தது..

"என்ன..?" ஊர்மிளாவுக்குப் புரியவில்லை..

https://t.me/tamilpdfebooks

“உன் புருசன் உன் முன்னாடி கல்லுக்குண்டு போல நிற்கிறேனில்ல..? தனியா காரில் அனுப்பி வைக்கச் சொல்கிற..? இதைப் போல நீ உளராம இருக்கிறது பெட்டர் ஊர்மிளா..” கடினமான குரலுடன் சொன்னான்..

ஊர்மிளா உதட்டைக் கடித்துக் கொண்டதில் நரேந்திரனின் அதிருப்தி மறைந்தது.. அவன் எழுந்து கொண்டான்..

“எனக்கு மீட்டிங் இருக்கு.. உன்னை ஹாஸ்பிடலில் டிராப் பண்ணிட்டு நான் அங்கே போகனும்.. ஜஸ்ட் எ மினிட்..”

அவன் கிளம்பத் தயாராகப் போகிறான் என்பதைப் புரிந்து கொண்ட ஊர்மிளா.. டிவியில் பார்வையைப் பதித்தாள்.. அவளையே ஓர்நொடி பார்த்த நரேந்திரனுக்கு பெருமூச்சு வந்தது.. அவன் உடைமாற்றியபடியே அவளைப் பார்த்தான்.. அவன் பக்கம் லேசாகக்கூடப் பார்வையைத் திருப்பாமல் சிலைபோல அமர்ந்திருந்தவளின் தோற்றத்தில் அவனுக்கு கோபம் வந்தது..

‘யாரோ போல உட்கார்ந்திருக்காளே...’

அந்த கோபத்துடன் கிளம்பியவன் அவளைப் பார்த்து..

“வா.. போகலாம்..” என்றான்..

“எங்கே..?” என்றாள் அவள்..

“ஊம்..? இந்த சென்னை மாநகரைச் சுற்றிப் பார்க்க.. ஹாஸ்பிடலுக்குத்தாண்டி.. வேற எங்கே போக முடியும்..? கூப்பிட்டா நீ கூட வந்து விட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்பியா..?”

https://t.me/tamilpdfebooks

அவன் சீற்றத்தில் அவள் வாயை மூடிக் கொண்டாள்.. கோட்.. சூட்.. டை என்று இருந்தவனின் தோற்றத்தில் அவள் மனம் லயித்தது.. அவனது கம்பீரத்தில் மயங்கிய மனதை கடிவாளம் போட்டு நிறுத்தியபடி அவனைப் பின் தொடர்ந்தாள்.. எதிரே வந்த யாரோ ஒருவர் நரேந்திரனைக் கண்டதும் வியந்து போனவராக கையை நீட்ட.. இவனும் அவர் கையைப் பற்றிக் குலுக்கினான்.. ஊர்மிளாவையும் அறிமுகப் படுத்தி வைத்தான்..

“வணக்கம்.. மிஸஸ் நரேந்திரன்..”

அந்த மனிதர் கை குவித்தார்.. பதிலுக்கு கை குவித்த ஊர்மிளாவின் மனம்.. இந்த அழைப்பொலியைக் கேட்டு எவ்வளவு நாள்களாகி விட்டன என்று ஏங்கியது..

‘மிஸஸ் நரேந்திரன்..’

அவளுடைய அடையாளமாக உச்சரிக்கப்பட்ட பெயர்.. அவளது பெயர் மறக்கப்பட்டு அவள் நரேந்திரனின் மனைவியாக மட்டுமே அடையாளம் காணப்பட்ட அந்த வார்த்தையில் அவள் மனம் பூரித்துப் போகும்.. சுயத்தை இழந்து விட்டதைப் போல தவிக்காது..

இதைப்பற்றி அவளுடைய உயிர்தோழி ஒருத்தியிடம் விமரிசித்தபோது அவள் அதைப் பெண்ணடிமைத்தனம் என்றாள்.. இப்படித்தான் பெண்கள் ஆண்களின் மீதான மயக்கத்தில் தங்களது சுயத்தைத் தொலைத்து விடுகிறார்கள் என்று சொன்னாள்..

நரேந்திரனுடன் ஊர்மிளா ஹாஸ்பிடலுக்குத் திரும்பியபோது சுரேந்திரன் தூக்கத்தில்தான் இருந்தான்..

https://t.me/tamilpdfebooks

"அப்பாடா.. இன்னும் இவன் எழுந்திருக்கலை.."

ஊர்மிளாவின் முகத்தில் தெரிந்த நிம்மதியில் நரேந்திரனின் மனதிலிருந்த கோப அலைகள் மறைந்தன.. உறங்கிக் கொண்டிருந்த மகனின் தலையை கோதி விட்டவன்.. ஊர்மிளாவிடம் லேசாக தலையை அசைத்து விட்டுக் கிளம்பி விட்டான்..

"சார்.. வொய்ப் மேலயும்.. மகன் மேலயும் ரொம்பவும் கேர் எடுத்துக்கிறாரு.."

நர்ஸின் வார்த்தைகளுக்கு உண்மையாக தலையாட்டினாள் ஊர்மிளா.. மாலையில் நரேந்திரன் வந்த போது ஊர்மிளாவுடன் ஒரு பெண் பேசிக் கொண்டிருந்தாள்.. ஜீன்ஸ்.. தொளதொளவென்ற முழுக்கை சட்டை.. வெட்டி விடப்பட்ட முடியை ஒரு ரப்பர் பேண்டில் குதிரை வாலைப் போல அடக்கியிருந்தாள்.. பொட்டில்லாத நெற்றி.. கை.. கழுத்து.. காதுகளில் நகையில்லை..

அவளைப் போன்ற ஒரு யுவதியுடன் கலாச்சாரத்தின் பிம்பமாக திகழும் அவன் மனைவி ஊர்மிளா ஆழ்ந்த நட்புடன் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்த நரேந்திரனுக்குள்..

'என்னடா இது..' என்ற வியப்பு ஏற்பட்டது..

"இவர்தான் சுரேனோட அப்பா.."

ஊர்மிளா அறிமுகப்படுத்திய போது.. நரேந்திரன் ஊர்மிளாவை முறைத்தான்.. அவனிடம் கை நீட்டிய பெண்ணின் கையைப் பிடித்துக் குலுக்காமல் தலையை

https://t.me/tamilpdfebooks

மட்டும் அசைத்தான்.. அவள் அதைப் பெரிதாகவே எடுத்துக் கொள்ளவில்லை.. வெகு இயல்பான சிரிப்புடன் அவள் கிளம்பி விட்டதில் அவனுக்கு ஆச்சரியம் வந்தது..

"சுரேனோட அப்பா உனக்கு யாருடி..?"

நர்ஸ் இல்லாத நேரத்தில் மனைவியிடம் எரிந்து விழுந்தான்..

"யார்கிட்ட அறிமுகப் படுத்தினாலும்.. சுரேனோட அப்பா.. சுரேனோட அப்பாதான்.. ஏண்டி..? உனக்கு ஹஸ்பெண்டுன்னு சொல்லிக்க மாட்டயா..?"

"ஏன்..? என் ஹஸ்பெண்டு சுரேனுக்கு யாராம்..? தெருவில் போகிற முகம் தெரியாத ஆளா..?"

ஊர்மிளாவின் கேள்வியில் அவளை அடிக்க கை ஓங்கி விட்டான் நரேந்திரன்.. அவள் அலட்டிக் கொள்ளவே இல்லை..

"கோபம் வருதில்ல..? கல்யாணம் ஆன புதில ஹஸ்பெண்டுன்னு சொல்லிக்கிறவங்க.. குழந்தை பிறந்ததும் இவங்க அப்பான்னுதான் சொல்லிக்குவாங்க.. எங்க அம்மா அப்படித்தான்.. எங்க அப்பாவை அறிமுகப் படுத்த இவர்தான் ஊர்மிளாவோட அப்பாம்பாங்க.. என் ஹஸ்பெண்டுன்னு சொல்ல மாட்டாங்க.. அந்தப் பழக்கத்திலதான் நானும் சொன்னேன்.."

நரேந்திரன் கோபம் தணிந்தான்..

"இப்ப வந்துட்டுப் போனது யார்..?" என்றான்..

ஊர்மிளா அவனைப் பார்த்த பார்வையில் எதுவோ இருந்தது.. அவன் புருவங்கள் சுருங்கின.. ஏனோ.. அவள்

https://t.me/tamilpdfebooks

சொல்லும் பதிலில் மிகப்பெரிய புதிரொன்று ஒளிந்து கொண்டிருப்பதைப் போல அவனுக்குத் தோன்றி வைத்தது..

"ஊர்மிளா..?" என்றான் கேள்வியாக..

அவள் முகம் இறுகியிருந்தது.. அவன் முகம் பார்க்காமல் சுரேந்திரனைத் தூக்கி மடியில் வைத்துக் கொஞ்ச ஆரம்பித்தாள்..

"நான் கேட்டதுக்குப் பதில் வரலை.." நரேந்திரன் அதட்டினான்..

"அனாமிகா..."

ஊர்மிளா அவன் முகம் பார்க்காமல் சொன்ன ஒற்றைச் சொல்லில் அவன் முகம் மாறியது..

"திமிரா..?" முகம் சுளித்தான் நரேந்திரன்..

"யாருக்குத் திமிர்..?" நிதானமாககேட்டாள் ஊர்மிளா.

"உனக்குத்தாண்டி.. உன் கூட பேசிக்கிட்டு இருந்தது யாருன்னு கேட்டா அனாமிகாங்கிற.. இது திமிரில்லாம வேற என்ன..? அனாமிகான்னா பெயரில்லாதவள்ன்னு அர்த்தம்.. இப்ப வந்துட்டுப் போனவருக்கு பெயரில்லையா..?"

ஊர்மிளாவின் இதழ்கள் இகழ்ச்சியாக மடிந்தன.. போடா.. நீயுமாச்சு.. உன் கேள்வியுமாச்சு என்ற ரீதியில் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

"ராட்சசி..." நரேந்திரன் குமுறினான்..

'அழகான ராட்சசி..' அவன் மனம் ஜொள்ளியது.. அவள் முகமோ துயரத்துக்கு போனது..

https://t.me/tamilpdfebooks

24

வார்த்தைகளால் எனை விரட்டியடிக்கும்.. அழகான ராட்சசி நீ....

ஊர்மிளாவின் முகத்தில் பிரதிபலித்த துயரம் யுகம்.. யுகமாக பெண்குலம் அனுபவித்து வரும் அத்தனை துயரங்களையும் ஒட்டுமொத்த குத்தகைக்கு எடுத்திருந்தைப் போல இருந்தது..

நரேந்திரனின் மனதில் குற்றஉணர்வு சூழ்ந்தது.. தனது மனைவியை குற்றமற்றவள் என்று மற்றவர்களின் முன்னால் நிருபிக்கத்தானே அவன் நினைத்தான்..? மாறாக எதையும் நினைக்கவில்லையே.. அதை ஏன் அவள் புரிந்து கொள்ளவில்லை..?

"ஏண்டி.. மத்தவங்க சொன்னதைக் கேட்டு உன்னைக் கேள்வி கேட்பேன்னு எப்படிடீ நீ நினைச்சே..? அம்மா.. உன்னைப் பத்தி சொன்னது.. அத்தனையும் நம்ம வீட்டில நடந்தா இருந்துச்சு.. அருண் முகம் சுளிக்கிறான்னு சொன்னாங்க.. அம்மா என்னென்னவோ சொன்னாங்க..."

"என்ன சொன்னாங்க..?"

"அதைப்பத்தி இப்ப என்ன..? விடு.."

https://t.me/tamilpdfebooks

"ஆஹா.. பெண்டாட்டியைத் தாங்குகிறவர்தான் நீங்க.. உங்களை நம்பி அன்னைக்கு ஓடி வந்தேனே.. ரெண்டு மாசம் கழிச்சு வர்றவர்கிட்ட என் சங்கடத்தை யெல்லாம் இறக்கி வைக்க உங்க தோள் சாய ஓடி வந்தேனே.. அப்ப நீங்க இதைப்போல இருந்திருந்தா.. சுரேனுக்கு அவங்க அப்பா யாருன்னு நான் போட்டோவைக் காட்ட வேண்டிய அவசியமே இருந்திருக்காது.."

"ஊர்மி.." வேதனையில் துடித்துப் போனான் நரேந்திரன்..

"ஓடி வந்தவளைப் பார்த்து ஒத்தைக் கேள்வியைத்தான் நீங்க கேட்டிங்க.. ராதாகிருஷ்ணன் யார்.. உனக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்ன்னு.. அந்த ஒரு கேள்வி போதும்ங்க.. ஆயுசுக்கும் உங்களை மறக்க முடியாம துடிதுடிச்சு நான் சாகறதுக்கு அந்தக் கேள்வி மட்டும் போதும்.. அப்ப உங்க அம்மா என்னைப் பார்த்த ஒரு பார்வை போதும்.. அந்தப் பார்வையில் தெரிஞ்ச சாகசச் சிரிப்பு என் தோல்வியைச் சொல்லுச்சுங்க.. அதுக்கு மேலே உங்க கேள்விக்கு விளக்கமான பதிலைச் சொல்லிட்டு உங்ககூட நான் வாழ முடியுமா..? அப்படி வாழ்ந்தா அது வாழ்க்கையாகுமா..?"

நாணயத்திற்கு இருபக்கம் உண்டு என்பது இதுதானோ என்றிருந்தது நரேந்திரனுக்கு.. அவன் கேள்விக்கான பதிலைச் சொல்லாமல் பிரிந்து சென்றவளின் செய்கை மீது குற்றம் கண்டானே...

கேள்வி கேட்ட அவன் மீதுதானே குற்றமிருக்கிறது..

https://t.me/tamilpdfebooks

"என்னை மன்னிச்சிரு ஊர்மிளா.." அவன் குரல் நடுங்கியது..

"மன்னிப்புக் கேட்கிறதுக்கான தகுதி எனக்கில்லை தான்.. மன்னிக்கிறதுக்கான தகுதி உனக்கிருக்குடி.. காதல் எதையும் மன்னிக்கும்.. நீ என்னைக் காதலிச்சவ ஊர்மிளா.."

ஊர்மிளா அந்த வார்த்தைகளில் நெகிழ்ந்தாள்.. அவளுக்காக அவன் அனைத்து அடையாளங்களையும் விட்டு விட்டு.. சாதாரணமானவனைப் போல நடித்த அந்த நாள்கள் அவள் நினைவில் வலம் வந்தன..

"உனக்குப் போன் பண்ணினப்ப அர்ச்சனா போனை எடுத்தா.. உன்னைக் கேட்டேன்.. நீ உன் பிரண்டுகூடப் பேசிக்கிட்டு இருக்கேன்னு சொன்னா.. உன்னிடம் சொல்கிறதாச் சொல்லிட்டுப் போனா.. நீ போனில் வரலை.. அம்மாதான் பேசினாங்க.. அர்ச்சனா வந்து சொன்னதுக்கு நீ அவருக்கென்ன வேலைன்னு சொல்லிட்டியாம்.. எழுந்து வரலையாம்.. அந்த ராதாகிருஷ்ணன் முக்கியம்ன்னு உன்கூடப் பேச வரலைன்னு சொல்லாமல் சொன்னாங்க.."

ஊர்மிளாவின் கண்கள் சிவந்து விட்டன.. இப்படிக்கூட ஒரு பெண் கதை கட்டி விடுவாளா என்று மனம் வெறுத்தாள்.. அதைக் கேட்டபின்பும் அவன் சும்மா இருந்திருக்கிறானே என்று மனம் வெறுத்தாள்..

முகம் திருப்பிக் கொண்ட ஊர்மிளா வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டதை உறுதிப் படுத்தினாள்..

https://t.me/tamilpdfebooks

'ராட்சசி..' நரேந்திரனுக்கு தலைவேதனையாக இருந்தது..

அவள் அழகான ராட்சசியாய் இருந்து தொலைத்தாள்.. அவ்வளவு நேரமும் இணக்கமாக பேசிக்கொண்டு இருந்த கணவனை 'யார் நீ' என்று ஒட்டாத பார்வை பார்த்து வைத்தாள்.. அப்படியே அவளை இழுத்து வைத்து நான்கு அப்பு அப்பினால் என்ன என்ற வெறி நரேந்திரனின் மனதில் கிளர்ந்தது.. சும்மா பேசியதற்கே பிரிந்து சென்று பழி வாங்கியவள் கன்னத்தில் நான்கு அப்பு அப்பினால் ஆயுள் முழுமைக்கும் பேச மாட்டாள் என்ற ஞானோதயம் வந்ததில் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு அவளையே உற்றுப் பார்த்தான்..

சுரேந்திரனைத் தூக்கித் தோளில் சாய்த்து ஜன்னல் வழியாக சாலையின் போக்குவரத்தை வேடிக்கை காண்பித்துக் கொண்டிருந்த அவன் மனைவி வெகு அழகாக இருந்தாள்..

"அழகான ராட்சசியே..!
அடி நெஞ்சில் குதிக்கறயே..
முட்டாசு வார்த்தையிலே..
பட்டாசு வெடிக்கிறயே..
அடி மனச.. அருவா மனையில்..
நறுக்கறியே.."

மெதுவான குரலில் அவன் பாட.. வியப்புடன் திரும்பிப் பார்த்தான் சுரேந்திரன்.. அவனைப் பார்த்துக் கை நீட்டிய நரேந்திரனின் கைகளுக்குள் புகுந்து கொண்டவன்

https://t.me/tamilpdfebooks

அவன் பாடும் பாடலைக் கவனிக்கத் தோதாக அவன் தோளில் கை போட்டு அவன் முகத்தையே பார்த்தான்..

அவனையே வெட்டுவதைப் போல பார்த்த ஊர்மிளாவின் முகத்தில் லேசான இளக்கம் தெரிகிறதா என்று தேடிப் பார்த்தான் நரேந்திரன்.. எதுவும் தெரியாமல் போனதில் அவனுக்குள் ஏமாற்றம் வந்தது.. சுரேந்திரன் அவன் நாடியைப் பிடித்துத் திருப்பி பாடச் சொன்னதில் அடுத்த வரிகளை உற்சாகமாக பாடினான்..

"அருகம் புல்லுக்கு..
அறுக்கத் தெரியுமா..?
கொழந்த குமரி நான் ஆமா..
அயிரை மீனுதான்..
கொக்கை முழுங்குமா..?
அடுக்குமா..?"

ராகம் போட்டு பாடிய நரேந்திரனையே வேடிக்கை பார்த்த மகனிடம் கண்ணைச் சிமிட்டின நரேந்திரன்..

"உன் அம்மா இப்படித்தாண்டா சொல்லுவா.. ஆனா.. அத நீ நம்பாதே.. எல்லாம் வெளிவேசம்.." என்றான்..

சுரேந்திரன் அப்படியா என்பதைப் போல தாயைப் பார்த்தான்.. அவளோ 'போடா' என்று ஒரு விரலை உயர்த்தி மகனை மிரட்டினாள்.. அவன் தகப்பனின் தோளின் மீது சலுகையாக சாய்ந்து கொண்டு 'இப்ப என்ன செய்யுவே' என்ற பார்வையைப் பார்த்தான்..

'இது பாரேன்.. அப்பாகிட்ட இருக்குதாம்.. அம்மா கிட்டயே கெத்து காட்டுது..' ஊர்மிளாவுக்கு சிரிப்பு வந்தது..

https://t.me/tamilpdfebooks

மகன் அவனுடைய தகப்பனின் தோளில் சாய்ந்து கொண்ட தோற்றத்தைப் பார்க்க அவளுக்கு வெகு பாந்தமாக இருந்தது..

"வெளிய பூத்து நீ..
உள்ளே காய்க்கிற..
கடலைக்காடு நீ.. ஆமா..
உயிரை உரிச்சு நீ
கயிரைத் திறிக்கற..
சுகம் சுகமா...
குயிலே.. ஏலங் குயிலே..."

நரேந்திரன் அழகாகப் பாடுவான்.. அவனது சாரிரம் வெகு சுத்தமானதாக மனம் மயக்கும் ஸ்வரங்களுடன் வெளிப்படும்.. எவ்வளவு மெல்லிய குரலில் பாடினாலும்.. வழுக்காமல் பயணிக்கும் இசையைக் கொடுப்பதில் அவன் வல்லவன்..

அன்றும் அதைப் போல அவன் பாடியதில் ஊர்மிளாவின் மனம் பழைய நினைவுகளுக்குப் பயணித்தது.. அவளுக்கென்று அவன் பாடிய பாடல்களின் நினைவலைகளில் அவள் பயணித்தாள்.. அவனோ அவளுடைய சுட்டெரிக்கும் சுடர் விழிகளைப் பற்றிய வர்ணனையை பாட ஆரம்பித்திருந்தான்..

"சூரியன ரெண்டு துண்டு செஞ்சு
கண்ணில் கொண்டவளே.. ஆஹா..
சந்திரன கள்ளுக்குள்ள ஊற வைச்ச
பெண்ணிவளோ.. ஓ.. ஓ..

https://t.me/tamilpdfebooks

ராத்திரியத் தட்டித் தட்டி கெட்டி செஞ்சி
மையிடவோ.. ஆஹா.. ஓ..
மின்மினிய கன்னத்திலே ஒட்ட வைச்சு
கை தட்டவோ.. ஓ.. ஓ..
கிளியே.. ஆலங்கிளியே...”

நரேந்திரனின் ஆலாபனையை முட்டைக் கண்களை விரித்து கொட்டக் கொட்ட இமைகளைக் கொட்டியபடி சுரேந்திரன் கேட்டுக் கொண்டிருந்தான்.. உள்ளே நுழைந்த நர்ஸ் புன்னகைத்தாள்..

“சார் மகனுக்காக பாட்டுக்கச்சேரி செய்கிறாரா..?”

நரேந்திரன் சிரித்தபடி பாட்டை நிறுத்தினான்.. இரவு ஆரம்பித்து விட்டதை இருள் உணர்த்தியது.. ஊர்மிளா சுரேந்திரனுக்கான இரவு உணவை ஊட்ட ஆரம்பித்தாள்.. ஜன்னலோரம் சேரை இழுத்துப் போட்டு அமர்ந்திருந்த நரேந்திரன் மகனையும்.. மனைவியையும் கவனித்துக் கொண்டிருந்தான்.. மகனுக்கு சாப்பாடு கொடுத்து முடித்தவுடன்.. இரவு வேளையில் விழுங்க வேண்டிய மாத்திரைகளைக் கொடுத்து அவனுடன் கதை பேசியபடி அவற்றை விழுங்க வைத்தாள் ஊர்மிளா.. அவன் வாயைத் துடைத்து விட்டு பாத்ரூமிற்கு அழைத்துச் சென்று வந்தாள்.. அவனைப் படுக்க வைத்துப் போர்த்தி விட்டவள்.. மெதுவான குரலில் கதை சொல்லி அவனைத் தூங்க வைத்தாள்..

“குட்டி தூங்கிட்டான்.. நீங்க சாப்பிட போயிட்டு வாங்க.. சார் பாவம்.. கோட்டும்.. சூட்டுமா.. உங்களுக்காக

https://t.me/tamilpdfebooks

டிரெஸ் சேன்ஜ் பண்ணாம காத்துக்கிட்டு இருக்கார்.." நர்ஸ் சொன்னாள்..

அவளுக்கு நன்றி சொல்லிவிட்டு மனைவியுடன் கேண்டினுக்குப் போனான் நரேந்திரன்..

"இங்கேதான் எனக்குப் பழக்கமாகிருச்சே.. கேண்டினுக்கு வந்து போகிறது ஒரு பிரச்னையே இல்லை.. எனக்காக நீங்க சிரமப்பட்டுக்க வேணாம்.. என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்.." பட்டுக் கொள்ளாமல் யாரோ போல பேசினாள் ஊர்மிளா..

நரேந்திரன் அவளையே இமைக்காமல் பார்த்தான்.. அவன் பார்வையை சந்திக்க முடியாமல் அவள் பார்வை தழைந்தது.. சினத்துடன் அவள் பக்கமாக இட்லித் தட்டை நகர்த்தி வைத்தான் நரேந்திரன்..

"உனக்காக ஒன்னும் சிரமப்பட்டுக்கலைடி.. என் பெண்டாட்டிக்காக சிரமப்படறேன்.." கடினமான குரலில் சொன்னான் நரேந்திரன்..

ஊர்மிளா வாய்க்குள் முணுமுணுத்தாள்.. உன்னிப்பாக அதை கவனித்தான் நரேந்திரன்.. அவன் கவனிப்பதைக் கண்டதும் அவள் முணுமுணுப்பதை நிறுத்தி விட்டு இட்லித் துண்டுகளில் கவனமானாள்..

"ரொம்பத்தான் அக்கறைங்கிறயா..?" வெகு அக்கறையாக விசாரித்தான் நரேந்திரன்..

'கண்டு பிடிச்சிட்டானே..' என்று தோன்றியபோது ஊர்மிளா பதில் சொல்லாமல் சாம்பாரில் இட்லித் துண்டை மூழ்கடித்துக் கொண்டிருந்தாள்..

https://t.me/tamilpdfebooks

"நான் அக்கறைப்படாம வேற யார் அக்கறைப் படுவாங்க..?" என்ற நரேந்திரனின் கேள்விக்கு இகழ்ச்சியாக உதட்டைச் சுழித்தாள் ஊர்மிளா..

"இந்த நாலு வருசமா உங்க அக்கறை எங்கே போச்சு..? இன்னைக்கு உங்க மகனைப் பத்தித் தெரிந்ததும் தேடி வந்து அக்கறையைக் காண்பிக்கறிங்களே.. இது உங்க பெண்டாட்டி மேல இருக்கிற அக்கறையில்ல.. உங்க மகனின் அம்மா மேல இருக்கிற அக்கறை.."

சவுக்கடி போன்ற வார்த்தைகளை இவள் எங்கே தேடிப்பிடிக்கிறாள் என்று தலையைப் பிடித்துக் கொண்டான் நரேந்திரன்.. அவனுக்கு இம்சையாக இருந்தது.. அவன் விரும்பிக் காதலித்துத் தாலி கட்டிக் குடும்பம் நடத்திய அந்த அழகான ராட்சசி கேட்கும் கேள்விகள் அத்தனையிலும் நியாயம் இருந்ததில் அவனால் வாய்பேச முடியவில்லை.. ஒரு பெருமூச்சுடன் எழுந்தான்..

ஊர்மிளாவை சுரேந்திரனின் அறையில் விட்டு விட்டு அவன் போனதும் மனதுக்குள் ஒரு வெறுமையை உணர்ந்தாள் அவள்.. அன்று முழுவதும் நரேந்திரனுடன் இருந்த மனது அவனது அருகாமையைத் தேடியதில் அவள் முகம் வாடியது..

"இவ்வளவு பெரிய வி.வி.ஐ.பியா இருக்கிறவர்.. வொய்புக்காகவும்.. மகனுக்காகவும் எல்லா அடையாளத்தையும் விட்டுட்டு கூடவே இருக்கிறதைப் பார்க்கிறப்ப ஆச்சரியமா இருக்கு.." என்றாள் நர்ஸ்..

https://t.me/tamilpdfebooks

அது உண்மைதான் என்பதில் ஊர்மிளாவின் மனம் வலித்தது.. அவனுடைய மனதுக்கு இதமாக பேச முடியாமல் போனதில் அவள் மனம் வருந்தினாள்.. என்னதான் மனம் வருந்தினாலும் அந்தப் பேச்சுக்களை அவளால் பேசாமல் இருக்க முடியாது என்பதில் அவள் இமையோரமாக கண்ணீர் வழிந்தது.. அப்படியே அவள் தூங்கிப் போனாள்..

மறுநாள் காலையில் நரேந்திரன்.. சுரேந்திரனை மருத்துவமனையிலிருந்து டிஸ்ஜார்ஜ் செய்து.. மிகப் பெரிய பங்களாவுக்கு அவனையும் ஊர்மிளாவையும் அழைத்துக் கொண்டு போனான்.. ஊர்மிளா கேள்வியாக நரேந்திரனைப் பார்த்தாள்..

25

நிழலாக நீயிருந்தும்..
நினைவாலே அதை மறுக்கும்..
அழகான ராட்சசி நீ....

“சுரேனை ஹாஸ்பிடல் அட்மாஸ்பியர் பாதிக்குதுன்னு நீதானே சொன்ன..?” என்று புருவங்களை உயர்த்தினான் நரேந்திரன்..

“அதுக்கு..?”

“இந்த வீட்டை வாங்கினேன்.. இனி தினமும் செக் அப்புக்காக மட்டும் சுரேன் ஹாஸ்பிடல் போய் வந்தால் போதும்..”

https://t.me/tamilpdfebooks

மறுத்துப் பேச வாயெடுத்த ஊர்மிளா சுரேந்திரனின் முகத்தில் தெரிந்த தெளிவில் மௌனமாகி விட்டாள்..

“இது நம்ம வீடாம்மா..?” என்ற சுரேந்திரனின் கேள்விக்கு...

“ஆமாண்டா..” என்று நரேந்திரன் சொன்னபோது ‘இல்லை’ என்று அதை மறுக்க அவளால் முடியவில்லை..

சுரேந்திரனுக்கான நன்மைகளை அவனுடைய தகப்பன் செய்யும் போது ஊடே புகுந்து தடுக்க அவளுக்கு மனம் வரவில்லை.. அது அவளுடைய பிள்ளைக்கு அவள் செய்யும் அநியாயம் என்று அவளது மனச்சாட்சி குரல் கொடுத்ததில் அவள் வாயை மூடிக் கொண்டாள்..

அவர்களுக்கு துணி துவைத்துக் கொடுத்துக் கொண்டிருந்த தேன்மொழியை வீட்டு வேலையாளாக நியமித்து விட்டான் நரேந்திரன்.. அதில் அவளுக்கு கொள்ளை சந்தோசம்..

“நீயே சமையலுக்கு நல்ல ஆளாப் பார்த்துக் கூப்பிட்டுக்கிட்டு வாம்மா..” என்று நரேந்திரன் அவளிடம் பொறுப்பை ஒப்படைத்தில் மகிழ்ந்து விட்டாள்..

கையோடு அவள் அழைத்து வந்த கண்ணம்மாவை சமையல் வேலைக்கு அமர்த்தினான்.. காரை ஓட்டிக் கொண்டிருந்த டிராவல் ஏஜன்ஸி அனுப்பி வைத்த டிரைவரான மணிவாசகத்தையே டிரைவராக ஆக்கி விட்டான்.. டிராவல் ஏஜன்ஜியை விட மூன்று மடங்கு

https://t.me/tamilpdfebooks

அதிகச் சம்பளம் என்பதில் மணிவாசகம் உற்சாகமாக வேலையில் சேர்ந்து விட்டான்.. வாசலில் செக்யூரிட்டி..

ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து நரேந்திரன் செய்ததில் அந்த வீடு நிரந்தரக் குடியிருப்பாக மாறிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள் ஊர்மிளா.. இதற்காகவா அவள் பிரிந்து வந்தாள் என்ற கேள்வி அவள் மனதில் எழுந்தது.. நரேந்திரனிடம் முரண்டிய போது..

"வேறு என்ன செய்யலாம்..?" என்று அவன் நிதானமாக கேட்டான்..

ஊர்மிளாவுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை.. திணறிவிட்டாள்..

"சுரேனோட ட்ரீட்மெண்ட் இங்கேதான் நடக்குது.. அது ஒருநாள்.. இரண்டு நாள் முடிகின்ற ட்ரீட்மெண்டில்லை.. இரண்டு வருசமாவது ஆகும்.. தினமும் மெடிகல் செக் போக வேண்டியிருக்கு.. இது மெதுவா குறைந்து ஒருநாள் விட்டு ஒருநாள்.. ஒருவாரத்திற்கு ஒருநாள்.. இரண்டு வாரத்துக்கு ஒருநாள்.. மாதத்திற்கு ஒருநாள்.. இரண்டு மாதத்திற்கு ஒருநாள்.. அப்புறம்.. வருடத்துக்கு ஒரு நாள்ன்னு மாறி மொத்தமாக தேவைப்படாமல் போய் விடும்.. 'you are completly alright' அப்படிங்கிற வார்த்தை டாக்டர்ஸ் வாயிலிருந்து வரனும்.. அது வரைக்கும் நம்ம சுரேனை ஹாஸ்பிடலில் இருக்க வைக்கனும்னா சொல்லு.. இருக்க வைக்கிறேன்.. உனக்கு ஒன்னு தெரியுமா..? நான்கூட இதைப்பத்தி யோசிக்கலை.. நீதான் யோசிச்ச.. ட்ரீட்மெண்டுக்காக எத்தனை நாளைக்கு

https://t.me/tamilpdfebooks

ஹாஸ்பிடலில் தங்க வேண்டியிருக்கும்ன்னு உனக்குத் தெரியாது.. இரண்டொரு நாள் தங்கியதிலேயே சுரேந்திரன் பாதிக்கப் படறான்ங்கிறதை நீ கண்டு சொல்லிட்ட.. இதுக்கே இப்படின்னா.. வருசக் கணக்கா இழுக்கிற ட்ரீட்மெண்டுக்கு அவனை ஹாஸ்பிடல் அட்மாஸ்பியரிலேயே வைத்திருக்க முடியுமான்னு நான் யோசிக்க ஆரம்பிச்சேன்.. தட்ஸ் ஆல்.."

ஊர்மிளாவால் எதுவும் பேச முடியாமல் போயிற்று.. மறுத்துப்பேச வழியில்லாமல் அவள் முன்னால் இருந்த வழிகளை அடைத்து விட்டான் நரேந்திரன்.. அவன் சுரேந்திரனுக்காக வாங்கியிருந்த சென்னை வீட்டில் தங்குவதைத் தவிற வேறு வழி ஊர்மிளாவுக்கு இருக்கவில்லை..

'என் மகனுக்காக...' அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்..

'அவனுக்காகத்தான் நான் இங்கே இருக்கிறேன்.. இது அவன் வீடு.. என் வீடல்ல..' திரும்பத் திரும்ப மனதுக்குள் நெட்டுரு போட்டுக் கொண்டாள்..

இதையே நரேந்திரனிடமும் அவள் சொல்லி வைத்ததில் அவன் சினத்துடன் அவளைப் பார்த்தான்.. அவள் கண்டு கொள்ளாமல் நகர்ந்துவிட.. தாடையைத் தடவியபடியே அவளை சிந்தனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்..

சுரேந்திரனை பள்ளியில் சேர்க்க நரேந்திரன் முடிவு செய்தபோது ஊர்மிளா பதறினாள்..

https://t.me/tamilpdfebooks

"அறிவில்லாம பேசாதே.. உடம்பு சரியில்லைன்னா படிக்கக் கூடாதா..? ட்ரீட்மெண்ட் அதுபாட்டுக்கு நடந்துக்கிட்டு இருக்கட்டும்.. இவன் ஸ்கூலுக்குப் போகட்டும்.. மத்த நேரத்தில ரெஸ்ட் எடுத்துக்கட்டும்.. வளர வேண்டிய பையன்டி.. வீட்டுக்குள் முடக்கக் கூடாது.."

நரேந்திரனின் கண்டிப்பில் அவள் பரிதவித்தாள்.. அன்று இரவில் என்றைக்கும் இல்லாத திருநாளாக சுரேந்திரனை உறங்க வைத்துவிட்டு அவன் அறைக்குத் தேடிவந்தாள்..

சென்னையில் ஒரு பிரான்சைத் துவக்கி.. அங்கிருந்தே பெங்களூரீல் இருந்த அத்தனை தொழில்களையும் கண்காணித்து இயக்கிக் கொண்டிருந்த நரேந்திரன் வேலைப்பளுவில் அழுந்தியிருந்தான்.. இரவிலும் அவன் லேப்டாப்பின் முன்னால் உட்கார்ந் திருந்ததில் அவள் புருவங்கள் உயர்ந்தன.. அந்த நேரத்தில் அவன் அறைக்கு அவள் வந்ததில் அவன் மனதில் சாரலடித்தது.. அதன் நீர் திவலைகளில் நனைந்த மனம் துவட்டி விட அவளின் முந்தானை கிடைக்குமா என்று ஏங்கியது..

"வா.." ஒற்றை எழுத்தில் வரவேற்றவன் லேப்டாப்பை டீப்பாயில் வைத்து விட்டு சோபாவில் சாய்ந்து அமர்ந்தான்..

அவன் பார்வை அவளை பாதாதி கேசம் வரை பார்த்து வைத்து.. அங்குலம்.. அங்குலமாக மேய்ந்தது.. அந்தப் பார்வை உணர்த்திய கடந்த காலத்தின் நெருக்கமான

https://t.me/tamilpdfebooks

தருணங்களில் ஊர்மிளா தடுமாறிப் போனாள்.. உதட்டைக் கடித்தபடி அவன் அறைக்குள் வந்தாள்..

"உட்கார்.." இந்த வார்த்தையை போதையுடன் அவன் சொல்லியதில் ஊர்மிளாவின் மனது போதைகொண்டது..

திரும்பிப் போய்விடலாமா என்று யோசித்தவள்.. வந்த வேலையை நினைவு படுத்திக் கொண்டு பேசாமல் அவன் எதிரே இருந்த சோபாவில் அமர்ந்தாள்.. சோபாவின் நுனியில் அமர்ந்திருந்தவளை ஒரு மார்க்கமாகப் பார்த்தபடி அவன் கால்மேல் கால் போட்டுக் கொண்டான்.. ஊர்மிளா கிணற்றிலிருந்து பேசுவதைப் போல எதையோ சொன்னாள்.. அவள் பேசியது அவள் காதுகளுக்கே எட்டவில்லை எனும்போது அவன் காதுகளை எப்படி எட்டும்..?

"ஊம்..?"

அவன் செவியின் அருகே உள்ளங்கையை குவித்து உன்னிப்பாக கேட்பதைப் போல பாவலா செய்தான்.. அவளுக்கு வெட்கமாகி விட்டது.. லஜ்ஜையுடன் உதட்டைக் கடித்துக் கொண்டவளை அவன் சுவராஸ்யமாக வேடிக்கை பார்த்தான்.. அந்தப் பார்வையில் அவளின் லஜ்ஜை அதிகமானது.. அவளும்தான் என்ன செய்வாள்..? அந்த நேரத்தில்.. அவனுடைய அறையில்.. தனிமையில் இருக்கும் போது அவள் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிப்பட மறுக்கின்றனவே.. மீறி வெளிவர முயன்ற வார்த்தைகளையும்.. அவனுடைய மேயும் பார்வை தொண்டைக் குழியில் தள்ளி விட்டு விடுகின்றதே..

https://t.me/tamilpdfebooks

"இன்னும் ஆறுநூறு கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கமா போயி உட்கார்ந்துக்கிட்டுப் பேசு.. என் காதில் தெளிவா விழுந்திரும்.. அடச்சீ.. இங்கே வா.." நரேந்திரன் அதட்டினான்..

அவன் உட்கார்ந்திருந்த நீண்ட சோபாவின் இந்த முனையில் தொற்றிக் கொண்டவளை அவன் முறைத்த போது..

"இப்ப என்ன..?" என்று எரிச்சலுடன் அவள் கேட்டாள்..

"நான் எவனோ ஒருத்தன் பாரு.. பாதுகாப்பா தொத்திக்கிட்டு உட்காருகிற.. ஒழுங்கா உக்காந்து தொலைடி.. சும்மா காமெடி பண்ணாதே.." அவளுக்கு மேல் அவன் எரிந்து விழுந்தான்..

'இவன் இப்படித்தான் பேசி வைப்பான்..' அவள் முகம் சிவக்க சரியாக உட்கார்ந்தாள்..

"என்ன..? மகாராணியின் கருணைப் பார்வை என் பக்கம் திரும்பியிருக்கு..?" அவன் உல்லாசமாக விசாரித்தான்..

ஊர்மிளா கை விரல்களைக் கோர்த்துப் பிரித்தபடி..

"சுரேனைச் சேர்த்து விடப் போகிற ஸ்கூலில எனக்கும் டீச்சர் வேலை வாங்கிக் கொடுக்க முடியுமா..?" என்று தயக்கத்துடன் கேட்டாள்..

அவள் குரலில் தெரிந்த இறைஞ்சலில் அவன் மனம் இளகினாலும்.. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மறுப்பாக அவன் தலையசைத்தான்..

https://t.me/tamilpdfebooks

"ஏன்..?" அவள் வெகுண்டாள்..

"ஒரு அளவுக்கு மேலே தாய்பறவையின் சிறகுக்கடியில சேய் பறவை இருக்கக் கூடாதுடி.. இந்தப் பரந்த உலகத்தில அது தனியாப் பறக்கக் கத்துக்கனும்.. அதுக்கு சிறகுகள் முளைக்கனும்.. உன்னோட நிழலிலேயே சுரேந்திரனை வளர்த்துக்கிட்டு இருந்தா வெளியுலகத்தைப் ஃபேஸ்பண்ற தைரியம் அவனுக்கு எப்படி வரும்..?" நரேந்திரன் பொறுமையாக விளக்கம் சொன்னான்..

"அவன் பேசண்ட்.." ஊர்மிளா ஆத்திரத்துடன் பேசினாள்..

"ஊஹீம்.. அவனை அப்படியே ட்ரீட் பண்ணக் கூடாது.. இன்னைக்குத்தான் அவன் பேசண்ட்.. நாளைக்கே முழு ஆரோக்கியமா மாறிடுவான்.. அப்போதும் இதே நிலைமை நீடிச்சுருச்சுன்னா என்ன பண்ணுவ..? இது விவரம் தெரிய ஆரம்பிக்கிற வயது.. அவன் ஓடி ஆடி விளையாடினால் தப்பில்லைன்னு டாக்டர்ஸே சொல்லிட்டாங்க.. அவன் பேசண்ட்ங்கிற விசயத்தை மறக்கனும் ஊர்மிளா.. அப்பத்தான் அவன் வாழ்க்கையில் அவன் ஜெயிக்க முடியும்.." பிடிவாதமாக சொன்னான் நரேந்திரன்..

"நீங்க தாயையும்.. பிள்ளையையும் பிரிக்கப் பார்க்கறிங்க.." ஊர்மிளா ஆத்திரத்துடன் அவனைக் குற்றம் சாட்டினாள்..

"அது உன் புத்தி.." என்றான் நரேந்திரன்..

https://t.me/tamilpdfebooks

அவன் விழிகளில் கோபத்தின் சிகப்பு வந்திருந்தது.. கடந்து போன நான்கு வருடங்களின் தனிமைத் துயர் அவனை ரௌத்ரம் கொள்ள வைத்தது..

"உனக்கு இந்த உலத்தை எதிர்த்து நிற்கத் தெரியலை.. சூது.. வஞ்சகம்.. சூழ்ச்சி.. இவைகளை முறியடிக்கச் சக்தியில்லாமல் ஓடி ஒளிந்து கொண்ட கோழை நீ.. என் மகனையும் உன்னைப் போல வளர்க்கச் சொல்கிறயா..?" ஆத்திரத்துடன் சீறினான் நரேந்திரன்..

"என்னது..?" ஊர்மிளாவின் விழிகள் அகன்றன..

அவள்மேல் அவன் பழிபோடுகிறானா..?

"ஆமாண்டி.." என்றான் நரேந்திரன்..

"உன்மேல உயிரையே வைச்சிருந்தேன்.. யதேச்சையா உன்னைத் திருச்சியில் பார்த்தவன் உன் பின்னாலேயே என் வேலை அத்தனையையும் மறந்து சுத்தினேண்டி.. ஏழையைப் போல காண்பிச்சு உன் அப்பாகிட்டப் பெண் கேட்டு வந்தேண்டி.. கல்யாணத்தப் போதான் உங்களுக்கு என் பொசிசன் என்னன்னு தெரியும்..."

"முதலிலேயே தெரிஞ்சிருந்தா இந்தச் சுழலில் ஏன் நான் மாட்டிக்கப் போறேன்..? அப்பா.. அம்மா இல்லைன்னு சொல்லிப் பெண் கேட்டவருக்கு பெங்களூரில் ஒரு குடும்பமே இருக்கு.." பொருமினாள் ஊர்மிளா..

"நான் சொன்னது பொய்யா..?" ஆழ்ந்த குரலில் அவன் கேட்டான்..

https://t.me/tamilpdfebooks

இல்லையென்பதில் ஊர்மிளா பல்லைக் கடித்தபடி முகம் திருப்பிக் கொண்டாள்..

"எனக்கு அப்பா.. அம்மா இல்லைடி.. என் அம்மா இறந்த பின்னாலே என் அப்பா இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கிட்டார்.. என் சித்தியை நான் அம்மாவா ஏத்துக்கலைடி.. என் அம்மாவுக்கு இணை யாருமில்லை.. ஆனா அப்பாவின் மனது சங்கடப்படுமே.. அதுக்காக அவங்களை அம்மான்னு கூப்பிட ஆரம்பிச்சேன்.. அருண்குமாரும்.. அர்ச்சனாவும் அவங்க வயித்திலே பிறந்தாலும் என் அப்பாவின் ரத்தங்களாக.. என்னோட தம்பி.. தங்கைகளாகத்தான் வளர்ந்தாங்க.. அம்மா தலைகீழா நின்னும் அவங்க குணத்தை மாத்த முடியலை.. அப்பாவோட அத்தனை சொத்துக்கும்.. பிஸினெஸ்ஸீக்கும் அவர் சொந்தக்காரரில்லை.. என்னைப் பெத்த அம்மாதான் சொந்தக்காரங்க.. கம்பெனியில் வேலை பார்த்தவருக்குப் பெண் கொடுத்து மாப்பிள்ளையாய் ஆக்கிக்கிட்டாராம் என் தாத்தா.. என் அம்மாவுடைய அப்பாவான அவரோட அத்தனை சொத்துக்கும் நான் ஒருத்தன் மட்டுமே வாரிசு அத்தனை சொத்துக்கும் வாரிசா நான் நின்னேன்.. இது தெரியாம பெரிய கோடிஸ்வரனைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறோம்ன்னு என் அப்பாவை இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கிட்ட சித்தி அவரைப் பேசிப் பேசியே சாகடிச்சாங்க... அப்பாவுக்குப் பின்னாலே என்னை அண்டியிருக்க வேண்டிய நிலைமை.. அவங்களையும்.. என் தம்பி.. தங்கையையும் நான் ஒன்னும் விரட்டி விட்டிர மாட்டேன்தான்.. அது அவங்களுக்குத் தெரியனுமே..

https://t.me/tamilpdfebooks

திடிர்ன்னு நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதில அவங்களுக்குப் பயம் வந்திருக்கனும்.."

"இத்தனை வரலாறையும் இப்பச் சொல்கிறவரு.. அப்பச் சொன்னீங்களா..?"

"என்கிட்டத் தாலி வாங்கி.. என்கூடக் குடும்பம் நடத்தியதில உனக்கு இத்தனை வருத்தமா ஊர்மிளா..?"

ஆற்ற மாட்டாமல் கேட்டு விட்டான் நரேந்திரன்.. ஊர்மிளாவின் முகம் சிவந்து விட்டது.. அவள் மனம் இல்லையென்ற பதிலைச் சொன்னது..

"மறைக்கனும்னு நினைக்கலைடி... நான் பணக்காரன்ங்கிற உண்மை தெரிஞ்சா எங்கே நீ விலகிப் போயிருவியோன்னு தான் பயந்தேன்... அதுக்காக என்னைப் பத்தின விவரங்களைச் சொல்லாமல் விட்டேன்... அதில என் சித்தியைப் பற்றிய விவரம் தானாச் சேர்ந்துருச்சுடி... மத்தபடி எனக்கு அப்படியொரு டெண்டன்சியே இல்லை.."

"சொல்ல நினைச்சிந்தா சொல்லியிருக்கலாம்..."

"ஏய்ய்.. சொல்ல நாளிருந்துச்சா..? நீயே சொல்லு.. என் மகன் உன் வயிற்றிலே வளர்ந்திருக்கான்.. அதை என்னிடம் சொல்ல உன்னால முடியலை.. ஏன்..? நான் உன் பக்கத்திலே இல்லை.. அதுபோலத்தாண்டி இதுவும்.. கல்யாணம் முடிஞ்சதும் ஹனிமூன்.. அது முடிஞ்சும் புதுப் பெண்டாட்டிகூட இருக்கிற ஆசை.. இப்படியே வாழ்க்கை நகர்ந்துச்சே..."

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளாவின் முகம் ஜிவுஜிவுவென ஆகிவிட்டது.. சற்று நேரத்திற்கு முன்னால் அதே முகத்தில் கோபத்தின் ஜிவுஜிவுப்பு வந்திருந்ததை பார்த்திருந்தவனுக்கு இவளே மழை.. இவளே வெயில்.. என்று தோன்றியது.. அந்தத் தோன்றலில் தோன்றிய போதையில் அவன் கிறக்கத்துடன் பாடினான்..

"மழையும் நீயே.. வெயிலும் நீயே..
நிலவும் நீயே.. நெருப்பும் நீயே..
அடடா.. உனைத்தான் இங்கு..
வாழும் மானிடர் காதல் என்பதா.."

அலைபோல எழுந்த அவனின் குரல் அவளை அடித்து வீழ்த்தியது.. எப்போதுமே அவன் பாட ஆரம்பித்தால் ஊர்மிளாவிடம் இருக்கும் கோபம் இடம் தெரியாமல் ஓடிவிடும்.. அந்த அளவுக்கு அவனுடைய குரல் அவளை வசீகரித்து மயக்கத்தில் ஆழ்த்தி விடும்.. அந்த மழையிரவின் தனிமையும்.. அவனது அருகாமையும் அவன் பாடல் தந்த போதையும் அவளை மயக்கத்தில் தள்ளிக்கொண்டிருந்தன.. பழைய நாள்கள் திரும்பவும் வராதா என்ற ஏக்கத்தில் அவர்களின் இதயங்கள் அலை மோதின..

"கலையெல்லாம் கற்றுக் கொள்ளும்..
பருவம்.. பருவம்..
கடலின் அலைபோல் இதயம் அலையும்..
கருநீலக் கண்கள் ரெண்டும்..
பவளம்.. பவளம்..
எரியும் விரகம் அதிலே தெரியும்.."

https://t.me/tamilpdfebooks

நரேந்திரனின் கைவிரல்கள் நீண்டு ஊர்மிளாவின் தளிர் விரல்களை இறுகப் பற்றின.. அவள் விரல்கள் நடுங்கின.. ஊர்மிளா கை விரல்களை உறுவிக் கொள்ள முயன்றாள்.. அவனுடைய வலிமையான இரும்பு விரல்கள் அதற்கு அவளை அனுமதிக்கவில்லை.. அவனது விரல்கள் குவிந்து அவள் விரல்களை இறுக்கிக் கொண்டதில் அவள் நடுங்கிப் போனாள்.. நீண்ட வருடங்களுக்குப் பிறகு உணர்ந்த அவனின் பிரத்யேகமான அந்தத் தொடுகையில் அவள் தவித்துப் போனாள்..

ஊர்மிளா நரேந்திரனைக் காதலித்தாள்.. அந்தக் காதலினால் விளைந்த கோபம்தான் அவனுக்கும்.. அவளுக்கும் இடையே இரும்புத் திரையாய் எழுந்து நின்றிருந்தது.. அதை அவர்கள் இருவருமே உணர்ந்திருந்தார்கள்.. அந்த இரும்புத்திரையை உடைக்க நரேந்திரன் மட்டுமே பிரயத்தனங்களை மேற்கொண்டான்.. ஊர்மிளா அதற்கு இடமும் கொடுக்கவில்லை.. பிரயத்தனங்களை மேற்கொள்ளவுமில்லை..

அவன் மீதான அளவு கடந்த காதலே.. 'நீயா எனை இப்படிக் கேட்டாய்..?' என்ற கோபத்துடன் அவளை விலகி ஓட வைத்தது.. ஏகாந்தமான அந்த மழையிரவின் தனிமையில் அந்த கோபத்தின் சுவடு கொஞ்சம்கூட இல்லாதவளாக அவள் தளிர் விரல்களை மீட்க அவனுடன் பலவீனமாக போராடிக் கொண்டிருந்தாள்..

"ஏகாந்தமாய் இந்த ஆனந்தம்..
அதன் எல்லை யாரறிவார்..?

https://t.me/tamilpdfebooks

ஏதேதோ சுகம் போதாதோ..
இந்த ஏக்கம் யாரறிவார்..?
முதலா.. முடிவா..? இங்கு எங்கும்..
வாழ்வது காதல் ஒன்றுதான்..”

நரேந்திரனின் கரங்கள் அவளை அணைத்து இழுத்தன.. அவனது மடிக்கு இழுக்கப்பட்ட ஊர்மிளா திமிறு முன்னால் அவன் கரங்கள் அவளைச் சுற்றி வளைத்தன.. என்ன நடக்கப் போகிறது என்று அவள் அனுமானிக்கும் முன்னால் அவன் அவளை இறுக்கித் தழுவி அவளது உதடுகளில் ஆழ்ந்த முத்தத்தைப் பதித்து விட்டான்..

ஊர்மிளா ஸ்தம்பித்தாள்.. அவளையுமறியாமல் அவன் மார்பில் அவள் ஒன்றுவதை அவள் உணர்ந்தாள்.. அவளுக்குப் பழக்கமான பிரத்யேகமான அவனுக்கே உரிய அந்த வாசனையை அவன் சட்டையில் முகம் பதித்து அவள் நுகர்ந்து கொண்டிருப்பதை உணர்ந்தான்.. அவளது கரங்கள் அவன் முதுகில் பரவி.. உரிமையுடன் இறுக்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.. இவை அத்தனைக்கும் மேலாக அவளின் நெருக்கம் கொடுத்த தைரியத்தில் அவன் கரங்கள் அவள் மேனியில் பரவி எல்லைகளைக் கடக்க யத்தனிப்பதையும் உணநந்தாள்..

சரேலென முழு மூச்சுடன் அவனைத் தள்ளி விட்டு துள்ளிக் குதித்து எழுந்தாள் ஊர்மிளா.. அவளின் நெருக்கத்தில் அவள் விலக மாட்டாள் என்று நினைத்திருந்த நரேந்திரன் பிடியின் வலிமையைத் தளர விட்டிருந்ததில் அவளின் விலகல் சாத்தியமாகி விட்டது..

https://t.me/tamilpdfebooks

"என் மகனைக் காட்டி என்னைத் தொடனும்னு நினைக்கறிங்களா..?"

ஊர்மிளாவின் ஆத்திரத்தில் அவள் கன்னத்தில் அறைந்து விட்டான் நரேந்திரன்..

26

அசையாது உன் காதலென்று
அழகாக உணர்த்தி விட்ட...
அழகான ராட்சசி நீ....

நரேந்திரன் ஊர்மிளாவிடம் பேசுவதில்லை.. அந்த மழையிரவுக்குப் பின்னால் அவளுடன் பேசுவதை அவன் சுத்தமாக நிறுத்தி விட்டான்.. சுரேந்திரனை ஊடே நிறுத்தித்தான் கேட்க வேண்டியவைகளை ஊர்மிளா கேட்டுக் கொள்ள வேண்டியிருந்தது..

"சுரேன்.. நீ எப்படா ஸ்கூலில சேரப் போற..?"

"விஜய தசமியப்பன்னு சொல்லுடா.."

"உன் ஸ்கூலிலயே அம்மாவும் டீச்சர் சேலைக்குச் சேரட்டுமா..?"

"முடியாதுன்னு சொல்லுடா.."

"எனக்குப் பொழுது போகனும் சுரேன்.."

"அப்ப என்னோட ஆபிசுக்கு வரச் சொல்லு.."

"அங்கெல்லாம் நான் போனதே இல்லைடா.."

https://t.me/tamilpdfebooks

"ஏன் வரலை..? சுரேன்.. என் கல்யாணத்துக்குப் பின்னாலே.. என் பிஸினெஸ்ஸில் உன் அம்மாவையும் ஒன் ஆஃப் தி பார்ட்னரா நான் ரெஜிஸ்ட்ரர் பண்ணியிருக்கேன்.. இது கூடத் தெரியாம வீட்டில முடங்கிக் கிடக்கிறவள்ளாம் உன் கூடவே நிழல் போல அலைய விட முடியாது.."

"பெத்தவ பிள்ளைக்கு நிழல் கொடுக்கனும்னு தாண்டா நினைப்பா.."

"தாராளமா நினைக்கட்டும்.. நிழல கொடுக்கட்டும்.. அதை வீட்டுக்கு வந்த பின்னாலே செய்யட்டும்.. ஸ்கூலுக்கு தொடுத்துக்கிட்டுப் போயிச் செய்ய வேண்டாம்.."

"அப்படின்னா நான் வீட்டிலேயே முடங்கிக் கிடக்கனுமா..? என்னால அது முடியாது.. தஞ்சாவூரில் என் வேலை எனக்காக காத்துக்கிட்டு இருக்கு.. அங்கே நான் போறேன்.."

"தாராளமா போகச் சொல்லு.. நான் அவளை நிறுத்தி வைக்கலை.."

அவள் முகம் பார்க்காமல் சொன்னவனின் முகத்தில் தெரிந்த வெறுப்பில் தளர்ந்து போனாள் ஊர்மிளா.. அவனுடைய கோபத்திலும் ஒரு நெருக்கம்தான் இருக்கும்.. வெறுப்பு என்றுமே இருந்ததில்லை..

'அவளை அவன் வெறுத்து விட்டானா..?'

அவளால் அதைத்தாங்கிக் கொள்ளவே முடியவில்லை..

"உன்னையும் கூப்பிட்டுக்கிட்டுத்தான் போவேன்.." என்று சொல்லிவிட்டாள்..

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் அவளைத் திரும்பிப் பார்த்தபார்வையின் தீட்சண்யத்தை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.. வழக்கமாக சுட்டெரிப்பதைப் போல அவள்தான் அவனை பார்த்து வைப்பாள்.. இப்போது அவன் அவளை அதே பார்வையில் பார்த்து வைத்தான்..

"என்னடா..? என்னைச் சொல்லிட்டு.. இப்ப உன்னைக் காட்டி உன் அம்மா என்னைப் பணிய வைக்கனும்னு நினைக்கிறாளா..?" அழுத்தமாக கேட்டான்..

"அதுக்கொன்னும் அவசியமில்லைன்னு சொல்லுடா.." ரோசத்துடன் சொன்னாள் ஊர்மிளா..

"அப்படியிருக்கிறவ எதுக்காக இப்படி மிரட்டனும்..?"

"மிரட்டறேனா..? நானா..?"

"ஆமாண்டா.. அவ மிரட்டறா.. இதெல்லாம் என்னிடம் செல்லுபடி யாகாதுன்னு சொல்லிரு.. நான் வேற கேட்டகிரி.. நீ என் மகன்.. அந்த விவரம் எனக்குத் தெரியாத வரைக்கும்தான் நீ இவளோட உரிமை.. தெரிஞ்ச பின்னாலே என்னோட உரிமை.. என் அத்தனை சொத்துக்கும் நீ ஒருவன் மட்டும்தான் வாரிசு.. உன்னை விட்டுக் கொடுக்க என்னால முடியாது.. ஸோ.. தஞ்சாவூருக்குப் போகிறதா இருந்தா அவ மட்டும்தான் போகனும்.. யாரும் இங்கே தடுக்கலை.. கிளம்பிப் போகச் சொல்லு.."

நரேந்திரன் வேக நடையுடன் போய் விட்டான்.. அவன் திரும்பி வந்தபோது ஊர்மிளா வீட்டில்தான் இருந்தாள்.. அவன் அதை கண்டு கொள்ளவில்லை..

https://t.me/tamilpdfebooks

அதைப்பற்றிப் பேசவும் இல்லை.. அவள் ஏமாற்றமாக உணர்ந்தாள்..

சுரேந்திரன் பள்ளிக்குப் போக ஆரம்பித்தான்.. அவனுக்கான புதிய உடைகளையும்.. சீருடைகளையும் வாங்கிக் குவித்தான் நரேந்திரன்..

"அம்மாவுக்கு..?" என்று சிறுவன் கேட்டபோது நரேந்திரனின் முகத்தில் வலி வந்தது..

ஊர்மிளா உதட்டைக் கடித்தபடி வேறுபக்கம் பார்த்தாள்..

"உன் அம்மாவுக்கு நான் வாங்கிக் கொடுத்தா.. அதைக் காட்டி அவ கையைப் பிடிச்சு இழுக்க நினைக்கிறேன்னு வாய் கூசாம பழிபோட்டிருவாடா.. அவ ராட்சசிடா கண்ணா.."

வெகு நாள்களுக்குப் பின்னால் அவன் மனம் குமுறிய குமுறலில் ஊர்மிளாவுக்குள் குற்றஉணர்வு வந்தது..

"எனக்குத் தேவையான டிரெஸ்ஸை தாத்தாவும்.. பாட்டியும் கொண்டு வந்து கொடுப்பாங்கடா.." மெல்லிய குரலில் மகனிடம் சொன்னாள்..

நரேந்திரனின் பார்வை உயர்ந்து அவள் பார்வையை தீர்க்கமாகச் சந்தித்தது.. அதில் தெரிந்த சீற்றத்தில் அவள் பார்வை தழைத்தது..

'நான் டிரெஸ் வாங்கிக் கொடுத்தா கட்டிக்க மாட்டாளா..?'

அவள் மகனுக்காக அங்கே இருக்கிறாள் என்ற நினைவில் வெளியே போய் விட்டான் நரேந்திரன்.. அன்று அவன் வீடு திரும்ப வெகு நேரமானது..

https://t.me/tamilpdfebooks

சோமசுந்தரமும்.. பூங்குழலியும் மகள்.. பேரன்.. இருவரின் அனைத்து உடைமைகளையும் எடுத்துக் கொண்டு காரில் கிளம்பி வந்தார்கள்.. அவர்களுடன் இரண்டு நாள்களுக்குத் தங்கியிருந்தார்கள்..

“உன் வேலையைப் பத்தி என்ன முடிவெடுத் திருக்கம்மா..?” என்று சோமசுந்தரம் கேட்டார்..

“ரெசிக்னேசன் லெட்டரை அனுப்பிட்டேன்ப்பா..” என்றாள் ஊர்மிளா..

அலுவலகத்திற்குக் கிளம்பிக் கொண்டிருந்த நரேந்தினின் செவிகளில் அவளது பதில் விழுந்தது.. சலனமில்லாமல் அவளைப் பார்த்தபடி அவன் டைனிங் டேபிளுக்கு வந்தான்.. அவனுக்கு தட்டை வைத்து பரிமாற ஆரம்பித்தாள் பூங்குழலி.. மௌனமாக அவன் சாப்பிட ஆரம்பித்தான்..

“உனக்காகத்தான் நாங்க தஞ்சாவூருக்கு வந்தோம் ஊர்மிளா.. இப்ப நீயும் சுரேனும் அங்கேயில்ல அப்படிங்கறப்ப எங்களுக்கு மட்டும் அங்கே என்ன இருக்கு..? 'திருச்சிக்கு திரும்பிரலாம்ன்னு அப்பா சொல்றாரு.. அங்கே நம்ம வீடிருக்கு.. அப்பாவோட புத்தகக் கடையிருக்கு..” என்றாள் பூங்குழலி..

“ஏன்..? நீங்க ரெண்டு பேரும் திருச்சியில தனியா இருக்கிறதுக்கு சென்னையிலே எங்க கூடவே இருக்கலாமே..” பூங்குழலியிடம் சொன்னான் நரேந்திரன்..

அவன் அப்படிச் சொல்வான் என்பதை எதிர்பார்த்திராத பூங்குழலி என்ன பதிலைச் சொல்வது

https://t.me/tamilpdfebooks

என்று தெரியாமல் கணவரைப் பார்த்தாள்.. அவனுக்கான பதிலை சோமசுந்தரம் அவர் பாணியில் சொன்னார்..

"எந்த நம்பிக்கையிலே உங்க கூடவே இருக்கச் சொல்கிறிங்க..? நாளைக்கு என்மக மனசில வலியோடு.. அம்மா.. அப்பா ன்னு ஓடிவந்து எங்கள் மடியிலே விழுக.. அவளுக்குன்னு தாய்வீடு வேணாமா..?"

சவுக்கடியைப் போன்ற பதிலைத் தருவதில் சோமசுந்தரம் வல்லவர்.. அவரின் பதில்களை அப்படியே அவர் மகள் பின்பற்றுகிறாள் என்பது நரேந்திரனின் நீண்ட நாள் கணிப்பு.. அவன் பேசாமல் போய் விட்டான்..

"ஏன் இப்படிப் பேசினிங்க..?" பூங்குழலி கணவரைக் கடிந்து கொண்டாள்..

"அடிப்போடி.. இன்னும் அவங்க சித்தியை ரெண்டில ஒன்னு கேக்கலை.. ஒளிஞ்சு மறைஞ்சு பொண்டாட்டிய தனிக்குடித்தனமா வைச்சிருக்காரு.. இந்த மனுசன்கிட்ட வேற என்னத்தப் பேசச் சொல்ற..? ஊர்மிளாவும்.. அவரும் இன்னும் நேருக்கு நேராப் பேசிக்கலை.. அதைக் கவனிச்சியா..?"

பூங்குழலி அதைக் கவனிக்காமல் இருப்பாளா..? வந்தவுடன் முதல் வேலையாக மகளுக்கும் மருமகனுக்கும் இடையில் நிலவும் உறவு எத்தகையது என்பதைத்தானே அவள் கவனித்தாள்.. ஊர்மிளாவும் சுரேந்திரனும் ஒரு அறையில் தங்கியிருந்தார்கள்.. நரேந்திரன் வேறொரு அறையில் படுத்துறங்கி எழுந்து போனான்.. இருவரும்

https://t.me/tamilpdfebooks

முகம் பார்த்துப் பேசிக் கொள்ளாமல் மகனை ஊடிருத்திப் பேசிக் கொண்டார்கள்.. நரேந்திரன் மகனுக்காக புதுத் துணிகள்.. பொருள்கள் என்று வாங்கிக் கொடுத்திருந்தான்.. அதில் ஊர்மிளாவுக்கென்று ஒரு சேலையோ.. பொருளோ.. நகையோ இல்லை..

மகளின் வாழ்வு சீராகி விட்டதா.. இல்லையா.. என்ற கேள்விக்குறியுடன் அவர்கள் கிளம்பிப் போய் விட்டார்கள்..

"அவளைப் பெத்தவங்களுக்காவது அவ நிம்மதியைக் கொடுத்திருக்கலாம்.."

மகனிடம் சொன்னான் நரேந்திரன்.. அவன் புரிந்து கொண்டதைப்போல தலையைத் தலையை ஆட்டினான்.. ஊர்மிளாவுக்கு லேசாக சிரிப்பு வந்தது.. நரேந்திரனின் துளைக்கும் பார்வையில் அந்தச் சிரிப்பு பறந்தது..

27

காதலையே மறந்து விட்ட..
அழகான ராட்சசி நீ....

சுரேந்திரனின் சீருடையை அணிவித்துக் கொண்டிருந்தாள் ஊர்மிளா.. அவன் தன் போக்கில் ரைம்ஸ் சொல்லிக் கொண்டிருந்தான்.. ஊர்மிளா அதை ரசித்தபடி அவனுக்குத் தெரியாத வரிகளை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள்..

https://t.me/tamilpdfebooks

அறை வாசலில் நிழலாடியது.. நிமிர்ந்து பார்த்தாள்.. நரேந்திரன் நின்றிருந்தான்.. அவள் நிமிர்வதைக் கண்டதும்.. கைக் கடிகாரத்தில் பார்வையை பதித்தான்..

நேரமாகிறதாம்.. அதைக் குறிப்பில் உணர்த்துகிறானாம்.. ஊர்மிளாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. அவனைக் கவனிக்காமல் மகனுக்கு தலைவாரி விட்டாள்.. முகத்துக்கு பவுடர் பூசி விட்டாள்.. அதற்குள் நரேந்திரன் கால்மாற்றி நின்று..

"ம்ப்ச்.." என்றான்..

'இவனை யாரு இவ்வளவு சீக்கிரமா கிளம்பி வரச் சொன்னது..?' ஊர்மிளாவுக்கு எரிச்சல் வந்தது..

"சுரேன்.. உங்கப்பாவ உள்ளே வந்து உட்காரச் சொல்லுடா.." என்றாள்..

"எதுக்கடா..? உன்னைக் காரணம் காட்டி உன் அம்மாவோட ரூமுக்குள்ள நான் நுழையப் பார்க்கிறேன்னு எனக்குப் பெயர் கட்டி விடறதுக்கா..? அந்த வம்பே வேணாம்.." கறாராக சொல்லி விட்டான் நரேந்திரன்..

"வம்பா..?" ஊர்மிளாவுக்கு கோபம் வந்து விட்டது..

அவன் எப்படி அவளை வம்பு என்று சொல்லலாம்..? அதைக் கேட்காவிட்டால் அவள் எப்படி ஊர்மிளா ஆவாள்..?

"வேணாம் சுரேன்.. சொல்லிக் காட்டிக்கிட்டே இருக்கக் கூடாதுன்னு சொல்லு.. நான் சொன்னது வம்புன்னா.. இதைவிட அதிகமான வம்பை உன் அப்பாவும்..

https://t.me/tamilpdfebooks

அவரோடா வீட்டாளுகளும் எனக்குச் செய்திருக்காங்க.. வாழ்நாள் பூராவும் சொல்லிக் காட்ட என்னால மறக்க முடியாத நிறைய விசயங்கள் நடந்திருக்கு.. அது அத்தனையையும் உனக்காக பொறுத்துக்கிட்டு இந்த வீட்டிலே ஊமைபோல நடமாடிக்கிட்டு இருக்கேன்.. என்னைச் சீண்டிப் பார்க்க வேணாம்ன்னு சொல்லு.."

கோபத்தில் அவளுக்கு மூச்சிரைத்து.. சுரேந்திரன் புருவங்கள் சுருங்க அவளையே பார்த்தான்.. அவள் சொன்னது எதுவும் அவனுக்குப் புரியவில்லை என்றாலும் அம்மா அவன் மூலமாக அப்பாவுக்கு எதையோ சொல்லுகிறாள் என்பது மட்டுமே அவனுக்குத் தெள்ளத் தெளிவாக புரிந்தது.. நரேந்திரனைத் திரும்பிப் பார்த்தான்..

"நோ.." என்றான்..

நரேந்திரனுக்கு கம்பெனிக்குக் கிளம்ப வேண்டிய அவசரமே மறந்து போய் விட்டது.. மகனின் 'நோ' என்ற ஒற்றைச் சொல்லில் அவனுக்குள் உற்சாகம் குமிழியிட்டது.

"என்னடா நோ..? உங்கம்மா சொன்னா நீ உடனே அப்பாகிட்ட நோ சொல்லுவியா..?" செல்லமாக மகனை அதட்டினான்..

"யெஸ்.." என்றபடி அவனருகே போனான் சுரேந்திரன்..

குனிந்து மகனைத் தூக்கிக் கொண்ட நரேந்திரனின் மனம் நிறைந்தது.. ஒற்றை ஆள் போல பெங்களூரில் குடும்பத்தின் மத்தியில் தனிமையில் வாழ்ந்து

https://t.me/tamilpdfebooks

கொண்டிருந்தவன் தன்னை குடும்பஸ்தனாக உணர்ந்தான்.. மகனை உச்சி முகர்ந்து கன்னத்தில் முத்தமிட்டான்..

“உங்கம்மா இத்தனை நேரமா எனக்குப் பேச சான்ஸ் கொடுக்காம பேசித் தள்ளினாளே.. இவ ஊமையாம்.. குட் ஜோக்கில்ல..?”

நரேந்திரனின் கேள்விக்கு ஆமாம் என்ற பாவனையில் தலையை ஆட்டினான் சுரேந்திரன்..

“ஒரு கேள்வி கேட்டேண்டா.. அந்த ஒற்றைக் கேள்விக்கும் இது நாள்வரைக்கும் இவ பதிலை சொல்லவே இல்லை.. நீ யாருடா என்னைக் கேள்வி கேட்கன்னு பெட்டியைத் தூக்கிக்கிட்டு என்னை விட்டுவிட்டுப் போயிட்டா.. இப்ப என்னடான்னா. நான் சொல்லிக் காட்டறேன்னு சொல்றா.. நான் கேட்டா மட்டும் தப்பாம்.. அதுவே.. இவ சொன்னா தப்பில்லையாம்.. இது எந்த ஊர் நியாயம்டா சுரேன்..”

ஊர்மிளாவை பார்த்தபடி கேட்ட நரேந்திரனின் கத்தி முனைப் பார்வையின் கூர்மையில் முகம் சிவந்தாள் ஊர்மிளா.. சுரேந்திரனின் ஸ்கூல் பேகை தயார் பண்ணியபடி..

“எங்க திருச்சி நியாயத்துக்கு பெயர் பெற்றதுடா சுரேன்.. உங்கப்பாவோட பெங்களூர்தான் நியாயம்ன்னா கிலோ என்ன விலைன்னு கேட்கிறது..” என்று சொன்னாள்.

“ஆமாண்டா.. நாங்க கேட்டோம்.. உங்கம்மா ரெண்டு கிலோ நியாயத்தை பொட்டலம் கட்டிக் கொண்டு வந்து கொடுத்திட்டா.. ஆளைப் பாரு..” நரேந்திரன் முறைத்தான்.

https://t.me/tamilpdfebooks

"பாக்காமலா கல்யாணம் பண்ணிக்கிட்டார்..." ஊர்மிளா ஸ்கூல்பேகை எடுத்து நீட்டியபடி சொன்னாள்..

"அதுக்கு முன்னால காதல் பண்ணினதை சொல்லலையே.."

நரேந்திரனின் வார்த்தைகளில் அவள் சட்டென்று அவன் முகம் பார்த்தாள்.. எதிர்பாராமல் கிடைத்த அந்தப் பார்வையில் அவன் தேங்கி நின்றான்..

அவர்களது பின்னிப் பிணைந்த பார்வையில் கடந்த காலம் வந்து நின்றது.. அசையாமல் நின்ற நரேந்திரனின் மனதில் அந்தக் காலம் எழுந்து நின்றது..

திருச்சி உச்சிப் பிள்ளையார் கோவிலில் நின்று பார்த்த போது திருச்சி மாநகரின் தோற்றம் ஒரு தேர்ந்தெடுத்த என்ஜினியரின் கை வண்ணம் போலத் தெரிந்தது.. திருச்சிக்கு அதி முக்கியமான வேலை ஒன்றிற்காக வந்திருந்தான் நரேந்திரன்.. அது பிஸினெஸ் சார்ந்த வேலையல்ல.. அவனுடன் படித்த நெருங்கிய நண்பனுக்கு திருமணம்.. அதில் கலந்து கொள்ளத்தான் பெங்களூரில் இருந்த அனைத்து வேலைகளையும் மூட்டை கட்டி வைத்து விட்டு திருச்சிவந்து இறங்கியிருந்தான் அவன்..

நட்சத்திர ஓட்டலில் தங்கியிருந்த நரேந்திரனைத் தேடி அவன் அறைக்கே வந்து விட்டான் தினேஷ்..

"டேய்.. ஈவினிங் உனக்கு ரிசப்சன் இருக்குடா.. நாளைக் காலையில் உன்னோட கல்யாணம்.. நீ

https://t.me/tamilpdfebooks

என்னடான்னா.. மூணு மணிக்கு ஹோட்டல் ரூமில வந்து உட்கார்ந்துக்கிட்டு இருக்க..” நரேந்திரன் சிரித்தான்..

தினேஷ் நரேந்திரனின் கைகளைப் பிடித்துக் கொண்டு நெகிழ்ச்சியுடன் பேசினான்..

“எவ்வளவு பெரிய பிஸினெஸ் மேன் நீ.. உன்னோட நேரம் எவ்வளவு முக்கியமானதுன்னு எனக்கும் தெரியும்டா.. யாருடா நான்..? உன் கூடப் படித்தவன்ங்கிற ஒரே காரணத்துக்காக கல்யாணத்துக்கு முதல் நாளிலேயே வந்து இறங்கியிருக்க பார்த்தியா.. இதுதாண்டா நீ..”

தினேஷை கட்டித் தழுவிக் கொண்ட நரேந்திரன்..

“போடா இவனே.. நீ என் பிரண்ட்.. அதை மட்டும் சொல்லு.. வேற எதையெதையோ உளராதே.. உன் கல்யாணத்துக்கு முதல் நாளே வரனும்னு நீ கேட்டுக்கிட்ட.. வர்றேன்னு நானும் வாக்குக் கொடுத்தேன்.. வாக்கு மாறினா அது நரேந்திரன் இல்லைடா..” என்றான்..

தினேஷின் கண்கள் உணர்வு மிகுதியில் பனித்தன.. அவனும் நரேந்திரனும் ஒன்றாகத்தான் என்ஜினியரிங் படித்தார்கள்.. நரேந்திரன் மேற்படிப்பைப் படிக்க வெளிநாட்டுக்குப் போனான்.. தினேஷ் மேற்படிப்பையும் பெங்களூரிலேயே படித்துவிட்டு.. திருச்சியில் இருந்த பொறியியல் கல்லூரி ஒன்றில் விரிவுரையாளராக வேலைக்குச் சேர்ந்து விட்டான்..

அவனுக்குத் திருமணம் முடிவானபோது நரேந்திரனுக்கு அழைப்பிதழ் கொடுக்கத் தயக்கத்துடன்

https://t.me/tamilpdfebooks

தான் அவன் போனான்.. அப்போதைய நரேந்திரன் தினேஷால் எட்ட முடியாத உயரத்தில் இருந்தான்.. கூடப் படித்தவன் என்ற உரிமையை மட்டும் வைத்துக் கொண்டு அவனைத் தேடிப் போன தினேஷிற்கு நரேந்திரனின் நிறுவனம் இருந்த பல மாடிக் கட்டிடத்தின் பிரம்மாண்டத்தில் பயம் வந்தது.. திரும்பிப் போய் விடலாமா என்று கூட யோசித்தான்.. வந்த வேலையை முடித்து விட்டுப் போய் விடலாம் என்ற எண்ணத்துடன் ரிசப்சனை அணுகி அவனைப் பற்றிய விவரத்தைச் சொன்னான்..

"ஜஸ்ட் எ மினிட் சார்..."

போனை எடுத்துப் பேசினாள் ரிசப்சனிஸ்ட்... தினேஷைப் பற்றிய நினைவிருந்தால் அவன் அறைக்குத் தான் நரேந்திரன் வரச் சொல்வான் என்று எதிர்பார்த்த தினேஷ்... அவள் போனை வைத்துவிட்டு வெகு மரியாதையுடன் அவனைப் பார்த்தபடி எழுந்து நின்றதும் புருவங்கள் உயர்ந்தன..

'ஏன் இப்படிச் செய்கிறா..?' அவனுக்குப் புரியவில்லை..

"தினேஷ்.."

அவன் தோளில் வலிமையான கரம் அழுந்தியது.. திரும்பினான்... இரு கைகளையும் விரித்து நின்ற நரேந்திரன் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டான்..

அந்த நிறுவனமே தினேஷை மரியாதையுடன் பார்த்து.. எப்பேற்பட்ட கோடிஸ்வரர் வந்தாலும்.. முன் அனுமதி வாங்காமல் நரேந்திரனைப் பார்த்து விட

https://t.me/tamilpdfebooks

முடியாது.. அப்போதும் அவன் அழைப்பதற்காக வரவேற்பறையில் அவர்கள் மணிக் கணக்கில் காத்திருக்க வேண்டும்.. அவன் அனுமதிக்கும் போது.. எழுந்து அவன் அறைக்குச் சென்றுதான் அவனை அவர்களால் பார்க்க முடியும்..

அந்த நரேந்திரன் அவன் அறையை விட்டு வெளியே வந்து ரிசப்சனில் நிற்கும் ஒருவனைக் கட்டித் தழுவி வரவேற்று அவன் அறைக்கு அழைத்துச் செல்கிறான் என்றால் அவன் எதிர் கொண்டழைத்த தினேஷ் எப்பேற்பட்டவனாக இருக்க வேண்டும்..!

அனைவரின் மரியாதையான வியந்த பார்வைகளுக்கு மத்தியில் நரேந்திரனுடன் நடந்து சென்றபோது தினேஷ் இமயத்தின் உச்சியிலிருப்பதைப் போல உணர்ந்தான்.

அன்று அவனுடைய திருமணத்திற்கான அழைப்பிதழைக் கொடுக்கும் போதுதான்... திருமணத்திற்கு முதல்நாளே நரேந்திரன் வந்துவிட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தான்..

அவன் கேட்டுக் கொண்டதைப் போல நரேந்திரன் முதல்நாளே வந்து விட்டதில் தினேஷிற்கு தலைகால் புரியவில்லை.. அந்த வார்த்தைகளை அவன் சம்பிரதாயத் துக்காகத்தான் சொன்னான் என்ற போதிலும்.. நரேந்திரன் அதை அப்படி எண்ணி ஒதுக்காமல் அவனுடைய பொன்னான நேரத்தை நண்பனுக்காக ஒதுக்கி கிளம்பி வந்து விட்டதில் தினேஷின் நெஞ்சம் நெகிழ்ந்து விட்டது..

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் நண்பனைச் சமாதானப் படுத்தி திருமண மண்டபத்துக்கு அனுப்பி வைத்தான்..

“கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு நானும் அங்கேதான் வரப் போறேண்டா.. நம்ம பிரண்ட்ஸை மீட் பண்ண இதைவிட்டா வேற சான்ஸ் கிடைக்குமா..?”

அரைமனதுடன் தினேஷ் கிளம்பிப் போன பின்பு கட்டிலில் சரிந்த நரேந்திரன் சற்று நேரம் ஒய்வெடுத்தான்.. ரூம் சர்வீஸை அழைத்து காபி டிபன் கொண்டு வரச் சொல்லி விட்டு.. அறையின் ஜன்னல் திரையை விலக்கி வெளியே பார்த்தவனின் கண்களில் உச்சிப்பிள்ளையார் கோவில் தென்பட்டது.. அதற்குள் வெயிட்டர் காபி டிபனுடன் வந்து விட்டான்.. அவனிடம் உச்சிப் பிள்ளையார் கோவிலைப் பற்றிக் கேட்டான் நரேந்திரன்..

“திண்டுக்கல்லுக்கு மலைக்கோட்டைன்னா.. திருச்சிக்கு உச்சிப்பிள்ளையார் கோவில் சார்.. இவர் திருச்சியோட காவல் தெய்வம்.. முழு முதற்கடவுளான இவரோட மலைக் கோவில்தான் திருச்சியோட முழு முதல் அடையாளம்..”

சொல்லிவிட்டு வெயிட்டர் போய் விட்டான்... குளியலறைக்குள் புகுந்து.. குளித்து புத்துணர்வுடன் வந்த நரேந்திரன்.. உச்சிப்பிள்ளையார் கோவிலை வேடிக்கை பார்த்தபடி காபி டிபனை காலி செய்தான்.. உடைமாற்றி ஹோட்டல் வாசலுக்கு வந்தவன் காத்திருந்த காரில் ஏறி உச்சிப்பிள்ளையார் கோவிலுக்குப் போகச் சொன்னான்..

https://t.me/tamilpdfebooks

மிக அரிதாக கிடைத்திருந்த அந்த ஓய்வு நாளை உற்சாகமாக கழிக்க விரும்பினான் நரேந்திரன்.. தினேஷின் ரிசப்சன் தொடங்க ஏழு மணியாகி விடும்.. அதுவரை அங்கே சும்மா உட்கார்ந்து வேடிக்கை பார்ப்பதற்கு ஊரையாவது சுற்றிப் பார்க்கலாமே என்பது அவனது எண்ணமாக இருந்தது..

உச்சிப் பிள்ளையார் கோவிலின் படிகளில் ஏறியபோது எதிரே வந்தவர்களையும்... கூட வந்தவர்களையும் முன்னேயும்... பின்னேயும் வந்து கொண்டிருந்தவர்களையும் வேடிக்கை பார்த்தவனுக்கு.. அந்த நகரின் கலாச்சாரத்தைப் பிடித்துப் போய்விட்டது..

பெங்களூரைப் போல அதிநவீன உடைகளை அணிந்து முடியை விரிய விட்டிருக்காமல் திருச்சிப் பெண்கள் சேலை.. சுடிதார் சல்வார் எனத் திகழ்ந்தார்கள்.. அவர்களின் நீண்ட கூந்தல் காவேரி நீரின் செழுமையைச் சொல்லின.. காவேரித் தாயின் உபயத்தால் நீண்டு வளர்ந்திருந்த கூந்தலைப் பின்னலிட்டு பூ வைத்திருந்தார்கள்..

அந்த மங்களகரமான அழகை ரசித்தான் நரேந்திரன்.. உச்சிப் பிள்ளையாரை வணங்கி விட்டு.. அங்கிருந்து நகரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவனின் மீது யாரோ மோதி விழுந்தார்கள்... மோதிய வேகத்தில் விழப் போனவரை யார் என்று கூடப் பார்க்காமல் தாங்கிப் பிடித்துக் கொண்டான் நரேந்திரன்.. அவன் கைவளைவில் சாய்ந்திருந்த நபரின் முகம் பார்த்தவன் விழி விரித்தான்..

https://t.me/tamilpdfebooks

அவன் கைகளில் சாய்ந்திருந்தது ஒரு பெண்.. அதுவும் அழகான இளம்பெண்..!

நரேந்திரனின் விழிகள் விரிந்ததில் அவன் கைகளில் சாய்ந்திருந்த பெண் லஜ்ஜை கொண்டாள்.. நாணிச் சிவந்த அவள் முகத்தை அவன் அதிக ஈர்ப்புடன் பார்த்ததில் அவளின் நாணம் அதிகரித்தது.. சங்கடத்துடன் அவன் கையிலிருந்து விலகி நின்றாள்..

“ஐ ஆம் ஸாரி.. இந்தக் குட்டிப் பெண் செய்த வேலையாலே உங்களை டிஸ்டார்ப் பண்ணிட்டேன்..”

முகம் சிவக்க அவள் சொன்னாள்.. அவள் சொல்லிய அந்தக் குட்டிப்பெண் அவள் சேலை மறைவில் ஒளிந்து கொண்டு நரேந்திரனை எட்டிப் பார்த்தாள்.. ஆறு வயதுதான் இருக்கும்.. அந்த அழகான குண்டு முகத்தின் பெரிய விழிகளில் தெரிந்த மிரட்சியில் நரேந்திரனுக்கு அந்தக் குழந்தையின் மீது பிரியம் உண்டானது..

“ஹாய்..!” அந்தக் குழந்தையைப் பார்த்துக் கையாட்டினான்..

“இவளுக்கு ஹாய் சொல்லாதீங்க.. பாரு பவிக்குட்டி.. உன்னாலே இந்த அங்கிள் மேல அக்கா மோதிட்டேன் பாரு.. இதுக்கு உனக்கு என்ன பனிஷ்மெண்ட் கொடுக்கலாம்..?”

அந்தப் பெண் குழந்தையை மிரட்டினாள்.. அந்த மிரட்டலில் குழந்தையின் மிரட்சி அதிகமாகியது..

“பாவம் குழந்தை.. விட்டு விடுங்க...”

நரேந்திரன் பரிந்துரையில் அந்தப்பெண் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.. அவளின் அழகான வடிவழகில் நரேந்திரன் பிரமித்துப் போனான்..

28

இந்த யுகத்தின் அழகையெல்லாம்
குத்தகைக்கு எடுத்திருக்கும்
அழகான ராட்சசி நீ....

அவள் அதீத அழகோடு இருந்தாள்.. குத்து விளக்கின் ஒளிச்சுடர்போல பிரகாசித்த அந்தப் பெண்ணின் அழகில் நரேந்திரன் மயங்கிப் போனான்.. அதுபோன்ற அழகுடன் அவன் வேறு எந்தப் பெண்ணையும் பார்த்ததில்லையென்று அவன் மனம் ஜொள்ளியது..

"இவளுக்கு நீங்க ரெக்கமென்டேசனா..?"

அந்தப் பெண் வினவியதில் பேச்சை நீள வைக்க அவனுக்கு சந்தர்ப்பம் கிடைத்து விட்டது..

அவன் நரேந்திரன்.. ஜெகஜ்ஜால சித்தன்.. சந்தர்ப்பம் கிடைக்காவிட்டாலும் அதை உருவாக்கிக் கொள்பவன்.. இப்போது கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை விட்டுக் கொடுத்து விடுவானா..?

அவன் கப்பென்று பிடித்துக் கொண்டு பேச்சை வளர்த்தான்..

https://t.me/tamilpdfebooks

“பாவம் பவிக்குட்டி..! சின்னக் குழந்தை..! பாருங்க.. இது கண்ணு ரெண்டிலயும் மான்குட்டி போல பயம் மின்னுது.. ஆமாம் தெரியாமல்தான் கேட்கிறேன்.. பவிக் குட்டிக்கு நீங்க அக்கா.. நான் உங்களுக்கு அங்கிளா..? என்னங்க அநியாயம் இது.. என்னைப் பார்த்தா உங்களுக்கு அங்கிள் போலவா தோணுது..?”

நரேந்திரனின் கேள்வியில் அவனை மீண்டும் பார்த்த அந்தப் பெண்ணின் கண்களில் ஏதோ வந்து போனது.. வழக்கமான கோட்.. சூட்டைத் தவிர்த்து அன்று நரேந்திரன் ஜீன்ஸ் பேண்ட்டும் கார்கோ சர்ட்டுமாக இருந்தான்.. கூலிங்கிளாஸ் வேறு.. ஆண்மை ததும்பிய அவன் முகத்தில்.. நெற்றியின் மீது படிந்து விழுந்த சிகையில் அவனது முகத்தின் கவர்ச்சி அதிகரிப்பதை உணர்ந்தவள் பார்வையை விலக்கிக் கொண்டாள்..

“நான் பவிக்குத்தான் அங்கிள்ன்னு சொன்னேன்.. எனக்கு அங்கிள்ன்னு சொல்லலை..” அவள் முணுமுணுத்தாள்..

“அப்பச்சரி.. ஏன் பவிக்குட்டி.. இந்த அக்கா உன்மேல ஏன் இவ்வளவு கோபமா இருக்காங்க..?”

அவன் வேண்டுமென்றே ‘அக்கா..’ என்று குறும்புடன் அழுத்திச் சொன்னதில்.. அவள் முகத்தில் சினம் துளிர்த்தது..

‘இவனுக்கு நான் அக்காவா..? நினைப்புத்தான்..’

அவள் பல்லைக் கடித்தபடி பவித்ராவைப் பார்த்தாள்..

https://t.me/tamilpdfebooks

"இவர் மட்டும் என்னை அக்கான்னு சொல்லலாமா பவி..?"

"ஹலோ.. யாருங்க உங்களை அக்கான்னு சொன்னது..? நான் பவியோட அக்கான்னுல்ல சொன்னேன்.. இல்ல பவி..?"

அவன் குழந்தையைக் கூட்டுக்குச் சேர்த்துக் கொள்ள.. அதுவும் வெகு இலகுவாக அவனருகில் வந்து விரல் கோர்த்து கூட்டணி போட்டுக் கொண்டது..

"யெஸ் அங்கிள்.."

"அக்காவுக்குத்தான் அது புரியலை.. இல்ல பவி.."

"யெஸ் அங்கிள்.."

"ஆமாம்.. அக்காவுக்குன்னு பெயர் இருக்குமே.. அது என்னவாம் பவிக்குட்டி.."

இயல்பாக அவன் கேட்க.. அதைவிட படு இயல்பாக பதில் சொல்லி விட்டது அந்த பவிக்குட்டி..!

"ஊர்மிளாக்கா அங்கிள்.."

"வெரிகுட்.. ஊர்மிளா..! அழகான பெயர்..! உங்க அக்காவைப் போலவே.."

அவன் ரசித்துச் சொன்ன விதத்தில் ஈர்க்கப்பட்ட ஊர்மிளாவின் முகம் சிவந்து போனது.. அவள் உதட்டைக் கடித்தபடி..

"வா பவி.." என்றாள்..

https://t.me/tamilpdfebooks

"என் பெயர் நரேந்திரன்.." என்றான் அவன்..

"நான் கேட்டேனா..?"

அவள் கோபப்பட முயன்று தோற்றாள்.. அவனுடைய பெயரை அவன் சொல்லியதில் அவளுக்குள் ஒரு சிலிர்ப்பு உண்டானதை மின்னல் வெட்டிய அவள் கண்கள் காட்டிக் கொடுத்திருந்தனவே..

"ஏன் கேட்கலை..? நான் உங்க பெயரைக் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டேனா இல்லையா..?" குறும்புடன் அவன் கேட்டான்..

"முன்னே பின்னே தெரியாதவங்ககிட்ட பெயர் சொல்லி.. பெயர் கேட்க முடியாது.." அவளும் நறுக்குத் தறித்தாற்போல பதில் கொடுத்தாள்..

"முன்னே.. பின்னே தெரியாதவனா..? ஏன் பவி.. அப்படியா..? நான் யாரோவா..?" அவன் குழந்தையிடம் கேட்க.. அது..

"இல்லை.." என்று அறிவித்தது.. போதாக்குறைக்கு..

"நீங்க அங்கிள்.." என்று வேறு உறவு கொண்டாடியது..

"கேட்டுக்கிட்டிங்களா..?"

குறும்பு கூத்தாடும் முகத்துடன் அவளிடம் அவன் கேட்டான்..

"மோதி விழுந்த உங்களுக்கு என் பெயரைக் கேட்கனும்னு தோணலை.. அமைதியா நின்ன குழந்தை

https://t.me/tamilpdfebooks

அங்கிள்ன்னு உறவு கொண்டாடுது.. ம்ஹீம்.. நல்லதுக்கே காலமில்லை.."

"போதும்.. ரொம்பவும்தான் குழந்தையை கொண்டாட வேணாம்.. இவ ஓடினா.. கீழே விழுந்திருவாளோன்னு துரத்திப் பிடிக்கப் போய்.."

அவள் முடிக்க முடியாமல் பாதிப் பேச்சிலேயே முகம் சிவக்க நிறுத்திக் கொண்டாள்.. நரேந்திரன் உதட்டைச் சுழித்து உல்லாசமாக சிரித்தபடி அவள் விட்ட வாக்கியத்தை பூர்த்தி செய்தான்..

"நீங்க என்மேல மோதி கீழே விழப் போனிங்க.. ஆம் ஐ கரெக்ட்..?"

ஆமாம்.. நீ சொல்வது சரியென்று சொல்ல முடியாமல் அவள் பவித்ராவை முறைத்தாள்..

"குழந்தையை ஏங்க முறைக்கறிங்க..? அது என்ன நீங்க என்மேல மோதி கையில சாயனும்னு வேண்டுதலா வைத்திருந்துச்சு..?"

"அது மட்டும்தாங்க குறை.. மத்தபடி இவ செஞ்ச வேலைக்கு.."

"இவ கைக்கு தங்க வளையல் வாங்கிப் போட்டு விடனும்.."

"அதை நீங்க செய்வீங்க.."

"நீங்க என்ன செய்வீங்க..?"

"நாலு மொத்து மொத்துவேன்.."

https://t.me/tamilpdfebooks

"ஆளைப் பார்த்தா கொடி போல இருக்கீங்க.. பேச்சைப் பார்த்தா டெர்ரர்தனமா இருக்கு.. யாருங்க நீங்க..?"

"ஊர்மிளா.."

"அப்பாடி.. இப்பவாவது உங்க வாயாலே உங்க பெயரைச் சொல்லனும்னு உங்களுக்குத் தோணுச்சே.."

அவன் பார்வையில் சிறகடிக்கத் துடித்த மனதை அடக்கிக் கொண்டாள் ஊர்மிளா..

'இவன் யாரோ.. எவரோ..'

பதில் சொல்லாமல் பவித்ராவின் கையைப் பிடித்துத் தன் பக்கமாக இழுத்துக் கொண்டவள்.. நகர்ந்து போய் சற்றுத் தொலைவிலிருந்த கோவில் பிரகாரத்தில் உட்கார்ந்து கொண்டாள்.. பவித்ராவைப் பார்த்து ஒற்றை விரலை உயர்த்தி அவள் கண்டித்துக் கொண்டிருப்பதை வெகு சுவராஸ்யத்துடன் வேடிக்கை பார்த்தபடி அவர்களுக்கு அருகே போன நரேந்திரன் பிரகாரத்தில் அமர்ந்தபடி பவித்ராவை பார்த்தான்.. குழந்தையின் விழிகள் மின்னின.. அதில் திரும்பிப் பார்த்த ஊர்மிளாவின் விழிகளும் மின்னின..

"இங்கேயும் வந்துட்டிங்களா..?" என்றாள்..

"குழந்தைக்கு சரியான மண்டகப்படி போல.. அதான் அதுகிட்ட விசாரிக்கலாம்ன்னு வந்தேன்.." என்றான் அவன்..

"இவர் பெரிய ஐ.ஜி.. விசாரிக்க வந்துட்டார்.. வா.. பவி போகலாம்.."

https://t.me/tamilpdfebooks

கோபம் போல பேசியபடி குழந்தையின் கைவிரல்களைப் பிடித்தபடி படியிறங்க ஆரம்பத்தவளைப் பின்தொடர்ந்தான் நரேந்திரன்..

அழகான பட்டுச் சேலையில் இருந்தவளின் நீண்ட பின்னல் அவள் அசையும் போதெல்லாம் அசைந்து ஆடியதில் அவனது மனமும் சேர்ந்து ஆடியது.. உலகத்தையே வலம் வந்து பிஸினெஸ் செய்து கொண்டிருந்தவனின் மனம் அந்தக் காவேரிக் கரையில் பிறந்து வளர்ந்த அழகுப் பெண்ணிடம் நிலை கொண்டது..

நரேந்திரன் படியிறங்கிய போது.. அவள் ஆட்டோவில் ஏறிக் கொண்டிருந்தாள்.. காரில் ஏறிய நரேந்திரன்.. அவள் போன ஆட்டோவைப் பின் தொடரச் சொன்னான்.. அவன் காரில் அவளைப் பின் தொடர்வதை அறியாத ஊர்மிளாவின் விழிகள் படிகளின் மீது அவன் இறங்கிக் கொண்டிருக்கிறானா என்று தேடி ஏமாந்தன.. அதைப் பார்த்தபடி காரில் அவளைப் பின்தொடர்ந்து கொண்டிருந்த நரேந்திரனின் மனதில் சாரல் அடித்தது..

ஊர்மிளா போன ஆட்டோ.. ஒரு தெருவின் முனையில் நின்றது.. சந்தடி நிறைந்த ரோட்டின் பக்கமாக திரும்பியிருந்த புத்தகக் கடையின் வாசலில் அவள் நின்றாள்.. கடைக்குள் இருந்தவரிடம் பேசினாள்.. பின்பு.. பக்கவாட்டிலிருந்த தெருவில் நுழைந்து.. கடையை ஒட்டியிருந்த கதவைத் திறந்து வீட்டுக்குள் போய் விட்டாள்..

https://t.me/tamilpdfebooks

“கார்னர் பிளாட்டுன்னா இந்த வசதி இருக்கும்ங்கய்யா.. இந்தப் பக்கம் சந்தடியான ரோட்டுப் பக்கமா கடையைக் கட்டி விட்டுக்கலாம்.. அந்தப் பக்கம் சந்தடி இல்லாத தெருப்பக்கமா வீட்டு வாசலை விட்டுக்கலாம்.. ஐடியாப் பண்ணிக்கட்டியிருக்காங்க..” என்றான் டிரைவர்..

புன்னகையுடன் தலையை அசைத்த நரேந்திரன் காரை மண்டபத்துக்கு விடச் சொன்னான்.. அவன் போன போது ரிசப்சன் தொடங்கியிருந்தது.. மேடையில் மாப்பிள்ளையாக கோட்.. சூட்டில் நின்றிருந்த தினேஷ் நரேந்திரனைக் கண்டதும் மேடையை விட்டு இறங்கி வந்து விட்டான்.. மணமகனே முக்கியத்துவம் கொடுத்து வரவேற்ற நரேந்திரனை திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்.. அவர்கள் வியாபார உலகை அறியாத நடுத்தர வர்க்க மக்கள்..

“மாப்பிள்ளையோட பிரண்டாம்.. கூடப் படிச்சவராம்..”

ஆங்காங்கே கிசுகிசுக்கப்பட.. மணமகனின் தோழன் என்ற அடையாளத்தை மட்டும் சுமந்து கொண்டு.. வேறு எந்த அடையாளங்களும் இல்லாதவனாக முன் வரிசையில் உட்கார்ந்தான் நரேந்திரன்.. தினேஷ் மேடைக்குப் போனான்.. அவர்களுடன் படித்த நண்பர்களில் சிலர் வந்து சேர்ந்தார்கள்.. அவர்கள் நரேந்திரனைக் கண்டதும் ஆவலுடன் பேசினார்கள்.. தினேஷின் திருமணத்திற்கு அவன் வருகை தந்திருந்ததில் வியந்தார்கள்..

https://t.me/tamilpdfebooks

"ஹி இஸ் அவர் பிரண்ட்.." இலகுவாக சொன்னான் நரேந்திரன்..

நட்பு என்பதுதான் எப்படிப்பட்ட இணைக்கும் சங்கிலியாக இருக்கிறது என்பதில் அந்த நண்பர்களுக்கு நெகிழ்வு ஏற்பட்டது.. நண்பர்களுடன் பேசியபடியே மேடையைப் பார்த்த நரேந்திரனின் கண்களில் மின்னல் உற்பத்தியானது..

அங்கே மணமக்களுக்கு பரிசைக் கொடுத்து லேசாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள் ஊர்மிளா..

சில நிமிடங்களுக்கு முன்புதான் அவன் அவளை உச்சிப் பிள்ளையார் கோவிலில் சந்தித்தான்.. அடுத்த சில நிமிடங்களில் அவள் அவன் கலந்து கொண்ட திருமண வரவேற்பில் கலந்து கொள்ள வந்திருக்கிறாள் என்றால் அதை அவன் என்னவென்று சொல்லுவான்..?

ஏதோ ஒரு பந்தம் அவனையும் அவளையும் இணைத்துக் கொண்டிருப்பதைப் போல அவன் உணர்ந்தது அந்த நொடியில்தான்.. அதே நொடியில் அவனைப் பார்த்த அவள் கண்களிலும் மின்னல் வந்து போனது.. அவன் உணர்ந்த அதே உணர்வை அவளும் உணர்ந்தாளா என்று அவன் தனக்குள் கேட்டுக் கொண்டான்.. அந்த இடத்தில் அவளைச் சந்திக்க நேர்ந்திருக்கா விட்டாலும்.. அவளுடைய முகவரியை அறிந்து வைத்திருந்த அவன் ஏதாவது ஒரு விதத்தில் மீண்டும் ஒரு சந்திப்பை உருவாக்கியிருப்பான்தான்..

https://t.me/tamilpdfebooks

அப்படி அவன் உருவாக்க வேண்டிய அவசியமில்லாமல் தானாக அந்தச் சந்திப்பு உருவானதை அவனால் வியக்காமல் இருக்க முடியவில்லை..

நரேந்திரன் அமர்ந்திருந்த முன் வரிசைக்கு அடுத்த வரிசையில் அவளும்.. அவளுடைய சிநேகிதிகளும் உட்கார்ந்தார்கள்.. நரேந்திரன் இயல்பாக நகர்த்துவதைப் போல அவனுடைய சேரை லேசாக திருப்பி நகர்த்திக் கொண்டான்.. ஒருபக்கமாக சாய்ந்து உட்கார்ந்ததில் அவனுடைய நேர் பார்வையில் ஊர்மிளா வந்தாள்.. உதட்டைச் சுழித்து அவள் காட்டிய ரகசிய ஜாடையில் அவன் செய்த தில்லாலங்கடித்தனத்தை அவள் கண்டு கொண்டதை உணர்த்தினாள்.. அதில் அவன் தேன் குடித்த சிங்கமானான்..

‘எங்கே இந்தப் பக்கம்..?’

அவனது விழிகள் கித்தாய்ப்பாக வினவின..

‘அத நான் கேக்கனும்.. நீங்க எங்கே இந்தப் பக்கம்..?’

அவளது உதட்டுச்சுழிப்பு அவனை கேலி பேசி வம்புக்கு இழுத்து கேள்வி கேட்டு வைத்தது..

சிங்கத்துக்கு முன்னால் மீண்டும் தேனருவி கொட்டியது.. நரேந்திரன் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்க்க ஆரம்பித்து விட.. அவள் ‘மணமேடை அந்தப் பக்கம்..’ என்று விழிகளால் ஜாடை காட்டினாள்.. அதில் நரேந்திரனின் உற்சாகம் அதிகமானது.. அவன்

https://t.me/tamilpdfebooks

முன்னிலும் அதிகமாக அவளைப் பிய்த்து தின்று விடுவதைப் போல பார்க்க ஆரம்பித்து விட்டான்..

அவன் பார்வையில் அவள் முகம் சிவந்து போனாள்.. தோழிகளிடம் பேசுவதைப் போல பார்வையைத் திருப்பிக் கொண்டவள்.. அவன் இன்னமும் பார்த்துக் கொண்டிருக்கிறானா என்று அறிய விரும்பிய குறுகுறுப்பில் ஓரக் கண்ணால் அவனை கள்ளப்பார்வை பார்த்தாள்..

நரேந்திரன் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந் தான்.. அவளது கள்ளப் பார்வையில் அவன் முகத்தில் வெளிச்சம் வந்தது.. ஊர்மிளா அவன் கண்டு கொண்டானே என்று வெட்கிப் போனாள்..

"நேற்றுவரை நீ யாரோ..
நான் யாரோ..
இன்று முதல் நீ வேறோ..
நான் வேறோ..."

மெல்லிசைக் கச்சேரியில் ஒலித்த பாடலில் ஊர்மிளாவின் பார்வை திரும்பி அவளையே பார்த்துக் கொண்டிருநத நரேந்திரனின் பார்வையை சந்தித்தது.. இருவரின் பார்வைகளும் பிண்ணிப் பிணைந்தன... நரேந்திரனின் பார்வை ஊர்மிளாவின் பார்வையில் இணைந்து பிணைந்ததில் ஊர்மிளாவுக்குள் இனம் புரியாத இதமான இம்சை எழுந்தது..

அதுவரை அது போன்றதொரு உணர்வை அவள் உணர்ந்ததில்லை.. அதை உணர்த்தியவனின் கம்பீரத்தில்

https://t.me/tamilpdfebooks

அவள் ஈர்க்கப் பட்டாள்.. அந்த பின் மாலை நேரத்தின் மயக்கும் சூழ்நிலையில் ஒரு ஆடவனின் ஆர்வப் பார்வையால் ஈர்க்கப்பட்ட அவளின் கன்னி மனது படபடத்தது..

"அங்கே மாலை மயக்கம்..
யாருக்காக..?
இங்கே மயங்கும் இரண்டு
பேருக்காக..
இது நாளை வரும்
என்று காத்திருந்தால்..
ஒரு நாளல்லவோ..
வீணாகும்..?"

மெல்லிசையின் பாடல் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தது..

29

ஓர்நாளின் சிறு மணித்துளியில்
ஓர் பார்வையில் எனை வீழ்த்திவிட்ட
அழகான ராட்சசி நீ....

அந்த நாளை அவர்கள் வீணாக்கவில்லை.. படபடத்த அவளின் பார்வையும்.. விலகாத அவனது பார்வையும்.. கிடைத்திருந்த சந்தர்ப்பத்தை நழுவ விடவில்லை..

https://t.me/tamilpdfebooks

அவளின் நாணப் பார்வை நொடிக்கொரு முறை அவன் மீது படிந்து.. படிந்து விலகியது.. அவனது ஆண்மைப் பார்வையோ அசையாமல் அவள்மீதே நிலை கொண்டிருந்தது.. அந்த அசாத்திய தைரியத்தில் அவள் மேலும் ஈர்க்கப் ப்பட்டாள்..

'கொஞ்சமாது அச்சப்படறானான்னு பாரு..' மனதுக்குள் கேட்டுக் கொண்டாள்..

"யாருடி அது..?" அவள்தோழி வீணா கேட்டாள்..

"யாரைச் சொல்ற..?" அறியாதவளைப் போல இமை கொட்டினாள் ஊர்மிளா..

"ஏய்.. ஏய்.."

ஒற்றைவிரலை உயர்த்தி வீணா சிரித்து மிரட்டியதில் மற்ற தோழிகளுக்கும் ஆர்வம் வந்து விட்டது..

"என்னடி.. என்னடி.."

கூட்டுக் குரல்கள் வீணாவை முற்றுகையிட அவள் நரேந்திரனின் பக்கம் கை காட்டி விட்டாள்.. திரும்பிப் பார்த்தவர்கள் நரேந்திரனின் பார்வையைக் கண்டதும் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள்.. அவர்களின் ஒட்டு மொத்த "குபீர்" சிரிப்பு அடிக்கடி கேட்டது.. அப்போதெல்லாம் ஊர்மிளா முகம் சிவந்து.. தோழிகளை கடிந்து கொண்டதில் அவர்களின் கேலி... அவனையும்.. ஊர்மிளாவையும் இணைத்தாக இருந்திருக்கலாம் என்று நரேந்திரன் யூகித்தான்..

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளாவின் படபடத்த பட்டாம்பூச்சி இமைகள் பேசிய கதையில் அவனுக்கு உலகமே மறந்து போனது.. சுற்றுகின்ற பூமியில் மணித்துளிகள் நிற்காமல் நகர்ந்து கொண்டிருக்கும் என்ற உண்மையை மறந்து போனவனாக அவன் அவளையே பார்க்க.. அதில் வெட்கிப் போனவளாக. அவள் நொடிக்கொரு முறை அவனைப் பார்க்க.. இந்த நாடகத்தை அவளின் தோழிகள் பார்க்க என்று இருந்ததில் நேரம் நகர்ந்து போனதை யாரும் கவனிக்கவில்லை.. யதேச்சையாக பக்கத்தில் பார்த்த தோழிகள்..

"அடிப்பாவி.." என்று தலையில் கை வைத்தார்கள்..

"என்னடி..?" ஊர்மிளா புரியாமல் விழித்தாள்..

"உன்னை பார்த்துக்கிட்டே.... பக்கத்தில இருந்தவர்களை பாக்காம போனோம் பாரு.."

"அவங்களை ஏண்டி நீங்க பார்க்கனும்.."

"பார்த்தாத்தானே மண்டபத்தில ஆள் இருக்காங்களா.. இல்லையாங்கிறதை கண்டுபிடிக்க முடியும்..?"

"என்னது..?"

"என்னத்தை 'நொன்னது..?' இங்கே பாரு.. மண்டபத்திலே முக்கால்வாசி ஜனம் இல்லே.. மீதமிருக்கிற கால்வாசி ஜனமும் மாப்பிள்ளை வீடு.. பொண்ணு வீடா இருப்பாங்க.. எழுந்திருங்கடி.. சாப்பிடப் போகலாம்.."

அங்கேயும் நரேந்திரன் ஊர்மிளாவுக்கு எதிர் வரிசையில் அமர்ந்து வைத்தான்.. ஊடுறுவும் அவன்

https://t.me/tamilpdfebooks

பார்வையில் ஊர்மிளா அவள் இலையில் கை வைப்பதாக நினைத்துக்கொண்டு பக்கத்து இலையில் கை வைத்தாள்.. அந்தத் தோழி ஊர்மிளாவின் கையைத் தட்டி விட்டு..

"இலையைப் பார்த்து சாப்பிடுடி.." என்று அதட்டி வைத்தாள்..

'இவனாலே..' ஊர்மிளா லஜ்ஜையுடன் அவனைப் பார்க்கக் கூடாது என்ற சங்கல்பத்துடன் தலை கவிழ்ந்து இலையில் கவனமானாள்..

அவள் இலையில் ரவா கேசரி விழுந்தது..

"நான் கேட்கலையே.." திகைப்புடன் நிமிர்ந்தாள்..

"உங்க மாமா மகன்தான் உங்க இலையில ரவா கேசரியைப் போடச் சொன்னாருங்க.." என்றான் பரிமாறியவன்..

"மாமா மகனா..?" ஊர்மிளா திருதிருத்தாள்..

அவளுக்கு எந்த மாமன்மகன் இருக்கிறான்..? அவளுடைய அம்மா பெற்றோருக்கு ஒற்றைப் பெண்.. கூடப் பிறந்தவர்கள் யாருமில்லை.. அவளைப் போலவே ஊர்மிளாவும் ஒற்றைப் பெண்ணாய் பிறந்து விட்டாள் என்று அவளுடைய உறவினர்கள் சொல்வார்கள்.. மற்றபடி ஊர்மிளாவின் ஒன்று விட்ட மாமன் மகன்களெல்லாம் திருமணமாகி குழந்தை.. குட்டியுடன் இருப்பவர்கள்.. இதில் அந்தத் திருமண மண்டபத்திற்கு எந்த மாமன் மகன் வந்திருக்கக் கூடும்..?

https://t.me/tamilpdfebooks

"என்னாங்க.. இந்த முழி முழிக்கறிங்க.. அந்தா இருக்காரு பாருங்க.. அவருதான் உங்க மாமன் மகன்.."

பரிமாறுபவன் சுட்டிக் காட்டிய திசையில் நரேந்திரன் கண்சிமிட்டினான்.. ஊர்மிளாவிற்கு குப்பென்று வியர்த்துப் போனது..

"செமத்தியான மாமன் மகன்டி.."

வீணா கட்டை விரலையும்.. ஆள்காட்டி விரலையும் இணைத்து வளையமாக்கி.. 'தூள்' என்ற முத்திரையை காட்டினாள்..

"பாருடி.. இவன் எனக்கு மாமன் மகன்னு சொல்லியிருக்கிறதை.." கோபப்படாமல் கோபம் போலச் சொன்னாள் ஊர்மிளா..

"அட.. அட.. அடா.." வீணா மெச்சிப் போனாள்..

"என்ன வீணா..?"

"உனக்கு இதில ரொம்ப கோபம் போல.."

"இருக்காதா பின்னே.. எவ்வளவு தைரியமிருந்தா அவன் இப்படிச் சொல்லி விடுவான்..?"

"இப்ப.. நீ அவன் தைரியத்தை மெச்சறயா.. இல்ல.. கோபப்படறியா..?"

வீணாவின் கேலிக்குரலில் அகப்பட்டுக் கொண்ட ஊர்மிளா..

"என்.. என்ன..? கோபம்தான் படறேன்.." என்று சமாளித்தாள்..

https://t.me/tamilpdfebooks

"தெரியுது.." நம்பாத குரலில் சொன்ன வீணா..

"யாருடி அவன்..?" என்று ஆழ்ந்த குரலில் கேட்டாள்..

'யார் அவன்..?'

ஒரு இனிய கனவு கலைந்ததைப் போல உணர்ந்தாள் ஊர்மிளா..

அவன் யாரோ.. எவரோ.. அவளுக்கு எதுவும் தெரியாது.. அன்று மாலையில் நடந்த இரு சந்திப்புகளை மட்டுமே வைத்து அவனது பார்வையின் சுழலில் ஊர்மிளா மாட்டிக் கொள்வாளா..? அவ்வளவு பலவீனமான மனதா அவள் மனது..?

அவனிடமிருந்த பார்வையை வலுக்கட்டாயமாக இலையின்மீது திருப்பிய ஊர்மிளா அதற்குப் பின்னால் அவனை நிமிர்ந்துபார்க்க முனையவில்லை.. துடிக்கும் மனதிற்கு கடிவாளமிட முயன்றபடி அவனைத் திரும்பிப் பார்க்காமல் தோழிகளுடன் கிளம்பினாள்.. வாசலில் இருந்த ஆட்டோவில் ஏறியபோது அவளையும் அறியாமல் திரும்பிப் பார்த்து விட்டாள்..

அவளது எதிர்பார்ப்பு வீண்போகவில்லை.. அங்கே.. துளைக்கும் பார்வையுடன் நரேந்திரன் நின்று கொண்டிருந்தான்.. அவளது ஒதுக்கத்தைக் கண்டு கொள்ளாமல் அவன் பின் தொடர்ந்து வந்திருந்ததில் அவளது மனம் கசிந்தது.. அவளது பார்வையைக் கண்டதும் லேசான புன்முறுவலுடன் அவன் தலையை அசைத்தான்..

https://t.me/tamilpdfebooks

பதிலுக்கு தன்னையும் அறியாமல் தலை அசைத்த ஊர்மிளா ஆட்டோவில் ஏறிவிட்டாள்.. ஏனோ அவள் மனதில் துக்கம் பொங்கியது..

முகவரியற்ற தபால்கள் சேர வேண்டிய இடத்திற்குப் போய் சேர்ந்து விடுமா..?

அதுபோலதான் இந்தக் கதையும் என்று நினைத்தபடி உறங்கிப் போனாள் ஊர்மிளா..

மறுநாள் திருமண மண்டபத்தில் அவளைத் தேடி ஏமாந்து போனான் நரேந்திரன்.. அவனுக்குத் தெரியாது.. திருமணத்திற்கு வர முடியாது என்பதற்காகத்தான் முதல் நாளின் மாலையில் ரிசப்சனில் ஊர்மிளா கலந்து கொள்ள வந்திருந்தாள் என்பது.. மணமகளும் அவளும் பள்ளியில் ஒன்றாகப் படித்த தோழிகள்.. பள்ளிப்பருவம் முடிந்தவுடன் ஆளுக்கொரு திசையில் பிரிந்து போய் விட்டார்கள்.. ஆசிரியை வேலையில் விருப்பமுள்ள ஊர்மிளா பட்டப் படிப்பில் சேர்ந்தாள்.. மணப்பெண் மாளவிகாவோ என்ஜினியரிங் படிப்பில் சேர்ந்தாள்.. திசைமாறிப் பறந்தாலும் பள்ளிப் பருவத்தை மறந்துவிட முடியுமா..?

மறக்காத மாளவிகா அழைப்பு விடுக்க.. ஊர்மிளாவும் மற்ற பள்ளிப்பருவ தோழிகளும் சென்று சேர்ந்து அந்தத் திருமண வரவேற்பிற்குப் போய் வந்தார்கள்..

அந்தத் திருமணத்திற்கு அடுத்த நாளும் போக முடியாத சூழல் ஊர்மிளாவுக்கு.. அவள் எம்.எஸ்ஸி

https://t.me/tamilpdfebooks

முடித்தவுடன் பி.எட் கல்லூரியில் சேர்ந்துவிட்டாள்.. மறுநாள் கல்லூரி இருந்த நிலையில் ஊர்மிளா கல்லூரிக்குக் கிளம்பிப் போய் விட்டாள்.. இரண்டு நாள்கள் வரை நரேந்திரனின் முகம் அவள் மனதில் நிலைத்திருந்தது.. மெல்ல அது புகைப்படலமாக மறையத் தொடங்கியபோது ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமானின் சன்னதியில் மீண்டும் அவனைப் பார்த்தாள்..

அவளையே பார்த்தபடி குங்குமத்தை வாங்கிக் கொண்டிருந்தவனைக் கண்டதும் அவள் விழிகள் பிரகாசித்தன.. அதைக் கண்கொட்டாமல் பார்த்தபடி அவன் அவளைப் பின் தொடர்ந்ததில் அவளது மனம் படபடத்தது..

முகவரியில்லாத கடிதம் எப்படி வந்து சேர்ந்தது..?

அவளுக்குத் தலைகால் புரியவில்லை.. அவளுடன் அவளது அம்மாவும் வந்திருந்ததில் தனது ஆர்வத்தை வெளிக் காட்டாமல் அடக்கிக் கொண்டாள்.. மனதின் துள்ளலை மறைத்தபடி அவனை நொடிக்கொரு முறை பார்த்த ஊர்மிளாவின் விழிகள் அந்தத் துள்ளலை மறைக்காமல் அப்பட்டமாக பிரதிபலித்து விட்டன..

தாயுடன் பேசியபடி அவன் பின்தொடர்கிறானா என்பதை உறுதிபடுத்திக் கொள்ள அவள் அடிக்கடி திரும்பிப் பார்த்ததில்..

"யாரைப் பார்க்கிற..?" என்று பூங்குழலியும் திரும்பிப் பார்த்துவிட்டாள்..

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் பக்கத்தில் வந்த வயோதிகருடன் இயல்பாக பேச்சுக் கொடுத்தபடி எங்கோ பார்த்ததில் ஊர்மிளாவின் படபடத்த மனம் கட்டுக்குள் வந்தது..

'தப்பிக்க வைச்சுட்டான்..'

கண்களால் அவனைப் பாராட்டியபடியே..

"யாரைச் சொல்கிறிங்கம்மா..?" என்று அவள் கேட்டு வைத்தாள்..

அன்றிரவு தூங்கும்போது அடுத்து அவனைப் பார்க்க முடியுமா என்ற சந்தேகமே அவள் மனதில் எழவில்லை.. நிச்சயமாக அவன் அவளைத் தேடி வருவான் என்று அவளது உள்மனது சொல்லியது..

அவனும் தேடி வந்தான்.. ஒரு மழை நாளில் மாலை நேரத்தில் புத்தகக் கடையில் சோமசுந்தரத்துடன் பேசியபடி ஊர்மிளா டீ குடித்துக் கொண்டிருந்தபோது அவன் கடைக்குள் பிரவேசித்தான்..

அந்த மழைநேர மாலையில் புத்தகக்கடையைத் தேடி யார் வரப்போகிறார்கள் என்ற அசட்டையுடன் சோம சுந்தரத்திடம் அரட்டை அடித்துக் கொண்டிருந்த ஊர்மிளாவுக்கு தூக்கிவாரிப் போட்டது.. அவனை அந்த நேரத்தில் அங்கே அவள் எதிர்பார்த்திருக்கவில்லை என்பதை அவளது மிரண்ட விழிகள் சொல்லின...

அவனோ அவளை 'யார் நீ..' என்ற பார்வையை பார்த்து வைத்து உயிர்ப்பித்து விட்டான்..

https://t.me/tamilpdfebooks

'இவன் இருக்கானே..' அவள் நிம்மதியாக மூச்சு விட்டபடி செல்ல கோபத்துடன் ரகசியமாக அவனை முறைத்தாள்..

"வாங்க சார்.. என்ன வேணும்..?" சோமசுந்தரம் அவனை வரவேற்றார்..

அவன் எதுவும் சொல்லாமல் மௌனபார்வை பார்த்தான்.. அந்தப் பார்வைக்கு என்ன பொருள் என்று சோமசுந்தரம் யோசிக்கும்போதே.. கடைவாசலில் ஒரு பொடியன் வந்து..

"மாமா.. உங்களை மாமி கூப்பிட்டாங்க.." என்று தகவல் சொல்லிவிட்டுப் போய் விட்டான்..

"ஒரு நிமிசம்.."

சோமசுந்தரம் வீட்டைப்பார்த்து நடையைக் கட்டிவிட.. நரேந்திரன் ஊர்மிளாவிடம் கேலிக் குரலில் கேட்டான்..

"புத்தகக் கடைக்கு வந்திருக்கிறவன்கிட்ட என்ன வேணும்ன்னு இவர் கேட்கிறாரே.. ஒருகிலோ சர்க்கரை வேணும்ன்னு கேட்டா என்ன செய்வாரு..?"

"எதிர்க்கால இருக்கிற மளிகைக் கடையில போய் வாங்கிக்கங்கன்னு சொல்லி கையைக் காட்டி விடுவாரு.." என்றாள் ஊர்மிளா..

"கெட்டிக்காரர்தான்.."

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் அவளை ஏற இறங்க பார்த்த பார்வை அவளது கெட்டிக்காரத்தனத்தை மெச்சுவதாக இருந்தது..

"என்னோட அப்பா.. அப்படித்தான் இருப்பார்.."

பேச்சுவாக்கில் சொல்வதைப் போல அவளுடைய அப்பாவை அவள் அறிமுகப்படுத்தி விட்டதில் அவன் விழிகள் அவளை மெச்சின..

"பெயர் என்ன..?" விசாரித்தான்..

"அதைத்தான் பவிக்குட்டிய கைக்குள்ள போட்டுக் கிட்டு கேட்டுத் தெரிஞ்சாச்சே.." என்றாள் ஊர்மிளா..

"உங்க பெயரைக் கேட்கலை.."

"பின்னே..?"

"உங்க அப்பா பெயரைக் கேட்டேன்.."

"சோமசுந்தரம்.."

"ஈஸிட்..? அவரோட பெயருக்கும்.. இங்கேயிருக்கிற புத்தகங்களுக்கும் சம்பந்தமேயில்லை.. இவரோட பெயருக்கு இவர் தேவாரமும்.. திருவாசகமும் இல்ல விற்கனும்..?"

கடையிலிருந்த இலக்கியப் புத்தகங்களை பார்வையிட்டபடி சொன்னான்.. பெரும்பாலான இலக்கியங்கள் பொதுவுடமையை வலியுறுத்துவனவாக இருந்தன..

https://t.me/tamilpdfebooks

"அவரோட பெயரை என் தாத்தா வைச்சாரு.. இந்த புத்தக் கடையை என் அப்பா வைச்சாரு.." என்றாள் ஊர்மிளா..

அவளுடைய அப்பாவைப் பற்றிப் பேசும்போது அவள் முகத்திலும்.. குரலிலும்.. பிரியமும்.. பெருமையும் கலந்து பொங்குவதைக் கவனித்தான் நரேந்திரன்..

"அப்பான்னா ரொம்பப் பிடிக்குமோ..?" என்று கேட்டான்..

"அப்பான்னா எந்தப் புள்ளைக்கும் பிடிக்கத்தான் செய்யும்.. ஏன்.. உங்க அப்பாவை உங்களுக்குப் பிடிக்காதா..?" ஊர்மிளா மடக்கினாள்..

நரேந்திரன் பதில் சொல்லவில்லை.. அவன் மனதில் அவனுடைய அப்பாவின் நினைவு வந்தது.. செழியனை அவனுக்குப் பிடிக்குமா என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்.. பிடிக்கும் என்ற பதில் அவன் மனதில் வரவேயில்லை..

சோமசுந்தரம் வந்து விட்டார்.. நரேந்திரன் வாங்கிய புத்தகங்களின் தலைப்புகளில் அவர் முகம் மலர்ந்தது..

அத்தனையும் பொதுவுடைமைக் கொள்கைகளை போதிப்பவை.. சிகப்புச் சித்தாந்தத்தைப் பற்றி அவர் பேச.. நரேந்திரன் அவருக்கு இணையாக பல கருத்துக்களைக் கூற.. அவர்களுக்குள் ஓர் நட்பு உருவானது..

"அடிக்கடி கடைக்கு வந்துட்டுப் போங்க.." என்று அவரை வழியனுப்பி வைத்த சோமசுந்தரத்துக்கு

https://t.me/tamilpdfebooks

மட்டும் அவன் அவர் வெறுக்கும் முதலாளித்துவத்தில் முதன்மையானவன் என்று தெரிந்திருந்தால் அந்த வார்த்தைகளை சொல்லியிருப்பாரா..?

30

பார்வையிலே சாமரத்தை
பரிவாக விசிறி விட்ட
அழகான ராட்சசி நீ...

அணைக்கரையில் நடந்தபடி கூடவந்த நரேந்திரனைப் பார்த்தாள் ஊர்மிளா.. அவனது ஆறடி உயரத்தில் அவள் மனம் சிக்கியது.. அவள் கவனிப்பதை உணர்ந்தவனின் புருவங்கள் உல்லாசமாக உயர்ந்து இறங்கின.. அதில் வெகுவாக வசீகரிக்கப் பட்டாள் ஊர்மிளா.. அவளது பார்வை அவன் முகத்தில் படபடப்புடன் நிலைத்தது..

நரேந்திரன் நின்று விட்டான்.. ஊர்மிளாவின் பார்வை அவனை வசியம் பண்ணியது.. அவளை முதன் முதலாய் உச்சிப் பிள்ளையார் கோவிலில் பார்த்தபோது அவனை கவர்ந்து இழுத்தது அவளின் அந்தப் பார்வைதான்..

ஊர்மிளாவின் பார்வை நேர் கொண்டதாக இருந்தது.. வெட்கத்துடன் பார்க்கும் ஓரவிழியின் கள்ளப் பார்வையிலும் அவள் ஒரு நேர்த்தியயை கடை பிடித்தாள்..

https://t.me/tamilpdfebooks

அவளது வட்ட முகமும்.. நீண்ட கூந்தலும்.. பணத்தைப் பெரிதாக எண்ணாத குணமும்.. காணக் கிடைக்காதது என்று அவனுக்குத் தோன்றியது..

அவனை அவளுக்குப் பிடித்திருந்ததை உணர்ந்தவனுக்குள் பரவிய இதத்தை அவன் மட்டுமே உணர்வான்..

ஊர்மிளாவுக்கு அவன் யாரென்று தெரியாது.. அவளுடன் காவேரிக்கரையில்.. கொள்ளிடப் பெருக்கை ரசித்தபடி இணைந்து நடந்து கொண்டிருப்பவன் இந்தியாவின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவனான 'தி கிரேட் இன்டஸ்ட்ரியலிஸ்ட் நரேந்திரன்..' என்பதை அவள் அறிய மாட்டாள்..

ஆனாலும் அவளுக்கு அவனைப் பிடித்திருந்தது.. அவனிடம் அவள் மயங்கினாள்.. அந்த மயக்கத்தை பிரதிபலித்த அவள் விழிகளில் நரேந்திரன் மயங்கிப் போனான்..

அதுவரை நரேந்திரனிடம் மயங்கிப் போனதாக பாவனை காட்டிய பெண்கள் அனைவரும் அவனுடைய கோடிஸ்வர இமேஜினால்தான் மயங்கிப் போனார்கள்.. முதன் முதலாக அவனிடம் அவனுக்காக ஒருத்தி மயங்கி நிற்கிறாள்.. அதில் அவனது ஆண்மை எல்லைகடந்த கர்வத்தை கொண்டது.. அவளது மயங்கிப் போன பார்வை அவனைக் கவர்ந்து இழுத்தது..

அவனை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.. அவனது தோற்றமும்.. காதலை வெளிப்படுத்திய

https://t.me/tamilpdfebooks

கம்பீரமான பார்வையும்.. வசீகரமான பேச்சும் அவளைக் கவர்ந்து இழுத்தன.. அவனைத் தேடித் துழாவிய அவளின் அந்தப் பார்வைக்கு தன் சொத்து முழுவதையும் எழுதிக் கொடுத்து விட அவன் தயாராக இருந்தான்..

அந்த அளவுக்கு அவனை வசியம் பண்ணியிருந்தால் அந்த வசியக்காரி..

“உன் அப்பாவுக்கு சிரித்துப் பேசவே தெரியாதா..?”

நடந்து கொண்டிருந்த நரேந்திரன் கேட்டான்.. அடுத்தடுத்த சந்திப்புகளில் அவர்கள் மனதளவில் நெருங்கி விட்டார்கள்.. ஆனாலும் அவளிடம் அவன் தான் யார் என்ற முழு விவரத்தைச் சொல்லாமலே நாள்களைக் கடத்திக் கொண்டிருந்தான்.. அவன் அதைச் சொல்ல முயன்ற ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு குறுக்கீடு வந்து அவன் சொல்ல நினைப்பதை சொல்ல விடாமல் செய்து விடும்..

அன்று அவன் யாரென்பதை சொல்லி விடும் முடிவோடுதான் அவன் அவளை கொள்ளிடக்கரைக்கு வரச் சொல்லியிருந்தான்.. அவன் பெங்களூருக்குத் திரும்ப வேண்டியிருந்தது.. ஊர்மிளாவுக்காக திருச்சியிலேயே அவன் தங்கி விட்டதில் அவனுக்காக காத்திருந்த அலுவல்கள் தேங்கி நின்றிருந்தன.. அவன் போய் கையெழுத்திட்டால்தான் அவை நகரும் என்ற நிலைமையில் அவன் உண்மையை உடைத்துச் சொல்ல ஊர்மிளாவை வரச் சொல்லியிருந்தான்..

https://t.me/tamilpdfebooks

'நான் நரேந்திரன்.. தி கிரேட் இன்டஸ்ட்ரியலிஸ்ட்.. நரேன் குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டி... பெங்களூரில் என் மாளிகை இருக்கிறது.. நான் உலகம் சுற்றும் வாலிபன்.. என் ஒவ்வொரு நொடியும் விலை மதிப்பில்லாதது.. உன் ஒருத்திக்காக இந்தத் திருச்சியில் தேங்கி நிற்கிறேன்..'

இதைச் சொல்லத்தான் அவன் வாயெடுத்தான்.. அதைச் சொல்வதற்கான பேச்சின் ஆரம்பமாக சோம சுந்தரத்தின் சிரிக்காத முகத்தைப் பற்றி அவன் கேட்டு வைக்க.. அதற்கு அவள் சொல்லிய பதிலில் அவன் சொல்ல நினைத்ததை சொல்ல முடியாமலே போய் விட்டது..

"அவருக்கு கொள்கைப் பிடிப்பு அதிகம்.. எப்பப் பார்த்தாலும் படித்துக்கிட்டே இருப்பார்.. உலக இலக்கியங்களைப் பற்றிப் பேசிக்கிட்டே இருப்பார்.. அதனாலே சீரியஸா இருக்கிறதைப் போல தோணும்.."

"கொள்கைப் பிடிப்பு இருக்க வேண்டியதுதான்.. அதுக்காக எப்பப் பார்த்தாலும்.. கண் சிவந்தால்.. மண் சிவக்கும்ங்கிற ரீதியில பேசிக்கிட்டே இருக்கனுமா..? புரட்சி பண்ண வேண்டிய தேவையே இப்ப இல்லையே.."

"அப்படின்னு யார் சொன்னது..? அப்பா சார்ந்திருக்கிற அமைப்பில தினமும் ஒரு போராட்டம் நடக்கும்.. அப்பா முதல் ஆளா அதில் போய் கலந்துக்குவார்.."

"எனக்கென்னவோ இதெல்லாம் தேவையில்லாதது ன்னுன்னு தோணுது.. போராட்டம் எதுக்கு..? அமைதியா வாழ்க்கையை வாழக்கூடாதா..?"

https://t.me/tamilpdfebooks

“அப்பா அதை ஏத்துக்க மாட்டார்.. முதலாளிகள் தான் யாரைப் பத்தியும் கவலைப்படாம சுயநலப் பிறவிகளா.. சுரண்டல் பேர்வழிகளா இருப்பாங்க.. தொழிலாளிகள் அப்படி இருக்க முடியுமான்னு கேட்பார்..”

“போச்சுடா.. உங்கப்பாவுக்கு முதலாளிகன்னா பிடிக்காதா..?”

“என்ன இப்படிக் கேட்டுட்டிங்க..?”

ஊர்மிளாவின் ஆச்சரியமான வார்த்தைகளில் அப்படி அவன் என்ன கேட்கக் கூடாததைக் கேட்டு விட்டான் என்று யோசித்தான் நரேந்திரன்.. ஒரு மண்ணும் புரியாததினால்..

“என்னத்தைக் கேட்டுட்டேன்..?” என்று அவளிடமே கேட்டான்..

“முதலாளித்துவத்தோட முதல் எதிரியே அப்பாதான்.. அவருக்கு பணக்காரங்களைப் பிடிக்காது.. அவங்களிடம் நேர்மை இருக்காது.. மனித நேயம் இருக்காதும்பார்..”

இலகுவாகச் சொல்லியபடி படித்துறையில் இறங்கி.. ஓடும் காவிரியாற்றில் கால் நனைத்தவளைப் பார்த்தபடி அசையாமல் நின்று விட்டான் நரேந்திரன்..

‘நான் நரேந்திரன்..’ என்ற சுய அறிமுகத்தைச் சொல்ல ஆரம்பித்த அவனது வார்த்தைகள் தொண்டைக் குழியிலேயே சிக்கி விட்டன..

‘இது என்னடா புது சிக்கலா இருக்கு..’ அவன் புருவங்கள் முடிச்சிட்டன..

https://t.me/tamilpdfebooks

"என்ன.. அங்கேயே நின்னுட்டிங்க..?"

படித்துறையின் ஓரமாக கட்டப் பட்டிருந்த கைப்பிடி சுவரில் அமர்ந்து நதிநீரில் கால்களை அளைந்து விளையாடியபடி நரேந்திரனை அழைத்தாள் ஊர்மிளா..

"ஊம்..? வர்றேன்.."

இறங்கி வந்து அவளுக்கு எதிரேயிருந்த கைப்பிடி சுவரில் உட்கார்ந்தவனின் மனம் எப்படி தன்னைப் பற்றிய விவரங்களை அவளிடம் சொல்வதென அல்லாடியது..

"இப்ப என்ன.. திடீர்ன்னு அப்பாவைப் பத்தி விசாரனை..?"

நீண்டிருந்த பின்னலைத் தூக்கி முன்பக்கமாக போட்டபடி ஒயிலாக அவனைப் பார்த்துக் கேட்டாள் ஊர்மிளா.. நரேந்திரனை அவளின் அந்தத் தோற்றம் வசீகரித்தது.. அழகோவியமாக அவன் முன்னால் அமர்ந்திருந்தவளை எக்காரணம் கொண்டும் கைநழுவ விட அவனுக்கு மனம் வரவில்லை..

"சும்மாதான் கேட்டேன்.. உன் அப்பாதான் முதலாளித்துவத்திற்கு முதல் எதிரி..! நீ எப்படி..?"

இயல்பாக கேட்பதைப் போல அவன் கேட்டான்.. அதற்கான அவளின் பதில் அவனுக்கு எந்த அளவுக்கு முக்கியம் என்பதை அறியாத அறியாமையுடன் அவள் மெல்லச் சிரித்தாள்..

"அப்பா எப்படியோ.. அப்படித்தான் நானும்.."

https://t.me/tamilpdfebooks

ஒருவரியில் வெளிப்பட்ட அவளின் பதிலில் நரேந்திரனுக்கு தலைவேதனை வந்து விட்டது..

சோமசுந்தரத்தைப் போலவே அவர் மகளும் இருந்து வைத்தால் முதலாளியான அவன் எப்படி அவனின் காதலை அவளிடம் சொல்வான்..?

“சின்ன வயதிலே இருந்தே அப்பாவோட கொள்கைப் பேச்சுக்களை கேட்டு வளர்ந்திருக்கேன்.. அவர் சொல்றதிலயும் ஒரு நியாயம் இருக்குன்னு எனக்குத் தோணிருச்சு.. பணக்காரங்களிடமிருந்து தள்ளித்தான் நிற்பேன்... அதுக்கேத்ததைப் போல... நான் சந்திச்ச பணக்கார ஸ்கூல் பிரண்ட்ஸீம் சரி.. காலேஜ் பிரண்ட்ஸீம் சரி.. மட்டக் கேவலமான குணத்தோடதான் இருந்து வைச்சாங்க.. அவர்களின் அகம்பாவமும்.. ஆணவமும்.. அப்பப்பா..! இப்படிப்பட்டவங்களை என் அப்பா வெறுக்கிறதில தப்பொன்னுமில்லையே..”

“பணக்காரங்க எல்லோருமே திமிர் பிடிச்சவங்கன்னு சொல்லி விட முடியாது ஊர்மிளா..”

“இருக்கலாம்.. ஆனா.. நான் மீட் பண்ணின பணக்கார பிரண்ட்ஸ் அப்படித்தானே இருந்தாங்க..?”

“அவங்களை வைச்சு மத்தவங்க குணத்தை தீர்மானிக்கலாமா..?”

“கூடாதுதான்.. ஆனா.. பேசிக்கலா.. பணக்காரங்க கிட்ட ஒரு தலைக்கனம் இருக்கத்தானே செய்யுது..? ஏழைகள்ன்னா அவங்க இளப்பமாத்தானே பாக்கிறாங்க..?”

https://t.me/tamilpdfebooks

"ஸோ..?"

"எனக்குப் பணக்காரங்களைப் பிடிக்காது.."

முடிவாக சொல்லி விட்டவளிடம் தன்னைப் பற்றிய முழு விவரத்தைச் சொல்லும் எண்ணத்தினைக் கை விட்டான் நரேந்திரன்..

"எனக்கு உங்களைப் பத்தித் தெரிஞ்சாகனும்.. எதுவும் தெரியாம பழகற இந்தப் பழக்கத்தில் அர்த்தமில்லாம போய் விடக் கூடாது.. எங்கப்பா அம்மா கிட்ட நான் இதுவரைக்கும் எதையும் மறைச்சதில்ல.. நீங்க காதல் சொன்னதை மட்டும்தான் மறைச்சிருக்கேன்.. அது என் மனசை பாரமா அழுத்திக்கிட்டு இருக்கு.. குற்ற உணர்ச்சி மனசை அறுக்குது... இதில இருந்து நான் மீளனும்னா அப்பாம்மாகிட்ட உங்களைப் பத்திச் சொல்லியாகனும்.. அதுக்கு முதல்ல உங்களைப் பத்தி எனக்குத் தெரிஞ்சாகனும்.."

ஊர்மிளாவின் விழிகள் உயர்ந்து அவனைப் பார்த்தன.. அவன் முகத்தில் பதிந்த அவள் பார்வையில்.. என்ன விவரத்தைச் சொல்வது என்று அவன் திகைத்தான்.. அவனைப் பற்றிய உண்மையான விவரத்தை சொன்னால் அந்த நொடியிலேயே அவனை விட்டு அவள் பிரிந்து போய் விடுவாள் என்று தோன்றியதால்.. அவன் பொய் சொன்னான்..

"நான் சாதாரண மில் தொழிலாளி.. ஓசுரில வேலை பாக்கறேன்.. என் பிரண்டோட கல்யாணத்துக்கு இங்கே

https://t.me/tamilpdfebooks

வந்தேன்.. திருச்சியில வேற ஒரு நல்ல வேலை இருக்கிறதா அவன் சொன்னான்.. அதுக்கு டிரை பண்ணலாம்ன்னுதான் இத்தனை நாளா இங்கே இருக்கிறேன்.. வேலை தேடி வந்த இடத்தில உன்னைப் பார்த்தேன்.. மனசில காதல் வந்திருச்சு.. மறைக்காம உன்னிடம் சொல்லிட்டேன் ஊர்மிளா.."

"அம்மா.. அப்பா..?"

"உயிரோடு இல்லை.."

அவனின் வார்த்தைகளில் ஊர்மிளாவின் மனம் கசிந்து விட்டது.. அவளுடைய காதலன் தாய்.. தந்தை இல்லாதவனா..?

"நான் பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தவன்ங் கிறதினால நீ என்னை வெறுத்திருவியா ஊர்மிளா..?"

வரவழைத்துக் கொண்ட உருக்கத்துடன் கேட்ட நரேந்திரனுக்கு சிரிப்புத்தான் வந்தது.. அதை அடக்கிக் கொண்டு பாவமாய் முகத்தை வைத்துக் கொள்ள அவன் படாத பாடு பட்டான்..

"நான் மட்டும் யாராம்..? நானும் பாட்டாளி வர்க்கம் தான்.." என்று அவன் கை பிடித்துக் கொண்ட ஊர்மிளாவிடம் அவன் யார் என்பதைச் சொல்லாமல் மறைத்து விட்டான் நரேந்திரன்..

"கையிருக்கு.. காலிருக்கு.. உழைச்சு வாழ உடலில் தெம்பிருக்கு.. மனசில நேர்மையிருக்கு.. இதுதான் மனுசனுக்கு சொத்து.. இதுக்கு மேலே என்ன வேணும்..?"

https://t.me/tamilpdfebooks

மேடையில்லாமல் முழங்கினார் சோமசுந்தரம்..

"எனக்குப் படிப்பும் இருக்குதுங்க.." பவ்யமாய் நரேந்திரன் சொன்னான்..

"கல்விதான் பெரிய சொத்து.. அதுக்கப்புறம் என்ன கவலை..? என் மகளை முதலாளிக்குக் கட்டிக் கொடுக்கிறதுன்னாத்தான் நான் யோசிக்கனும்.. என்னைப் போல ஒரு பாட்டாளிக்குக் கட்டிக் கொடுக்க நான் ஏன் யோசிக்கனும்..?" மீசையை முறுக்கினார் சோமசுந்தரம்..

'இவர் பாட்டாளியா..?'

திருச்சி நகரின் மையப் பகுதியில் அமைந்திருந்த அவருடைய சொந்த வீட்டையும்.. புத்தகக் கடையையும் ஜாடையாக நோட்டமிட்டான் நரேந்திரன்.. அது போக பக்கத்திலிருந்த கிராமத்தில் சோமசுந்தரத்திற்கு.. வீடு.. வயல்.. தோப்பு.. துரவு என்று ஏகப்பட்ட சொத்து இருக்கிறதாம்.. அவற்றைக் குத்தகைக்கு விட்டிருப்பதாக ஊர்மிளா சொல்லியிருந்தாள்..

'எந்தப் பாட்டாளி.. இப்படி நில புலன்களோடு.. டவுனில் சொந்தவீடு.. கடைன்னு சொகுசு வாழ்க்கை வாழ்கிறான்..?'

கேட்கத்தான் நினைத்தான் நரேந்திரன்.. அந்த ஒரு கேள்வியைக் கேட்பதினால் அவனுடைய காதலுக்கே மோசம் வந்து விடும் அபாயம் இருந்ததினால் வாயை மூடிக் கொண்டான்..

https://t.me/tamilpdfebooks

முந்தானையை இழுத்துப் போர்த்தியபடி.. அவன் முன்னே வராமல் சமையலறையின் சுவர் மறைவில் பாதி உருவம் தெரியும்படி ஒளிந்து நின்றிருந்த பூங்குழலிதான் அவனுடைய குடும்பத்தைப் பற்றித் துருவித் துருவி விவரம் கேட்டாள்..

"அப்பா அம்மா இல்லைங்கறிங்க.. அவங்க பக்கத்து சொந்த பந்தமும் இல்லாமலா போயிருச்சு..?"

அவளின் சாதுர்யமான கேள்விக்கு.. அவன்..

"ஆமாங்க.." என்ற பதிலைக் கொடுத்தான்..

"அது எப்படி..?"

"அது அப்படித்தாங்க.. என் அப்பாவும்.. அம்மாவும் காதல் திருமணம் பண்ணிக்கிட்டதாலே இரண்டு பக்க சொந்தங்களும் அவங்களைத் தள்ளி வைச்சிட்டாங்களாம்.."

வாய்க்கு வந்ததை நரேந்திரன் சொல்லிக் கொண்டிருக்க..

"த்ச்சு.. த்ச்சு.." என்ற சப்தம் கேட்டது..

"இங்கே பல்லி இருக்கா..?" நரேந்திரன் அண்ணாந்து விட்டத்தைப் பார்த்தான்..

"ஊர்மிளாவின் அப்பாதான் இருக்கார்.." எரிச்சலுடன் சொன்னாள் பூங்குழலி..

சோமசுந்தரம்தான் அப்படியொரு அனுதாப ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தார்..

https://t.me/tamilpdfebooks

‘இவர் அனுதாபப்படுகிற அளவுக்கா என் நிலைமை ஆகிவிட்டது..’ நரேந்திரன் நொந்து போய் விட்டான்..

எப்படியிருந்த நரேன் குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டியான நரேந்திரன் இப்படி சோமசுந்தரம் ‘த்சு.. த்சு..’ என்று அனுதாபப் படும் அளவிற்கு ஆகி விட்டானே..

31

பொய் சொல்லிக் கூட - உன்
மெய் தழுவ நான் துடிக்கும்..
அழகான ராட்சசி நீ....

பூங்குழலியின் சாத்வீகமான சாந்த குணத்திற்கும்.. சோம சுந்தரத்தின் கனல்கக்கும் சிகப்புச் சித்தாந்தங்களுக்கும் ஏழாம் பொருத்தமாக இருந்ததில் நரேந்திரன் அந்தக் கேள்வியை ஊர்மிளாவிடம் கேட்டு வைத்தான்..

“உங்கம்மா எப்படி உங்கப்பாவை செலக்ட் பண்ணினாங்க..?”

ஆரம்பத்தில் அந்தக் கேள்வி சொல்ல வருவது எதை என்பதை ஊர்மிளாவால் புரிந்து கொள்ள முடியவில்லை..

“எதுக்குச் செலக்ட் பண்ணினதைச் சொல்கிறிங்க..?” என்றுதான் அவள் கேட்டாள்..

https://t.me/tamilpdfebooks

"கல்யாணம் பண்ணிக்கிறதுக்குத்தான்.." என்று நரேந்திரன் சொன்னதும் அவளுக்கு எக்குத்தப்பாக கோபம் வந்து விட்டது..

"என்ன..? எங்கப்பாவை கலாய்க்கறிங்களா..?" அவள் நரேந்திரனிடம் சண்டைக்கு வந்து விட்டாள்..

"உங்கப்பாவை கலாய்க்கிறேனா..? சேச்சே.." நரேந்திரனின் வார்த்தைகளே அவனைக் காட்டிக் கொடுத்தன..

"எங்கப்பாவுக்கு என்ன குறை..? எங்கம்மாகிட்டப் போய் கேட்டுப் பாருங்க.. எங்கப்பாவைப் போல உண்டுமான்னு சொல்லுவாங்க.." அவள் சவால் விட்டாள்..

"என்ன கழுதைக்கு அதைக் கேட்கச் சொல்கிற..? கல்யாணமாகி இத்தனை வருசங்கழிச்சு.. மகளோட கல்யாணத்தப்ப போயி உங்கம்மாகிட்ட இந்தக் கேள்வியைக் கேட்டா அவரைப் போல உண்டுமான்னு தான் சொல்லுவாங்க.. அதை விட்டுட்டு தெரியாம மாட்டிக்கிட்டேன் தம்பின்னா சொல்லுவாங்க.." என்று சொல்லி விட்டு நரேந்திரன் ஊர்மிளாவிடம் மொத்து வாங்கினான்..

"எங்கம்மா ஒன்னும் எங்கப்பாவை செலக்ட் பண்ணலை.."

"அதானே பார்த்தேன்.. மாமியார் முகத்தில புத்திசாலிக் களை சொட்டுதே.. அவங்களாவது.. உங்கப்பாவை செலக்ட் பண்றதாவது.."

https://t.me/tamilpdfebooks

"என்ன..? திரும்பவும் மொத்தனுமா..?"

"வேண்டாம்.."

"அஃது..! அந்த பயம் இருக்கட்டும்.. எங்கம்மாவுக்கு இந்தக் காதல்.. கத்தரிக்காயெல்லாம் வராது.."

"உங்கப்பா முகத்தப் பார்த்தா எப்படிடீ அவங்களுக்கு இந்தக் காதலும்.. கத்தரிக்காயும் வரும்..?"

"மிஸ்டர் நரேந்திரன்.."

"என்னையா கூப்பிட்ட..?"

"உங்க பேர்தானே நரேந்திரன்..?"

"அடிப்பாவி..! காதலிச்சு.. கல்யாணம் வரைக்கும் வந்து நின்னாச்சு.. இன்னமும் என் பெயர் எதுங்கிறதில உனக்குச் சந்தேகமா..?"

"எங்கப்பாவுக்கும்.. அம்மாவுக்கும் நடந்தது அரேன்ஜீடு மேரேஜ்.."

"அதைச் சொல்லு.. அதனாலதான் உங்கப்பாவுக்கு இப்படிப்பட்ட வொய்ப் கிடைச்சிருக்காங்க.. பாவம் உங்கம்மா.. வீட்டில இருக்கிற பெரியவங்க அவங்களுக்கு நல்லதைத்தான் செய்வாங்கன்னு நம்பி இப்படியொரு கடுவன் பூனைக்கு.. சிவந்த கண்சிவாஜிக்கு.. கழுத்தை நீட்டிட்டாங்களே.."

"உங்களுக்கு எதுக்காக எங்கப்பாமேல இந்தளவுக்கு காண்டு..?"

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா விசாரித்தாள்.. அந்தக் கண் சிவந்த சோமசுந்தரம் அவரைப் போலவே அவர் மகளையும் வளர்த்து வைத்திருப்பதால் அவன் யாரென்று சொல்ல முடியாமல் பொய் சொல்லி அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகும் நிலையிலிருந்த நரேந்திரனால் எதனால் அந்தக் காண்டு வந்தது என்பதை விளக்கம் சொல்லி விவரிக்க முடியுமா.. என்ன..?

"அவர்மேல எனக்கென்னடி காண்டு..? வருங்கால மாமனார் அவர் மேலே காண்டு வைக்க எனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு..?"

"அவர் காதலை மதிக்கிறவர்.."

"அதாவது காதலுக்கு மரியாதை கொடுக்கிறவர்ங்கிற.."

"புரிஞ்சாச்சரி.. அவர் பார்த்து இந்தக் காதலை எதிர்த்திருந்தா.. நம்ம கல்யாணமே பிக்ஸ் ஆகியிருக்காது.."

"அதுக்கு..?"

"அடக்கி வாசிங்க.."

ஊர்மிளாவோ அடக்கித்தான் வாசிக்கச் சொன்னாள்.. அவளைப் பெற்ற சோமசுந்தரம் என்னடாவென்றால்.. அவர் கடையிலிருந்த அத்தனை புத்தகங்களையும் வாசிக்கச் சொன்னார்..

"வாசிங்க.. வாசிக்க.. வாசிக்க.. உங்களுக்கு பாட்டாளிவர்க்கத்தின் சிரமங்களைப் பத்திப் புரியும்.."

அதைப் புரிந்து அவன் என்ன செய்யப் போகிறான் என்ற கேள்வி அவன் மனதில் எழுந்தாலும்.. எங்கே..

https://t.me/tamilpdfebooks

மாட்டேனென்று அவன் சொல்லிவிட்டால்.. அவர் பெண் கொடுக்க மாட்டேனென்று சொல்லி விடுவாரோ என்ற பயத்துடன் அவர் நீட்டிய புத்தகங்கள் அனைத்தையும் அவன் வாங்கிக் கொண்டு போய் அதில் தலை வைத்து உறக்கம் போட்டான்.. அதையறியாத சோமசுந்தரம் அந்தப் புத்தகங்களைப் பற்றிய கேள்விகளைக் கேட்டு நரேந்திரனை உண்டு.. இல்லை.. என்று ஆக்கினார்..

"ஏண்டி.. உன்னைக் கல்யாணம் பண்ணிக்க உன் அப்பா என்ன எனக்கு பரிட்சை வைக்கிறாரா..?" நரேந்திரன் ஊர்மிளாவிடம் சீறினான்..

"என்னங்க இது..? உங்களுக்கு ரீடிங் ஹேபிட் இருக்கிறதில எங்கப்பா எவ்வளவு சந்தோசப்பட்டுப் போயிருக்காரு தெரியுமா..? நீங்க படிக்கக் கொண்டு போன புக் எப்படியிருக்குன்னுதானே அவரு கேட்டாரு..? உங்க அகராதியிலே அதுக்குப் பரிட்சை வைக்கிறதுன்னு பெயரா..?" அவளும் பதிலுக்குச் சீறினாள்..

அவளின் அந்தச் சீற்றத்தில் வெளிப்பட்ட பேரழகில் அவன் மயங்கிப் போனான்.. இவளுக்கு இருந்தாலும் இவ்வளவு கோபம் வரக்கூடாது என்று தோன்றினாலும்.. அவள் காட்டிய காதல் அவனைக் கட்டிப் போட்டது..

அவள் நேர்வழியில் காதல் சொன்னாள்.. அவன் காதல் சொல்லியதை பெற்றோரிடம் சொல்லி.. அவளுக்கு அவனைப் பிடித்திருப்பதை உணர்த்தி.. அவர்கள் சம்மதம் சொல்லிய பின்னால் அவனிடம் பதிலுக்கு காதல் சொன்னாள்..

https://t.me/tamilpdfebooks

அதில் அவனுக்கு மலையளவு மனத்தாங்கல் இருந்தாலும் அவனைக் கண்டதும் ஊர்மிளாவின் விழிகளில் தோன்றிய மயக்கம் அவனைக் கட்டிப் போட்டது..

கண்டிப்பை மட்டுமே உணர்த்தும் அவன் விழிகள் காதலில் சிக்கி.. ஊர்மிளாவிடம் அடிக்கடி கண்களைச் சிமிட்டின.. புருவங்களை உயர்த்தி அவன் பேசும் வசீகரத்தில் அவள் தன்னை இழந்தாள்.. உதடுகள் சுழிக்க அவன் பேசும் உல்லாசப் பேச்சுக்களில் அவள் உலகை மறந்தாள்.. அவனோ அவளின் ஓர் பார்வையில் வசியமாகி அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுத்தான்.. அவனைத் தேடித் துழாவும் காதல் பார்வையில் அவன் தன்னை ஒப்புக் கொடுத்தான்..

திருமணத்திற்கு நாள் குறித்தார் சோமசுந்தரம்..

“உங்க பக்கத்தில யாருமில்லைங்கிற வருத்தம் வேணாம்.. நாங்க இருக்கோம்.. திருச்சியிலேயே சிம்பிளா கல்யாணத்தை முடித்து வைக்கிறோம்..” என்றார் சோமசுந்தரம்..

‘சிம்பிளாவா..?’ நரேந்திரனின் புருவங்கள் சுருங்கின..

நரேன் குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டியான அவனுக்கு எளிமையான முறையில் திருமணம் நடப்பதா..?

இதை அவரிடம் அவன் எப்படிச் சொல்வது என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே.. சோமசுந்தரம் திருமணத்தைப் பற்றிய திட்டத்தை வரையறுத்தார்..

https://t.me/tamilpdfebooks

"ஆடம்பரக் கல்யாணம்ங்கிறதில எனக்கு என்னைக்குமே ஒப்புதல் இல்லைங்க.. அந்தப் பணத்தை வைச்சுத் தொழில் ஆரம்பிக்கலாம்.. பேங்கில போட்டு வட்டிப் பணத்தில சாப்பிடலாம்.. இப்படி எத்தனையோ இருக்கு.."

"ஓஹோ.."

"அதனால.. உங்க கல்யாணத்துக்கு முக்கியமான ஆள்களா ஒரு நூறுபேரை மட்டும் கூப்பிடப் போறேன்.."

"அதுசரி.."

"கோவில்ல வைச்சுக் கல்யாணம்.. ரிஜிஸ்டர் ஆபிசில அதை பதிவு பண்ணனும்.. மெஸ்ஸில ஆர்டர் கொடுத்த ஒரு வேளைச் சாப்பாடு.."

"அது யாருக்கு..?"

"கல்யாணத்துக்கு வருகிறவங்களுக்குத்தான்.."

"அவங்க சாப்பாட்டுக்கு இருப்பாங்களா..?"

நரேந்திரன் சிரிக்காமல் கேட்டான்.. ஊர்மிளா அவனை முறைத்தாள். அவளுடைய அப்பாவை அவன் கேலி செய்கிறானா என்று பார்வையால் மிரட்டினாள்.. அவன் முகம் மாறாமல் வருங்கால மாமனாரின் முகத்தையே பருகு.. பருகென்று பார்த்துக் கொண்டிருந்தான்..

"அதிகப் பேர் இருக்க மாட்டாங்க.. கல்யாணத்துக்கு வாழ்த்து சொல்லிட்டு கிளம்பிப் போயிடுவாங்க.. நமக்கு வாழ்த்துத்தானே முக்கியம்..?"

https://t.me/tamilpdfebooks

சோமசுந்தரத்தின் கேள்விக்கு.. "ஆமாமாம்.." என்று பூம்.. பூம் மாட்டைப் போல தலையாட்டியபடி ஊர்மிளாவை கேலிச்சிரிப்புடன் பார்த்தான் நரேந்திரன்.. அவன் விழிகள் கேட்டன..

'இதுக்கு என்ன சொல்ற..?'

அவள் உதட்டை வளைத்துச் சுழித்து அவனுக்கு அழகு காட்டினாள்.. அவன் கண்கள் மின்னின.. அவளுடனான அந்த விளையாட்டை அவன் விரும்பி ரசித்தான்.. அந்தக் காதலர்களின் நயன பாசையையும் உதட்டுச் சுழிப்பையும் கவனிக்காத சோமசுந்தரம் அவர் போக்கில் பேசிக் கொண்டிருந்தார்..

"அதனாலதான் சாப்பாடு மீதமாகி விடக் கூடாதுன்னு அறுபது இலைக்கு மட்டும் ஆர்டர் பண்ணியிருக்கேன்.."

அதற்கும் முகம் மாறாமல் கேட்டுக் கொண்டிருந்த நரேந்திரன் அடுத்த தனிமைச் சந்திப்பின்போது..

"கெட்டிக்காரர்டி உன் அப்பா.." என்று சிலாகித்தான்.

ஊர்மிளா அவன் முகத்தை சந்தேகப் பார்வையுடன் உற்றுப் பார்த்தாள்..

"என்ன..?" அவன் புருவங்களை உயர்த்திக் கண் சிமிட்டினான்..

"இல்லை.. இது உண்மையான புகழ்ச்சியா.. இல்லை.. வஞ்சப் புகழ்ச்சியான்னு பாக்கறேன்.."

"வஞ்சகப் புகழ்ச்சியா..? சேச்சே.."

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் அதை மறுத்த விதமே அது வஞ்சகப் புகழ்ச்சிதான் என்பதைக் காட்டிக் கொடுத்தது..

"உங்களை.."

ஊர்மிளா கோபத்துடன் முகம் திருப்பிக் கொண்டாள்.. நரேந்திரன் அவளைச் சமாதானப் படுத்துகிறேன் பேர்வழியென்று அவள் மீது சரிந்து அணைத்து முத்தமிடாத குறையாக உரசித்தீர்த்தான்.

"எதுடா சாக்குன்னு அலைவீங்களே.."

ஊர்மிளா அவனைப் பிடித்துத் தள்ளி விட்டு நகர்ந்து உட்கார்ந்தாள்.. அவன் கண்களில் ஏமாற்றம் அப்பியது..

"இப்படி சைவப்பட்சியா இருந்தா எப்படிடீ..?" தாபத்துடன் கேட்டான்..

ஊர்மிளா மறுப்பாக தலையசைத்தாள்.. அவள் கண்களில் காதலுடன் கண்டிப்பு கலந்திருந்தது..

"இந்தப் பட்சி சைவப்பட்சிதான்.. மாத்தனும்னு டிரை பண்ணாதீங்க.."

"எதுவரைக்கும் விரதம் காக்குமாம்..?"

"புரியலை.."

"இல்லை.. உன் கழுத்தில் தாலியைக் கட்டின பின்னாலேயும் சைவப்பட்சியா இருந்தேன்னு வைய்யி.. நான் கொலைகாரனா மாறிருவேன்.."

நரேந்திரனின் சினத்தை ரசித்துச் சிரித்த ஊர்மிளா.. அவன் எதிர்பாராத தருணத்தில் அவன் கன்னத்தில் இதழ் பதித்து விலகினாள்..

https://t.me/tamilpdfebooks

"ஏய்ய்ய்.." கண்கள் மின்ன அவளைப் பிடித்து இழுக்க அவன் தாவியபோது அவன் கைகளுக்கு அகப்படாத தொலைவில் தள்ளி நின்று ஒன்றை விரலை உயர்த்தி 'பத்திரம்' என்று எச்சரித்தாள்..

அவளின் அந்த விளையாட்டான எச்சரிக்கையில் அவன் ஈர்க்கப்பட்டான்.. அவள் மீதான காதல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்ததில்.. அவளை அடையும் வேட்கை அவனுக்குள் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது.. ஒரு நொடியைக் கூட வீணாக்காமல் உலகத்தைச் சுற்றி வருபவனை திருச்சியை விட்டு நகர விடாமல் ஊர்மிளாவின் காதல் கட்டிப் போட்டு வைத்திருந்தது..

கண்டிப்பை மட்டுமே காட்டும் அவன் விழிகள் காதலைக் காட்டியது அவளிடம்தான்.. சினத்தை வெளிப் படுத்தும் அவன் பார்வை சிருங்காரத்தை வெளிப்படுத்தியது அவளிடம்தான்.. ஊர்மிளாவிடம் மட்டுமே அவன் புருவங்களை உயர்த்தி இறக்கி விளையாடும் உல்லாச விளையாட்டை விளையாடினான்.. அவளிடம் மட்டுமே அவன் குறும்பாக இமை சிமிட்டினான்..

ஊர்மிளாவின் அருகாமையில் இருக்கம்போது நரேந்திரன் வேறொரு உலகில் இருந்தான்.. அவனது அனைத்து அடையாங்களையும் களைந்தவனாக. ஊர்மிளாவின் காதலனாக மட்டுமே இருந்தான்.. அவனுக்கு அது பிடித்திருந்தது..

"தள்ளி நின்னா பிடிக்க முடியாதா..?"

நரேந்திரன் பாய்ந்தான்.. அவள் விலகி ஓடினாள்.. துரத்திப் பிடித்து அவள் மேல் சரிந்து இருவரும் புல்தரையில் புரண்டு விழுந்தபோது எழுந்த மூச்சிரைப்பை இருவருக்குமே பிடித்திருந்தது..

"அதாவதுடி என் அருமைக் காதலியே..! உன் அப்பாவை நானொன்னும் கேலி பண்ணலே.. அவர் இருக்க வேண்டிய இடம் இதில்லன்னு சொல்றேன்.."

"வேற எந்த இடம்ன்னு நான் கேட்க மாட்டேன்.. [illegible]லங்கமா பேசறதில நீங்க மன்னனாச்சே.."

"உனக்கு என்மேல நம்பிக்கையே இல்லைடி.."

"என் அப்பா விசயத்தில உங்களை நான் நம்பவே மாட்டேன்.."

"தப்பாவே நினைக்கற பார்த்தியா.. அவர் ரேன்ஜீக்கு அவர் நம்ம கல்யாணத்துக்கு பட்ஜெட் போடக்கூடாது.."

"பின்னே..?"

"இந்தியாவுக்கே பட்ஜெட் போடற நிதியமைச்சரா இருக்கணும்.. என்ன ஒரு பட்ஜெட்..! வாவ்..! கல்யாணம்னா அப்படியொரு கல்யாணத்தைத்தான் பண்ணிக்கனும்.."

அவன் கேலியில் ஊர்மிளாவின் முகம் மாறிப் போனது.. அவள் நரேந்திரனைக் கூர்ந்து பார்த்தாள் அவள் பார்வையில் புருவங்கள் சுருங்கின நரேந்திரன்..

"என்னடி..?" என்றான்..

https://t.me/tamilpdfebooks

"அப்பாவோட கொள்கையை நீங்க கேலி செய்தா.. அது என்னைக் கேலி செய்வதைப் போல.. ஏன்னா.. நான் அப்பாவின் வளர்ப்பு.. அவரின் கொள்கைகளிலே ஊறினவ.. எனக்கும் ஆடம்பரக் கல்யாணத்தில விருப்பமில்ல.. சிம்பிளா மாலை மாத்தி.. தாலியைக் கட்டி கல்யாணத்தை ரெஜிஸ்ட்டர் பண்ணி வாழ்க்கையை ஆரம்பிக்க ஆடம்பரமாய் ஏன் செலவு பண்ணனும்..?"

32

நானிருக்கும் கரைக்கு..
எதிர்க்கரையில் நின்றிருக்கும்
அழகான ராட்சசி நீ....

அப்படி எளிமையின் மறு வடிவமாக.. நூறு பேருக்கு விருந்து வைத்து திருமண மண்டபத்தில் நடக்கும் திருமணத்தையே ஆடம்பரத் திருமணமென்று சொல்லிய ஊர்மிளா பெங்களூரில் மிக பிரம்மாண்டமாக நடந்த அவளின் திருமணத்தில் அதிர்ந்துதான் போனாள்..

"ஊர்மி..! என் கல்யாணம் பெங்களூரில் நடக்கனும்டி.."

அவளின் விரல் நீவி அவன் சொன்னபோது அவளுக்கு எதுவும் புரியவில்லை.. அப்பாவியாக விழித்தாள்..

https://t.me/tamilpdfebooks

"ஏன்..? அங்கே உங்களுக்கு யாரிருக்கா..?"

ஒரு சாம்ராஜ்யமே இருக்கிறது என்பதை அறியாதவளாய் அவள் கேட்ட அந்தக் கேள்வியில் தன்னை இழந்தான் நரேந்திரன்.. அதே கேள்வியை சோமசுந்தரமும் கேட்டபோது அவன் பொய்யில்லாத பொய்களைச் சொல்ல வேண்டி வந்தது..

"கல்யாணம் பெங்களூரில்தான் நடக்கனும்னு சொன்னீங்களாமே.. ஊர்மிளா சொன்னா.."

"ஆமாம் சார்.."

"ஏன்..? இங்கேன்னா எடுத்துச் செய்ய நானிருக்கேன்... தோழர்கள் இருக்காங்க... அங்கே உங்களுக்கு யாரிருக்கா..?"

"யாரும் இல்லைதான்.. ஆனாலும்.. என் கல்யாணம் பெங்களூரில்தான் நடக்கனும்னு என்னைப் பெத்த அம்மா வேண்டிக்கிட்டாங்களாம் சார்.."

"உங்க அம்மாவா..?"

சோமசுந்தரத்தின் வியப்பில் என்னடா இது என்று ஆகிவிட்டது நரேந்திரனுக்கு.. அவனுக்கு அம்மா இருக்க மாட்டார்களா..? தாயில்லாமல் அவன் பிறந்தானா...?

"எங்க அம்மாதான் சார்.. அம்மா இல்லாம எந்தப் பிள்ளையும் பிறந்திருக்க முடியாதில்லையாசார்.."

"அதுசரி.. அதுசரி.. ஆனா உங்க அம்மாதான் உயிரோடு இல்லைன்னு சொன்னீங்களே..."

https://t.me/tamilpdfebooks

"அம்மாதான் உயிரோட இல்ல.. அவங்க வேண்டுதல் உயிரோடு இருக்கே.."

"அது உண்மைதான்.. ஆனா பாருங்க.. உங்க அம்மா எதுக்காக உங்க கல்யாணம் பெங்களூரில்தான் நடக்கனும்னு வேண்டிக்கனும்..? பெங்களூருக்கும் உங்க அம்மாவுக்கும் என்ன சம்பந்தம்..?"

'கிழிஞ்சது போங்க..' என்று நினைத்துக் கொண்டான் நரேந்திரன்..

பெங்களூரின் மிகப்பெரிய பணக்காரரான கஜேந்திரனின் ஒரே மகளான நளினிக்கும் பெங்களூருக்கும் என்ன சம்பந்தம் என்று சோமசுந்தரம் கேட்டு வைக்கிறாரே..

"எங்க அம்மாவோட பிறந்த ஊர் பெங்களூர்தான் சார்.."

அவன் வினயமாக சொன்னதும் சோமசுந்தரம் யோசனையுடன் தாடையைத் தடவ ஆரம்பித்து விட்டார்..

'என்னடா இது.. பெங்களூரில் பிறந்தவனுக்குப் பெண் இல்லைன்னு சொல்லிடுவாரோ..' அவன் மனம் சந்தேகித்தது..

'சேச்சே.. அப்படியெல்லாம் இருக்காது.. இவரே பொதுவுடைமைவாதி.. இவராவது ஊருவிட்டு ஊர் பெண் கொடுக்க மாட்டேன்னு சொல்கிறதாவது..' தன்னைத் தானே தேற்றிக் கொண்டான்..

https://t.me/tamilpdfebooks

சோமசுந்தரத்தின் மறுமொழியும் அதையே உறுதி செய்தது..

"அதில பாருங்க.. பெங்களூரில் கல்யாணம்ன்னா நம்ம பக்கத்து ஆளுக வந்து திரும்பறதுக்கு சிரமம்ன்னு சொல்லுவாங்க.."

"அவங்களுக்கு டிரான்ஸ்போர்ட் ஏற்பாடு பண்ணிட்டாப் போகுது.. நூறு பேருக்கு ஒரு பஸ் போதாதா..?"

நரேந்திரன் யதார்த்தமாக கேட்க..

"என்னது..?" என்று முறைத்தார் சோமசுந்தரம்..

'அப்படி நானென்ன தப்பாச் சொல்லிட்டேன்..' நரேந்திரன் விழித்தான்..

"ஆடம்பரமே கூடாதுங்கிறேன்.. நீங்க பஸ் ஏற்பாடு பண்ணலாம்ன்னு லேசாச் சொல்றீங்க.. அந்தப் பணத்தில கல்யாணத்தையே நடத்தி முடிச்சிரலாம்.. தெரியுமா..?"

நரேந்திரனுக்கு எங்கே அதெல்லாம் தெரிந்திருந்தது..? அவன் அறிந்த திருமண வைபவங்கள் வேறாக இருந்தனவே... இதுபோன்ற கொள்கைப்பிடிப்பான மாமனாரைச் சந்திப்போம்.. அவர் பெற்று வைத்திருக்கும் குலக்கொழுந்திடம் காதல் கொள்வோம் என்று அவன் நினைத்துப் பார்த்ததில்லையே..

அவனுடைய திருமணத்திற்கு வெளிநாட்டிலிருக்கும் உறவினர்களும்... நண்பர்களும் வந்து

https://t.me/tamilpdfebooks

போவதற்காக.. தனி விமானத்தையே வாடகைக்கு எடுத்திருந்தவன்.. சோமசுந்தரத்தின் இந்தச் சீற்றத்தில் தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டான்..

'உஸ்ஸ்.. அம்மாடி.. முடியல..'

காதலுக்காக இந்த அளவுக்கா பாடுபட வேண்டும் என்று நரேந்திரனுக்கு ஆயாசமாக இருந்தது..

"இது போல ஆடம்பரத்தை நான் வெறுக்கிறேங்க.. இதெல்லாம் பாஸிசம்.. முதலாளித்துவம்.. இந்த நாட்டைச் சுரண்டற பணக்காரங்களின் அடையாளம்.."

"அதுக்கு என்னங்க பண்ணனும்ங்கறிங்க..?"

"என் மகளை பணக்காரங்களின் நிழல் படாம வளர்த்து வைச்சிருக்கேன்.. இனியும் அவ அப்படித்தான் இருப்பா.."

சோமசுந்தரத்தின் முழக்கத்தில் திருமணமானபின்பு ஊர்மிளாவின் மீது நிழல் படியாமல் எப்படிக் குடும்பம் நடத்துவது என்ற பெருங்கவலைக்கு ஆளானான் நரேந்திரன்.. சோமசுந்தரத்திற்கு பணக்காரர்களின் மீது தீவிரமான வெறுப்பு இருந்தது.. அது அவரின் ஒவ்வொரு வார்த்தைகளிலும் வெளிப்பட்டது..

"நான் காதலுக்கு எதிரியில்லைங்க.. என் மகள் உங்களைக் காதலிக்கிறேன்னு சொன்னப்ப.. உங்களோட எளிமையும்.. ஏழ்மையை மறைக்காம சொன்ன உண்மையும் என்னை அட்ராக்ட் பண்ணுச்சுங்க... அதனாலதான் உங்களுக்குப் பெண் கொடுக்க நான் சம்மதிச்சேன்.."

https://t.me/tamilpdfebooks

திரும்பத்திரும்ப.. கீறல் விழுந்த ரிகார்டைப் போல சோமசுந்தரம் அதையே சொன்னதில் கொலைவெறியாகிப் போனான் நரேந்திரன்..

'இவரென்ன இப்படியே பேசிக்கிட்டு இருக்காரு..? இவரோட மகளை சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளயனுக்குக் கட்டிக் கொடுக்கிறதா இருந்தாக்கூட கவலைப்படாம கட்டிக் கொடுத்திருவாரு போல.. அதுவே ஒரு பணக்காரன் பெண் கேட்டா.. கொடுக்க மாட்டாரு போல..'

பணக்காரர்களை விட சம்பல் கொள்ளையர்கள் மேம்பட்டவர்கள் என்று எதை வைத்து அவர் முடிவுக்கு வந்தார் என்று தெரியாமல் பல்லைக் கடித்தான் நரேந்திரன்..

"ஒன்னு செய்யலாம்ங்க.."

சோமசுந்தரம் சொன்னதில் அவர் எதைச் சொல்லி வைக்கப் போகிறாரோ என்று அரண்டு போனான் நரேந்திரன்..

அப்படி அவர் எந்த வில்லங்கத்தைச் சொல்லி வைத்தாலும் அவன் கேட்டுத்தானே ஆக வேண்டும்..? அந்த முசுட்டு சோமசுந்தரத்திற்கு 'ஊர்மிளா' என்ற அழகான ராட்சசி மகளாய் பிறந்து தொலைத்திருக்கிறாளே..

"சொல்லுங்க சார்.." கைகட்டி வாய் பொத்தாத குறையாக அவன் கேட்டான்..

"கல்யாணத்துக்கு நெருங்கின சொந்தங்களோட நாங்க பஸ் பிடிச்சு வந்திடறோம்.."

https://t.me/tamilpdfebooks

'அது எதுக்கு..? எத்தனை கார் வேணும்னு சொல்லுங்க.. நான் அனுப்பி வைக்கிறேன்..' என்று வாய் வரை வந்த வார்த்தைகளை விதியே என்று உள்ளே தள்ளினான் நரேந்திரன்..

எதற்கு வம்பு..? அவன் பாட்டுக்கு வார்த்தைகளை விடப் போய் அதில் அவர் கோபம் கொண்டு உனக்குப் பெண் கொடுக்க மாட்டேன்.. சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளயனுக்குத்தான் பெண் கொடுப்பேன் என்று சம்பல் பள்ளத்தாக்குப் பக்கம் கிளம்பிப் போய் விட்டால் என்ன செய்வது..?

'நரேந்திரா..! வாயை மூடிக்கிட்டு இருடா..'

அவன் புத்தனைப் போலவும்.. சித்தனைப் போலவும் மௌனகுருவாகி விட்டான்.. மாப்பிள்ளையாகப் போகிறவனை அப்படி ஆட்டி வைத்துக் கொண்டிருந்த மாமனாரான சோமசுந்தரம் அவருடைய எளிமையான திருமணத் திட்டத்தை சொல்லிக் கொண்டிருந்தார்..

"கல்யாணம் முடிஞ்சதும்.. திருச்சிக்கு வந்தவுடனே.. ஒரு சின்னத் தேனீர் விருந்துக்கு ஏற்பாடு பண்ணிட்டாப் போகுது.. கல்யாணத்தில கலந்துக்க முடியாதவங்க தேனிர் விருந்தில கலந்துக்கிட்டு பொண்ணு மாப்பிள்ளையை வாழ்த்திட்டுப் போகட்டும்..."

"தேனீர் விருந்தா..?"

நரேந்திரன் திருதிருக்க.. ரிசப்சனைத்தான் அவர் அப்படிச் சொல்கிறார் என்று ஊர்மிளா சன்னமான குரலில் முணுமுணுத்தாள்..

https://t.me/tamilpdfebooks

"அடிப்பாவி..! ரிசப்சனை தேனீர் விருந்தாக் கிட்டிங்களா..?" பதிலுக்கு முணுமுணுத்த நரேந்திரனுக்கு வன்கொடுமையாய் இருந்தது..

இப்படியாகப்பட்ட மாமனரைத் தேடிப் பிடித்து அவனுக்கு மாமனாராக்கி விட்ட இறைவனுக்கு அவன் பல்லைக் கடித்தபடி நன்றி சொன்னான்..

"தேனீர் விருந்து எங்கே நடக்கும் மாமா..?"

அவன் எந்த ஸ்டார் ஹோட்டலில் நடக்கும் என்று கேட்கத்தான் வாயெடுத்தான்.. ஆனால்.. திருமண விருந்துக்கே.. மெஸ்ஸில் ஆர்டர் கொடுக்கப் போவதாகச் சொல்லிய மாமனார் அவன் மாமனார் என்ற ஞானோதயம் ஏற்பட்டதில்.. கவனமாக வார்த்தைகளைக் கோர்த்து.. எங்கே நடக்கப் போகிறது என்று மட்டும் கேட்டு வைத்தான்..

'ஏதாவது டீக்கடை பெஞ்சை காட்டாமலிருந்தால் சரி..'

நல்லவேளையாக சோமசுந்தரம் அப்படி எதையும் காட்டி விடவில்லை.. மாறாக.. அவர் வீட்டு மொட்டை மாடியைக் காட்டினார்..

டீக்கடை பெஞ்சிற்கு மொட்டை மாடி எவ்வளவோ தேவலாம் என்று ஆறுதலாகிப் போன நரேந்திரன்..

"குட் ஐடியா.." என்று அதை சிலாகிக்கவும் செய்தான்..

https://t.me/tamilpdfebooks

"நான் சொன்னா அது குட் ஐடியாவாகத்தான் இருக்கும்.." சோமசுந்தரம் கெத்தாகச் சொன்னார்..

"அதைச் சொல்லுங்க.. உங்க திட்டமிடலில் நான் பிரமிச்சுட்டேன்.. மொட்டை மாடியில ஷாமியானா போட்டு.. வரிசையாக சேர்களைப் போட்டு.. ஒரு பக்கம் டைனிங்ஹால் ரெடி பண்ணினா தூளாயிருக்கும்.." நரேந்திரன் சொல்லிக் கொண்டே போக..

"பொறுங்க.." என்று கையமர்த்தினார் சோமசுந்தரம்..

"ஏங்க.. என்ன ஆச்சு..?"

"ஷாமியானால்லாம் எதுக்கு..? வீண் செலவு.."

'அடக்கடவுளே..!'

நரேந்திரன் வாயடைத்துப் போனான்.. ஷாமியானா கூட இல்லாத தேனீர் விருந்தா..?

"ஆமாங்க.. நாமே சாயங்காலமா ஆறுமணிக்குத்தான் தேனீர் விருந்து கொடுக்கப் போறோம்.. அதுக்கு எதுக்கு ஷாமியானா...? வெயிலா அடிக்கப் போகுது..?"

"அதுவும் சரிதான்.."

"அப்புறம் எதுக்காக வாடகைக்கு சேர் எடுக்கனும்.. வீட்டில இருக்கிற ஜமுக்காளங்களையும்.. பாய்களையும் விரிச்சு விட்டா வந்தவங்க அதில உட்கார்ந்து எழுந்திருக்க மாட்டாங்களா..?"

"குட் ஐடியா.. எனக்குக்கூட சேரை விட.. கைப்பிடி சுவரில உட்காரத்தான் ரொம்பவும் பிடிக்கும்.."

https://t.me/tamilpdfebooks

அவசரமாக நரேந்திரன் மொட்டை மாடியின் கைப்பிடிசுவர் அவனுக்கானது என்பதை உறுதிப் படுத்திக் கொண்டான்..

அவனால் தரையில் உட்கார முடியாது.. அவனுக்கு அது பழக்கமில்லை..

எங்கே அதையும் அவர் மறுத்து விடுவாரோ என்ற கலக்கத்தில் அவனிருக்க...

"அதுக்கென்னங்க.. உங்க விருப்பம் போல உட்கார்ந்துக்கலாம்.." என்று மிகப்பெரிய மனதோடு அதற்கு அனுமதியளித்தார் சோமசுந்தரம்..

'அப்பாடி..' என்று அவன் நிம்மதிப் பெருமூச்சு விட்டதை ரசித்துப் பார்த்தாள் ஊர்மிளா...

அவள்மீதான காதலினால்.. அவன் சோமசுந்தரத்திடம் அகப்பட்டுக் கொண்டு விழித்ததில்.. அவன்மீதான அவளின் காதல் பெருகியது..

"டைனிங் ஹால் எதுக்கு..?"

"அதுவும் வேணாமா..?"

"ஆமாங்க.. ஒரு கப் டீ குடிச்சுட்டுப் போகப் போகிறவங்களுக்கு எதுக்காக டைனிங்ஹால் ரெடி பண்ணனும்..?"

"ஒரு கப் டீ மட்டும்தானா..?"

நரேந்திரன் நம்ப முடியாமல் கேட்டான்.. திருமணத்தை விசாரிக்க வருகிறவர்களுக்கு.. ஒரு இனிப்பு

https://t.me/tamilpdfebooks

காரம்கூட கொடுக்காமல் வெறும் டீயை மட்டும் கொடுத்து அனுப்புவர்களும் இருக்கக் கூடும் என்பதில் அவனுக்கு ஆச்சரியம்.. ஆச்சரியமாக இருந்தது..

"ம்ம்ம்.. ஒரு கப் டீ மட்டும்தான்... அதுவே அனாவசியமான ஆடம்பரச் செலவுதான்... ஆனாலும் பாருங்க... ஊர்மிளாவோட அம்மா... அதையும் கொடுக்கலைன்னா அவளோட அம்மா வீட்டுக்குப் போயிருவேன்னு பயமுறுத்தறா.. அதனாலதான் இவ்வளவு பெரிசா செய்ய வேண்டியிருக்கு.."

சோமசுந்தரம் கொடுத்த விளக்கத்தில் நரேந்திரன் எதுவும் பேசாமல் பூங்குழலியைப் பார்த்தான்.. அவள் ஏற்கனெவே இழுத்துப் போர்த்தியிருந்த முந்தானையை இன்னும் அதிகமாக இழுத்துக் கொண்டு தலையை மட்டும் நீட்டிக் கொண்டிருந்த சமையலறையின் சுவர் மறைவில் அந்தத் தலையையும் இழுத்துக் கொண்டாள்..

'இந்த தேனீர்கூட மாமியார் ஊருக்குக் கிளம்பிருவாங்கங்கிற பயத்திலதானா..?' நொந்து போன நரேந்திரன்..

"ஆமாமாம்.. ரொம்பப் பெரி.. சாத்தான் செய்கறிங்க.." என்று மாமனாரை மெச்சிக் கொண்டான்..

"என்னவோ போங்க.. இதுபோல ஆடம்பரத்தையெல்லாம் அவாய்டு பண்ணனும்னா கேட்கிறாங்களா..?"

"கேட்கனும்தான்.."

https://t.me/tamilpdfebooks

"ம்ஹீம்.. உலகம் திருந்தவே மாட்டேங்குது.."

"நீங்கதான் உலகத்தைத் திருத்தனும்னு கங்கணம் கட்டிக்கிட்டு இருக்கீங்களே.. திருத்துங்க..."

33

எதை வென்றும்..
உனை வெல்ல வைக்கும்..
அழகான ராட்சசி நீ....

சோமசுந்தரத்துக்கும்.. நரேந்திரனுக்கும் இடையில் நடக்கும் உரையாடல் இது போலதான் நீண்டு வைக்கும்.. பூங்குழலிதான் கவலைப்படுவாள்..

"என்னடி ஊர்மி இது.. இவருக்கும்.. அவருக்கும் இடையே ஏழாம் பொருத்தமாக இருக்குது.."

"விடுங்கம்மா.. எனக்கும் நரேனுக்கும் இடையே ஏழாம் பொருத்தம்னாத்தான் நீங்க பயப்படனும்... மாமனாருக்கும் மாப்பிள்ளைக்கும் இடையே எங்கேயாச்சும் ஜாதகம் பொருத்தம் பார்ப்பாங்களா..?"

"அப்படிப் பாத்தாங்கன்னு வைய்யி... இந்த ஜென்மத்தில உனக்கு கல்யாணம் நடக்காது... உங்க அப்பாவோட அராஜகத்துக்கு எந்த மாப்பிள்ளையும் பொருந்தி வரமாட்டாங்க.."

https://t.me/tamilpdfebooks

"நீங்க மட்டும் அவருக்கு பொருந்தி வர்றீங்களே.. எப்படிம்மா..?"

ஊர்மிளா பூங்குழலியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு வினவினாள்.. அவளுக்கு வெட்கமாகி விட்டது..

"போடி.." மகளைச் செல்லமாக கடிந்தபடி வேலையைப் பார்க்கப் போய் விட்டாள்..

சோமசுந்தரம் மகளின் திருமணத்திற்காக நூ..று பத்திரிக்கைகள் அடித்தார்.. அதில் பெங்களூர் என்று மட்டுமே போடப் பட்டிருந்தது.. எந்த இடம் என்பதைச் சொல்ல நரேந்திரன் நாள் கடத்தியதால் அவர் இடத்தைப் பற்றிக் குறிப்பிடாமலே.. ஊரைப் பற்றி மட்டும் குறிப்பிட்டு விட்டார்..

"பாவம்.. ஏதாவது சின்னக் கோவிலா இருக்கும்.. சொல்லக் கூச்சப்பறாரு.. இப்ப என்ன..? நாம கொஞ்ச பேரைத்தானே கூப்பிட்டுக்கிட்டுப் போகப்போறோம்..? அப்பச் சமயத்துக்கு எந்த இடம்ன்னு கேட்டுக்கிட்டாப் போகுது.. என்ன ஊர்மிளா..?"

"ஆமாம்பா.."

நெகிழ்வாக பதில் சொன்னாள் ஊர்மிளா.. அவளுடைய நரேந்திரன் பாவம்.. பொருளாதாரப் பற்றாக்குறையில் சிரமப்படுகிறான் என்ற எண்ணம் அவளுக்கு.. அதை மறைமுகமாக சோமசுந்தரத்திடம் அவள் வெளிப்படுத்தியதில் சோமசுந்தரம் நரேந்திரனை அழைத்துப் பேசினார்..

https://t.me/tamilpdfebooks

"உங்களுக்கே தெரியும் நரேந்திரன்.."

"எதைப் பத்தி சார்..?"

எங்கே அவர் பொதுவுடைமைக் கொள்கைகளைப் பற்றி.. உச்சிவெயிலில் பாடம் எடுத்து விடுவாரோ என்ற கவலையுடன் கேட்டான் நரேந்திரன்.. அவர் எதைப் பற்றிக் கேட்கிறார் என்று தெரியாமல் அவனாக வாயைக் கொடுத்து மாட்டிக் கொண்டு விடக் கூடாதே..

அவனது முன்ஜாக்கிரதைக்குப் பலன் இருந்தது..

"என்னுடைய குணத்தைப் பத்தி.."

சோமசுந்தரம் சொன்னபோது.. நல்லவேளை.. நாமாக கொள்கையைப் பற்றிப் பேசிவிடவில்லை என்று சந்தோசப் பட்டுப் போனான் நரேந்திரன்..

"உங்க குணத்துக்கென்ன சார்.. தங்கமாச்சே.."

காதலியின் அப்பாவின் குணத்தைப் பற்றிக் காதலன் வேறு விதமாகவா கூற முடியும்..? அதையறிந்தவர் போல சிரிக்காமல் முகத்தை வைத்துக் கொண்டு மிதப்பாக ஓர் பார்வை பார்த்தார் சோமசுந்தரம்..

அழகான பெண்ணைப் பெற்றவராயிற்றே.. அவர் எப்படி வேண்டுமானாலும் பார்க்கலாமே என்று அறியாப் பார்வை பார்த்து வைத்தான் நரேந்திரன்..

"இந்த சாஸ்திரம்.. சம்பிரதாயத்திலெல்லாம் எனக்குக் கொஞ்சம்கூட நம்பிக்கையில்லை.."

https://t.me/tamilpdfebooks

"அதை நம்பி.. பூஜை புனஸ்காரம் பண்ணத்தான் ஊர்மிளாவின் அம்மா இருக்காங்களே சார்.."

என்னதான் யோசித்துப் பேசினாலும்.. இடக்காக வந்து விடும் பதிலை நரேந்திரனால் தடுத்து நிறுத்த முடியவில்லை.. அவனும் பார்த்திருக்கிறான்.. பகுத்தறிவு வாதம் பேசும் ஆண்களின் மனைவிகள் புராண காலத்து நாயகிகளின் பிரதி பிம்பங்களாக இருந்தார்கள்.. இவர்கள் நாத்திகம் பேசினால்.. அவர்கள் சாம்பிராணி புகை போட்டு வீட்டை அதில் மூழ்கடித்தார்கள்.. அதை பகுத்தறிவு வாதிகள் ஆட்சேபிப்பதில்லை..

"அவங்க சுதந்திரத்தில நான் தலையிடறதில்ல.."

கெட்டிக்காரத்தனமாக பதில் சொல்வார்கள்.. அதைக் கண்டு உணர்ந்திருக்கும் நரேந்திரன் அதனால்தான் அப்படியொரு இடக்கை எடுத்துவிட்டான்..

"இப்ப என்ன சொல்லவர்றீங்க..?"

"எதுவும் சொல்ல வரலை சார்.. நீங்கதான் ஏதோ சொல்லவந்தீங்க.."

"எங்கே..? நீங்க பேச வந்ததை பேச விட்டால் தானே..?"

'பேசவிடாமல் குரல்வளையையா பிடித்து அமுக்கினேன்..?' என்று கேட்கத்தான் நினைத்தான் நரேந்திரன்.. அதைக் கேட்டு விட்டால் ஊர்மிளாவே அவன் மனதில் அப்படியொரு ஆசை இருக்கிறது என்று சொல்லி விடுவாள் என்பதால் மௌனம் காத்தான்..

https://t.me/tamilpdfebooks

"பெண்ணுக்கு கூறைப்புடவை.. தாலி எடுக்க என்று நீங்க சிரமப்பட்டுக்க வேணாம்.."

சோமசுந்தரம் சொல்லவந்தது என்னவென்பதை புரிந்து கொண்ட நரேந்திரனின் பொறுமை காற்றோடு பறந்தது.. சினத்தினால் அவன் முகம் சிவந்தது..

"லுக் சார்.." அவன் கண்டிப்புடன் பேசினான்..

"நான் சிரமப்படறேன்தான்.. அதுக்காக.. கல்யாணம் பண்ணிக்கப் போகிற பெண்டாட்டிக்கு கூறைப்புடவையும்.. தாலியும் வாங்க முடியாம சிரமப்படலை.. உங்களுக்கு வேணுமானா அது சாஸ்திரம்.. சம்பிரதாயம் சம்பந்தப்பட்ட சாதாரண விசயமா இருக்கலாம்.. எனக்கு அப்படியில்லை.. இது என் மரியாதை சம்பந்தப்பட்ட விசயம்.. இவ்வளவு பேசறீங்களே.. உங்க கல்யாணத்தப்ப உங்களைப் பார்த்து உங்க மாமனார் இதே கேள்வியை கேட்டிருந்தா உங்களுக்கு எப்படியிருந்திருக்கும்..?"

"இதுக்கெல்லாம் உணர்ச்சி வசப்பட்டா எப்படிங்க..? நான் உங்க நல்லதுக்குத்தான் சொல்றேன்.."

"இது எனக்கு நல்லதில்லைங்க.. அவ்வளவு தான் சொல்வேன்.. நான் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவளுக்கு என்ன வாங்கிக் கொடுக்கனும்.. எப்படிக் கல்யாணம் பண்ணிக்கனும்னு எனக்குள்ளேயும் கனவிருக்கு.. இந்த நரேந்திரன் யாருன்னு இப்ப உங்களுக்கு தெரியாது.. அது தெரிய வரும்போது.. இப்பப் பேசின வார்த்தைகளுக்காக நீங்க ரொம்பவே வருத்தப்படுவீங்க சார்.."

https://t.me/tamilpdfebooks

நரேந்திரன் கோபத்துடன் பேசினான்.. சோமசுந்தரம் எதையோ பேச வாயெடுத்தார்.. சமையலறையிலிருந்து பூங்குழலியின் குரல் வந்தது..

"என்னங்க.. நீங்க கொஞ்சம் வந்துட்டுப் போங்க.."

சோமசுந்தரம் எழுந்து போனார்.. பூங்குழலி அவரை வன்மையாக கண்டித்து அனுப்பி வைத்தாள்.. அவர் வந்து பார்த்தபோது நரேந்திரன் அங்கே இல்லை..

"அவருக்கு கோபமும்.. ரோசமும் அதிகம்ப்பா.." ஊர்மிளா சொன்னாள்..

அது ஆண்மையின் அடையாளமென்று மனைவியிடம் சிலாகித்தார் சோமசுந்தரம்.. நரேந்திரனின் அந்த எழுச்சிக்குப் பின்னர் மறந்தும்கூட அவனிடம் திருமண சம்பந்தமான எந்த விவரங்களையும் சோமசுந்தரம் கேட்கவில்லை.. திருமணத்திற்கு உதவி செய்வதாகவும் சொல்லவில்லை..

திருமணத்திற்கு முன்தினம் அவர்கள் பெங்களூருக்கு கிளம்பினார்கள்.. வீட்டு வாசலில் ஒரு சொகுசு ஏஸி பஸ்ஸும்.. பென்ஸ்காரும் வந்து நின்றன.. சோமசுந்தரம் புருவங்களை உயர்த்தினார்..

"யாரு இவங்க..? வீடு மாறி வந்திட்டாங்களா..?"

இல்லையென்றான் காரிலிருந்து இறங்கி வந்த நரேந்திரன்..

"நான் பெங்களூரில் இருந்தப்ப வேலை பார்த்த கம்பெனியின் முதலாளி இந்த பஸ்ஸையும்.. காரையும்

https://t.me/tamilpdfebooks

அனுப்பி வைச்சிருக்கார்.. அவர் என் தாத்தாவுக்கு வேண்டப்பட்டவர்..” என்று சொன்னான்..

அப்போதும் சோமசுந்தரத்துக்கும்.. ஊர்மிளாவுக்கும் சந்தேகம் வரவில்லை.. பென்ஸ்கார் வைத்திருக்கும் அளவுக்கு நரேந்திரன் கோடிஸ்வரனாக இருப்பான் என்று அவர்கள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை..

“பரவாயில்லையே ஊர்மிளா.. மாப்பிள்ளைக்கு.. பஸ்ஸும்.. காரும் கொடுத்து உதவக்கூட ஆளிருக்கே..” என்றுதான் பூங்குழலி சொன்னாள்..

அதற்கும் சோமசுந்தரம் ஆட்சேபித்தார்..

“அடுத்தவங்க உதவினாலும்.. ஆடம்பரம்.. ஆடம்பரம்தானே..?”

அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே.. அவருடைய உறவினர்கள் ‘நீ பாட்டுக்கு சொல்லிக் கொண்டிரு’ என்று அவசரமாக பஸ்ஸில் ஏறி.. ஆளுக்கொரு சீட்டைப் பிடித்து உட்கார்ந்து விட்டார்கள்..

“அக்கட சூடுங்க..” நரேந்திரன் சோமசுந்தரத்தின் முகத்தை திருப்பி விட்டான்..

நீ முந்தி.. நான் முந்தி.. என்று அவருடைய உறவினர்கள் பஸ்ஸை நிரப்பிக் கொண்டிருந்த கண் கொள்ளாக் காட்சியில் சோமசுந்தரம் பல்லைக் கடித்தார்..

‘எனக்குப் போய் இப்படியாப்பட்ட சொந்தங்கள் தான் வாய்க்கனுமா..?’

https://t.me/tamilpdfebooks

பஸ்ஸையே அவரால் மறுக்க முடியாமல் போன போது பென்ஸ் காரை எப்படி மறுப்பார்..?

பூங்குழலிதான் முதல் வேலையாக பூஜையறையில் விளக்கேற்றி வணங்கி மகளின் நெற்றியில் விபூதி... குங்குமம் இட்டு விட்டு... காரின் பின்சீட்டில் ஏறி உட்கார்ந்து விட்டாளே..

'நல்ல பெண்டாட்டி..! அருமையான மகள்..!'

பல்லைக் கடித்தபடி வீட்டைப் பூட்டிய சோமசுந்தரம் வேறுவழியில்லாமல் காரின் பின்சீட்டில் ஏறி அமர்ந்தார்..

நரேந்திரன் ஏறுவதற்காக காரின் முன்பக்கக் கதவை டிரைவர் படு பவ்யமாக திறந்து விட.. சோமசுந்தரம் ஒரு மார்க்கமாக அவனைப் பார்த்து வைத்தார்..

'காரே ஓசி.. இதில டிரைவர்.. காருக்குச் சொந்தக்காரனை உபசரனை செய்கிறதைப் போல இந்த வளை.. வளைகிறானே.. ம்ஹீம்.. இந்த உலகத்தில அசல் எது.. நகல் எதுன்னு யாருக்குமே தெரிகிறதில்லை..'

படு கம்பீரமாக நரேந்திரன் காரில் ஏறுவதை கேலியாக பார்த்த சோமசுந்தரத்தின் இதழ் வளைவில் கேலிப் புன்னகை உதித்தது.. வழி நெடுக.. நரேந்திரன் பேசிய பேச்சுக்களுக்கு டிரைவர் குரல் உயர்த்தாமல் பதில் சொன்னதை கிண்டல் பார்வையுடன் ரசித்துக் கொண்டு வந்தார் சோமசுந்தரம்.. ஊடே அதைப்பற்றி பூங்குழலியிடம் அவர் ரகசியம் பேச

https://t.me/tamilpdfebooks

முனைந்தபோது அவள் கனல்கக்கும் பார்வையால் அவர் வாயை மூடவைத்தாள்..

'நடக்கறது மகளோட கல்யாணம்.. இதில மாப்பிள்ளையை கிண்டல் பண்ண வர்றீங்களே.. உங்களுக்கு கொஞ்சமாச்சும் அறிவு இருக்கா..?'

பூங்குழலியின் கண்கள் இதைத்தான் கேட்டன.. வாயால் அவள் எதையும் கேட்கமாட்டாள்.. கணவரை அறிவு ஜீவியென்று போற்றி புகழ்வாள்.. அவர் பாதங்களை பூஜை பண்ணாத குறையாக தொட்டு வணங்குவாள்..

அதுநாள்வரை அவள் காட்டி வந்த அந்த பதி பக்தியை கெடுத்துக் கொள்ள வேண்டாமென்று சோமசுந்தரம் வாயின் மீது ஒற்றை விரலை வைக்காத குறையாக மௌனம் காத்தார்..

பஸ்ஸீம் காரும் ஊடே சாப்பாட்டுக்கென்று ஐந்து நட்சத்திர ஹோட்டலின் வாசலில் நின்றன.. சோமசுந்தரம் கடுப்புடன் சண்டை போடபோன போது நரேந்திரன் செல்போனை காதுக்கு கொடுத்தபடி எல்லோருக்கும் முன்னால் உள்ளே போய் விட்டான்..

"கடன்வாங்கி பணத்தை செலவு பண்றாரோன்னு தோணுது ஊர்மிளா.. இப்படி பெருமைக்கு மாவிடிக்கக் கண்டோமா..?"

மகளிடம் ஆட்சேபித்தார்.. ஊர்மிளாவுக்கும் அதே கவலைதான் என்றாலும்.. மறுநாள் திருமணம் என்ற நிலையில் அவள் எப்படி நரேந்திரனிடம் அதைப் பற்றியெல்லாம் விவாதிக்க முடியும்..?

https://t.me/tamilpdfebooks

"என்னன்னு கேட்கலாம்ப்பா.. இப்ப சொந்தக்காரங்க முன்னாலே எதையும் பேச வேணாம்..?" தகப்பனாரை சமாதானப் படுத்தினாள்..

"என்ன சோமு.. பிடிச்சாலும் பிடிச்சே.. புளியங் கொம்பாய் பிடிச்சுட்டே போல.. மாப்பிள்ளை பெரிய இடமா இருக்காரு.."

சோமசுந்தரத்தின் உறவினர்களில் ஒருவர் சொல்லி விட்டுப் போனார்.. சோமசுந்தரத்தின் முகம் இறுகியது..

"வேசம் போடறது எத்தனை நாளைக்கு நிலைக்கும்..? வேசம் கலைகிறப்ப இதெல்லாம் நமக்குச் சொந்தமில்லைன்னு மனசில அதிர்ச்சி வராதா..? இந்த வேசம் தேவைதானா..?" மகளிடம் கண்சிவந்தார்..

பெங்களூரில் காரும்.. பஸ்ஸீம் நுழைந்தவுடன் அவர் ஏதேனும் ஒரு கோவில் மண்டபத்தில் அவை சென்று நிற்கக்கூடும் என்றுதான் எதிர் பார்த்தார்.. மாறாக அவையிரண்டும் பிரம்மாண்டமான பெரியதொரு மண்டபத்தில் பிரவேசித்து நின்றன..

அதன் நுழைவாயிலையும்.. பிரம்மாண்டமான மைதானம் போல இருந்த முன்பக்க வளாகத்தையும்.. அங்கே நின்றிருந்த நூற்றுக் கணக்கான கார்களையும் கண்டவர்களுக்கு இடம் மாறி வந்து விட்டோமோ என்று தோன்றியது..

பெரிய அரண்மனை போல தோற்றமளித்த மண்டபத்தின் நுழைவாயிலில் கார் நின்றதும்..

https://t.me/tamilpdfebooks

வாத்தியங்கள் முழங்கின.. காரைவிட்டு இறங்கிய ஊர்மிளாவுக்கு ஆரத்தி எடுத்து பெண்ணழைத்துச் சென்றார்கள்..

'இதுவும் ஓசியா இருக்க முடியாதே..'

தவித்த ஊர்மிளாவுக்கும்.. சினந்த சோமசுந்தரத்திற்கும் அங்கிருந்த திருமண அழைப்பிற்கான பிரம்மாண்டமான பெயர் பலகையைக் கண்டதும் உண்மை விளங்கியது..

'நரேந்திரன் வெட்'ஸ் ஊர்மிளா..'

அழகான வண்ண விளக்குகள் எழுத்துக்களாய் மிளிர்ந்து அவர்களை வரவேற்றதில் பூங்குழலி பதைத்தாள்.. அதுபோன்ற மண்டபத்தை அதுவரை அவர்கள் கண்டதில்லை.. பட்டும்.. வைரங்களும்.. கோட் சூட்டும்.. அவர்களை முற்றிலுமாக அன்னியப் படுத்தி அச்சூழ்நிலையிலிருந்து விலக்கி நிறுத்தி வைத்தன.. பெண் வீட்டாருக்கும்.. மணப்பெண்ணுக்கும் தங்குவதற்காக கொடுக்கப்பட்டிருந்த ஏஸி அறைகளில் சோமசுந்தரத்தின் சொந்தபந்தங்கள் பிரமித்து நின்று விட்டார்கள்..

"ஏன் சோமு.. என்னவோ உனக்கு பணக்காரர்களைக் கண்டாலே பச்சநாவின்னு சொல்லுவே.. இப்ப என்னடான்னா.. இம்மாம்பெரிய கொழுத்த பணக்காரனுக்குப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கப் போற.. கெட்டிக்கார ஆளப்பா நீ.. வாயில வர கொள்கையெல்லாம் வாழ்க்கைக்கு உதவாதுன்னு கத்து வைச்சிருக்கிற காரியக்காரனப்பா நீ.. இம்மாம் பெரிய இடம் உன் பெண்ணுக்கு அமையும்ன்னு

https://t.me/tamilpdfebooks

கனவு கூட கண்டிருக்க மாட்ட.. உனக்கு அடிச்சிருக்கிறது தான்ப்பா ஜாக்பாட்.. பொழைச்சுக்குவப்பா.. பொதுக் கூட்டத்தில் பேசறதையெல்லாம் நடைமுறையில கொண்டு வாரதுக்கு நீயென்ன புத்தரா.. இல்ல சித்தரா..? கைக்கு எட்டாத மலைச்சிகரம் உன் கண்ணுக்கு முன்னால வந்து நின்னா வேண்டாம்ன்னு சொல்லறதுக்கு நீயென்ன பொழைக்கத் தெரியாத ஆளா..?”

சோமசுந்தரத்தின் மகளுக்கு கிடைக்கப் போகும் வாழ்வைப் பற்றிய வயிற்றெரிச்சலுடன் ஒரு சொந்தக்காரர் மெச்சிப் பேசுவதைப் போல அவரை தேள் கொடுக்காய் கொட்டி விட்டுப் போனார்.. மற்ற உறவினர்களும் அவர் சொன்னதையே மாற்றி மாற்றிப் பேசி அவரை சோதித்தார்கள்.. ஊர்மிளா சரிந்து அமர.. சோமசுந்தரம் கொதித்துப் போனார்..

34

கண்ணி வைத்து நான்பிடித்த..
அழகான ராட்சசி நீ....

“இதில் என்ன மோசடி இருக்கிறது..?”

நிதானமாக கேட்டான் நரேந்திரன்.. ஊர்மிளாவின் குற்றம் சாட்டும் பார்வையினையும்.. சோமசுந்தரத்தின்

https://t.me/tamilpdfebooks

கொந்தளிக்கும் பார்வையினையும் மிக இலகுவாக எதிர்கொண்டான்..

"மோசடி இல்லையா..? இது மேசாடி இல்லையா..? இது மோசடி இல்லைன்னா.. வேறு எதுதான் மோசடி..?"

சோமசுந்தரம் வரிந்துகட்டிக் கொண்டு சண்டைக்குப் போனார்.. நரேந்திரன் அறைக்கு வெளியே பார்த்தான்.. திருமண மண்டபத்துக்கு உரிய அனைத்துப் பரபரப்புகளும் வெளியே கவிந்திருக்க... அறைக்கதவை மூடித் தாழிட்டான்..

"இப்ப எதுக்காக கதவை மூடறிங்க..?" சோமசுந்தரம் ஆட்சேபித்தார்..

"நாம பேசறது நம்மோட இருக்கட்டும் இதை மத்தவங்க கவனிக்கனுமா..?"

"உங்க வண்டவாளமெல்லாம் தண்டவாளத்தில ஏறிரும்ன்னு பயப்படறிங்களா..?"

நரேந்திரனின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது.. அவன் ஊர்மிளாவைப் பார்த்தான்.. கலங்கிச் சிவந்திருந்த அவள் கண்களைக் கண்டதும் தனது கோபத்தை அடக்கிக் கொண்டான்..

"லுக் சார்.. நான் பணக்காரன்தான்.. கோடிஸ்வரன் தான்.. மல்ட்டி மில்லியனர்தான்.. இல்லேன்னு சொல்லலை.."

"இல்லேன்னு சொல்லித்தானே என் மகளை பெண் கேட்டு வந்தீங்க..?"

https://t.me/tamilpdfebooks

"என்ன சார் செய்கிறது..? நீங்கதான் கொலைகாரனுக்கும்.. கொள்ளைக்காரனுக்கும் கூட பெண்ணைக் கொடுப்பேன்.. ஒரு பணக்காரனுக்குப் பெண் கொடுக்க மாட்டேன்னு தலைகீழா நின்னீங்களே.."

"அதுக்காக வேசம் போடுவீங்களா..?"

"யார்தான் வேசம் போடலை..? காதல்ன்னு வந்துட்டா எல்லோரும் வேசம் போடுவாங்கதான்.. ஏன்.. புராணத்தையே எடுத்துக்கங்க.. வள்ளியைக் காதலிச்ச முருகன்.. அவங்களைக் கல்யாணம் பண்ணிக்க கிழவர் போல வேசம் போடலையா..? உங்களுக்குத்தான் புராணம் தெரியாது.. ஊர்மிளாவோட அம்மாவுக்குத் தெரியுமே.. கேட்டுப் பாருங்க.."

"இதைக் கேட்கத்தான் நான் பெங்களூருக்கு வந்தேனா..?"

"நீங்க எதையும் கேட்க வேணாம்.. உங்க மனச்சாட்சியைக் கேட்டுப் பாருங்க.. பகுத்தறிவுவாதம் பேசற நீங்க.. கோவிலே கதின்னு இருக்கிற ஊர்மிளாவோட அம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கலாம்.. பணக்காரனான நான்.. பொதுவுடமை கொள்கை பேசற உங்க மகளைக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதா..? நீங்க மட்டும் உங்களைப் பத்தின முழு விவரத்தையும் சொல்லியா ஊர்மிளாவோட அம்மாவைப் பெண் கேட்டிங்க..?"

நரேந்திரன் மடக்கிவிட்டான்.. பூங்குழலியின் முகம் சிவந்து போனது..

https://t.me/tamilpdfebooks

சோமசுந்தரமோ.. இந்த விவரம் இவனுக்கு எப்படித் தெரியும் என்று திருதிருத்தார்..

அவருக்குத் தெரியாது.. நரேந்திரனும் ஊர்மிளாவும் சந்தித்துக் கொண்ட பொழுதுகளில் அவருடைய காதல் கதையையும் அலசி ஆராய்ந்தார்கள் என்பது..

"உங்கப்பா ஒரு முசுடு.. அரேன்ஜீடு மேரேஜா இருக்கப்போயி உங்கம்மாவப் போல சாத்வீகமான வொய்ப் உங்கப்பாகிட்ட மாட்டினாங்க.. இதுவே காதல்ன்னு போயிருந்தார்ன்னு வைய்யி.. உங்கம்மா உங்கப்பாவைத் திரும்பிக்கூடப் பார்த்திருக்க மாட்டாங்க.."

ஊர்மிளா சொன்ன அரேன்ஜீடு மேரேஜ் க்தையை நம்பி நரேந்திரன் மாமியாருக்காக பரிதாபப்பட்டபோது ஊர்மிளா அவனை மர்மப் பார்வை பார்த்தாள்..

"என்ன.. பார்வையெல்லாம் பலமா இருக்கு..?" என்றான் அவன்..

"அப்பா.. அம்மாவுக்கு நடந்தது அரேன்ஜீடு மேரேஜ்தான்.. ஆனா அவங்க ரெண்டு பேரோட மனசுக்கு மட்டும் தெரியும் அது லவ் மேரேஜ்ன்னு.." ஊர்மிளா குண்டைத் தூக்கிப் போட்டாள்..

"என்னது..? உங்கம்மா.. உங்கப்பாவை லவ் பண்ணினாங்களா..?" நரேந்திரன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டான்..

"ஸ்ஸ்ஸ்.. சும்மாயிருங்க.." அவனை செல்லமாக அடித்த ஊர்மிளா தொடர்ந்து சொன்னாள்..

https://t.me/tamilpdfebooks

"அம்மா ஒன்னும்.. அப்பாவை லவ் பண்ணலை.. அப்பாதான் அம்மாவை லவ் பண்ணியிருக்காரு.. அது அம்மாவுக்குத் தெரியும் அவ்வளவுதான்.."

"அதானே பார்த்தேன்.." என்று சொல்லி விட்டு மீண்டும் ஊர்மிளாவிடம் அடி வாங்கினான் நரேந்திரன்..

"அப்பா ஏதோ கடவுள் மறுப்புக் கூட்டத்துக்குப் போயிட்டு திரும்பி வந்துக்கிட்டு இருந்தாராம்.. அப்போ கோவிலுக்குப் போய்க்கிட்டு இருந்த அம்மாவைப் பார்த்திருக்காரு.."

"என்னவொரு காம்பினேசன்.. தூள்டி.."

"மூச்..! வாயைத் திறக்கக் கூடாது.. அம்மாவோட அழகில் அப்பா சொக்கிப் போயிட்டாராம்.. அப்பவே அம்மாவை ஃபாலோ பண்ணி பின்னாலேயே போயிட்டாராம்.."

"எங்கேடி..?"

"கோவிலுக்குள்ளதான்.."

"ஏண்டி.. கேட்கிற எனக்கே நெஞ்சு கொதிக்குது.. சொல்கிற உனக்கு இது அநியாயம்ன்னு தோணலையா..? கடவுள் இல்லைன்னு பொதுக்கூட்டத்தில பேசிட்டு வர்ற ஒரு மனுசன் பக்திப் பிழம்பா கோவிலுக்குள்ள போகிற பெண்ணை ஃபாலோ பண்ணி கோவிலுக்குள்ளேயே போயிருக்காரே.. இது அடுக்குமா..?"

"அடுக்கும்.. எங்க அம்மாவே அப்பா செஞ்ச அட்டூழியத்தை ரசிச்சிருக்காங்க.. உங்களுக்கு என்ன வந்துச்சு..?"

https://t.me/tamilpdfebooks

"என்ன வந்தாலும் இனியென்னடி பிரயோசனம் வரப் போகுது..? அதுதான் உங்கப்பா உங்கம்மாவை மடக்கித் தாலி கட்டி குடும்பம் நடத்தி.. உன்னையும் மகளாப் பெத்து என்னை மடக்கிப் போட்டுட்டாரு.. இனிப் பேசி என்ன ஆகப் போகுது..?"

"தெரியுதில்ல.. வாயில விரலை வைங்க.."

"எதுக்கு..?"

"வாயைத் திறக்காம தாழ்ப்பாழ போட்டுக்கிறதுக்குத் தான்.. எங்கப்பா.. எங்கம்மாவ ஃபாலோ பண்ண.. அவங்க கூட வந்த சிநேகிதிகிட்ட இப்படியெல்லாம் தொடுத்துக் கிட்டு வரக்கூடாது.. பெரியவங்களப் பாத்துப் பேசனும்னு தகவல் சொல்லி விட்டுட்டாங்க..."

"ஓ..! அதான் நீ உன் அம்மா வழியை ஃபாலோ பண்ணி என்னை உங்கப்பாகிட்ட மாட்டி விட்டுட்டயா..?"

"வாயை மூடச் சொன்னேன்.."

"ஓகே.. இனி கேள்வி கேட்கலை.."

"அப்பாவும் பெண் கேட்டுப் போயிருக்காரு.. அம்மாவும் அப்பாவும் தூரத்துச் சொந்தம்ங்கிறதினால அதில ஒன்னும் பிரச்னை வரலையாம்.. என் அப்பாவோட சிநேகிதர் மூலமா எங்க அப்பா வழி தாத்தா பாட்டிக்கு பெண்ணைப் பத்தித் தகவல் கொடுத்திருக்காரு.. அந்தச் சிநேகிதர் வந்து.. தாத்தாகிட்ட மாமா.. மாமா.. இப்படியிப்படி.. இந்த ஊரில.. உங்க சொந்தத்திலே..

https://t.me/tamilpdfebooks

அழகான ஒரு பொண்ணிருக்கு.. நம்ம சோமுக்கு கேட்டுப் பார்க்கலாமான்னு தூண்டி விட்டிருக்கார்.. எங்க தாத்தா பாட்டியும் ஊடே இருக்கிற சொந்த பந்தங்ககிட்ட ஜாதகம் கேட்டு விட்டிருக்காங்க.. ஜாதகம் அமோகமா பொருந்தியிருந்துச்சாம்.."

"பார்த்தியா.. உங்க அம்மா வாழ்க்கையிலே ஜாதகம் விளையாடிருச்சு.."

"பேசக்கூடாதுன்னு சொன்னேன்.."

"சரி.. பேசலை.. நீ சொல்லு.."

"எங்க தாத்தா பாட்டிக்கு சந்தோசமாகிருச்சு.. அப்பாவைக் கூப்பிட்டுக்கிட்டு பொண்ணுப் பார்க்கப் போனாங்க.. அப்பாவும்.. அம்மாவைப் பத்தி எதுவும் தெரியாம முத முதலா பொண்ணுப் பார்க்கப் போறதைப் போல கூடப் போயிருக்கார்.."

"உலகமகா நடிகர்டி உங்கப்பா.."

"உஸ்..! எங்கம்மா வீட்டாளுகளுக்கு அப்பாவைப் பிடிச்சுப் போயிருச்சு.."

"வாட் எ பிட்டி..!"

"வாயை மூடுங்களேன்.. அப்பத்தான் அவங்க ஒரு வார்த்தை சொன்னாங்களாம்.."

"என்ன வார்த்தை.. அந்த வார்த்தை..?"

"அவங்க சொன்னாங்களாம்.. ஐயா.. எங்க பொண்ணுக்கு கடவுள் பக்தி ஜாஸ்தி.. எங்களுக்கு

https://t.me/tamilpdfebooks

வார்ற மாப்பிள்ளையும் அப்படியே இருக்கனுமுன்னு நாங்க நினைக்கிறோம்.. தம்பிக்கு கடவுள் நம்பிக்கை இருக்கான்னு கேட்டாங்களாம்.."

"பாருடா.. சரியான கேள்வியைத்தான் கேட்டிருக் காங்க.. எப்படி டீ உங்கப்பாவைப் பார்த்து இப்படி ஒரு கேள்வியைக் கேட்கனுமுன்னு அவங்களுக்குத் தோணுச்சு..?"

"அப்பாதான் பொதுக்கூட்டம் அது.. இதுன்னு ஆக்டிவ்வா இருக்கிறவராச்சே.. யாராச்சும் போட்டுக் கொடுத்திருப்பாங்க.."

"உண்மையைச் சொல்லியிருப்பாங்கன்னு சொல்லு.. அது என்ன போட்டுக் கொடுக்கிறது..? இதில வேற இவளோட அப்பா ஆக்டிவ்வாம்.. முடியலடா சாமி.."

"லுக் மிஸ்டர் நரேந்திரன்.. எங்கப்பாவை இப்படியே தொடர்ந்து கலாய்ச்சுக்கிட்டு இருந்தீங்கன்னா நம்ம காதலையே நான் கன்சிடர் பண்ணனுமான்ன யோசிக்க வேண்டியிருக்கும்.."

"அழகாப் பொறந்துட்டியில்ல.. மிரட்டத்தான் செய்வ.. நேரம்டி.. ஆனாலும் பாரு.. உங்கப்பாவைப் போல ஒரு கடுவன் பூனைக்கு இப்படியொரு அழகான ராட்சசி மகளாகப் பிறந்து தொலைத்திருக்கக் கூடாது.. விதி வலியது.."

ஊர்மிளா கதை சொல்வதை விட்டு விட்டு அவனை முறைத்த முறைப்பில் அவன் "அம்பேல்" என்று இரு

https://t.me/tamilpdfebooks

கைகளையும் உயரத் தூக்கி அவளிடம் சரண்டர் ஆனான்.. ஊர்மிளாவும் கதையைத் தொடர்ந்தாள்..

"எங்க அம்மாவழித் தாத்தாவும் பாட்டியும் கேட்ட கேள்விக்கு இருக்குன்னு என் அப்பாவழித் தாத்தாவும் பாட்டியும் சாதிச்சுட்டாங்களாம்.. பொதுக்கூட்டத்துக்கு போகிறதெல்லாம் வேடிக்கை பார்க்கிறதுக்குன்னு சொன்னாங்களாம்.."

"உங்கப்பா என்ன சொன்னாராம்..?"

"எதுவுமே சொல்லலையாம்.. அதனால பின்னாளிலே எங்கப்பா பேசற கொள்கைப் பேச்சைப் பத்தி எங்க அம்மா வீட்டில கேட்டப்ப நானா அப்படிச் சொன்னேன்..? எங்க அப்பாம்மாதானே அப்படிச் சொன்னாங்கன்னு மடக்கிட்டாராம்.. உண்மையும் அதுதானே.."

"எதுடி உண்மை..?"

"எங்கப்பா ஒன்னும் பொய் சொல்லலை..."

"அதே சமயம் உண்மையையும் சொல்லலை.. அவரைப் பெத்தவங்க பொய் சொன்னப்ப கேட்டுக்கிட்டுப் பேசாம இருந்திருக்கார்.. இவர் சொல்லி இருந்திருக் கலாமில்ல..? இல்லைங்க.. என்னைப் பெத்தவங்க மாற்றி யோசிக்கிறாங்க.. உண்மையிலேயே நான் கொள்கைப் பிடிப்பானவன்தான்.. பொதுக் கூட்டத்தில பேசறவன்தான்.. அதை வேடிக்கை பாக்க மட்டும் நான் போகலை... மேடையேறி மைக்கைக் கடிச்சுத் துப்பத்தான் போனேன்னு உண்மையைப் பிட்டுப்பிட்டு வைத்திருந்திருக்கலாமில்ல..?"

https://t.me/tamilpdfebooks

“அது.. அது.. வந்து.. எங்கப்பாவுக்கு அம்மாவைப் பிடிச்சுப் போயிருந்துச்சா.. அதனால அவர்தான் பொய் சொல்லலையேன்னு மனசை சமாதானப்படுத்திக்கிட்டு பேசாம இருந்திட்டாராம்..”

“அதாவது உண்மையை மறைக்கிறதுக்கு உடந்தையா இருந்தாருன்னு சொல்லு..”

“என்ன நீங்க.. எங்கப்பாவை குறை சொல்றதிலேயே குறிக்கோளாய் இருக்கறிங்க.. எங்க அப்பா ஒன்னும் அம்மாவை கொள்கை மாறச் சொல்லிக் கட்டாயப் படுத்தலையே.. அம்மாவோட கடவுள் பக்திக்கு தடை சொல்லலையே.. உன் கொள்கை உனக்கு.. என் கொள்கை எனக்குன்னு பேசாமத்தானே இருக்கார்..?”

அந்த வார்த்தைகளை நரேந்திரன் அப்போது ஞாபகப் படுத்தினான்..

“அன்னைக்கு நீதானே சொன்ன ஊர்மிளா...? உன்னோட அப்பா அவரோட கொள்கையை உன் அம்மா மேலே திணிக்கலைன்னு... அவங்களோட கடவுள் நம்பிக்கையை தடை செய்யலேன்னு.. அவங்க கொள்கை அவங்களுக்கு.. உங்க அப்பா கொள்கை அவருக்குன்னு வாழ்க்கையிலே எந்தவித காம்ரமைஸீம் பண்ணிக்காம வாழ்கிறாங்கன்னு... நீதானே சொன்ன.? அந்த வாழ்க்கையை நாம வாழ மாட்டோமா..? நான் முதலாளிதான்.. கோடிஸ்வரன்தான்.. இதைத்தவிர என்மேல என்ன குற்றமிருக்கு..? நீயே சொல்லு..”

https://t.me/tamilpdfebooks

ஊர்மிளா திணறினாள்.. அடுத்தடுத்த அதிர்ச்சிகளை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.. வெகு சாதாரண மானவன் என்று அவள் நினைத்து பழகிய நரேந்திரன் மிகப்பெரிய கோடிஸ்வரனாக.. அவள் அண்ணாந்து பார்க்கக் கூட முடியாத தொலைவில்.. எட்டாத உயரத்தில் நிற்கிறான்.. திருமணத்தை செய்து முடிக்க அவனிடம் வசதி வாய்ப்பு இருக்கிறதா என்று ஊர்மிளா கவலைப்பட்டுக் கொண்டிருக்க.. அவனுடைய திருமணத்திற்கு வந்து இறங்கும் விருந்தினர்களில் பலர் சொந்த விமானங்களில் வந்து இறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.. இதை அவள் என்னவென்று சொல்லுவாள்..?

"என்னை நீங்க ஏமாத்திட்டிங்க.." அவள் குரல் நடுங்கியது..

"இல்லை.. உன்னை நான் ஏமாற்றலை.. உன்மேல ஆசைப்பட்டேன்.. பெண் கேட்டேன்.. இப்பக் கல்யாணம் வரைக்கும் வந்து நிற்கிறேன்.. இதில் உன்னை நான் ஏமாற்றியதாக எப்படி ஆகும்..?"

"பொய் சொன்னீங்க.."

"உண்மையை மறைத்தேன்.. அவ்வளவுதான்.."

"இரண்டும் ஒன்றுதானே.."

"இரண்டுமே வேறுவேறுன்னு சொன்னா நீ கேட்டுக் கொள்ளப்போவதில்லை.. நான் செய்தது தப்புன்னா இதே தப்பை உன் அப்பாவும் உன் அம்மாவுக்காக செய்திருக் கிறார்.. அவரோட தப்பை ரொம்பக் கேசுவலா பேசற நீ.. என்னோட தப்பை ஏன் மிகைப் படுத்திப் பேசற..?"

https://t.me/tamilpdfebooks

"அப்பா செய்ததை அம்மா ஏத்துக்கிட்டாங்க.. அதில நான் ஜஸ்ட் ஒரு ஆடியன்ஸ்.. பார்வையாளர்.. அவ்வளவு தான்.. இப்ப அப்படியில்ல.. பாதிக்கப்பட்டது நானாக இருக்கிறேன்.."

"ஊர்மிளா..?"

நரேந்திரன் கண்கள் இடுங்கின.. கோபமான அவனது பார்வை அவள் மனதைத் துளைப்பதைப் போல பார்த்தது..

"என்னைக் காதலித்ததும்.. கல்யாணம் பண்ணிக்கப் போகிறதும் உனக்குப் பாதிப்பா..?"

அவனின் குற்றம் சாட்டும் பார்வையை அவளால் எதிர்கொள்ள முடியவில்லை.. நிற்க முடியாமல் அவள் கால்கள் வலுவிழந்தன.. ஊர்மிளா தொய்ந்து அமர்ந்தாள்.. அவளருகிலிருந்த பூங்குழலி மகளின் தலைமுடியைக் கோதி அணைத்துக் கொண்டாள்.. தாயின் இடுப்பைச் சுற்றி வளைத்த ஊர்மிளாவின் கரங்கள் நடுங்கின.. அவள் எதிலிருந்தோ தப்பிக்க விழைகிறவளைப் போல பூங்குழலியின் இடுப்பில் முகம் புதைத்துக் கொண்டாள்..

அவளைப் பெற்றவளின் மனம் பதறியது... மகளுக்குத் திருமணம் என்று வெகு சந்தோசமாக கிளம்பி வந்த அந்த தாய் திகைத்து நின்றாள்.. கண் முன்னால் விசுவரூபமெடுத்து நின்ற அந்தப் பிரச்னைக்கான முடிவு சுபமான முடிவாக இருக்க வேண்டுமே என்று அவள் மனம் கடவுளை வேண்டிக் கொண்டது.. பிரார்த்தித்த அந்த பேதை தாயின் நெஞ்சம் மகளின் நல்வாழ்விற்காக இறைவனிடம் இறைஞ்சியது..

https://t.me/tamilpdfebooks

சோமசுந்தரம் கொதித்துக் கொண்டிருந்தார்.. நரேந்திரன் மோசடிக்காரன் என்றார்.. அவன் பேசும் வியாக்கினங்களை அவர் காது கொடுத்துக் கேட்கத் தயாராக இல்லையென்றார்..

"உங்களுடன் எனக்குப் பேச்சில்லை சார்.." என்று சொல்லி விட்டான் நரேந்திரன்..

"என்னது..? என்கூடப் பேச்சில்லையா..? பின்னே.. வேற யார்கூடப் பேசப் போறிங்க..? மண்டபத்து வாசலில நிக்கிற எவனாவது ஒருத்தனை அழைச்சுக்கிட்டு வர்றேன்.. அவனோட பேசறிங்களா..?"

விதண்டாவாதமாக கேட்டு வைத்தார் சோமசுந்தரம்.. அவர் கொஞ்சம் இறங்கிப் பேசினால் தேவலையென்று பூங்குழலிக்குத் தோன்றியது.. நரேந்திரன் ஒன்றும் இமாலயத் தவறை செய்து விடவில்லையே என்று அவள் நினைத்தாள்.. வசதி அதிகமென்று பொய் சொல்லி அவன் ஏமாற்றியிருந்தால் அதை குற்றமென்று சொல்லலாம்.. அவனோ பணக்காரன் என்பதை மறைத்திருக்கிறான்.. இதில் ஏமாற்றுவேலை எங்கிருந்து வந்தது..?

தாழ்ந்த குரலில் அவள் அதை விளக்க முனைந்த போது சோமசுந்தரம் அவளை எரிப்பதைப் போல பார்த்தார்..

"என்ன பேசற பூங்குழலி..? இல்லாதவன் இருக்கிறவன்னு சொன்னால்தான் அது குற்றமாகுமா..? இருக்கிறவன் இல்லாதவன்னு சொன்னா அது குற்றமில்லையா..?"

“நான் அப்படிச் சொல்லலைங்க.. நம்மளை ஏமாத்தனும்ங்கிறது அவரோட நோக்கமாக இருந்திருக் காது.. ஊர்மிளா மேல ஆசைப்பட்டுட்டார்.. அதனால மாத்திச் சொல்லியிருப்பார்..”

“எந்த நோக்கத்துக்காக சொன்னாலும் பொய்.. பொய்தானே பூங்குழலி..?”

இந்த மனிதர் மகளை உருப்படியாக வாழ வைக்க மாட்டார் என்ற நிராசை பூங்குழலியின் இதயத்தில் தைத்தது.. அவளுக்கு கணவரின் கொள்கைகளின்மீது எந்தவிதமான துவேசமும் இல்லைதான்.. ஆடம்பர வாழ்வின்மீது அவளுக்கு எந்த நாளிலும் ஆசை இருந்த தில்லைதான்.. ஊர்மிளா மகிழ்ச்சியாக வாழ வேண்டு மென்று ஆசைப்பட்டவள்.. அவள் பணக்காரியாக வாழ வேண்டுமென்று ஆசைப்படவில்லைதான்..

அதற்காக.. தானாக வரும் அதிர்ஷ்ட தேவதைகூட மல்லுக்கட்டிக் கொண்ட நிற்பதிலும் அவளுக்கு விருப்பமில்லை..

ஊர்மிளாவின் முன்னால் வளமான வாழ்வு காத்திருக்கிறது.. இப்படிப்பட்ட அதிர்ஷ்டம் மகளுக்கு கிடைக்குமென்று பூங்குழலி கனவிலும் நினைத்துப் பார்த்ததில்லை.. சோமசுந்தரத்தின் கொள்கை முழக்கத்தில் அவள் அதுபோன்ற கனவுகளை எல்லாம் காண்பது வீணான வேலை என்ற விட்டு விட்டாள்..

எப்படியும் சோமசுந்தரம் கொள்கை அது.. இது [illegible] மிகச் சாதாரணமான இடத்திலதான் மகளை மண[illegible]

https://t.me/tamilpdfebooks

கொடுக்கப் போகிறார் என்று அவள் புரிந்து வைத்திருந்த போதும்.. ஒரே மகளுக்கு அவர்களின் திருச்சி வீடு.. கிராமத்திலிருக்கும் வீடு.. தோப்பு.. துரவுகள்.. வங்கியி லிருக்கும் பணமென்று அனைத்தும் கிடைக்கும் என்பதால்.. பெண்ணைத் திருமணம் செய்கிறவர் எப்படிப் பட்ட வசதியில் இருந்தாலும் ஊர்மிளாவுக்கு கிடைக்கப் போகும் சொத்து சுகங்களை வைத்துக் கொண்டு அவளை நல்ல படியாக வாழ வைத்தால் போதுமென்ற எண்ணம் அவளுக்கு..

நரேந்திரனையும் அது போலதான் அவள் நினைத்திருந்தாள்.. பெற்றோர் இல்லையென்று அவன் சொன்னதும்.. வீட்டோடு மாப்பிள்ளையாக இருந்து விடுவான் என்பதில் அவளுக்குள் நிம்மதி உண்டானது.. இருப்பதை வைத்து அவனும் ஊர்மிளாவும் நிறைவாக குடும்பம் நடத்தினால் போதும் என்று நினைத்துக் கொண்டிருந்தவளின் கண் முன்னே மிகப்பெரிய சாம்ராஜ்யம் வந்து நிற்கிறதே.. அதன் மகாராணியாக அவள் மகளை வரவேற்கக் காத்திருக்கிறதே.. இப்படிப்பட்ட வாழ்வை வாழ அவள் மகளுக்கு.. தடை விதிக்கப் படுவதா..?

பூங்குழலியின் மனம் குமுறியது.. திருமண மேடையைக் காண வந்த பெண்ணின் திருமணத்தை நிறுத்தி.. அவளை திருப்பி அழைத்துக் கொண்டு போவதில் அவளுக்குக் கொஞ்சம்கூட உடன்பாடில்லை..

அவளுக்குத் தெரியும்.. மணமேடை வரை வந்த திருமணம் நின்று போனால் அந்தப் பெண்ணின் வாழ்நாள்

https://t.me/tamilpdfebooks

முழுவதும் அந்தச் சொல் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.. உற்றார்.. உறவினரெல்லாம் வியந்து கொண்டிருக்கும் அந்த வேளையில் திருமணத்தை நிறுத்தினால் ஆளாளுக்கு கதை பினைந்து பேச ஆரம்பித்து விடுவார்கள்..

பூங்குழலி பதைக்கும் மனதோடு கணவரை கெஞ்சுதலாகப் பார்த்தாள்.. அந்த முரட்டு மனிதரோ.. தன் பிடிவாதத்தை தளர்த்திக் கொள்ள மறுத்தார்..

“பொய்யால் எழும்பியிருக்கிற உங்க காதல் எப்படிங்க உண்மையான காதலா இருக்க முடியும்..?” என்று எகிறினார்..

“அதே பொய்யில் எழும்பிய உங்க காதல் மட்டும் உண்மையானதா இருந்திருக்கிறப்ப.. என் காதலில் எப்படிங்க உண்மை இல்லாமல் போகும்..?” நரேந்திரனும் நறுக்கென்றுதான் பதிலுக்குக் கேட்டான்..

“என்னைப் பத்திப் பேசாதீங்க..”

“நீங்களும் என்னைப் பத்திப் பேசாதீங்க..”

“எப்படிங்க பேசாம இருக்க முடியும்..? பெண்ணைப் பெத்தவன் நான்.. அவளை உண்மையாய் இருக்கிறவன் கையிலதான் என்னால் பிடிச்சுக் கொடுக்க முடியும்..”

“இங்கே யாரும் உருப்படியில்லாம இல்லை சார்.. இந்த நரேந்திரன் ‘நரேன் குருப் ஆஃப் கம்பெனி’ஸின் எம்.டி..”

அந்த வார்த்தைகளில் சோமசுந்தரம் கண்சிவந்தார்.. ஊர்மிளா தலையைப் பிடித்துக் கொண்டாள்..

https://t.me/tamilpdfebooks

'என்னடா இது வன் கொடுமையாய் இருக்கு..'

நரேந்திரன் வெறியாகிப் போனான்.. அவனுடைய அடையாளம் என்ன அந்த அளவுக்கு மட்டமானதா..? அப்பாவும்... பெண்ணும் இந்த அளவுக்கு ஆட்டம் காண்பிக்கிறார்களே..

"இதை நீங்க முதலிலேயே சொல்லியிருந்தா என் மக உங்களைத் திரும்பிக்கூடப் பார்த்திருக்க மாட்டா.."

"ஏங்க..? ஒரு கம்பெனிக்கு எம்.டியாய் இருக்கிறது என்ன அவ்வளவு பெரிய குற்றமா..?"

"எங்களுக்கு அப்படித்தாங்க.."

"எங்களுக்குன்னா..? யாரைச் சொல்கிறீங்க..? உங்களையும் ஊர்மிளாவோட அம்மாவையும் சொல் கிறீங்களா..?"

வேண்டுமென்றே கேட்டான் நரேந்திரன்... எதற்கெடுத்தாலும் சோமசுந்தரம்... எங்களுக்கு என்று ஊர்மிளாவையும் அவருடன் கூட்டுச் சேர்த்துக் கொண்டதில் அவனுக்கு கடுப்பு ஏற்பட்டிருந்தது.. அந்தக் கடுப்பை அதிகரிப்பதைப் போல சோமசுந்தரம் பேசி வைத்தார்..

"இல்லைங்க.. என்னையும்.. என் மகளையும் சொல்கிறேன்..."

"ஏங்க..? நியாயமா நீங்க ஊர்மிளாவோட அம்மாவைத்தான் சொல்லியிருக்கனும்.."

https://t.me/tamilpdfebooks

"அது என்ன கழுதைக்கு..? அவள் எந்தக் காலத்திலும் என் கொள்கையைப் புரிஞ்சுக்காதவ..."

"புரிஞ்சுக்காம இருக்கிறதுதான் பெட்டர்ன்னு நினைச்சிருப்பாங்க.. அவங்களை அவங்க போக்கில விட்ட நீங்க.. உங்க மகளையும்.. அவளோட அம்மா வளர்ப்பில விட்டிருக்கலாமே.. அவங்க நல்லதா நாலு குணத்தை சொல்லிக் கொடுத்து வளர்த்திருப்பாங்க.."

அவனை யாரோ போல பார்த்தபடி கண்ணீரும் கம்பலையுமாக உட்கார்ந்திருந்தவளை சினத்துடன் பார்த்தபடி அவன் சொன்னான்.. அதில் அவர் விழியுயர்த்தி அவனைப் பார்த்தார்..

"ஏங்க..? எப்படிங்க நீங்க இந்த வார்த்தையைச் சொல்லலாம்..? என் மக குணத்துக்கு என்ன குறைச்சல்..? நல்லதா நாலு குணம் மட்டுமில்லைங்க.. நாலாயிரம் குணம் என் மககிட்ட இருக்கு.. உங்களைப் போல நடிச்சு ஏமாத்தற குணம் அவளுக்கில்லை.."

சோமசுந்தரம் காட்டிய ஆவேசம் அவனுக்கும்.. ஊர்மிளாவுக்கும் இடையில் அகலமான அகழியை வெட்டியது.. பேசாமல் அவரை நாடுகடத்தி விடலாமா என்று கூட நரேந்திரன் யோசித்தான்.. அப்படிச் செய்தால் அவன் காதலிக்கும் அழகான ராட்சசி ஆயுள் முழுவதும் அவனைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாள் என்பதினால் அந்த யோசனையை கைவிட்டான்..

"ஸ்ஸ்ஸ்.. எதுக்குங்க இவ்வளவு சத்தம் போடறிங்க..? இங்கேயென்ன பொதுக்கூட்டமா நடக்குது..? நீங்க என்ன

https://t.me/tamilpdfebooks

மைக் முன்னாலேயா பேசிக்கிட்டு இருக்கீங்க..? இது கல்யாண மண்டபங்க.. அடக்கி வாசிங்க.."

"என்ன கழுதைக்குண்ணேன்...? ஏன் நான் அடக்கி வாசிக்கணும்னேன்.. பெண்ணைப் பெத்தவன் நாண்ணேன்.. பொய் சொல்லி நடிச்சுப் பெண் கேட்ட உங்களுக்கு என்பெண்ணைக் கொடுக்க மாட்டேன்னு சத்தம் போட்டு ஊரைக் கூட்டுவேண்ணேன்..."

சோமசுந்தரம் அடுக்கிய அடுக்கலில் வெகுண்டான் நரேந்திரன்..

"என்னது..? எனக்குப் பெண் கொடுக்க மாட்டேன்னு ஊரைக் கூட்டிச் சொல்வீங்களா...?" கொதிப்புடன் கேட்டான்..

"ஆமாங்க... நீங்க பொய் சொல்லிப் பெண் கேட்டிங்க.. பணக்காரங்க.. கோடிஸ்வரங்கிற உண்மையை மறைச்சுட்டிங்க.."

"இதையே எத்தனை தரம்தான் சொல்லுவீங்க.. உங்களுக்கு வாய் வலிக்கலையா..?"

"உண்மையைச் சொல்ல எதுக்குங்க வாய் வலிக்கனும்...? உங்களுக்கு பொய் சொல்ல வாய் வருகிறப்ப... எனக்கு உண்மை சொல்ல வாய் வலிக்காதுங்க..."

"திரும்பத் திரும்ப எனக்கு பொய்காரன்னு பெயர் வைத்தால் நான் சும்மாயிருக்க மாட்டேன்.."

https://t.me/tamilpdfebooks

"என்னங்க செய்வீங்க..? நீங்க செய்ய நினைக்கிறதை செய்துக்கங்க.. எனக்கு அதைப் பத்திக் கவலையில்லை.. உங்களைப் போல ஒரு உண்மையை மறைத்துப் பேசுகிறவருகிறவருக்கு.. முதலாளித்துவவாதிக்கு.. பாஸிச கருத்துக்களில் ஊறிப் போனவருக்கு... தொழிலாளர் வர்க்கத்தை பூண்டோடு அழிக்கிற சுரண்டல் பேர்வழிக்கு என் பெண்ணைக் கட்டிக் கொடுக்க மாட்டேங்க... உங்களுக்குப் பெண் கொடுக்க முடியாது.."

சோமசுந்தரம் நரேந்திரனிடம் திட்டவட்டமாக சொல்லி விட்டார்.. அவன் நிதானமாக ஊர்மிளாவைப் பார்த்தான்.. அவனது தீர்க்கமான பார்வை அவளைத் துளைத்தது..

"அதை நீங்க சொல்லாதீங்க... ஊர்மிளா சொல்லட்டும்.. அவள்தான் இதுக்கான பதிலைச் சொல்லனும்.. நான் அவளைக் காதலிக்கிறேன்... அவளும் என்னை காதலிக்கிறா.. இந்தக் காதலில் பொய் இருக்கிறதான்னு அவ சொல்லட்டும்... அவளைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட்டேன்... ஊர்மிளா உங்களிடம் பெண் கேட்க சொன்னா.. நீங்க முதலாளிக்குப் பெண் கொடுக்க மாட்டேன்னு சொன்னீங்க.. நான் தொழிலாளின்னு சொல்லிப் பெண் கேட்டேன்.. உழைக்கிற எல்லா மக்களுமே தொழிலாளி வர்க்கம்தாங்க.. நான் உழைக்கலையா..? நான் உழைப்பாளி வர்கத்தைச் சேர்ந்தவனில்லையா..? இருபத்தி நான்கு மணி நேரமும் உழைக்கிறேங்க.. என் உழைப்பு ஏன் உங்க கண்ணில் படலை..?"

https://t.me/tamilpdfebooks

சோமசுந்தரத்திடம் சினந்தவன் ஊர்மிளாவைப் பார்த்து நேரடியாகக் கேட்டான்..

"ஊர்மிளா.. நான் உன்னைக் காதலிக்கிறேன்.. உன்னைக் கல்யாணம் பண்ணிக்க என் பணம் ஒரு தடையாய் இருக்கும் என்பதற்காக மட்டுமே நான் பணக்காரன்ங்கிறதை சொல்லாம மறைச்சேன்.. வேற தப்பு நான் செய்யலை.. நீ என்ன முடிவைச் சொல்லப் போகிற..? என்னை மேரேஜ் பண்ணிக்குவியா.. மாட்டியா..? முடியுமா.. முடியாதா..?"

சோமசுந்தரத்தின் பார்வையும்.. நரேந்திரனின் பார்வையும்.. ஊர்மிளாவின் மீது படிந்தன.. முடிவெடுக்க வேண்டிய தருணத்தில் தான் நிற்பதை அவள் உணர்ந்தாள்.. அவள் முன்னால் 'முடியாது' என்று சொல்லி விடச் சொல்லும் வேண்டுகோளை விழிகளில் ஏற்று சோமசுந்தரமும்.. 'முடியும்' என்ற சொல்லை எதிர்பார்த்த நரேந்திரனும் நின்றிருந்தார்கள்...

அவள் பதில் சொல்ல முடியாமல் தவித்தாள்..

- இரண்டாம் பாகத்தில் தொடரும்...

https://t.me/tamilpdfebooks